


நிக்கலாய் நோசவ்

விளையாட்டுப் பிள்ளைகள்

நிக்கலாய் நோசவ்

விளையாட்டுப் பிள்ளைகள்

கதைகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்கள்: ருக்மணி, பூ. சோமசுந்தரம்
தயாரிப்பு: ரூபேன் வார்ஜிகுலியான்

НИКОЛАЙ НОСОВ
ПРИКЛЮЧЕНИЯ ТОЛИ КЛЮКВИНА
Сборник рассказов

На тамильском языке

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Н $\frac{70803-053}{014(01)-78}$ 722—78

பொருளடக்கம்

நிக்கலாய் நோசவ்—அறிமுகம்

நிக்கலாய் நோசவ் எழுதியவற்றில் ஓர் அட்சரம் படித்தறியும் முன்பே நான் அவருடைய புத்தகங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள நேர்ந்தது.

எப்படி நேர்ந்ததென்று சொல்கிறேன் கேளுங்கள்.

எங்கள் வீட்டிலிருந்த மின்சார சாமான்கள் திடுமெனத் தொலைந்து போயின, பிறகு உருப்படாமற் போய்த் திரும்பி வந்து சேர்ந்தன. எங்கள் மின்சார சூடேற்றி குளிப்பறையில் தரையில் கிடந்தது. அதன் மின்காப்புப் பீங்கான்களைக் காணோம். வீட்டில் மின் பிளக்குகள், ஸ்விட்சுகள் பலவும் உடைந்து போயிருந்தன, அல்லது பிரித்தெடுக்கப்பட்டிருந்தன. மின் விளக்குகளின் பல்புகள் மாயமாய் மறைந்து போயின.

காலுக்கடியில் பாதரசம் மிதிபட்டு, மினுமினுக்கும் சன்னத் துளிகளாக நாற்றிசையிலும் சிதறியோடியது எனக்கு நினைவு வருகிறது. காணுமற் போன வெப்பமானியின் கண்ணுடித் துண்டுகள் குப்பைக் கூடையில் கிடக்கக் கண்டோம்.

குட்டிச்சாத்தான் எங்கள் வீட்டில் புகுந்து, எங்களுக்கு விளக்கு ஒளியும் வெப்பமும் மருத்துவ வசதியும் இல்லாதபடிச் செய்ய வேண்டுமென்று இப்படி சேஷ்டை புரிகிறதா என்று நினைக்கத் தோன்றியது. பிறகு மரப் பெட்டிகள் உடைக்கப்பட்டு பலகைகள் பிய்த்தெடுக்கப்பட்டன.

குட்டிச்சாத்தான் எனது மேஜைக்கும் முன்னேறி வரக் கண்டு நான் கலங்கிப் போனேன். மேசையின் இழுப்பறைகளில் உளியும் கைவாளும் புதிய காயங்களை விட்டுச் சென்றிருந்தன.

இதன்பின் எங்கள் தொலைபேசியும், அதைத் தொடர்ந்து வெளிக்கதவின் மின்சார மணியும் சீர்குலைந்து போயின. தண்ணீர், வெந்நீர்க் குழாய்களில் கோளாறு ஏற்பட்டது. சமையலறையில் எரிவாயு கசிந்து, வீச்சம் மூக்கைத் துளைத்தது.

எங்கள் வீடே அதோகதியாகி வந்தது.

''பொறுக்க முடியாது இனி என்னல்!'' என்று கூச்சலிட்டாள் என் மனைவி. ''யார் செய்கிற வேலை இதெல்லாம்?''

''தெரியாதா, என்ன? பாவ்லிக்குதான்'' என்றுள் எங்கள் சிறுமி ழேன்யா, சாவதானமாய்.

''எதற்காக செய்கிறுன்?''

''அடைகாப்புப் பொறி தயார் செய்கிறுன்.''

''என்ன?''

''அடைகாப்புப் பொறி! முட்டையை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் பொறி.'' பெரிய மனுஷியின் தோரணையில் அவள் பதிலளித்தாள்.

''ஐயோ! வீடு உருப்பட்டாற் போலத்தான்!''

''இப்படி ஓர் எண்ணம் அவனுக்கு உதித்தது எப்படி?''

''நோசவைப் படித்தான், உதித்தது.''

''நோசவா?''

''நோசவ் எழுதியவற்றைப் படித்ததில்லையா நீங்களெல்லாம்? உல்லாசக் குடும்பத்தைப் படித்ததில்லையா?வேடிக்கைதான்!'' பரிதாபப்பட்டுக் கொள்ளும் விதத்தில் அவள் எங்களை உற்று நோக்கினுள்.

''படித்ததில்லை, அதற்கு என்னவாம்?''

''ஒன்றுமில்லை.''

கணமும் தாமதிக்கலாகாது. மேசை மீது இருந்த மசிக்கறை படிந்த அந்தப் புத்தகத்தை எடுத்து உடனே படிக்க முற்பட்டேன். அது முதலாய் நான் இந்த அற்புத சோவியத் எழுத்தாளரின் அபிமான வாசகனுய் இருந்து வருகிறேன்.

ஆற்றல் மிக்க இவ்வெழுத்தாளர் எந்நாளும் இளமையும் எழிலும் வாய்ந்த உள்ளம் படைத்தவர்.

நிக்கலாய் நோசவ் எப்போதுமே குழந்தைகளுக்காக, குழந்தைகளைப் பற்றி எழுதி வந்துள்ளவர். ஆயினும் எல்லா வயதினரும் இவருடைய புத்தகங்களைப் படித்து மகிழ்கிருர்கள். பிள்ளை அல்லது சிறுவன் எனப்படும் அந்த வியப் பூட்டும் விந்தைப் பிறவியின், உள்ளங்கவரும் செல்வனின் ஆத்மாவை இவ் வாசிரியர் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருர். ஏற்கெனவே குழந்தைப் பருவத்தைக் கடந்தவன், ஆனுல் இன்னும் இளைஞன் ஆகாதவன்—இவனே சிறுவன் என்பான். சேகவின் கதைகளில் வரும் சிறுவர்கள் உயிர்த்துடிப்பும் களையும் மிக்க மெய்யான சிறுவர்கள், எந்நேரமும் துறுதுறுவென்று இருப் பவர்கள். நோசவ் அனுசரிக்கும் முறை வேறு விதமானதாக இருப்பினும், நோசவின் சிறுவர்களும் இதே போலத்தான் இருக்கிருர்கள்.

நோசவ் கதைகளில் வரும் சிறுவர்கள், சிறுவர்கள் மட்டுமின்றி, சோவியத் சிறுவர்களாகவும், நமது மாபெரும் சோவியத் நாட்டின் இளந்தலைமுறை யினராகவும் இருப்பவர்கள். சோவியத் மனிதனது குணச்சிறப்புகளை—அவனது சீரிய கோட்பாட்டு உணர்வையும், இலட்சிய ஆர்வத்தையும், புதியனவாகவும் சவால் விடுப்பனவாகவும் அமைந்தவற்றில் அவனுக்குள்ள நாட்டத்தையும், உறக்க நிலையிலிருந்து விடுபட்ட அவனது உள்ளத்தின் முனைப்பையும்—வெளிக்காட்டுகிறவர்கள் இவர்கள்.

இந்தக் குணச் சிறப்புகள் இங்கு சிற்றுருவில்தான் வரையப்படுகின்றன என்றுலும், முதியோருக்கான புத்தகங்கள் பலவற்றிலும் காணக்கூடியது போல்

அதே அளவுக்குத் தெளிவாகவும், ஐயப்பாட்டிற்கு இடமில்லாமலும், அகத்தின் அழகினை உள்ளது உள்ளபடி தெரியச் செய்யும் பாங்கிலும் மட்டுமின்றி, இன்னுங்கூட சற்று அதிகமாகவே உள்ளம் மலரும் வகையில் தீட்டிக் காட்டப் படுகின்றன.

நோசவ் புத்தகங்களில் ஒன்றின் பெயர் கதை சொல்லுவோர். நேர்த்தியான தலைப்பு இது. கற்பனைத் திறனே எல்லாப் புதிய கண்டுபிடிப்புகளுக்குமான ஆதாரமாகும், யாரும் சென்று அறியாத அரும்பெரும் கம்யூனிச எதிர் காலத்துக்குரிய புதிய பாதையாகத் திகழும் நமது சோவியத் வாழ்க்கை நெறியின் தோற்றுவாயாகும். நிக்கலாய் நோசவ் தமது வாழ்வில் முப்பது ஆண்டுகள் சிறுவர் இலக்கியப் படைப்பாளராகப் பணிபுரிந்தவர், அரசுப் பரிசும் உழைப்புச் செங்கொடி விருதும் சிவப்பு நட்சத்திர விருதும் பெற்றவர்.

கூர் மதியும் சிந்தனை ஆழமும் இவற்றுடன்கூட நகைச் சுவை உணர்வும் உடைய எழுத்தாளர். இவர் உல்லாசக் குடும்பம், கோல்யா சினித்சினது நாட் குறிப்பு, வீட்டிலும் பள்ளியிலும், துனோவும் அவனது சகாக்களும் முதலான புத்தகங்களின் ஆசிரியராவார். இரண்டு மூன்று பக்கங்களில் அடங்கும் மிகப் பல குட்டிக் கதைகளும் எழுதியிருக்கிறார்—சோவியத் சிறுவர் இலக்கியக் கருவூலத்தில் இவை ஒவ்வொன்றும் ஒரு வைர மணியாக ஜொலிப்பவை.

வலென்தீன் கத்தாயேவ்

தோல்யாவின் விநோதங்கள்

நான்காம் வகுப்பு மாணவனான தோல்யா கிலியூக்வின் வீட்டிலிருந்து புறப்பட்டு, ஒரு சந்துக்குள் திரும்பி, அவனது நண்பன் ஸ்லாவாவின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். காலையில் சதுரங்கம் ஆடுவதென்று இரு நண்பர்களும் நேற்று மாலையே பேசி முடிவு செய்திருந்தனர். அது இருவருக்கும் பிடித்த விளையாட்டு. அவர்களால் காலையிலிருந்து மாலை வரை அலுக்காமல் ஆடிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியும், சதுரங்க ஆட்டத்தில் சிறிது காலமாக இருவருக்கும் அப்படி ஒரு பித்து.

நேரமாகி விட்டதென்று தோல்யா அவசரமாகப் போய்க் கொண்டிருந்தான். காலை பத்து மணிக்குள் வருவதாக நண்பனிடம் வாக்களித்திருந்தான், ஆனால் அந்தக் கெடு முன்பே கடந்துவிட்டது. ஒழுங்குமுறை அதிகம் இல்லாதவனாதலால், நேரத்தை வீணாக்கி அவன் தாமதம் செய்துவிட்டான். அவசரப்படும் போதுதானே எதிர்பாராத தடங்கல் எல்லாம் ஏற்படுகிறது. தோல்யா அந்தச் சந்தின் கோடிக்குச் சென்றதும் சாம்பல் நிறப் பூனை ஒன்று வேலிக்குள்ளிருந்து வெளியே வந்தது. அவன் பாதையின் குறுக்கே செல்லப் போன அந்தப் பூனை அவனைக் கண்டதும் தயங்கி நின்றது.

''ஏய்-ய்! திரும்பிப் போ!'' என்று தோல்யா கத்தினான். கல்லை எடுப்பதாகப் பாவனை காட்டிக் கீழே குனிந்தான், மிரண்டு போய் அது திரும்பி ஓடிவிடுமென நினைத்தான்.

பூனை மிரண்டு போனது மெய்தான். ஆனால் அது வேலிக்குள் திரும்பி ஓடுவதற்குப் பதில், சந்தின் குறுக்கே பாய்ந்தோடி எதிர்ப் பக்கத்து வாயில் வழியினுள் மறைந்தது.

''அட, எழவே!'' என்று வாய்க்குள் கடிந்து கொண்டான் தோல்யா. மேலும் செல்லத் துணியாமல் அங்கேயே நின்று என்ன செய்யலாமென்று ஆலோசித்தான்: தோள் பக்கம் திரும்பி மூன்று தரம் துப்பி விட்டு நடக்கலாமா, அல்லது திரும்பிச் சென்று வேறொரு சந்து வழியே போவது நல்லதா? அவன் சுற்று முற்றும் பார்த்தான். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பது தெரிந்ததும், வேறு வழியில் போவதே மேலெனத் தீர்மானித்துக் கொண்டு திரும்பி நடந்தான்.

''நான் மூன்று தரம் துப்புவதால் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடாது'' என்று அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான். ''துப்பினாலும் துப்பாவிட்டாலும், குறுக்கே பூனை போனது போனதுதானே? கெட்ட சகுனம் என்பது

எல்லாம் வெறும் புரளிதானு? யார் கண்டது? எதற்கு இந்தச் சள்ளை? அதிக சிரமமின்றி வேருெரு வழியில் செல்ல முடியும் என்னும் போது, பூனை குறுக் கிட்ட பாதையிலிருந்து விலகிச் செல்வது நல்லதுதானே.''

இவ்விதம் அவன் திரும்பி நடந்து தனது வீட்டைக் கடந்து வேருெரு சந்து வழியே ஸ்லாவாவின் வீட்டை நோக்கிச் சென்ருன். மேற்கொண்டு தொல்லை ஏதுமின்றி நண்பனின் தெருவை வந்தடைந்தான். ஸ்லாவாவின் வீடு இருந்த 14ஆம் எண் கட்டடத்திலிருந்து யாரோ ஒரு பையன் வெளியே வரக் கண்டான். வெளியே வந்தவன் ஸ்லாவாவாகவும் இருக்கலாம் வேறு ஒரு வனுகவும் இருக்கலாமென நினைத்தான்.

''சரி, ஸ்லாவாவின் வீட்டிற்குச் சென்று பார்த்தால் விஷயம் தெளிவாகி விடுகிறது'' என்று கூறிக் கொண்டான் தோல்யா. ''வீட்டிலே ஸ்லாவா இருந் தால் இந்தப் பையன் ஸ்லாவா இல்லை, வீட்டிலே அவன் இல்லாவிட்டால், இவனேதான் ஸ்லாவா.''

தோல்யா படிக்கட்டில் ஏறி முப்பத்தொன்ருவது வீட்டுக்குச் சென்று மணியை அழுத்திஞன். ஸ்லாவாவின் அம்மா கதவைத் திறந்தார்.

''இப்பதானே ஸ்லாவா வெளியே போஞன். எதிரே பார்க்கவில்லையா நீ?'' என்ருர் அவர்.


''இல்லையே! அதாவது பார்த்தேன், அது அவனுய் இருக்காது என்று நினைத்தேன். எனக்காக வீட்டிலே காத்திருப்பதாகச் சொல்லியிருந்தானே.''

''காத்துக் கொண்டுதான் இருந்தான். நெடுநேரம் இருந்து பார்த்து விட்டு இன்னமும் நீ வரவில்லையே என்று அலுத்துக் கொண்டான். அதன் பிறகுதான் ழேன்யாவைத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசினுன். ழேன்யா வீட்டுக்குப் போவதாகச் சொல்லி இப்பதான் புறப்பட்டுச் சென்ருன்.''

படிக்கட்டில் கீழே இறங்கி வந்த தோல்யா, ''என்ன நண்பன் இவன்? சற்று நேரம் காத்திருக்க முடியாதவன்'' என்று முணுமுணுத்துக் கொண் டான்.

தெருவை வந்தடைந்து வாயிலருகே நின்றவாறு எந்தப் பக்கம் செல்வ தென்று ஆலோசித்தான். முடிவில் அவன் ழேன்யாவின் வீட்டை நோக்கிப் புறப் பட்டான். ஸ்லாவாவின் வீட்டிலிருந்து அது சற்றுத் தொலைவிலே இருந்தது. இனி அவன் அவசரப் பட வேண்டியதில்லை. ஆகவே ஆங்காங்கே பார்க்க வேண்டியவற்றை நன்ருகப் பார்த்தபடி மெல்ல நடந்தான். சிறுவர்கள் சிலர் இரண்டு சக்கர சைக்கிள் ஓட்டிக் கற்றுக் கொள்ள முயன்றதைக் கண்ட தும், தோல்யா அங்கே நின்று வேடிக்கைப் பார்த்தான்.

நான்கு சிறுவர்கள் இருந்தார்கள், ஆனுல் ஒருவராலுங்கூட சைக்கிள் ஓட்ட முடியவில்லை, ஒவ்வொருவராய் ஏறிச் சென்று உடனே கீழே விழுந்து கொண்டிருந்தார்கள். அந்த சைக்கிள் அப்படிப்பட்டது, ஏற்கெனவே அதை



வந்து ஓட்டிப் பார்க்க முற்பட்டனர். இங்கேதான் தோல்யா அவர்களைக் கண்ணுற்ருன்.

ஒவ்வொருவராய் ஏறி ஏறி விழுந்ததைப் பார்த்துவிட்டு அவன் அவர்களிடம் சொன்னுன்: ''சைக்கிள் கற்றுக் கொள்ள இதுவல்ல வழி! குப்புற விழுந்து மூக்கைத்தான் உடைத்துக் கொள்வீர்கள்! குன்றிலிருந்து கீழே விட்டுச் சென்று கற்றுக் கொள்ள வேண்டும்.''

''ஏனும்?''

''குன்றுச் சரிவிலே மிதிக்க வேண்டியதில்லை, சைக்கிள் தானுகவே ஓடி வரும். சாய்ந்து விழாதபடி இருப்பதிலே முழுக் கவனம் செலுத்தி சமன் செய்யக் கற்றுக் கொள்ளலாம். இது பழக்கமானதும் பிறகு மிதிக்கப் பழகிக் கொள்ளலாம். ஒரே நேரத்தில் இரண்டையும் செய்ய முயன்ருல் எதையும் கற்றுக் கொள்ள முடியாது.''

உடனே அந்தச் சிறுவர்களில் ஒருவன் கூறினுன்: ''இந்தச் சாலையில் கொஞ்ச தூரம் சென்ருல் அங்கே குன்றிலிருந்து கீழே செல்லும் சரிவுச் சாலை இருக்கிறது. வாங்க, அங்கே போவோம்!''

எல்லோருமாய் ஓடி, சரிவுச் சாலை ஆரம்பமாகும் இடத்தை அடைந்தனர். ஆனுல் அங்கே வந்து சேர்ந்ததும், அவர்களில் யாரும் அந்தச் சரிவில் சைக்கிளில் ஏறிச் செல்லத் துணியவில்லை.

''அட பயந்தாங்கொளிகளே!'' என்ருன் தோல்யா. ''சைக்கிளை என்னிடம் கொடுங்கள், ஓட்டிக் காட்டுகிறேன்.'' தோல்யா ஏறி இருக்கையில் அமர்ந்து ஒரு மிதி மிதித்தான். சரிவுச் சாலையின் உச்சியிலிருந்து கீழ் நோக்கி ஓடியது வண்டி. அவன் சைக்கிள் ஓட்டத் தெரிந்தவன், ஆகவே நன்ருகவே போய்க் கொண்டிருந்தான். சிறுவர்கள் எல்லோரும் துரத்திக்கொண்டு ஓடினர். சைக்கிளையும் எடுத்துக் கொண்டு ஓடி மறைந்து விடுவானே என்று சிறுவர்களுக்கு அச்சம் உண்டாகும்படி, அப்படி வேகமாகப் போய்க் கொண்டிருந்தான் தோல்யா. சக்கரங்கள் மேலும் மேலும் வேகமாகச் சுழன்றன. சக்கரங்களுடன் சேர்ந்து மிதிகளும் வேகமாகச் சுற்றின. பாதங்களை அவற்றின் மேல் வைத்திருக்க முடியாமல் தோல்யா திண்டாடினுன். இறுதியில் பாதங்களை அவற்றிடமிருந்து விலக்கிக் கொண்டான், ஆனுல் மிதிகள் தாமாகவே சுற்றிச் சுழன்று அவன் கணுக் கால்களில் தட்டிச் சென்றன. அடிபடாமல் இருப்பதற்காகக் கால்களைப் பரப்பி விரித்துக்கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் குன்றிலிருந்து கீழே சென்று கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு முன்னுல் சாலையின் நடுவில் குழந்தைகள் சிலர் விளையாடிக்கொண்டிருந்தது திடீரென அவன் கண்ணுக்குத் தெரிந்தது. அவர்கள் மீது மோதாமல் இருக்கும் பொருட்டு உடனே சாலை ஓரத்துக்கு சைக்கிளை அவன் திருப்பி ஓட்ட வேண்டியதாயிற்று. நல்ல வேளையாக அங்கே சென்ற சுவரில் நுழைவாயில் ஒன்று

இருந்தது. சைக்கிள் அந்த வாயினுள் நுழைந்து, அங்கு சென்ற தெருவைக் கணப்பொழுதில் கடந்து எதிர்ப் பக்கத்துக் கட்டடத்தின் வாயில் வளைவுக்குள் ஓடியது.

அந்தக் கட்டடத்தின் வெளிமுற்றத்தின் குறுக்கே மின்னல் வேகத்தில் ஓடிய சைக்கிள், எதிர் முனையில் வேலித் தடுப்புக்கு முன்னால் தரையில் கிடந்த பெரிய இரும்புக் குழாயில் போய் மோதியது. மோதியதும் பின் சக்கரம் உயர்ந்தெழ, குதிரையைப் போல் அது துள்ளிக் குதித்தது. இருக்கையிலிருந்து வீசியெறியப்பட்ட தோல்யா வேலித் தடுப்புக்கு மேல் பாய்ந்து சென்று சர்க்கஸ் வித்தைக்காரனைப் போல் கரணமடித்து, பக்கத்துக் கட்டடத்து வெளி முற்றத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் விழுந்தான்.


கண்ணை மூடித் திறப்பதற்குள் இவ்வளவும் நடந்து விட்டது. குப்பைக் குவியலின் மேல் விழுந்து கிடக்கிறோம் என்பது புரியாமல் கதிகலங்கிய நிலையில் தோல்யா உட்கார்ந்திருந்தான். அவனுடைய சட்டை வேலித் தடுப்பில் ஓர் ஆணியில் மாட்டிக் கிழிந்திருந்தது. அவன் சுழன்று பறந்த வேகம் இதனால் ஓரளவு தடைப்பட்டு, அடிபடாமல் அவன் குப்பையின் மேல் வந்தமர முடிந்தது. குப்பைத் தொட்டியின் மூடி நெற்றியில் உரசியதால் ஏற்பட்ட சிராய்ப்பைத் தவிர வேறு காயம் ஏதுமில்லை.

அவனுக்கு ஓரளவு நிதானம் திரும்பியதும் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். பிறகு கைக்குட்டையை நெற்றிச் சிராய்ப்பில் வைத்து அழுத்தியவாறு அமர்ந்திருந்தான்.

வாயில் வளைவுக்குள் தோல்யா புகுந்தபின், சாலையில் ஓடி வந்த சிறுவர்களால் அவனைப் பார்க்க முடியவில்லை. அவர்கள் அடித்து மோதிக் கொண்டு வளைவினுள் புகுந்து வெளிமுற்றத்துக்கு வந்தார்கள். அங்கே எதிர் முனையில் வேலித் தடுப்புக்கு அருகே அவர்களது சைக்கிள் தரையிலே கிடந்தது. ஆனால் பையன் எங்கே போனான்? ''ஏய், எங்கே இருக்கிறாய்?'' என்று கத்திக் கொண்டு அவர்கள் அங்கும் இங்கும் ஓடிச் சென்று தேடிப் பார்த்தனர்.

தோல்யா பதில் அளிக்கவில்லை. சைக்கிள் விட்டது போதுமென பையன் வீட்டுக்குப் போயிருப்பான் என்று முடிவு செய்து, அவர்கள் தமது சைக்கிளை எடுத்துக் கொண்டு சாலைக்குத் திரும்பினர்.


சிறுவர்கள் கூச்சலிட்டுக் கூப்பிட்டது தோல்யாவின் காதில் விழுந்தது. ஆனால் யாரும் அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடவில்லையே. யாரோ சிறுவர்கள் யாரையோ கூப்பிடுகிறார்கள் என்று அவன் உட்கார்ந்திருந்தான். பிறகு அவன் நன்றாக உற்றுப் பார்த்த போதுதான், குப்பைத் தொட்டியில் அல்லவா உட்கார்ந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தான். எப்படித் தான் இங்கே வர நேர்ந்தது என்பது அதன் பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. இம்மாதிரியான இடத்தில் அமர்ந்திருப்பது சரியல்லவே என்று நினைத்தான். நெற்றிச்





சிராய்ப்பிலிருந்து இரத்தம் வருவது நின்று விட்டது தெரிந்தது. கைக் குட்டையைப் பைக்குள் திணித்து விட்டுக் குப்பைத் தொட்டியிலிருந்து கீழே இறங்கினுன் தோல்யா.

சாம்பல் நிறமுடைய ஒரு பெரிய கட்டடத்தின் அருகே அவன் நின்றிருந்தான். அந்தக் கட்டடத்தில் வாயில் வளைவு ஒன்று இருந்தது. அதன் வழியே வெளியே தெருவுக்குப் போகலாமென நினைத்துத் தோல்யா அதனுள் சென்றுன். ஆனுல் தெருவுக்குப் பதில் அவன் இன்னெரு வெளிமுற்றத்துள் வந்து சேர்ந்தான். முந்தியதைக் காட்டிலும் இந்த வெளிமுற்றம் கண்ணுக்கு இனியதாக இருந்தது. இதன் நடுவில் ஒரு பெரிய வட்டப் பரப்பில் மலர்ச் செடிகள் இருந்தன, கண்ணைப் பறிக்கும் சாமந்தியும் தால்யாவும் சென்னிற நஸ்தர்ஷுமும் நிறைய மலர்ந்திருந்தன. இதற்கருகே இருந்த விசாலமான சதுர மணல் தொட்டியைச் சுற்றிலும் நீல வர்ணம் பூசிய படல் அடைப்பு இடப்பட்டிருந்தது. இந்த மணலில் சிறு குழந்தைகள் சிலர் அமைதியாக அமர்ந்து மண்ணில் பணியாரங்கள் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லாரும் வண்ணச்





சட்டைகள் அல்லது அங்கிகள் அணிந்து கொண்டு பார்ப்பதற்கு மலர் களைப் போலவே இருந்தனர். மணல் தொட்டியின் இரு புறங்களிலும் பசும்புல் பரப்புகள் இருந்தன, இவற்றின் ஓரத்தில் போடப் பட்டிருந்த பெஞ்சுகளில் இந்தக் குழந்தைகளின் தாய்மார்கள் உட்கார்ந் திருந்தார்கள். சிலர் படித்துக் கொண்டும் சிலர் பேசிக்கொண்டும் இருந் தார்கள். அதே போது, குழந்தைகள் குறும்பு செய்து ஒருவர் மீது ஒருவர் மண்ணை வாரி இறைத்துக் கொள்ளாமல் இருக்கிறார்களா என்பதையும் அவர் கள் கவனித்துக் கொண்டனர்.

இந்த பெஞ்சுகளுக்கு அப்பால் வாலிபால் ஆட்டக் களம் ஒன்று இருந்தது. சிறுவர் சிறுமியர் சிலர் அங்கே பந்தாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த வெளிமுற்றம் மிகப் பெரியது, அதைச் சுற்றிலும் பெரிய பல-குடித்தனக் கட்டடங்கள் இருந்தன. ஒவ்வொரு மாடியிலும் வரிசையாக உப் பரிகைகள் காணப்பட்டன.பல உப்பரிகைகளில் வண்ண மலப்ர் பெட்டிகள் இருந்தன. தோல்யா தன்னை அறியாமலே நின்று இவற்றை எல்லாம் பார்வை யிட்டான். வண்ண மலர்களையும் பசும்புல் பரப்புகளையும் குழந்தைகளையும் வாலிபால் ஆட்டக்களத்தில் வலைக்குமேல் அப்படியும் இப்படியுமாய்ப் பாய்ந்து சென்ற பெரிய தோல் பந்தையும் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டான்.

''என் வீடு இங்கே இருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்!'' என்று நினைத் தான் தோல்யா. ''தினமும் இந்த மலர்களைக் கண்டு மகிழலாம், இந்தச் சிறு வர்களோடும் சிறுமிகளோடும் சேர்ந்து வாலிபால் ஆடலாம்.'' அவன் பெரு மூச்சு விட்டுக் கொண்டான். அப்போது அந்தச் சிறுமிகளில் ஒருத்தி கையை ஆட்டி, தங்களுடன் சேர்ந்து வாலிபால் ஆடும்படி அவனை அழைத்தாள். தோல்யா தயங்கியவாறு அவர்களிடம் சென்றான். ஆனால் இரண்டொரு நிமிடத்தில் அவனுடைய கூச்சம் மறைந்து விட்டது. நெடுங்காலமாகப் பழகிய சகாக்களுடன் சேர்ந்து விளையாடுவது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. ஐந்து நிமிடத்துக்கு எல்லாம் அவன் தனது ஆட்டக் குழுவுக்குத் தானே தலைமை ஏற்று தன் தரப்பினருக்குக் கட்டளையிட ஆரம்பித்தான்,ஏனைய எல்லோரையும்விட பலமாய் ''அவுட்'' என்றும் ''ஃபவுல்'' என்றும் கத்தினான். ஆட்ட விதிகளைப் பல சந்தர்ப்பங்களில் அவன் அனுசரிக்கத் தவறினாலுங்கூட அவற்றை ஏனைய ஆட்டக்காரர்களுக்குக் கற்றுத் தந்தான். விறுவிறுப்பான ஆட்டத்துக்கு நடுவில் தன்னை நோக்கிக் கீழ் மட்டத்தில் பந்து வரக் கண்டதும், தோல்யா அதைக் கையால் தட்டுவதற்குப் பதில் காலால் உதைத்து விட்டான். அந்த உதை அவன் நினைத்ததைக் காட்டிலும் வலுவானதாகி விட்டதால், பந்து விர்ரென மேலே பாய்ந்து இரண்டாவது மாடியில் ஒரு சன்னலின் மீது மோதியது. சன்னலின் கண்ணாடி நொறுங்கி விழுந்து கீழே தரையில் கிணு கிணுத்தது. நல்ல காலம், சன்னல் வழியே பந்து



அந்த வீட்டுக்குள் போய் விழாமல் எதிர்த்தடிக்கப் பட்டு கீழே வந்து விழுந்தது.

உடனே தோல்யா அங்கிருந்து தப்பி ஓடிவிட வேண்டுமென்றுதான் நினைத்தான். ஆனால் தன்னைத் தானே கட்டுப் படுத்திக் கொண்டான். ஓடுவது சரியல்ல, ஏனைய ஆட்டக்காரர்களில் ஒருவன்தான் சன்னலை உடைத்ததாக இங்குள்ளோர் நினைப்பார்களென தன்னுள் கூறிக் கொண்டான். இதற்கிடையில் அந்த பையன்களில் ஒருவன் கீழே விழுந்த பந்தை அவசரமாய் எடுத்துக் கொண்டு முற்றத்திலிருந்து வெளியே ஓடினான்.

''நிற்காதீர்கள், ஓடுங்கள்!'' என்று கூச்சலிட்டான் யாரோ ஒருவன். எல்லோரும் சிதறி ஓடினார்கள்.

தனியே விடப்பட்டதும் தோல்யா இனி தானும் அங்கிருந்து ஓடி விடுவதுதான் நல்லதெனத் தீர்மானித்தான். ஆனால் அக்கணத்தில் அவன் தனது சட்டையின் காலரை யாரோ கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டதை உணர்ந்தான். கீச்சுக் குரல் அவன் காதருகே கூச்சலிட்டது: ''போக்கிரிப் பயலே! சன்னல் மேலே பந்து அடித்துக் கண்ணாடியை உடைப்பதுதான் உனது விளையாட்டா?''

இறுக்கப்பட்ட கழுத்தை முடிந்த அளவுக்குத் திருப்பி ஓரக் கண்ணால் மேலே பார்த்தான் தோல்யா. வயதான ஒரு பாட்டியின் கோபங்கொண்ட முகம் தெரிந்தது, அவரது மேல் உதட்டில் பட்டாணிக் கடலையின் பருமனுக்கு ஒரு பரு இருந்தது. கடையிலிருந்து வாங்கி வந்த மளிகைச் சாமான் இருந்த கறுப்புப் பிளாஸ்டிக் பையை ஒரு கையில் வைத்துக்கொண்டு, இன்னொரு கையால் தோல்யாவின் சட்டைக் காலரைக் கெட்டியாகப் பிடித்திருந்தார் அவர்.

''தவறுதலாய் நேர்ந்து விட்டது'' என்று முனகியவாறு தோல்யா, அவர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான்.

''தவறுதலாய் உன் தலையில் மொத்தினால் எப்படி இருக்கும் உனக்கு? பையன்கள் எதுவும் செய்யலாம், யாரும் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறீர்கள்?''

''உங்களுடைய சன்னலா? மறுபடியுமா உடைத்து விட்டார்கள்?'' என்று பாட்டியிடம் கேட்டார், அந்த பக்கம் வந்த ஓர் அன்னை.

''ஆமாம், என்னுடையது அல்லாமல் வேறு யாருடையது? மூன்றாவது தரம் உடைத்திருக்கிறார்கள்! இதே வேலையாகப் போச்சு, பயமே இல்லை! உன் வீட்டு எண் என்ன?'' என்று கேட்டுத் தோல்யாவை ஒரு குலுக்கு குலுக்கினார் பாட்டி.

''பதினாறு'' என்றான் தோல்யா.

''பொய் சொல்கிறான். பதினாறும் எண் வீட்டில் இருப்போர் எல்லோரையும் எனக்குத் தெரியும்'' என்று சொன்னார் அந்த அன்னை.

''உங்கள் கட்டடத்தில் இருப்பதாகச் சொல்லவில்லையே நான்.''

''ஓ, வெளியிடத்துப் பையனு?'' என்று பாட்டி வாய்க்குள் கடிந்து கொண்டார். ''சன்னல் கண்ணுடி உடைப்பதற்கு இங்கு இருப்பவர்கள் போதாதென்று நீயும் வேறு வந்தாயா? வீட்டு அலுவலகத்துக்குப் போவோம், வா என்னுடன்'' என்று தோல்யாவை இழுத்துச் சென்ருர் பாட்டி.

வீட்டு அலுவலகத்தில் நிர்வாகியும் கணக்கரும் இருந்தனர். நிர்வாகி ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். கணக்கிடும் பொறியின் முன்னுல் அமர்ந்து வேலே செய்த கணக்கரின் வாயில் சிகரெட்டு இருந்தது. அதிலிருந்து சுருண்டெழுந்த புகை கண்ணைக் கரிக்கவே, கணக்கர் கண்களைச் சுளித்துக் கொண்டு வேலே செய்தார். சன்னலுக்கருகே ஒரு பெஞ்சில் உட்கார்ந்திருந்த, மீசையுடைய மூன்ருவது ஆள் ஒருவரும் புகைத்துக் கொண்டிருந்தார். அறையினுள் புகை மண்டியிருந்தது.

இந்தப் புகைக் காற்றை சுவாசித்ததும் தோல்யாவுக்கு இருமல் வந்து விட்டது. ஆனுல் பாட்டி அவனை நிர்வாகியின் எதிரே தள்ளி, அறைக் கதவை இழுத்து மூடினுர். ''இந்தப் பையன் எனது சன்னல் கண்ணுடியை உடைத்து விட்டான்'' என்று நிர்வாகியிடம் பாட்டி புகார் செய்தார். ''இதோடு இவர்கள் மூன்று தரம் என் சன்னலே உடைத்து விட்டார்கள். கடைக்குப் போய் சாமான் வாங்கிக்கொண்டு வருகிறேன், இந்தப் பையன் நேராய் என் சன்னலே நோக்கிப் பந்தை உதைக்கிருன்—என் கண்ணுல் பார்த்தேன். என் வீட்டில் எல்லாரும் கிராமக் குடிலுக்குப் போயிருக்கிருர்கள். புதிய கண்ணுடி வாங்கிப் போடுவதற்கு இரண்டு ரூபிள் ஆகும், இதற்கெல்லாம் என்னிடம் பணம் இல்லே.''

''ஊ-ம்-ம்'' என்று உறுமியபடி மேஜையிலிருந்து நிர்வாகி நிமிர்ந்தார். ''தம்பி, புதிய கண்ணுடி போடுவதற்கு நீ இரண்டு ரூபிள் கொண்டு வந்து தர வேண்டும்.''

''கொண்டு வந்து தருகிறேன்'' என்ருன் தோல்யா.

''போய் உடனே கொண்டுவா.''

''பையன் போய்விடுவான், நாம் இங்கே காத்திருக்க வேண்டியதுதான்'' என்ருர் பாட்டி.

''நான் வாக்களிக்கிறேன், பணத்துடன் உடனே திரும்பி வருவேன்.''

''நீயும் உன் வாக்கும்! பையனை விட்டோமானுல் திரும்பவும் நம் கண்ணில் படவே மாட்டான்.''

''நீங்கள் சொல்வதும் சரிதான். பையனுடைய முகவரியைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்'' என்ருர் நிர்வாகி. ''தம்பி, உன் பெயர் என்ன?''

''தோல்யா கிலியூக்வின்.''

''எங்கே இருக்கிறது உன் வீடு?''

தோல்யா தனது வீட்டு முகவரியைச் சொன்னுன்.

''சரி, தோல்யா கிலியூக்வின்'' என்ருர், அவனுடைய முகவரியை எழுதிக்

கொண்ட நிர்வாகி. ''நீ உடைத்த சன்னல் கண்ணுடிக்காக இரண்டு ரூபிள் கொண்டு வந்து தராவிடில், முகவரியைத் தேடி வந்து உன்னைப் பிடித்துக் கொள்வோம். புரிகிறதா?''

''முகவரியைத் தேடிச் செல்லலாம், ஆனுல் பையனைப் பிடிக்கலாம் என்பது சந்தேகம்தான்'' என்ருர் பாட்டி. ''சரியான முகவரியைக் கொடுத்திருக்கிருன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

நிர்வாகி தலையைத் திருப்பிப் பாட்டியை உற்று நோக்கினுர். ''சரியான முகவரிதானு என்று விசாரித்தால் தெரிந்து விடுகிறது'' என்று சொல்லி, தொலை பேசிப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினுர். அந்த முகவரிக்குரிய இடத்தைச் சேர்ந்த வீட்டு அலுவலகத்தின் தொலைபேசி எண்ணைத் தேடிப் பிடித்து அதை டயல் செய்தார். ''ஹலோ!... உங்கள் கட்டடத்தின் வீட்டுப் பெயரேட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு விவரம் தெரிய வேண்டும் எனக்கு. 16 ஆவது எண் வீட்டில் தோல்யா கிலியூக்வின் என்ரெரு பையன் வசிப்பது மெய்தானு என்று பாருங்களேன். காத்திருக்கிறேன், பார்த்துச் சொல்லுங்கள்... ஆமாம், தோல்யா கிலியூக்வின்.... 16 ஆவது எண் வீட்டைச் சேர்ந்தவன் தானு? நல்லது, நன்றி உங்களுக்கு ....ஒன்றுமில்லை, அந்த பையன் எங்கள் கட்டடத்துக்கு வந்து இங்கே ஒரு சன்னலை உடைத்துவிட்டான்.... வணக்கம்!'' என்று ஒலிவாங்கியைத் திருப்பி வைத்த நிர்வாகி, பாட்டியைப் பார்த்துக் கூறினுர்: ''நீங்கள் கவலைப் படாதீர்கள், பையன் சரியான முகவரியைத்தான் தந்திருக்கிருன்.''

''அதுதானே ஆச்சரியமாக இருக்கிறது'' என்ருர் சன்னலருகே உட்கார்ந்திருந்த மீசை வைத்த ஆள். ''விசாரிக்கையில் முகவரி சரியாகவே இருந்தாலும் பையன் மட்டும் பிற்பாடு அகப்படாமல் போவது உண்டு. அண்மையில் நான்காவது காவல் நிலையத்தில் இப்படித்தான் நடைபெற்றது. ஓடுகிற டிராலி பஸ்ஸிலிருந்து குதித்த பையனைப் பிடித்து அபராதம் கட்டச் சொல்லியபோது பையன் மறுத்துவிட்டான். அவன் காவல் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டான். அங்கே அவன் பெயரையும் முகவரியையும் கேட்டார்கள். தனது பெயர் வான்யா சிதரோவ் என்று சொல்லி, அந்தப் பையன் ஒரு முகவரியையும் தந்தான். விவரங்கள் சரியானவையே. ஆனுல் பெயரும் முகவரியும் அவனுடையவை அல்ல, அவனுக்குத் தெரிந்த இன்னெரு பையனுடையவை. காவல் நிலையத்திலிருந்து அவர்கள் தொலைபேசியில் விசாரித்துப் பார்த்தார்கள், விவரங்கள் சரியாகவே இருந்ததும் பையனை வீட்டுக்குப் போகச் சொன்னுர்கள். பிறகு அபராதம் கட்டுமாறு மெய்யான வான்யா சிதரோவின் பெற்ருேருக்கு மறு நாளன்று அறிவிப்பு வந்து சேர்ந்தது. ஓடுகிற டிராலி பஸ்ஸிலிருந்தா குதித்தாய் என்று கேட்டு தாயும் தந்தையும் பையனைக் கண்டித்தார்கள். பையன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான், அவனுக்கு அழுகையே வந்து

விட்டது. ஆனால் தாயும் தந்தையும் அவன் பேச்சை நம்பவில்லை, பொய் பேசுகிறான் என்று சொல்லிவிட்டனர். தன்னிடம் தன் பெற்றோருக்கே நம்பிக்கை இல்லை என்பதைக் கண்டதும் பையனால் பொறுக்க முடியவில்லை. அவன் காய்ச்சலாய்ப் படுத்துவிட்டான். பையன் சொல்வது மெய்தான், இல்லையேல் இப்படிப் படுக்கமாட்டான் என்பது தெரிந்ததும் தந்தை, காவல் நிலையத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ''எங்கள் பையன் பொய் சொல்கிறவன் அல்ல, ஓடுகிற டிராலி பஸ்ஸிலிருந்து குதிப்பவன் அல்ல, நல்ல பையன்'' என்றார். ''வீட்டிலே இருக்கையில் எல்லா பையன்களும் நல்ல பையன்கள்தான்'' என்று அவர்கள் பதிலளித்தார்கள். ''நான் அபராதம் கட்டப் போவதில்லை'' என்றார் தந்தை: ''கட்டாவிட்டால் வழக்கை நீதி மன்றத்திடம் ஒப்படைப்போம்'' என்றார்கள் அங்கிருந்தவர்கள்.

இரண்டொரு வாரத்துக்குப் பிற்பாடு நீதி மன்றத்திடமிருந்து தந்தைக்கு அழைப்பு வந்தது. அங்கே போய் அவர் தமது வாதத்தைத் திரும்பவும் எடுத்துரைத்தார். காவலரின் கைப்புத்தகத்தில் பையன் பெயரும் முகவரியும் குறிக்கப்பட்டிருந்ததை அவரிடம் காட்டினார்கள். முடிவில், பையனைப் பிடித்துக் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தவரைக் கூப்பிட்டு விசாரிக்கலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது.

''அந்த ஆள் வான்யா சிதரோவைப் பார்த்ததும் 'அந்தப் பையன் எப்படி இருந்தான் என்று எனக்கு நினைவில்லை, ஆனால் இந்தப் பையன் அவன் மாதிரி இல்லை' என்றார். பிறகு பையன் அருகே சென்று இன்னொரு தரம் கவனமாகப் பார்த்துவிட்டு, 'இல்லை, இந்தப் பையன் அல்ல நான் பிடித்துச் சென்றவன்' என்று தீர்மானமாகக் கூறினார்.

''அதோடு முடிந்தது அந்த வழக்கு. அது வேறு விதமாகவும் முடிந்திருக்கக் கூடும். ஆனால் வான்யா சிதரோவ் என்பதாகப் பெயர் கொடுத்த பையன் கடைசி வரை அகப்படவேயில்லை.''

''பலே கைகாரனாகவே இருந்திருக்க வேண்டும் அவன்'' என்றார் நிர்வாகி.

''ஆமாம்,எல்லாரையும் ஏமாற்றிவிட்டான்'' என்று கூறினார்,மீசை வைத்த ஆள். ''பொய் சொல்லி தப்பிக்க விரும்புகையில் சாதாரணமாய் எல்லா பையன்களும் மனதுக்குத் தோன்றிய பெயரையும் முகவரியையும் சொல்வார்கள். பிறகு விசாரிக்கையில் பொய் வெளிப்பட்டு விடும். ஆனால் அந்தப் பையன் மெய்யான ஒருவனது பெயரையும் முகவரியையும் தந்து விட்டான்.''

''இம்மாதிரிப் பையன் சன்னலை உடைத்து விட்டு என் பெயர் வான்யா சிதரோவ், எனது முகவரி இது என்று சொல்லிவிட்டுப் போய்ச் சேர்வான். பிறகு வான்யா சிதரோவிடம் சென்று பணத்தை வசூலிக்க முயலும் போதல்லவா தெரியும்?'' என்று கூறினார் பாட்டி.

''ஆமாம், என்னவெல்லாமோ நடைபெறுகிறது'' என்று சொல்லித் தோல்

யாவை எடை போடுவது போல அவனை உற்றுப் பார்த்தார் நிர்வாகி. ''மெய்யாகவே இவன் வான்யா சிதரோவாக இருக்கலாம். இல்லை, மறந்து விட்டேனே.... உன் பெயர் என்னவென்று சொன்னாய்?''

''தோல்யா கிலியூக்வின்.''

''ஆமாம், மெய்யாகவே இவன் தோல்யா கிலியூக்வினாக இருக்கலாம், அப்படி இல்லாமலும் இருக்கலாம். யாருக்குத் தெரியும்? ஆகவே நீங்கள் இவனைக் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தெளிவுபடுத்திக் கொள் வதுதான் நல்லது....''

''காவல் நிலையத்துக்கு எதற்காக?'' என்று கூவினான் தோல்யா. ''உண் மையைத்தானே சொல்கிறேன் நான்.''

''உண்மையாமே, உண்மை! உன்னைப் போன்ற பையன்களுக்கும் உண் மைக்கும் நெடுந்தூரம் ஆயிற்றே'' என்று கூறிய பாட்டி, தோல்யாவின் அடிக் கரத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டார். அவனை இழுத்துக் கொண்டு பாட்டி திரும்பவும் புறப்பட்டார். மிரண்டு போய் விழித்தவாறு தட்டுத் தடு மாறிக் கொண்டு தோல்யா, அவருடன் கூடச் சென்றான். காவல் நிலையத் துக்கு இழுத்துச் செல்லப்படும் இவன் திருடனாகவே இருப்பானென வருவோர் போவோர் எல்லோரும் தன்னை உற்றுப் பார்ப்பது போல அவனுக்குத் தோன்றியது.

தோல்யா இதற்கு முன்பு காவல் நிலையம் போனதில்லை. இப்போது அங்கே போவதை எப்படியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டுமென விரும்பினான். உதறிக் கொண்டு விலகி ஓட முயற்சி செய்து பார்த்தான், ஆனால் பாட்டியின் உடும்புப் பிடி கொஞ்சங்கூட தளர்வதாக இல்லை.

''சிறுவனை ஏன் இழுத்துச் செல்கிறீர்கள்?'' என்று விசாரித்தார் எதிரே வந்த ஒரு பெண்.

''சன்னல் கண்ணாடியை உடைத்து விட்டான்.''

''அவனை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?''

''காவல் நிலையத்துக்குதான், வேறு எங்கே?''

''என்னை விடுங்களேன்!'' என்று தோல்யா உதறிக் கொண்டு ஓட முயன் றான்.

''உன்னால் தப்ப முடியாது, அமைதியாக வா என்னுடன்.''

''என்னை விடுங்கள்'' என்று கெஞ்சினான் தோல்யா. ''நானே உங்களுடன் நடந்து வருவேன், ஓடி விட மாட்டேன்.''

''நீ சொல்வதை நான் நம்புவேன் என்றா நினைக்கிறாய்?''

இந்தப் பாட்டி தன்னை விடப் போவதில்லை என்பது தெரிந்ததும் தந்திரம் புரிந்துதான் தப்பிச் செல்ல வேண்டுமென்று தோல்யா முடிவு செய்து கொண் டான். ஒரு கையில் அவர் பை வைத்திருந்ததால், ஒரே கையால் தான் அவர்



தன்னைப் பிடித்துச் செல்ல வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். ''சற்று நேரத்துக்குள் பாட்டிக்குக் கை ஓய்ந்து போகும், பிறகு என்னை அவரால் அவ்வளவு கெட்டியாகப் பிடிக்க முடியாது'' என்று தன்னுள் கூறிக் கொண்டான்.

எதிர்ப்புக் காட்டி முண்டுவதை நிறுத்திக் கொண்டு இப்பொழுது அவன் பணிவுடன் பாட்டியுடன் போக ஆரம்பித்தான். சற்று நேரத்துக்கெல்லாம் பாட்டியின் விழிப்புணர்ச்சி குறைந்ததும் அவர் பிடியிலிருந்து வெடுக்கென பிய்த்துக் கொண்டு அவன் விலகி ஓடினான்.

''ஓடாதே, நில்!'' என்று கூச்சலிட்டுப் பாட்டி அவனைத் துரத்திக் கொண்டு ஓடினார். ''நிற்கச் சொல்கிறேன் உன்னை! ஓடாதே! பிடியுங்கள் அவனை!''

நடைபாதையில் சென்றவர்களுக்குச் சிறுவனைப் பிடிப்பதா, வேண்டாமா என்று புரியவில்லை. திகைப்புடன் பார்த்துவிட்டு அவர்கள் நடந்தார்கள். ஒரேயொருவர் மட்டும் தோல்யாவைப் பிடிக்க முயன்றார், ஆனால் பையன் அவர் கையில் அகப்படாமல் தப்பித்து நடைப்பாதையிலிருந்து குதித்துச் சாலையில் ஓடினான். அங்கே அவனைத் தடுத்து நிறுத்த பாதசாரிகள் யாரும் இல்லை. பாட்டி இன்னும் அவனை விடாமல் விரட்டி வந்தார். அவரும் சாலையில் இறங்கி ஓடினார், சாலையில் விரைந்து சென்ற லாரியில் அகப்பட்டுக் கொள்ளப் பார்த்தார்.

''தம்பி, நில்!'' என்று கூச்சலிட்டு விட்டு நடைபாதைக்குத் திரும்பி ஓடி வந்தார். ''ஓடாதேடா! காரில் மாட்டிக் கொள்வாய்! ஓடாதே!''

ஆனால் தோல்யா எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. வேகமாய் ஓடிச் சாலைச் சந்தியை அடைந்து அங்கிருந்து எதிர்ப் பக்கத்துக்கு ஓடிக் கொண்டிருந்தான். டிராம் பாதையின் குறுக்கே அவன் ஓடுகையில் அவனை நோக்கி வேகமாக டிராம் வண்டி வரக் கண்டதும் பாட்டி திடுக்குற்றவாறு சாலை முனையிலே நின்று விட்டார். அவருக்குக் கால்கள் வெடவெடத்து ஆடின, சிறுவன் மீது வண்டி மோதவே போகிறதென நினைத்தார். ஆனால் டிராம் டிரைவர் சிறுவனைப் பார்த்துவிட்டு வேகத்தைக் குறைக்கவே அவன் அதனிடமிருந்து தப்பி, எதிர்த் திசையிலிருந்து ஓடி வந்த காரின் குறுக்கே பாய்ந்தோடினான். தப்பிக்க வழி இல்லை என்பதாகவே தோன்றியது. பிரேக்கு கிரீச்சிடும் சப்தம் காதை அடைத்தது. அந்தக் கார் சரியாகத் தோல்யாவின் தோளில் இடித்துக் கொண்டு நின்றது. தோல்யா கீழே விழுந்து விட்டான். பாட்டி தம் கையிலிருந்த பையைப் போட்டுவிட்டு கண்களைப் பொத்திக் கொண்டார்.

தோல்யாவைச் சுற்றிலும் கூட்டம் கூடிவிட்டது. மருத்துவ ஆம்புலன்சை வரச் சொல்லி அழைப்பதற்காக ஒருவர் தொலைபேசிக் கூண்டுக்கு ஓடினார். இதற்கிடையில் தோல்யா எழுந்து உட்கார்ந்தான்.

''தம்பி, நீ நல்லபடியாக இருக்கிறாயா? எங்கே அடிபட்டது, சொல்லு!''

''இல்லை'' என்று தலையை ஆட்டினான் தோல்யா.

காரிலிருந்து டிரைவர் குதித்து தோல்யாவிடம் ஓடி வந்து குனிந்தார். ''எப்படி நீ சாலை நடுவே வந்தாய்? அடி பட்டு விட்டதா?'' என்று கேட்டார்.

''அடிபடவில்லை.''

தோல்யாவின் கரங்களையும் கால்களையும் அவர் தொட்டுத் தடவிப் பார்த்தார். ''வலிக்கவில்லையா? நிச்சயம்தானா?''

''வலிக்கவில்லை, மிரண்டு விட்டேன், அவ்வளவுதான்.''

'' 'மிரண்டு விட்டேன்!' என்றா சொல்கிறாய்?'' டிரைவர் முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகை பளிச்சிட்டது. ''அதிர்ஷ்டசாலிப் பையன் நீ! தக்கத் தருணத்தில் பிரேக்கைப் போட்டேன்.''

போக்குவரத்துக் காவலர் ஒருவர் அவர்களிடம் வந்தார். ''பையனுக்குக் காயமா பட்டு விட்டது?'' என்று டிரைவரிடம் அவர் விசாரித்தார்.

''தோழரே, பையன் பாக்கியசாலி! சிறிதளவு அதிர்ச்சியைத் தவிர வேறு தீங்கு ஏதுமின்றித் தப்பித்துக் கொண்டான்.'

அப்போது பாட்டி அந்த கூட்டத்துள் புகுந்து பையனிடம் வந்தார். அச்சத்தால் அவருக்குக் கைகள் அதிர்ந்தாடின, உதடுகள் துடித்தன. காருக்கு முன்னால் தோல்யா நிற்பதைக் கண்டதும் அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கூவினார்:

''கண்ணே, நல்லபடி இருக்கிறாயா நீ? என் தங்கமே! பிழைத்துக் கொண்டு விட்டாயா?''

பாட்டியைப் பார்த்ததும் தோல்யா அங்கிருந்து ஓடிவிட வேண்டுமென்று அங்கும் இங்கும் திரும்பினான். ஆனால் சுற்றிலும் கூட்டமாய் இருந்ததால் தப்ப வழியில்லை.

''கண்ணா, உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன், பயப்படாதே!'' என்று பாட்டி கைகளை அகல விரித்து ஆட்டினார். ''தோழர் காவலரே, பையன் மீது எந்தக் குற்றமும் இல்லை, எல்லாம் நான் செய்த தவறுதான். நான் விரட்டினேன், என்னிடமிருந்து தப்பி ஓடி இங்கே காருக்கு எதிரே வந்து விட்டான். பாழாப் போன அந்த சன்னல்தான் காரணம்!''

''மெய்தான்'' என்றார் கூட்டத்திலிருந்த யாரோ ஒருவர். ''சாலையிலே சிறுவனை விரட்டிக் கொண்டு பாட்டி ஆத்திரமாய் ஓடி வந்ததைப் பார்த்தேன்.''

''சரி, நான் எழுதிக் கொள்கிறேன்'' என்று போக்குவரத்துக் காவலர் தமது நோட்டுப் புத்தகத்தை வெளியே எடுத்தார்.

''காவலரே, அதுதான் உண்மை! எழுதிக்கொள்ளுங்கள்! கண்ணா, நீ பயப்படாதே!'' என்று தோல்யாவிடம் திரும்பினார் பாட்டி. ''அந்த சன்னல் கண்ணாடி போனால் போகட்டும் போ! அதை நான் மறந்துவிட்டேன். நீ எங்கள்

கட்டடத்துக்கு வா! எங்கள் பையன்களுடன் விளையாடு! என்னுடைய சன்னல் கண்ணாடியை தினந்தோறும் வேண்டுமானாலும் உடை, உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன்!''

அப்போது அங்கே மருத்துவ மனை ஆம்புலன்ஸ் வந்து நின்றது. வெள்ளை உடுப்பணிந்த ஒரு பெண் அதிலிருந்து இறங்கி வந்தாள்.

''அடிபட்டவர் எங்கே?'' என்று கேட்டு கூட்டத்துக்குள் புகுந்தாள் அவள். ''காரில் அடிபட்டது யார்?''

''அதோ, அந்தச் சிறுவன்'' என்று கூட்டத்திலிருந்து ஒருவர் பதிலளித்தார்.

கூட்டத்தினர் விலகி அவளுக்கு வழி விட்டனர்.

''தம்பி, என்னைப் பிடித்துக் கொள். உன்னைத் தூக்கிச் சென்று வண்டியினுள் படுக்க வைக்கிறேன்.''

''பையனுக்குக் காயம் ஒன்றும் இல்லை, நல்லபடியாகவே இருக்கிறான்'' என்றார் டிரைவர்.

''உங்களுக்கு அப்படித் தெரிகிறது'' என்று கண்டிப்பு தொனிக்கும் குரலில் சொன்னாள் அந்தப் பெண். ''ஆனால் பையனின் நெற்றியில் காயம் பட்டிருப்பதை நான் பார்க்கிறேன்.''

''இது இங்கே பட்டதல்ல, குப்பைத் தொட்டியிலே விழுந்தபோது பட்டது'' என்றான் தோல்யா.

''குப்பைத் தொட்டியிலா?''

''ஆமாம், பையன்களுடன் சைக்கிள் ஓட்டிச் சென்றபோது விழுந்தேன்.''

தோல்யாவைத் தூக்கிக் கொண்டு ஆம்புலன்சிடம் சென்றாள் அந்தப் பெண்.

''குப்பைத் தொட்டியிலே பட்ட காயம் என்கிறானே, அவனை ஏன் மருத்துவ மனைக்குக் கொண்டு போக வேண்டும்?'' என்று பாட்டி அவளிடம் சொல்லிப் பார்த்தார்.

''குப்பைத் தொட்டியில் பட்ட காயமானால் உடனே ஊசி போட வேண்டும்.''

''அப்படியானால் சரிதான், கொண்டு போக வேண்டியதுதான். கண்ணா, எல்லாம் சரியானதும் பந்து விளையாட எங்கள் கட்டடத்துக்கு வா நீ!'' என்று சொல்லி கையை ஆட்டிக் காட்டித் தோல்யாவை அனுப்பி வைத்தார் பாட்டி.

மறு நிமிடமே ஆம்புலன்ஸ் வண்டி புறப்பட்டது. தோல்யா அதனுள் தூக்குப் படுக்கையில் படுத்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய ஸ்டூலில் அந்தப் பெண் அமர்ந்திருந்தாள்.

''மருத்துவ மனைக்குப் போனதும் டாக்டர் உன்னைப் பரிசோதனை செய்

வார். நீ எழுந்து ஓடி விளையாடலாமா என்று சொல்வார். அது வரை படுத்திரு நீ'' என்ருள் அவள்.

வண்டியின் சன்னல் வழியே உயரமான கட்டடங்களின் மேல்மாடிகளை மட்டுமே தோல்யா பார்க்க முடிந்தது. வண்டி எந்தச் சாலையில் போகிறதென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனல் அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஊசி போட்டுக் கொள்ள வேண்டுமே என்று நினைத்த போதுதான் அவனுக்குக் கவலையாக இருந்தது, வலிக்குமே என்று பயந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்த ஆம்புலன்ஸ், மருத்துவமனைக்குள் நுழைந்து வாயிலின் முன்னல் நின்றது. மருத்துவமனைப் பணியாட்கள் இருவர் வண்டியின் பின்பக்கத்து இரட்டைக் கதவைத் திறந்து, தூக்குப் படுக்கையை வெளியே இழுத்தார்கள். தோல்யா குதித்து ஓடிவிடலாமென்று பார்த்தான், ஆனல் அந்த பணியாட்களில் ஒருவர் அவனைக் கண்டித்தார்:

''ஏன் ஆடுகிருய்? அசையாமல் படுத்திரு!''

அவர்கள் அவனை வாயிலுக்குள் தூக்கிச் சென்றனர். அமைதியாகப் படுத்திருக்க முடியாமல் தோல்யா எழுந்து உட்கார்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தான். தன்னை எங்கே எடுத்துச் செல்கிருர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினன்.

''வாலுப் பையன்கள்!'' என்று முணுமுணுத்தார், அவன் கால் பக்கத்தில் வந்த பணியாள். ''படுத்திருக்கச் சொன்னேமானல், தலையைத் துருத்திக் கொண்டு எழுந்து உட்காரும்.''

இருவரும் தூக்குப் படுக்கையை நீளமான நடைவழி நெடுக தூக்கிச் சென்று, வெளிச்சம் நிறைந்த ஒரு பெரிய அறைக்குள் கொண்டு போனர்கள். வெள்ளைச் சுவர்களையும் உயரமான கூரைத் தளத்தையும் கொண்ட அறை அது. வெளியே நடைவழியில் வீசிய அயோடின், கார்பாலிக் முதலான மருந்துகளின் நெடி இங்கும் மூக்கில் ஏறியது. அந்தப் பணியாட்களில் ஒருவர் தோல்யாவைத் தூக்குப் படுக்கையிலிருந்து இழுத்து, குளிர்ந்து சில்லிட்ட வெண்ணிற மெழுகுத்துணி விரிக்கப்பட்ட உயரமான கட்டிலில் படுக்க வைத்தார்.

''இங்கே படுத்திரு, இதோ டாக்டர் வந்து விடுவார்'' என்று அந்த ஆள் தோல்யாவின் காதுக்குள் சொன்னர். ஏனே தெரியவில்லை, தோல்யாவைப் பார்த்து விரலை ஆட்டிக் காட்டிவிட்டு அவர் வெளியே சென்ருர்.

தோல்யா படுத்திருந்தான். என்ன ஆகுமோ என்று அஞ்சியபடி காத்திருந்தான். டாக்டர் இன்னும் வரவில்லையே, தான் இங்கே படுத்திருப்பதை இவர்கள் மறந்திருப்பார்களோ என்று அவன் நினைத்த போது அறைக் கதவு திறக்கப்பட்டது. ஒரு டாக்டரும் ஒரு தாதியும் உள்ளே வந்தார்கள்.

அந்த டாக்டர் வயது முதிர்ந்தவர். வெள்ளை மயமாய் இருந்தார்: அவர் அணிந்திருந்த மொடமொடப்பான அங்கியும் வெள்ளை, தலையில் வைத்திருந்த



குல்லாவும் வெள்ளை, அவரது புருவங்களுங்கூட வெள்ளைதான். மூக்குக் கண்ணாடி போட்டிருந்தார். ஒவ்வொரு வாக்கியத்துக்கும் ஒரு தரம் ''இம்-ம்'' என்று சொல்லி இழுத்தார். தோல்யாவை அவர் ''ஐயா'' என்றழைத்துப் பேசினார்:

''இம்-ம், நீ எப்படி ஐயா காரில் அகப்பட்டாய்? அதைச் சொல் ஐயா.''

ஆனால் தோல்யாவின் பதிலுக்காக அவர் காத்திருக்கவில்லை. அவன் நெஞ்சில் துடிப்பாய்வுக் கருவியின் குமிழை வைத்து அழுத்தி இதயத் துடிப்பைக் கவனித்தார்.



''இம்-ம், மூச்சை இழுத்து விடு ஐயா, பார்க்கலாம்... இன்னொரு தரம்... இன்னொரு தரம்'' என்று சொல்லிக் குமிழை இடப் பக்கத்திலும் வலப் பக்கத்திலும் ஆங்காங்கே வைத்துப் பார்த்தார். ''இம்-ம், இதோ பார் ஐயா! இந்த விரலையே பார்த்துக் கொண்டிரு'' என்று சொல்லித் தோல்யாவின் மூக்கு நுனிக்கு அருகே விரலைக் காட்டி அப்படியும் இப்படியுமாய் அசைத்தார். தோல்யா அந்த விரலைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான், விரலின் அசைவுக்கு ஏற்ப அவன் விழிகளும் அசைந்தன. இதன் பிறகு டாக்டர் அவனுடைய எலும்புகளைப் பரிசோதனை செய்தார். ரப்பர் முனைகளைக் கோண்ட சுத்தியலால் அவன் முழங்கால்களில் தட்டிப் பார்த்தார். முடிவில் தாதியிடம் திரும்பி, ''எல்லாம் தயாராய் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''தயார்'' என்றாள் தாதி.

''சரி, நடக்கட்டும்.''

''ஐயோ, இந்தத் தாதி என்ன செய்யப் போகிறார்?'' என்று தோல்யா தன்னுள் கூறிக் கொண்டான்.

தாதி நெருங்கி வரக் கண்டதும் அவனுக்கு வயிற்றைக் கலக்கியது.

''என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று அவன் பீதியுற்றுக் கத்தினான். ''ஊசி போட வேண்டாம்!''

''பயப்படாதே நீ! நான் ஒன்றும் செய்யப் போவதில்லை.''

என்ன நடைபெறுகிறதென்று தோல்யா உணர்வதற்குள், தாதி அவனைப் பக்கவாட்டில் திருப்பி பிரஷ்டத்துக்கு மேல் ஊசியைக் குத்தினாள்.

''ஊ''—திடுக்குற்றுப் போன தோல்யா வீரிட்டுக் கத்தினான்.

''கத்தாதே! அவ்வளவுதான்! நீயே பார், வலிக்கவில்லை!''

''ஆமாம், வலிக்கவில்லை'' என்றான் தோல்யா, அழாக் குரலில்.

''அரை மணி நேரம் படுத்திருக்கட்டும், பிறகு பையனை வீட்டுக்கு அனுப்பலாம். நெற்றிக் காயத்தில் கொஞ்சம் அயோடின் போட வேண்டும்'' என்று கூறிவிட்டு, டாக்டர் வெளியே சென்றார்.

தாதி அவனுடைய நெற்றிக் காயத்தைத் துடைத்துவிட்டு, அதில் அயோடின் போட்டாள், பிறகு குறிப்பேட்டை எடுத்து அதில் எழுதிக் கொண்டாள்.

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

தோல்யா தன் பெயரைச் சொல்ல வாயைத் திறந்தான். ஆனால் ஏனோ தெரியவில்லை, தன் பெயர் ஸ்லாவா என்றான். குடும்பப் பெயரைச் சொல்லும் படி தாதி கூறியதும், கிலியூக்வின் என்று சொல்வதற்குப் பதில் அகன்கோவ் என்றான். அதாவது அன்று காலை அவன் யாரைச் சந்திக்கப் புறப்பட்டபோது, பூனை குறுக்கே சென்றதோ, அந்த ஸ்லாவாவின் குடும்பப் பெயரைச் சொன்னான்.

''உன் வீடு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டாள், பெயரைக் குறித்துக் கொண்ட தாதி.

தோல்யா தன்னுடைய முகவரிக்குப் பதில் ஸ்லாவாவினுடைதைச் சொன்ஞன்.

அவன் ஏன் இப்படிப் பொய் சொன்ஞன் என்று அவனுக்கே புரியவில்லே. வீட்டு அலுவலகத்தில் அவன் உண்மையைச் சொன்ன போது அதை யாரும் நம்பாதது நினேவுக்கு வந்ததால், இங்கே அவன் உண்மைக்குப் பதில் பொய்யைச் சொல்வோமே என்று நினேத்திருக்கலாம். அதோடு தனக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி மருத்துவ மனேயிலிருந்து வீட்டில் அம்மாவுக்குத் தகவல் தெரிவிப்பார்களே என்றும் பயந்தான்.

வீட்டு அலுவலகத்தில் அவன் கூறக் கேட்டிருந்த அந்தப் பையன் கையாண்ட முறையை இவ்விதம் தோல்யாவும் கையாண்டு விட்டான். அங்கே அவன் அந்தக் கதையைக் கேட்டிராவிடில், தாதியிடம் வேருெருவனுடைய பெயரையும் முகவரியையும் தரலாமென்ற எண்ணம் அவனுக்கு உதித்திருக்காது. அந்தக் கதையை அவன் கேட்டிருந்ததால், இங்கே உடனே அவனுக்கு அந்த எண்ணம் உதிக்கலாயிற்று.

''உன் வீடு தொலேவில் அல்லவா இருக்கிறது? தொலேபேசி இருக்கிறதா உன் வீட்டில்?'' என்று கேட்டாள் தாதி.

ஸ்லாவா வீட்டில் தொலேபேசி இருக்கிறது, ஆகவே தோல்யா ''இருக்கிறதே'' என்று பதிலளித்தான்.

''தொலேபேசி எண்ணேச் சொல்லு.''

''எண்ணு? உம்-ம் நினேவுக்கு வரவில்லேயே.''

''உன் வீட்டுத் தொலேபேசி எண் உனக்கு நினேவு இல்லேயா? கார் மோதிய அதிர்ச்சியில் கலங்கிப் போயிருக்கிருய். பரவாயில்லே, தொலேபேசிப் புத்தகத்தில் பார்த்தால் தெரிகிறது.''

''தொலேபேசியில் கூப்பிடத்தான் வெண்டுமா?''

''ஆமாம், உன் அம்மாவை இங்கு வந்து உன்னே அழைத்துக் கொண்டு போகச் சொல்ல வேண்டும். நான் உன்னே வீட்டுக்கு அழைத்துக் கொண்டு செல்வேன். ஆனுல் எனக்கு இது வேலே நேரம், இப்போது நான் இங்கிருந்து போகக் கூடாது.''

''நான் ஒன்றும் குழந்தை அல்ல, தனியாகவே வீட்டுக்குப் போவேன்.''

''இல்லே, உன்னேத் தனியே போகவிட மாட்டேன். தனியே போகவும் வேண்டாம், மறுபடியும் நீ காரில் அடிபடவும் வேண்டாம்.''

தாதி இவ்வாறு கூறியவாறு தொலேபேசிப் புத்தகத்தைப் புரட்டிஞள்.

''இதோ இருக்கிறது'' என்ருள், ஸ்லாவாவின் வீட்டு முகவரியையும் அதன் தொலேபேசி எண்ணேயும் தேடிப் பிடித்த தாதி. உடனே ஒலிவாங்கியை

கையில் எடுத்துக் கொண்டு, அந்த எண்ணை டயல் செய்ய ஆரம்பித்தாள். தோல்யா மிரட்சியுடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஸ்லாவா வீட்டில் யாரும் இருக்கக் கூடாது, எல்லாரும் வெளியே போயிருக்க வேண்டுமென அவன் விரும்பினான். ஆனால் அவன் விருப்பம் ஈடேறவில்லை, அரை நிமிடத்துக்கெல்லாம் ஸ்லாவாவின் அம்மாவுடன் தாதி பேசக் கேட்டான்.

''ஹலோ, திருமதி அகன்கோவா பேசறது?'' என்று ஒலிவாங்கியினுள் கேட்டாள் தாதி. ''மருத்துவமனையிலிருந்து பேசுகிறேன். நீங்கள் இங்கே வந்து உங்கள் பிள்ளையை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஆமாம், உங்கள் பிள்ளை, ஸ்லாவா.... இல்லை, அவனுக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை, நல்லபடியாகத்தான் இருக்கிறான். அதெல்லாம் பயப்படாதீர்கள், ஒன்றும் இல்லை. டிட்டானஸ் ஊசி போட்டோம்... ஆமாம், ஒன்றுமில்லை, சிறு சிராய்ப்பு, காயம் இல்லை.... உண்மையைத்தான் சொல்கிறேன், காயம் இல்லை.... எப்படியா? சாலையில் கார் இடித்து விட்டது.... இல்லை, இல்லை! அடிபடவில்லை, கீழே விழுந்துவிட்டான், நெற்றியிலே சிறு சிராய்ப்பு... மெய் தான் சொல்கிறேன், பயப்பட வேண்டாம்... இல்லை, இல்லை! நல்லபடியாகத் தான் இருக்கிறான், அடிபட்டுவிடவில்லை. அதெல்லாம் இல்லை, பையனுக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை, பொய் சொல்லவில்லை, சிறு சிராய்ப்புதான்... என் பக்கத்தில் தான் இருக்கிறான், கட்டிலில் படுத்திருக்கிறான். நீங்கள் அமைதியாகப் புறப்பட்டு வாங்க, வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகலாம்... சரி, மருத்துவ மனை முகவரியைச் சொல்கிறேன்...''

தாதி சொல்ல வேண்டிய விவரங்களைச் சொல்லியதும், ஒலிவாங்கியைத் திருப்பி வைத்து விட்டுத் தோல்யாவிடம் திரும்பினாள்:

''யாவும் நன்றாகவே அமைந்து விட்டது. உன் அம்மா சற்று நேரத்தில் இங்கு வந்து விடுவார், அம்மாவுடன் வீட்டுக்குப் போய்ச் சேரலாம் நீ.''

இதைக் கேட்டதும் தோல்யா, கட்டிலிலிருந்து துள்ளியெழுந்து கீழே குதித்தான். தாதி அவனைப் பிடித்து மீண்டும் படுக்க வைத்தாள்.

''என்ன அவசரம் உனக்கு? ஊசி போட்டுக் கொண்ட பையன் கொஞ்ச நேரம் படுத்திருப்பது நல்லது. இதோ அம்மா வந்து விடுவார், இப்படியே படுத்திரு.''

ஸ்லாவாவின் அம்மா வந்து ஸ்லாவாவுக்குப் பதில் தன்னைப் பார்த்ததும் அவரிடம் என்ன சொல்வது என்று நினைத்துக் கலங்கியவாறு தோல்யா படுத்திருந்தான்.

''நான் ஸ்லாவா இல்லையென இப்போதே தாதியிடம் உண்மையைச் சொல்லிவிடுவது நல்லது அல்லவா?'' என்று அவன் ஆலோசித்தான்.

ஆனால் தாதி அதற்குள் அறையிலிருந்து வெளியே சென்று விட்டாள், நெடு நேரம் வரை அவள் திரும்பி வரவில்லை. பிறகு அவன் இங்கிருந்து தப்பி ஓடி

விடுவதுதான் நல்லதெனத் தீர்மானித்தான். தாதியும் ஸ்லாவாவின் அம்மாவும் அறைக்குள் வந்து பார்ப்பார்கள், அறை காலியாக இருக்கும். மருத்துவமனை முழுதும் போய்த் தேடிப் பார்ப்பார்கள். ஸ்லாவாவின் அம்மாவுக்குப் பெரிய அதிர்ச்சியாகவே இருக்கும், ஆனால் இறுதியில் வீட்டுக்குத் திரும்பியதும் அங்கே ஸ்லாவா இருப்பதைக் காண்பார், எல்லாம் நல்லபடி முடிவுறும்.

தோல்யா எழுந்து உட்கார்ந்தான். கட்டிலிலிருந்து அவன் இறங்கப் போன நேரத்தில் அறைக் கதவு திறக்கப்பட்டது. தாதியைப் பின்தொடர்ந்து ஸ்லாவாவின் அம்மா உள்ளே வந்தார். அவர் முகம் வெளிறிட்டிருந்தது, கிளர்ச்சியுற்றவராகத் தோன்றினர்.

''இதோ பாருங்கள், பையன் நல்லபடியாகவே இருக்கிறன், ஒன்றும் நேர்ந்து விடவில்லை. சிரிக்கிறன் பாருங்கள்.''

ஸ்லாவாவின் அம்மாவைப் பார்த்து தோல்யா அசட்டு சிரிப்பு சிரித்துக் கொண்டான்.

''என் பிள்ளையைக் காணேமே, எங்கே அவன்?'' என்று அவர் சுற்றும் முற்றும் பரபரப்புடன் பார்த்தார். கட்டிலில் உட்கார்ந்திருந்த தோல்யாவை அவர் கண்டு கொள்ளவில்லை.

''உங்கள் பிள்ளையை உங்களுக்கே தெரியவில்லையா?'' என்று தோல்யாவைச் சுட்டிக் காட்டி, வியப்புடன் கூவினள் தாதி.

''இங்கு எங்கே இருக்கிறன்? தோல்யா, ஸ்லாவா எங்கே?''

''எனக்குத் தெரியாதே'' என்று முனகினன் தோல்யா.

''இரண்டு பேரும் ழேன்யா வீட்டுக்குப் போனீர்கள். அதன் பிறகு என்ன நடந்தது? தோல்யா, எதையும் மறைக்காதே, உண்மையைச் சொல்லு.''

''இவன் தோல்யா இல்லை, இவன்தான் ஸ்லாவா'' என்றள் தாதி.

''எவன் ஸ்லாவா?''

''இவன்தான்.''

''என்ன இதெல்லாம்? எனக்குப் புரியவில்லை. என் பிள்ளை எங்கே இருக்கிறன்?''

''ஸ்லாவாதானே உங்கள் பிள்ளை?''

''ஆமாம், ஸ்லாவாதான். ஆனல் ஸ்லாவா அல்ல இவன். இந்தப் பையனுடைய பெயர் தோல்யா கிலியூக்வின்! தெரிந்ததா? ஸ்லாவா இவனல்ல என்று எத்தனை தரம்தான் சொல்லுவேன்!'' என்று புலம்பினர் ஸ்லாவாவின் அம்மா.

''உன் பெயர் ஸ்லாவா அகன்கோவ் என்று ஏன் சொன்னய்?'' என்று தோல்யாவைக் கேட்டாள் தாதி. பிறகு ஸ்லாவாவின் அம்மாவைப் பார்த்து, ''நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தவறு என்னுடையதல்ல'' என்றள். ''இவன்

தான் தன் பெயர் ஸ்லாவா அகன்கோவ் என்று சொல்லி உங்கள் முகவரியையும் தந்தான். நான் உங்களைத் தொலைபேசியில் கூப்பிட்டு, இங்கே வரச் சொன்னேன். எதற்காக நீ பெயரை மாற்றிச் சொல்லிக் குழப்படி பண்ணுய்? விளையாடுவதாக நினைத்தா செய்தாய்? அல்லது அதிர்ச்சியால் ஏற்பட்ட கலக்கமா? இப்படிச் செய்து விட்டானே என்று நீங்கள் கோபித்துக் கொள்ளலாகாது. காரில் அடிபட்டு பையன் கலங்கிப் போயிருக்கலாம், சில சமயம் அப்படியும் ஆவதுண்டு.''

''நான் கோபப்படவில்லை, என் பையன் ஸ்லாவா எங்கே இருக்கிறுன் என்றுதான் கேட்கிறேன்.''

''எனக்கு எப்படித் தெரியும்? உங்கள் பையன் இங்கில்லை.''

''காரில் அடிபட்டு விடவில்லையே அவன்?''

''அடிபட்டிருக்க முடியாது, அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால் இங்கே கொண்டு வந்திருப்பார்களே.''

''சரி, தோல்யா, நீயும் ஸ்லாவாவும் ழேன்யா வீட்டிலிருந்து கிளம்பிய போது மணி எவ்வளவு, நினைவு இருக்கிறதா உனக்கு?''

''நான் ழேன்யா வீட்டுக்கா போயிருந்தேன்?''

''போகவில்லையா? காலையில் நீ அங்கேதான் போகிறுய் என்றல்லவா நினைத்தேன்.''

''அங்கே போகலாமென்றுதான் புறப்பட்டேன், ஆனுல் அங்கே போவதற்குப் பதில் இங்கே வந்து சேர்ந்தேன்.''

''ஒருவேளை ஸ்லாவா இன்னமும் ழேன்யா வீட்டிலேயே இருக்கிறுனே என்னவோ? ழேன்யா வீட்டுத் தொலைபேசி எண் தெரியுமா உனக்கு?''

''தெரியாதே.''

''நான் பார்த்துச் சொல்கிறேன், முகவரியைச் சொல்லுங்கள்'' என்ருள் தாதி.

தாதி அந்தத் தொலைபேசி எண்ணைத் தேடிப் பிடித்தாள். ஸ்லாவாவின் அம்மா அதை டயல் செய்து விசாரித்ததும், ஸ்லாவா அங்கேதான் இருக்கிறுன் என்பது தெரிந்தது. உடனே புறப்பட்டு வீட்டுக்குப் போகும்படி ஸ்லாவாவிடம் சொல்லிவிட்டு அவர் ஒலிவாங்கியைத் திருப்பி வைத்தார். பிறகு படபடப்பு தணிவதற்காக தனக்கு ஏதாவது மருந்து தரும்படி தாதியிடம் கேட்டார்.

தாதி நீரில் சில துளிகளைக் கலந்து அவரிடம் தந்தபின் சொன்னுள்:

''தோல்யாவின் அம்மாவுக்கு போன் செய்து, இங்கே வந்து மகனை அழைத்துச் செல்லச் சொல்கிறேன்.''

''வேண்டாம், வேண்டாம்! அவரையும் பயந்து சாக வைக்க வேண்டாம்.''

''அவர் பயப்படாத முறையில் தகவலைத் தெரிவிக்கிறேன், பெற்ருேரிடம் எப்படிச் சொல்வதென்று தெரியாதா எனக்கு?''

''இப்பதான் எனக்கு நினைவு வருகிறது, தோல்யா வீட்டில் தொலைபேசி இல்லை. அவனை நான் அழைத்துச் சென்று வீட்டில் கொண்டுபோய்விடுகிறேன்.''

தாதியிடம் விடை பெற்றுக் கொண்டபின் ஸ்லாவாவின் அம்மா தோல்யாவைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியே தெருவுக்கு வந்தார்.

''என்ன நடந்தது? நீ மருத்துவ மனைக்கு வரும்படி ஆகியது எப்படி?'' என்று அவர் தோல்யாவிடம் விசாரித்தார்.

அன்று தனக்கு நேர்ந்தவை யாவற்றையும் தோல்யா அவரிடம் சொன்னான். குறுக்கே பூனை சென்றதால் ஏற்பட்ட தாமதம், நேரங்கழித்து அவன் ஸ்லாவா வீட்டுக்கு வந்து சேர்ந்தது, பிறகு அங்கிருந்து ழேன்யா வீட்டுக்குப் போவதெனத் தீர்மானம் செய்து கொண்டு புறப்பட்டது, வழியில் சைக்கிள் ஓட்டிச் சென்று குப்பைத் தொட்டியில் விழுந்தது, பிறகு பையன்களுடன் பந்து விளையாடி சன்னல் கண்ணாடியை உடைத்தது, கோபக்கார பாட்டியிடம் சிக்கிக் கொண்டது, பாட்டி தன்னைக் காவல் நிலையத்துக்கு இழுத்துச் சென்றது, வழியில் தப்பித்துக் கொண்டு சாலையின் குறுக்கே ஓடிக் காரில் அகப்பட்டுக் கொண்டது, அங்கிருந்து மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டு ஊசி போட்டுக் கொள்ள வேண்டியதாகியது—இவை எல்லாவற்றையும் தோல்யா கூறிச் சென்றான். ஸ்லாவாவின் அம்மா சிரிப்பை அடக்கிக்கொண்டு கவனமாகக் கேட்டார்.

பிறகு அவர் சொன்னார்: ''விநோதமான பையன்தான் நீ! குறுக்கே சென்ற பூனையைப் பொருட்படுத்தாமலே நேரே வந்திருந்தால் உனக்கு என்ன நேர்ந்திருக்கும்?''

''ஒன்றும் நேர்ந்திருக்காது, ஸ்லாவாவிடம் வந்திருப்பேன், இருவரும் சதுரங்கம் ஆடியிருப்போம், ழேன்யா வீட்டுக்குக் கிளம்பியிருக்க மாட்டேன், சன்னல் கண்ணாடியை உடைத்து விட்டுப் பாட்டியிடமிருந்து தப்பி ஓடி காரில் அகப்பட்டிருக்க மாட்டேன்.''

''பார்த்தாயா? நீ மூட நம்பிக்கை கொண்டவனாய் நடந்து கொண்டதால் தான் இவ்வளவும் நேர்ந்தது உனக்கு.''

''மூட நம்பிக்கை என்றால் என்ன?''

''தெரியாதா உனக்கு? விளக்கமாகச் சொல்கிறேன் கேள். பழங்காலத்தில் மக்கள் அறியாத நிலையில் இருந்தார்கள். இயற்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பலவற்றுக்கும் காரணம் என்னவென்று அவர்களுக்கு விளங்கவில்லை. உதாரணமாக, சூரிய கிரகணம் எப்படி ஏற்படுகிறதென்று அவர்களுக்குப் புரியவில்லை. அதைக் கண்டு அவர்கள் பயந்தார்கள். கெட்டகாலம் வரப்போவதன் அறிகுறியே சூரிய கிரகணம் என்று கற்பனை செய்து கொண்டார்கள். குறுக்கே பூனை சென்றால் அது கெட்ட சகுனம் என்று நம்பினார்கள். இப்படி பல

விதமான மூட நம்பிக்கைகளும் ஏற்படலாயின. இயற்கை நிகழ்ச்சிகளைப்பற்றிய விஞ்ஞான அறிவு போதிய அளவுக்கு வளராததே அதற்குக் காரணம். சூரியனைச் சந்திரன் மறைப்பதால் சூரிய கிரகணம் ஏற்படுகிறது என்று இன்று நமக்குப் புரிகிறது. இதனால் நமக்குக் கெட்டகாலம் வரமுடியாது என்று தெரியும். நாம் போகிற பாதையில் பூனை குறுக்கே சென்றால் அது கெட்ட சகுனம், ஏதோ கெடுதல் உண்டாகுமென்று நினைக்க எந்த காரணமும் இல்லையே. நமக்கு நேரிடப் போவதற்கும் பூனை குறுக்கே செல்வதற்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் நம் வழியில் செல்கிறோம், பூனை அதன் வழியில் செல்கிறது, இரண்டுக்கும் எந்த சம்பந்தமும் இருக்க முடியாது.''

''உனக்கு இது தெளிவாகவே தெரிகிறது. ஒரு காரியம் செய்வதென்று தீர்மானம் செய்து கொண்டு புறப்படுகிறோம், அசட்டுப் பூனை ஒன்று குறுக்கே சென்று விட்டதென நமது திட்டங்களைத் திடுமென மாற்றிக் கொள்வோமாயின், நமது அறிவினால் நாம் வழிகாட்டப்படவில்லை என்பதே அதன் அர்த்தம். உன் நண்பன் ஒருவனுக்கு இடுக்கண் உண்டாவதாகவும் அவனுக்கு உதவுவதற்காக நீ கிளம்பிச் செல்வதாகவும் வைத்துக் கொள். அப்போது ஒரு பூனை குறுக்கே ஓடுகிறது. நீ என்ன செய்வாய்? திரும்பியா விடுவாய்?''

''இல்லை, நேரே நண்பனிடம் சென்று அவனுக்கு உதவுவேன்.''

''அப்படித்தான் செய்ய வேண்டும். எவரும் அறிவால் வழிகாட்டப்பட்டுச் செயல்பட வேண்டுமே அல்லாமல், பூனையால் நேரக்கூடிய துரதிருஷ்டத்திலுள்ள நம்பிக்கையால் வழிகாட்டப்பட்டுச் செயல்படக் கூடாது. இன்று காலை நீ ஸ்லாவாவிடம் வருவதாக வாக்களித்திருந்தாய், ஆகவே வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தாய். உன் வாக்கை நிறைவேற்றுவது உன் கடமையாகும். ஆனால் பூனை குறுக்கே சென்றதென்று திரும்பி நடந்தாய், காரில் அகப்பட்டுக் கொள்ளப் பார்த்தாய்.''

இதற்குள் இருவரும் ஸ்லாவா வீட்டை வந்தடைந்து விட்டனர்.

''இனி நான் தனியே வீட்டுக்குப் போய்ச் சேருவேன், நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்றான் தோல்யா.

''சரி, போய் வா.''

மூலையில் திரும்பி அவன் தனது சந்தினுள் நுழைந்தான். ''மூட நம்பிக்கைகளால் இன்னல்தான் உண்டாகும். நல்ல காலம், தீங்கின்றி தப்பித்தேன். தக்க தருணத்தில் பிரேக்கைப் போட்டு வண்டியை நிறுத்தினார் டிரைவர்'' என்று நினைத்தபடி வேகமாக நடந்தான்.

நீளமான முடிகளையுடைய பழுப்பு நிறப் பூனை ஒன்று திடுமென அவன் எதிரே தோன்றவே, அவன் சிந்தனை தடைப்பட்டு நின்றது. ஓர் இடுக்கினுள்ளிலிருந்து அவன் எதிரே வந்த அது பொசபொசப்பான வாலை நீட்டிக்

கொண்டு அவன் பாதையின் குறுக்கே பாய்ந்தோடியது. தோல்யா துணுக்குற்று நின்றுவிட்டான்.

''காலையில் தொடங்கிய பீடை நாள் முழுதும் விடாது போலிருக்கிறதே'' என்று சோர்வுடன் தோல்யா கூறிக் கொண்டான். ''என்ன செய்யலாம்? திரும்பி நடந்து சுற்றுப் பாதையில் சென்றால், மறுபடியும் குப்பைத் தொட்டியில் விழ நேரலாம், அல்லது தலையில் கல் விழுந்து அடிபடவும் நேரலாம். வீட்டுக்குப் போய் சேர்ந்தாற் போலத்தான்.'' தயக்கத்துடன் சுற்றிலும் பார்த்துவிட்டு, தனக்குத்தானே கூறிக் கொண்டான்: ''இந்த அசட்டுத் தனத்துக்கு முடிவு கட்டியாக வேண்டும். நான் மனிதனா, பூனையைக் கண்டு நடுங்கும் சுண்டெலியா? நான் மனிதன்! மனிதன் அறிவுள்ளவன். வல்லமை வாய்ந்தவன், அண்டவெளி ராக்கெட்டுகளைச் செலுத்துகிறவன், அணுசக்தி மின்நிலையங்கள் அமைப்பவன்! அற்பப் பூனையைக் கண்டு திரும்பி நடக்கக் கூடாது. அறிவால் வழிகாட்டப்பெற்றுச் செயல்பட வேண்டும். உடனே நான் வீட்டுக்குச் செல்ல வேண்டும், சாப்பிட வேண்டும், இன்னும் நான் திரும்பி வரவில்லையே என்று அம்மாவுக்குக் கவலையாக இருக்கும் என்று என் அறிவு எனக்கு உணர்த்துகிறது.''

தோல்யா அவன் வீட்டை நோக்கிச் சென்றதைப் பார்த்துக் கொண்டு ஸ்லாவாவின் அம்மா சாலை முனையில் நின்றிருந்தார். புதிதாய் எந்த விநோதமும் இல்லாமல் பையன் வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டுமென நினைத்து அவர் காத்திருந்தார். போய்க் கொண்டிருந்தவன் திடுமெனத் தயங்கி நிற்கக் கண்டார். பிறகு அவன் கையை ஆட்டி வீசி விட்டு, தலையை நிமிர்த்தி முன்னோக்கி மிடுக்காய் நடந்து சென்றான்.

மீஷா சமைத்த பொங்கல்

நகர்ப்புற வீட்டில் நான் அம்மாவுடன் கோடை விடுமுறையில் தங்கியிருந்தபோது ஒரு தரம் மீஷா என்னைப் பார்க்க வந்தான். அவனைக் கண்டு நான் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது! மீஷாவுக்காக நான் அப்படி ஏங்கிப் போயிருந்தேன். அவன் வந்ததில் அம்மாவுக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

''நீ வந்தது ரொம்ப நல்லது ஆயிற்று. உங்கள் இரண்டு பேருக்கும் இங்கே குதூகலமாக இருக்கும். தவிர நாளைக்கு நான் நகரத்துக்குப் போக வேண்டியிருக்கிறது. ஒருவேளை அங்கே ஒரு நாள் தங்க நேரிடலாம். நான் இல்லாமல் இங்கே இரண்டு நாட்கள் இருப்பீர்களா?'' என்றாள் அம்மா.

''சந்தேகமில்லாமல். நாங்கள் ஒன்றும் சின்னவர்கள் இல்லையே'' என்றேன்.

''ஆனால் ஒன்று. சாப்பாடு நீங்களேதான் சமைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். முடியுமா உங்களால்?''

''முடியும். இது என்ன பிரமாதம்?'' என்றான் மீஷா.

''நல்லது, சூப் வைத்துப் பொங்கல் சமைத்துக் கொள்ளுங்கள். பொங்கல் சமைப்பது சுலபந்தானே.''

''அதற்கென்ன, பொங்கல் சமைக்கிறோம். என்ன பெரிய காரியம் அது!'' என்றான் மீஷா.

எனக்குத் திக்கென்றது.

''யோசித்துக்கொள், மீஷா. ஒரு வேளை முடியாமல் போய் விட்டாலோ? நீதான் பொங்கல் சமைத்ததே இல்லையே'' என்றேன்.

''கவலைப்படாதே! அம்மா சமைத்ததைப் பார்த்திருக்கிறேன். பட்டினி கிடக்க மாட்டாய், வயிறு நிறையச் சாப்பிடுவாய். நாக்கைச் சப்பு கொட்டிக் கொண்டு தின்பாய், அவ்வளவு ருசியான பொங்கல் சமைப்பேன், பார்!''

மறு நாள் காலையில் அம்மா எங்களுக்கு இரண்டு நாட்களுக்கு வேண்டிய ரொட்டியும் தேநீர் சாப்பிடுவதற்குத் துணைப்பண்டமாகப் பழப்பாகும் எடுத்து வைத்தாள். எங்கே எந்த உணவுப் பண்டம் இருக்கிறது என்று காட்டினாள். சூப் வைப்பது எப்படி, பொங்கல் எப்படிச் சமைப்பது, எவ்வளவு குறு நொய் போட வேண்டும், மற்றவை எவ்வளவு என்றெல்லாம் விளக்கினாள். நாங்கள் எல்லாவற்றையும் கேட்டோம். ஆனால் நான் எதையும் நினைவில் வைத்துக்கொள்ளவில்லை. ''மீஷாவுக்குத்தான் எல்லாம் தெரியுமே. நான் எதற்காக நினைவு வைத்துக்கொள்ள வேண்டும்?'' என்று எண்ணினேன்.

அப்புறம் அம்மா புறப்பட்டுப் போய்விட்டாள். நானும் மீஷாவும் மீன் பிடிக்க ஆற்றுக்குப் போவது என்று தீர்மானித்தோம். தூண்டில்களைச் சரிப்படுத்திக்கொண்டோம், புழுக்களைச் சேகரித்துக் கொண்டோம்.

''பொறு. நாம் ஆற்றுக்குப் போய்விட்டால் சமைப்பது யார்?'' என்று கேட்டேன்.

''சமைப்பதாவது ஒன்றுவது! வெறும் தொந்தரவு! பகல் சாப்பாட்டுக்கு இருக்கிற ரொட்டியை எல்லாம் தின்போம், ராத்திரிச் சாப்பாட்டுக்குப் பொங்கல் சமைப்போம். பொங்கலை ரொட்டி இல்லாமலே சாப்பிடலாமே'' என்றான் மீஷா.

நாங்கள் ரொட்டியைத் துண்டுபோட்டு, பழப் பாகு தடவி எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போனோம். முதலில் நீந்திக் குளித்தோம். அப்புறம் மணலில் படுத்து வெயில் காய்ந்தவாறே, பழப்பாகு தடவிய ரொட்டித் துண்டுகளை மென்று தின்றோம். பிறகு மீன் பிடித்தோம், அதிகம் பிடிக்கவில்லை, பத்து மீன்களே அகப்பட்டன. பகல் பூராவும் ஆற்றங்கரையில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம். சாயங்காலம் பசியுடன் வீடு திரும்பினோம்.

''நல்லது, மீஷா. நீதான் நிபுணன் ஆயிற்றே. என்ன சமைப்போம், சொல்லு. சட்டென்று தயாராகக் கூடியதாக இருந்தால் நல்லது. எனக்கு ஒரே பசி'' என்றேன்.

''பொங்கலே சமைப்போம். அது தான் எல்லாவற்றிலும் சுலபம்'' என்றான் மீஷா.

''அதற்கென்ன,பொங்கலே இருக்கட்டுமே.''

அடுப்பு மூட்டினோம். மீஷா அடுக்கில் குறுநொய்யைக் கொட்டினான்.

''இன்னும் கொஞ்சம் கொட்டு. ஒரே பசியாய் இருக்கிறது'' என்று சொன்னேன் நான்.

அவன் அடுக்கு நிறையக் குறுநொய்யைக் கொட்டி மேலே தண்ணீர் ஊற்றினான்.

''தண்ணீர் அதிகமில்லையா? குழகுழவென்று ஆகிவிடுமே'' என்றேன்.

''பரவாயில்லை. எங்கள் அம்மா எப்போதும் இப்படித்தான் செய்வாள். நீ அடுப்பை மட்டும் கவனித்துக்கொள். நான் சமைக்கிறேன். கவலைப் படாதே.''

ஆக, நான் அடுப்பைக் கவனித்துக் கொண்டேன், மேற் கொண்டு விறகுகளைச் செருகினேன். மீஷா பொங்கல் சமைத்தான். அதாவது, அவன் சமைக்கவில்லை, உட்கார்ந்து அடுக்கைப் பார்த்துக்கொண்டிருந்தான். பொங்கல் தானே தயாராகிக் கொண்டிருந்தது.

சீக்கிரம் இருட்டிவிட்டது. நாங்கள் விளக்கைப் பொருத்தினோம். எப்போது பொங்கல் தயாராகும் என்று உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்

தோம். திடீரென்று அடுக்கு மூடி மேலே தூக்கியதையும் பொங்கல் தளும்பி வழிந்ததையும் கண்டேன்.

''மீஷா, இது என்ன? பொங்கல் ஏன் வழிந்து ஓடுகிறது?'' என்று கேட்டேன்.

''எங்கே?''

''எங்கேயோ சைத்தானுக்கே வெளிச்சம்! அடுக்கிலிருந்து வெளியே வழிகிறது!''

மீஷா கரண்டியை எடுத்துக்கொண்டு பொங்கலைப் பாத்திரத்துக்கு உள்ளே திணிக்கத் தொடங்கினான். அதைக் கரண்டியால் நசுக்கினான், துவைத்தான். அதுவோ, அடுக்குக்கு உள்ளே வீங்கிப் பருத்து, அடங்காமல் பொங்கி வெளியே வழிந்தது.

''இது வெளியே பெருக எப்படித் தான் தீர்மானித்ததோ தெரியவில்லையே. ஒருவேளை வெந்து விட்டதோ?''

நான் கரண்டியை எடுத்து மாதிரி பார்த்தேன். குறுநொய் கரகரவென்று மணல் மணலாக இருந்தது.

''மீஷா, தண்ணீர் எங்கே போய்விட்டது? குறுநொய் ஒரேயடியாக வறண்டு கிடக்கிறதே?'' என்றேன்.

''தெரியவில்லை எனக்கு. நிறையத்தான் தண்ணீர் ஊற்றினேன். ஒரு வேளை, அடுக்கில் ஓட்டையோ?'' என்றான் மீஷா.

அடுக்கைக் கவனமாக நோட்டமிட்டோம். ஓட்டை எதுவும் இல்லை.

''ஆவி ஆகியிருக்கும். இன்னும் கொஞ்சம் ஊற்ற வேண்டும்'' என்று சொன்னான் மீஷா.

அதிகப்படி குறுநொய்யை அடுக்கிலிருந்து தட்டில் எடுத்துப் போட்டு விட்டு அடுக்கில் தண்ணீர் ஊற்றினான். மேலும் வேகவைத்தோம். பொங்கல் வெந்தது, வெந்தது, அப்புறம் பார்க்கிறோமோ, மறுபடி பாத்திரத்துக்கு வெளியே பொங்கி வழிந்தது.


''அட உன்னை என்ன செய்கிறேன் பார்! எங்கே வழிந்து ஓடுகிறாய்?'' என்று சீறினான் மீஷா.

கரண்டியை எடுத்து அதிகப்படி குறுநொய்யை மறுபடி அள்ளித் தட்டில் போட்டான். பிறகு இன்னொரு குவளைத் தண்ணீரை அடுக்கில் ஊற்றினான்.

''பார்த்தாயா? தண்ணீர் அதிகம் என்று நினைத்தாயே, இப்போது இன்னும் தண்ணீர் விட வேண்டியிருக்கும்'' என்றான்.

மேற்கொண்டு வேகவைத்தோம். என்ன வேடிக்கை! பொங்கல் மறுபடி வெளியே வழிந்தது.

''ஒரு வேளை, அளவுக்குமேல் குறுநொய் போட்டுவிட்டாய் போலிருக்கிறது. அது உப்புகிறது. அடுக்கில் அதற்கு இடம் போதவில்லை.''



''ஆமாம், கொஞ்சம் அதிகமாகவே போட்டுவிட்டேன் போலத்தான் தோன்றுகிறது. எல்லாம் உன்னால் வந்த வினை. 'இன்னும் நிறையப் போடு. ஒரே பசி!' என்று நச்சரித்தாயே'' என்றான் மீஷா.

''எவ்வளவு போட வேண்டும் என்று நான் என்னத்தைக் கண்டேன்? சமைக்கத் தெரியும் என்று நீதானே சொன்னாய்?''

''சரி, சரி, சமைக்கிறேன். நீ மட்டும் குறுக்கிடாமல் இரு.''

''அப்படியே ஆகட்டும். நான் குறுக்கிட மாட்டேன்.''

நான் ஒரு பக்கமாக ஒதுங்கிவிட்டேன். மீஷா சமைத்தான். அதாவது, சமைக்கவில்லை, அதிகப்படி குறுநொய்யை அள்ளி அள்ளித் தட்டில் போட்டுக் கொண்டிருந்தான். மேஜை பூராவிலும் தட்டுக்களாகப் பரப்பிவிட்டான், ரெஸ்டாரெண்டில் போல. மேலும் மேலும் தண்ணீரையும் அடுக்கில் ஊற்றிய வண்ணமாயிருந்தான். என்னால் பொறுக்க முடியவில்லை.

''என்னவோ செய்ய வேண்டிய விதத்தில் நீ செய்யவில்லை. இந்த ரீதியில் போனால் பொங்கல் தயாராவதற்குள் விடிந்துவிடும்'' என்றேன்.

''இல்லாவிட்டால் நீ என்ன நினைக்கிறாய்? நல்ல ரெஸ்டாரெண்டுகளில் சாயங்காலமே சமையல் தொடங்கிவிடுவார்கள், விடிவதற்குள் தயாராக வேண்டும் என்பதற்காக.''

''அதெல்லாம் ரெஸ்டாரெண்டுகளுக்குச் சரிதான். அவசரப்பட வேண்டியதில்லை, தவிரவும் வகை வகையான பண்டங்கள் நிறைய இருக்கும் அங்கே.''

''நமக்கு மட்டும் என்ன அவசரமோ?''

''நாம் சாப்பிட்டுவிட்டுத் தூங்க வேண்டுமே. பார், மணி பன்னிரண்டு ஆகப் போகிறது.''

''பயப்படாதே, நேரம் கிடைக்கும் உனக்கு உறங்குவதற்கு.''

இப்படிச் சொல்லிவிட்டு மறுபடி ஒரு குவளை நீரைச் சளப்பென்று அடுக்கில் கொட்டினான். சிக்கல் என்ன என்பதை அப்போதுதான் நான் புரிந்து கொண்டேன்.

''நீ எப்போது பார்த்தாலும் தண்ணீரை ஊற்றிக்கொண்டே இருக்கிறாய். அது எப்படி வேகும்?'' என்றேன்.

''உன் அபிப்பிராயப்படி தண்ணீர் இல்லாமலே வேக வேண்டுமாக்கும், ஊம்?''

''பாதி குறுநொய்யைக் கொட்டிவிட்டு நிறையத் தண்ணீர் ஊற்றுவோம். தானே வேகட்டும்'' என்று சொன்னேன்.

அவனிடமிருந்து அடுக்கை வாங்கி, அதிலிருந்து பாதிக் குறுநொய்யை உலுக்கிக் கொட்டினேன்.

''இப்போது விளிம்புவரை தண்ணீர் ஊற்று'' என்றேன்.

மீஷா குவளையை எடுத்து வாளிக்குள் விட்டான்.

''தண்ணீர் இல்லை. எல்லாம் தீர்ந்து போய்விட்டது'' என்றான்.

''நாம் என்ன செய்வது? தண்ணீர் கொண்டுவர எப்படிப் போவது? எவ்வளவு இருட்டாயிருக்கிறது பார்! கிணறு கூடக் கண்ணுக்குத் தெரியாது'' என்று சொன்னேன்.

''இதோ நான் போய்க் கொண்டுவருகிறேன்.''

நெருப்புப்பெட்டியை எடுத்துக்கொண்டான். வாளியில் கயிற்றைக் கட்டினான். கிணற்றடிக்கு நடந்தான். நிமிட நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்து விட்டான்.

''தண்ணீர் எங்கே?'' என்று கேட்டேன்.

''தண்ணீர்... அங்கே, கிணற்றில்.''

''கிணற்றில் தண்ணீர் இருப்பது எனக்குத் தெரியும். தண்ணீர் வாளி எங்கே என்கிறேன்?''

''வாளியும் கிணற்றுக்குள்ளே.''

''கிணற்றுக்குள்ளேயா, எப்படி?''

''அப்படித்தான், கிணற்றுக்குள்ளே.''

''தவறவிட்டுவிட்டாயா?''

''ஆமாம்.''

''அட தொளதொளாப் பயலே! நாம் பட்டினி கிடந்து சாக வேண்டும் என்று பார்க்கிறாயா? இப்போது எதனால் தண்ணீர் மொள்ளுவதாம்?'' என்று சிடுசிடுத்தேன்.

''தேக்கெண்டியால் மொள்ளலாமே.''

நான் தேக்கெண்டியை எடுத்துக்கொண்டு, ''கயிற்றைக் கொடு'' என்றேன்.

''கயிறுதான் இல்லையே.''

''எங்கே அது?''

''அங்கே.''

''அங்கே என்றால்?''

''அதுதான் என்கிறேன், கிணற்றில்.''

''அப்படியானால் வாளியைக் கயிற்றோடு கிணற்றில் தவற விட்டுவிட்டாயா?

''ஆமாம்.''

நாங்கள் இன்னொரு கயிற்றைத் தேடினோம். எங்குமே காணோம்.

''பரவாயில்லை. இதோ பக்கத்து வீட்டுக்காரர்களிடம் போய்க் கேட்கிறேன்'' என்றான் மீஷா.

''உனக்கு மூளை புரண்டுவிட்டது! கெடியாரத்தைப் பார் சற்றே. பக்கத்து வீட்டார் எப்போதோ உறங்கியிருப்பார்களே'' என்று சொன்னேன்.

வேண்டுமென்றே போல அப்போது பார்த்து எங்கள் இருவருக்கும் தாகம் எடுத்தது. ஒரு குவளை நீருக்கு நூறு ரூபிள்கூடக் கொடுத்திருப்பேன் போலிருந்தது!

''எப்போதுமே இப்படித்தான். தண்ணீர் இல்லாத சமயத்தில்தான் இன்னும் அதிகமாகத் தாகம் எடுக்கும். பாலைவனத்தில் எப்போதும் தாகம் எடுப்பதற்குக் காரணம் அங்கே தண்ணீர் இல்லாததுதான்'' என்று விளக்கினான் மீஷா.

''நீ விளக்கியது போதும், கயிற்றைத் தேடு'' என்றேன்.

''எங்கே தேடுவதாம்? எங்குந்தான் பார்த்துவிட்டேனே. தூண்டில் கயிற்றைத் தேக்கெண்டியில் கட்டுவோம் வா.''

''தூண்டில் கயிறு தாங்குமா?''

''ஒருவேளை தாங்கலாம்.''

''தாங்காவிட்டாலோ?''

''தாங்காவிட்டால்... அறுந்து போகும்...''

''அது நீ சொல்லாமலே தெரியும் எனக்கு.''

தூண்டில் கயிற்றை அவிழ்த்துத் தேக்கெண்டியில் கட்டிக் கிணற்றுக்கு எடுத்துப் போனோம். நான் தேக்கெண்டியைக் கிணற்றில் விட்டுத் தண்ணீர் மொண்டேன். தூண்டில் கயிறு தந்திபோல விறைப்பாயிற்று. இதோ அறுந்து விடும்போல் இருந்தது.

''தாங்காது. என் கைக்குத் தெரிகிறது'' என்றேன்.

''ஜாக்கிரதையாகத் தூக்கினால் ஒருவேளை தாங்கலாம்'' என்று சொன்னான் மீஷா.

நான் மெதுவாக மேலே தூக்கத் தொடங்கினேன். தண்ணீர் மட்டத்துக்கு மேலே தூக்கினேனோ இல்லையோ, டுபுக்கென்ற சத்தம் கேட்டது. தேக்கெண்டி போய்விட்டது.

''தாங்கவில்லையோ?'' என்று கேட்டான் மீஷா.

''சந்தேகமில்லாமல், தாங்கவில்லை. இப்போது எதனால் தண்ணீர் மொள்ளுவதாம்?''

''வெந்நீர்ப் பாத்திரத்தினால்'' என்றான் மீஷா.

''வேண்டாம், அதைவிடப் பாத்திரத்தை வெறுமே கிணற்றில் போட்டு விடலாம். குறைந்த பட்சம் சள்ளைப்படவாவது வேண்டாமே. கயிறோ நம்மிடம் இல்லை.''

''அப்படியானால் அடுக்கினால் மொள்ளுவோம்.''

''எங்கள் வீட்டில் அடுக்குப் பாத்திரக் கடை வைத்திருக்கிறது என்ற நினைப்போ உனக்கு?'' என்றேன்.

''அப்போது தம்ளரால் மொள்ளுவோம்.''

''தம்ளரால் தண்ணீர் மொண்டு ஊற்றுவதற்குள் தாவு தீர்ந்து போய் விடுமே!''

''வேறு என்ன செய்வது? பொங்கல் சமைத்தாக வேண்டுமே. போதாக் குறைக்கு ஒரே தாகம் வேறு நாக்கை வரட்டுகிறது.''

''நல்லது, குவளையால் மொள்ளுவோம். என்னவானாலும் குவளை தம்ளரை விடப் பெரியதுதானே'' என்றேன்.

வீட்டுக்கு வந்து, குவளை கவிழ்ந்துவிடாதபடித் தூண்டில் கயிற்றால் இறுக்கிக் கட்டினோம். பின்பு கிணற்றடிக்குத் திரும்பினோம். ஒவ்வொரு குவளை யாகத் தண்ணீர் மொண்டு தாகந் தீரக் குடித்தோம். மீஷா சொன்னான்:

''எப்போதும் இப்படித்தான். தாகம் எடுக்கும் போது ஒரு கடல் முழு வதையுமே குடித்துவிடலாம் போலிருக்கும். குடிக்க ஆரம்பித்ததுமோ ஒரு குவளை பருகுவதற்குள் தாகம் தீர்ந்துவிடும், ஏனென்றால் ஜனங்கள் இயற்கை யாகவே பேராசைக்காரர்கள்....''

நான் இடை மறித்தேன்:

''ஜனங்கள் மேல் பழிசாட்டத் தேவையில்லை! போய்ப் பொங்கல் பாத் திரத்தை இங்கே எடுத்து வா. தண்ணீர் இறைத்து இறைத்து நேரே அதிலே ஊற்றுவோம். இல்லாவிட்டால் குவளையும் கையுமாக இருபது நடை போய் வர வேண்டியிருக்கும்'' என்றேன்.

மீஷா அடுக்கைக் கொண்டுவந்து கிணற்று ஓரத்தில் வைத்தான். நான் அதைக் கவனிக்காமல் முழங்கையால் இடித்துக் கிணற்றுக்குள் தள்ளப் பார்த்தேன்.

''அட கை வழங்காதவனே! அடுக்கை நேரே என் முழங்கைக்கு அடியில் ஏன் நுழைத்தாய்? கையில் எடுத்துக்கொண்டு கெட்டியாகப் பிடித்துக்கொள். கிணற்றிலிருந்து கொஞ்சம் விலகியே நில்லு. இல்லாவிட்டால் பொங்கலும் கிணற்றில் விழுந்துவிடும்'' என்றேன்.

மீஷா அடுக்கை எடுத்துக்கொண்டு கிணற்றிலிருந்து அப்பால் நகர்ந்து நின்றான். நான் தண்ணீர் இறைத்தேன்.

வீட்டுக்கு வந்தோம். பொங்கல் ஆறிவிட்டது. அடுப்பு அணைந்திருந்தது. மறுபடி அடுப்பு மூட்டிப் பொங்கல் சமைப்பதில் முனைந்தோம். கடைசியில் ஒரு விதமாக அது கொதிக்கத் தொடங்கிற்று, கெட்டியாயிற்று, ''புஸுக்-புஸுக்'' கென்று ஆவிவிட ஆரம்பித்தது.

''ஆகா! பொங்கல் அருமையாக வாய்த்துவிட்டது. முதல் தரமாக!'' என்று ஆர்ப்பரித்தான் மீஷா.

நான் கரண்டியை எடுத்து ருசி பார்த்தேன்.

''த்தூ! இது என்ன பொங்கல்! கசக்கிறது, உப்பே இல்லை, காந்தல் வாடை வேறு அடிக்கிறது'' என்றேன்.

மீஷாவும் ருசி பார்த்தவன் உடனே துப்பிவிட்டான்.

''மாட்டேன். செத்தாலும் சாவேனே தவிர இந்த மாதிரிப் பொங்கலைச் சாப்பிடவே மாட்டேன்!'' என்றான்.

''இந்தப் பொங்கலைத் தின்றே உயிரை விட்டுவிடலாம்!'' என்று சொன்னேன் நான்.

''என்ன செய்வது?''

''எனக்கு தெரியாது.''

''வேடிக்கையான ஆட்கள் நாம்! நம்மிடந்தான் மீன் இருக்கிறதே!'' என்றான் மீஷா.


''மீன் சமைப்பதற்கு இப்போது நேரம் இல்லை! சீக்கிரம் பொழுது விடியத் தொடங்கிவிடும்'' என்றேன்.

''நாம் இவற்றை வேகவைக்கப் போவதில்லையே, பொரிக்கத்தானே போகிறோம். இது சீக்கிரம் ஆகிவிடும், ஒரே நொடியில்.''

''சீக்கிரம் ஆகிவிடும் என்றால் பொரி. அதுவும் பொங்கலைப் போலவே ஆகும் என்றால் வேண்டவே வேண்டாம்'' என்றேன்.

''ஒரே நொடியில். நீயே பார்ப்பாய்.''

மீஷா மீன்களைச் சுத்தம் செய்து வாணலியில் போட்டான். வாணலியில் சூடு ஏறியதும் மீன்கள் அதனுடன் ஒட்டிக் கொண்டன. மீஷா கத்தியால்





மீன்களை வாணலியிலிருந்து பிய்த்து எடுக்கப் பார்த்தான். மீன்களின் விலாக்கள் எல்லாவற்றையும் குதறிவிட்டான்.

''புத்திசாலிதான் போ! எண்ணெய் இல்லாமல் மீனை யாராவது பொரிப் பார்களா?'' என்று நொடித்தேன்.

மீஷா எண்ணெய் பாட்டிலை எடுத்து எண்ணெயை வாணலியில் கொட்டி, பொரியல் சீக்கிரம் தயாராக வேண்டும் என்பதற்காக வாணலியை நேரே அடுப்புக்குள் நுழைத்தான். எண்ணெய் சீறிற்று, சடசடத்தது, திடீரென்று குப்பென மூண்டு எரிந்தது. வாணலியைத் தீச்சுவாலை மூடியது. மீஷா வாணலியை அடுப்பிலிருந்து வெளியே எடுத்தான். அதில் எண்ணெய் எரிந்துகொண்டிருந்தது. நான் அதில் தண்ணீர் ஊற்ற விரும்பினேன், ஆனால் வீட்டில் ஒரு துளி தண்ணீர்கூட இல்லை. எண்ணெய் எல்லாம் தீரும்வரை வாணலி எரிந்து கொண்டிருந்தது. அறையில் புகையும் நாற்றமும் நிறைந்தது. மீன்களுக்குப் பதில் வெறும் கரித் துண்டுகள்தான் மிஞ்சியிருந்தன.

''ஊம், இனி எதைப் பொரிப்பது?'' என்றான் மீஷா.

''வேண்டாம். இனி எதையுமே நீ பொரிக்க விட மாட்டேன். பண்டங் களைப் பாழாக்குவதோடு நில்லாமல் தீ விபத்து வேறு ஏற்படுத்திவிடுவாய் நீ. உன்னால் வீடு முழுவதும் தீக்கிரை ஆகிவிடும். போதும்!'' என்று சொல்லி விட்டேன்.

''பின்னே என்னதான் செய்வது? பசியாய் இருக்கிறதே!''

பச்சைக்குறுநொய்யைத் தின்று பார்த்தோம். வாயில் வைக்கவே பிடிக்க வில்லை. பச்சை வெங்காயத்தைத் தின்றோம், காட்டமாய் இருந்தது. ரொட்டி இல்லாமல் வெறும் வெண்ணெயைச் சாப்பிட்டுப் பார்த்தோம். குமட்டிக் கொண்டு வந்தது. பழக்கூழ் பாத்திரம் கண்ணில் பட்டது. அதை வழித்துத் தின்று விட்டுப் படுத்தோம். இரவு வெகுநேரம் ஆகியிருந்தது.

காலையில் பசியுடன் கண் விழித்தோம். மீஷா பொங்கல் சமைப்பதற் காகக் குறுநொய் எடுக்கப் போனான். அதைக் கண்டதும் எனக்கு உடம்பெல் லாம் நடுக்கம் கூட ஏற்பட்டது.

''அந்த வழிக்கே போகாதே! இதோ வீட்டுச் சொந்தக்காரி நத்தாஷா சித்தியிடம் போய் நமக்குப் பொங்கல் சமைத்துத் தரும்படி கேட்கிறேன்'' என்றேன்.

நாங்கள் நத்தாஷா சித்தியிடம் போய் விஷயத்தை எல்லாம் சொன்னோம். நானும் மீஷாவும் அவளுடைய காய்கறித் தோட்டத்தில் வளர்ந்திருக்கும் களை கள் எல்லாவற்றையும் பிடுங்குவதாக வாக்களித்தோம். பொங்கல் சமைத் துத் தரும்படி வேண்டிக் கொண்டோம். நத்தாஷா சித்திக்கு எங்கள் மேல் இரக்கம் வந்து விட்டது. உடனே எங்களுக்குப் பாலும் முட்டைக் கோசுப் பணி யாரமும் தந்தாள். பிறகு காலை ஆகாரம் பரிமாறினாள். நாங்கள் அள்ளி

அள்ளித் தின்றோம். எங்களுக்கு இவ்வளவு பசியா என்று நத்தாஷா சித்தியின் மகன் வோவா மலைத்துப் போனான்.

கடைசியில் எங்களுக்கும் வயிறு நிறைந்துவிட்டது. நத்தாஷா சித்தியிடம் ஒரு கயிறு கேட்டு வாங்கிக்கொண்டு கிணற்றிலிருந்து வாளியையும் தேக்கெண்டியையும் வெளியில் எடுக்கப் போனோம். வெகு நேரம் தொல்லைப் பட்டோம். கயிற்று நுனியில் லாடத்தைக் கட்டும் யோசனை மீஷாவுக்கு உதித்திராவிட்டால் நாங்கள் எதையும் எடுத்திருக்க மாட்டோம். வாளியும் தேக்கெண்டியும் கொக்கியில் போல லாடத்தில் மாட்டிக் கொண்டன. ஒன்றும் கெட்டுப் போகவில்லை. எல்லாவற்றையும் வெளியில் எடுத்துவிட்டோம். அப்புறம் மீஷாவும் நானும் வோவாவும் காய்கறித் தோட்டத்தில் களை பிடுங்கினோம்.

மீஷா சொன்னான்:

''களை பிடுங்குவது அற்பக் காரியம்! கொஞ்சங்கூடக் கஷ்டமே இல்லை. பொங்கல் சமைப்பதைவிட எவ்வளவோ லேசு!''

துருஷோக்கு

கிராமக் குடிலில் மீஷாவுக்கும் எனக்கும் ஆனந்தமாய் இருந்தது. வரம்பில்லாத பெரும் பரப்புகள்! நாங்கள் விரும்பியதைச் செய்ய முடிந்தது, எங்கு வேண்டுமானாலும் சுற்றித் திரிய முடிந்தது! குடைக் காளான்கள் பொறுக்கினோம், பெர்ரிப் பழங்கள் பறித்தோம். இல்லையேல் ஆற்றிலே குளித்தோம், நீந்தி விளையாடினோம். குளிக்க விரும்பாத போது மீன் பிடித்தோம். தடுத்து நிறுத்துவார் யாரும் இல்லை. அம்மாவுக்கு விடுமுறை முடிந்து, நாங்கள் நகருக்குத் திரும்ப வேண்டிய நாள் நெருங்கியது. மீஷாவுக்கும் எனக்கும் வருத்தமாய் இருந்தது. நீரும் நிலமும் மிகுந்த இந்த இயற்கைச் சூழலை அதற்குள் விட்டுப் பிரிய மனமில்லாமல் நாங்கள் வருந்தியதைக் கண்ணுற்ற நத்தாஷா மாமி, இதுபற்றி அம்மாவிடம் பேசினார். மீஷாவும் நானும் தம்முடன் வந்திருக்கட்டும், தம்மால் இருவரையும் பார்த்துக் கொள்ள முடியும் என்று அம்மாவிடம் கூறினார். முடிவில் அம்மா இதற்கு ஒத்துக் கொண்டு, தாம் மட்டும் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மீஷாவும் நானும் நத்தாஷா மாமி வீட்டுக்குச் சென்று அவருடன் இருந்து வந்தோம். மாமியிடம் தியான்கா என்றொரு நாய் இருந்தது. அம்மா புறப்பட்டுச் சென்ற அதே நாளன்று தியான்கா குட்டி போட்டது. மொத்தம் ஆறு குட்டிகள்: ஐந்து குட்டிகள் பழுப்புப் புள்ளிகளுடன் கறுப்பாய் இருந்தன, ஓரேயொரு குட்டி ஒரு காது மட்டும் கறுப்பாய் இருக்க மேலெங்கும் முற்றிலும் பழுப்பு நிறமுடையதாக இருந்தது. நத்தாஷா மாமி இந்தக் குட்டிகளைப் பார்த்ததும் கோபப்பட்டுக் கொண்டார்:

''இந்த தியான்கா என் உயிரை வாங்குகிறது! ஒவ்வொரு கோடையிலும் குட்டி போட்டுத் தொலைக்கிறது! இந்தக் குட்டிகளை என்ன செய்வதென்று தெரியவில்லை எனக்கு!''

''குட்டிகள் கொஞ்சம் பெரிதாகட்டும், அக்கம்பக்கத்து வீடுகளுக்கு எடுத்துச் சென்று, நாய் வளர்க்க விரும்புவோரிடம் இவற்றைக் கொடுத்து விடுகிறோம்'' என்று மீஷாவும் நானும் மாமியிடம் சொன்னோம்.

விரைவில் இந்தக் குட்டிகள் முற்றத்தில் துள்ளியோட ஆரம்பித்தன. 'லொள்', 'லொள்' என்று குரைத்துக் கும்மாளமடித்தன. நேரம் போவதே தெரியாமல் நாங்கள் இவற்றுடன் விளையாடிக் கொண்டிருந்தோம்.

இந்தக் குட்டிகளை வளர்க்க விரும்புவோரைத் தேடி பிடித்தாக வேண்டுமென நத்தாஷா மாமி எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால்

தியான்காவை நினைக்கையில் எங்களுக்குப் பாவமாக இருந்தது. தியான்கா தானே இவற்றின் அம்மா, அதன் குழந்தைகளை அதனிடமிருந்து எடுத்து சென்று விட்டால் அது துன்பப்படும் அல்லவா?

''குட்டிகள் பெரிதாகி வந்தன. இவற்றை வீட்டில் வைத்திருக்கக் கூடாது, இந்தப் பட்டாளத்துக்குத் தீனி போடமுடியாது'' என்று நத்தாஷா மாமி முறையிட்டார். ''இது வீடா, நாய்ப் பட்டியா?'' என்று கடிந்து கொண்டார்.

மீஷாவும் நானும் உடனே வேலையில் இறங்கினோம். வீடு வீடாய்ச் சென்று நாய்க் குட்டி வேண்டுமா என்று கேட்டோம். நாய்க் குட்டிகளை வளர்க்க ஆட்களைத் தேடி பிடிப்பது இவ்வளவு கடினமான வேலையாக இருக்குமென்று நாங்கள் நினைக்கவே இல்லை, யாரைக் கேட்டாலும் வேண்டாமென்றே கூறினர். ஓயாமல் அலைந்து பலரையும் வேண்டியபின் மூன்று குட்டிகளுக்கு அந்தக் கிராமத்தில் வீடுகளைத் தேடிப் பிடித்தோம். பிறகு பக்கத்துக் கிராமத்தில் இரண்டு குட்டிகளை ஒப்படைத்து விட்டு வந்தோம். ஒரு காது மட்டும் கறுப்பாகவும் உடல் முழுதும் பழுப்பாகவும் இருந்த குட்டிதான் இப்போது எங்களிடம் எஞ்சியிருந்தது. ஆறு குட்டிகளிலும் அதுவே எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் அருமையான முகபாவமும், துறுதுறுப்பான அதன் பெரிய கண்களும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டன. மீஷா இந்தக் குட்டியை யாரிடமும் தர விரும்பவில்லை. ஆகவே அவனுடைய அம்மாவுக்கு அவன் கடிதம் எழுதினன்.

''அன்புக்குரிய அம்மா,

''அருமையான நாய்க் குட்டி ஒன்றை இங்கிருந்து எடுத்து வந்து வளர்க்க விரும்புகிறேன், நீ அனுமதிக்க வேண்டும். கண்ணுக்கு இனியது, பழுப்பு நிறக் குட்டி, ஒரு காது மட்டும் கறுப்பு. என் உயிருக்கு உயிரானது. வேண்டாமென்று சொல்லாதே. நீ சொல்வதை எல்லாம் கேட்பேன், நன்ருகப் படிப்பேன். இந்த நாய்க் குட்டியையும் நன்ருக வளர்த்து அதற்குப் பயிற்சி அளிப்பேன். கெட்டிக்காரப் பெரிய நாயாக, இது நம்மிடம் வளரும்.''

இந்த நாய்க் குட்டிக்கு நாங்கள் துருஷோக்கு என்று பெயர் சூட்டினோம். நாய்களைப் பற்றிய புத்தகம் ஒன்று வாங்கி, அதில் சொல்லப்படும் முறைப் படி துருஷோக்குக்குப் பயிற்சி அளிக்கப் போவதாக மீஷா கூறினன்.

சில நாட்கள் கழிந்தன. மீஷாவின் அம்மாவிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. ஆனல் அவர் எழுதியிருந்த ஒரு கடிதத்தில் துருஷோக்கைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. நாங்கள் உடனே நகருக்குத் திரும்பி வந்துவிட வேண்டுமென்றும், நாங்கள் தனியே இருப்பது தமக்குக் கவலையாக இருக்கிறதென்றும் அவர் எழுதியிருந்தார்.

அன்றைய தினமே நாங்கள் நகருக்குத் திரும்புவதென முடிவு செய்தோம். அம்மாவிடமிருந்து துருஷோக்கைப் பற்றி பதில் வரவில்லை என்ருலும், தான்



துருஷோக்கை எடுத்து வரப் போவதாக மீஷா கூறினுன். இது பற்றி அம்மா எழுதிய கடிதம் இன்னும் வந்து சேராதது தனது குற்றமாகாது என்றுன் அவன்.

''துருஷோக்கை எப்படி நீ எடுத்துச் செல்வாய்?'' என்று கேட்டார் நத்தாஷா மாமி. ''ரயில் வண்டியில் நாயை எடுத்துச் செல்ல அனுமதிக்கமாட்டார்கள். கண்டக்டர் பார்த்தாரானுல் அபராதம் கட்டச் சொல்வார்.''



''இல்லே, யார் கண்ணிலும் படாமல் துருஷோக்கைப் பெட்டிக்குள் வைத்து எடுத்துச் செல்வேன்'' என்ருன் மீஷா.

மீஷாவின் பெட்டியில் இருந்தவை யாவற்றையும் நாங்கள் என்னுடைய கான்வஸ் பைக்குள் வைத்து அடைத்தோம். பெரிய ஆணியால் மீஷாவின் பெட்டியில் துளேகள் இட்டோம், துருஷோக்கு மூச்சு விடுவதற்குக் காற்ருேட்டம் இருக்க வேண்டும் அல்லவா? துருஷோக்குக்குப் பசிக்கும் போது தின்பதற்காக ரொட்டியும் வறுத்த கோழி இறைச்சித் துண்டும் கொண்டு வந்து பெட்டியினுள் வைத்தோம். பிறகு துருஷோக்கையும் உள்ளே வைத்து மூடி, நத்தாஷா மாமியுடன் புறப்பட்டு ரயில் நிலேயத்துக்குச் சென்ருேம்.

வழி நெடுக துருஷோக்கு அமைதியாகப் பெட்டியினுள் இருந்தது. நல்ல படியாக அதை நகருக்குக் கொண்டு போய் விடலாம் என்பதில் எங்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லே. நத்தாஷா மாமி எங்களுக்கு டிக்கட் வாங்கப் போயிருந்த போது, துருஷோக்கு என்ன செய்கிறதெனப் பார்க்கலாமென்று மீஷா பெட்டியைத் திறந்தான். உள்ளே படுத்திருந்த துருஷோக்கு வெளிச்சத்தில் கூசிய கண்களேச் சுளித்துக் கொண்டு தலேயை உயர்த்தி எங்களேப் பார்த்தது.

''துருஷோக்கு, சமர்த்து நீ!'' என்று மீஷா மெச்சிக் கொண்டான். ''கெட்டிக்காரப் பையன்! யாருக்கும் தெரியாமல் பதுக்கி வைத்து ரயிலில் எடுத்துச் செல்கிருேமென்று புரிந்து கொண்டு சப்தம் போடாமல் இருக்கிறது.''

அதைத் தட்டிக் கொடுத்து விட்டுப் பெட்டியை மூடினேம். நாங்கள் ரயில் பெட்டியில் ஏறியபின் நத்தாஷா மாமி கையை ஆட்டி எங்களே வழி அனுப்பினர். அரைத் தூக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பாட்டிக்கு எதிர்ப் பக்கத்தில் காலியாக இருந்த இருக்கையில் நாங்கள் அமர்ந்து கொண்டோம். பெட்டியை மீஷா எங்கள் இருக்கைக்கு அடியில் வைத்து உள்ளே தள்ளினன். ரயில் புறப்பட்டுச் சென்றது.

வண்டி அடுத்த நிலேயத்தில் வந்து நிற்கும் வரை யாவும் நன்ருகவே நடந்தேறின. இங்கே புதிய பயணிகள் எங்கள் பெட்டியினுள் ஏறினர். சடைகள் பின்னியிருந்த மெலிந்து நெட்டையான ஒரு சிறு பெண் எங்களிடம் ஓடி வந்தாள். ''நாதியா அத்தை, ஃபேத்யா மாமா! இங்கே! காலி இடங்கள் இருக்கின்றன, வாங்க சீக்கிரம்!'' என்று அவள் கூச்சலிட்டாள்.

நாதியா அத்தையும் ஃபேத்யா மாமாவும் நாங்கள் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர். ''இங்கே உட்காருங்கள்!'' என்று கத்தினள் சிறுமி. ''நாதியா அத்தையும் நானும் இங்கே உட்கார்ந்துகொள்வோம், ஃபேத்யா மாமா இந்தச் சிறுவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளலாம்.''

''லேனு, கத்தாதே நீ'' என்ருர் நாதியா அத்தை. எங்களுக்கு எதிரே பாட்டியின் பக்கத்தில் அவர்கள் இருவரும் அமர்ந்துகொண்டனர். ஃபேத்யா

மாமா தமது பெட்டியை இருக்கைக்கு அடியில் தள்ளிவிட்டு எங்களுக்குப் பக்கத்தில் அமர்ந்தார்.

''நன்றாய் அமைந்து விட்டது பாருங்கள்!'' என்று சிலாகித்துக் கொண்டாள் லேனா. ''ஒரு பக்கம் மூன்று பெண்டிர், எதிர்ப்பக்கம் மூன்று ஆடவர்!''

மீஷாவும் நானும் அவளைப் பார்க்க விரும்பாமல் தலையைச் சன்னல் பக்கம் திருப்பிக் கொண்டு வெளியே உற்று நோக்கினோம். முதலில் யாவும் ஒழுங்காகவே நடைபெற்று வந்தன. சக்கரங்களின் தடதடப்பைத் தவிர வேறு சப்தம் எதுவும் காதுக்கு எட்டவில்லை. பிறகு திடுமென இருக்கைக்கு அடியிலிருந்து பலமாகப் பிறாண்டும் சப்தம் கேட்டது.

''ஐயோ துருஷோக்கு!'' என்று என் காதுக்குள் கூறினான் மீஷா. ''இந்த நேரத்தில் கண்டக்டர் வந்தால் என்ன செய்வது?''

''இந்தச் சப்தம் கண்டக்டர் காதில் விழாது.''

''துருஷோக்கு குரைக்க ஆரம்பித்தால் என்ன ஆவது?''

இதற்குள் துருஷோக்கு பெட்டியிலிருந்து வெளியே வர் முயலுவது போல் முனகியபடி பிறாண்டியது.

''ஓய்! சுண்டெலி!'' என்று கால்களை உயர்த்தி இருக்கையில் வைத்துக் கொண்டு மிரண்டு போய்க் கூச்சலிட்டாள் லேனா.

''சும்மா இரு! புரளி பண்ணாதே!'' என்றார் நாதியா அத்தை. ''இங்கே சுண்டெலி எப்படி வர முடியும்?''

''இதோ சப்தம் கேட்கிறதே! காதில் விழவில்லையா?''

உடனே மீஷா பலமாய் இருமிக் கொண்டு கீழே இருந்த பெட்டியைப் பாதத்தால் நகர்த்தினான். துருஷோக்கு சில வினாடிகளுக்கு அமைதியாக இருந்து விட்டுத் திரும்பவும் முனக ஆரம்பித்தது. எல்லாரும் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அதற்குள் மீஷா சன்னல் கண்ணாடியில் விரல் நகத்தை வைத்து மேலும் கீழும் அழுத்தி இழுத்துக் கிரீச்சிடச் செய்தான். ஃபேத்யா மாமா சிடுசிடுப்புடன் அவனைப் பார்த்துக் கூறினார்: ''தம்பி சும்மா இருக்க முடியாதா உன்னால்? போதும் இந்த உபத்திரவம்! நிறுத்து!''

சரியாக அந்த நேரத்தில் எங்களுக்குப் பின்புறத்தில் இருந்தவர்களில் ஒருவர் அக்கார்டியன் வாசிக்க முற்பட்டார். வாத்தியத்தின் இசை துருஷோக்கின் முனகலை யார் காதிலும் விழாதபடி மூழ்கடித்தது. நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். ஆனால் சிறிது நேரத்துக்குள் வாத்திய இசை நின்று விட்டது.

''சரி, இருவருமாய் பாட்டுப் பாடுவோம்'' என்றான் மீஷா என் காதுக்குள்.

''விபரீதமாக அல்லாவா இருக்கும்?'' என்றேன் நான்.

''சரி, பாட வேண்டாம், பலத்த குரலில் கவிதை ஒப்பிக்கலாம்.''

''நீ ஆரம்பி.''

அப்போது இருக்கைக்கு அடியிலிருந்து வேதனையுடன் மெல்லிய குரைப்புக் குரல் கேட்டது. மீஷா பலமாய்க் கனைத்துத் தொண்டையைச் சரிசெய்து கொண்டு கவிதை ஒப்புவிக்கத் தொடங்கினான்:

புல்வெளியில் பசுமை தகதகக்க,
கதிரோனும் ஒளிமுகங் காட்ட,
எல்லார்க்கும் வசந்த வாழ்த்துரைத்துப்
புள்ளினங்கள் மகிழ்வது பாரீர்!

எங்களுக்குப் பின்புறத்திலிருந்து சிரிப்பு எழுந்தது. ''கூதிர்ப் பருவம் நெருங்கி வருகிறது, ஆனால் இங்கே வசந்தத்தை வரவேற்றுக் கவிதை பொழி கிறார்கள்.''

லேனா கிளுகிளுத்துக் கொண்டு கூறினாள்: ''விநோதமான பையன்கள்! சுண்டெலி மாதிரி கீச்சிடுகிறார்கள், பிறகு கண்ணாடியில் நகத்தால் கீறுகிறார்கள், அப்புறம் கவிதை ஒப்பிக்கிறார்கள்!''

ஆனால் மீஷா எதையும் பொருட்படுத்தவில்லை. வசந்தத்தைப் பற்றிய கவிதை முடிந்ததும், பாதத்தைத் தட்டித் தாளம் போட்டுக் கொண்டு இன்னொரு கவிதையை ஆரம்பித்தான்:

கோலப்பச்சை தழைத்துக் குலுங்கும் கோடைப் பூங்கா,
நீலமலர்கள் அங்கே கூடிச் சிரிக்கும் காட்சி!
எழில்கொழிக்கும் செர்ரி, மயக்கம் தரும் அதன் மணம்,
நிழல்கவிந்த கிளைகள் விரித்துக் குளுமை தரும் லிண்டன்...

''ஓகோ, கோடை வந்துவிட்டது, மலர்களின் மணம் மூக்கைத் துளைக் கிறது!'' என்று கிண்டல் செய்தனர் பின்புறத்திலிருந்த பயணிகள்.

மீஷா எதையும் கண்டு கொள்ளாதவனைப் போல் மேலும் தொடர்ந்தான். இப்பொழுது அவன் குளிர்காலத்தைப் பற்றிய கவிதையை ஆரம்பித்தான்:

வெள்ளைப் பனி! அதில் வண்டியோட்டும் குடியானவன்
உள்ளக் களிப் புற்றே புதுத்தடம் பதிக்கின்றான்,
புதுப் பனியை முகரும் அவன் குதிரையும்தான்
புது முறுக்குடன் துள்ளிக் குதித்து ஓடுகிறது...

குளிர்காலம் முடிவுற்றதும், திடுமென இயற்கை தடம் புரண்டாற் போல் கூதிர்ப் பருவம் வந்தது:

சோர்வூட்டும் சோகக் காட்சி!
கார்மேகம் கவிந்த வானம்,

ஓயவில்லை மழைத் தூறல்,
வாயிலெதிரே ஒரே சேறு....

திடுமென துருஷோக்கு பலமாய் முனகவே, மீஷா உரக்கக் கூறிச் சென்றான்:

ஊன் வருத்த வந்தாயே கூதிரே!
ஏன் வந்தாய், காலத்துக்கு முன்னதாய்?
வெப்பமும் வெயிலும் விரும்பும் எமக்கு
மப்பும் மந்தாரமும் கொண்டு வந்தாயே!

எங்களுக்கு எதிர்ப் பக்கத்தில் இதுகாறும் தூங்கிக் கொண்டிருந்த பாட்டி கண்ணை விழித்துத் தலையை ஆட்டியபடி கூறினார்:

''மெய்தான்! தம்பி, நீ சொல்வது மெய்தான்! காலத்துக்கு முன்னதாகவே இவ்வருடம் கூதிர்ப் பருவம் வந்துவிட்டது. வெய்யில் இன்னும் சிறிது காலத்துக்கு நீடித்திருக்கலாம், குழந்தைகளுக்கு நன்றாய் இருக்கும். என்ன செய்வது? அதற்குள் முடிவுற்றுவிட்டது? தம்பி, நீ கவிதை நன்றாக ஒப்பிக்கிறாய்!''

இப்படிச் சொல்லி மீஷாவின் தலையில் தட்டிக் கொடுத்தார் அந்தப் பாட்டி. இருக்கைக்கு அடியில் பாதங்களால் மீஷா என்னைத் தட்டிக் கவிதை ஒப்புவிக்கும்படி சமிக்ஞை செய்தான். எனக்குத் தெரிந்த கவிதைகள் எல்லாம் அந்த நேரத்தில் என் நினைவிலிருந்து மறைந்து விட்டன. பாட்டுகள்தான் நினைவுக்கு வந்தன. ஆகவே கவிதை படிப்பது போல் பாட்டின் அடிகளை பலக்கக் கூறினேன்:

சின்னஞ் சிறிய குடில்,
என் இன்னருங் குடில்!
சிங்கார மரக் குடில்!

ஃபேத்யா மாமா என்னைப் பார்த்து வேதனை பொறுக்க மாட்டாமல் முனகிக் கொண்டார்: ''ஐயோ, முடிவில்லையா இதற்கு? இன்னொருத்தனும் ஆரம்பிக்கிறானே!''

லேனா உதட்டைப் பிதுக்கிக் காட்டிச் சொன்னாள்: ''பூ! கவிதையா இது? பாட்டைக் கவிதையாக மாற்றிச் சொல்கிறான்!''

நான் அந்தப் பாட்டை மறு முறையும் திருப்பிச் சொல்லி முடித்துவிட்டு, இன்னொரு பாட்டை ஆரம்பித்தேன்:

கட்டுண்டேன்,
இருட்சிறையில் சிக்குண்டேன்!
எட்டுத்திக்கும்

சென்றுசுற்றும் இளம்பருந்து,
சிறகொடிந்து,
அடைபட்டு...

''உன்னை இழுத்துச் சென்று வேறொரு இடத்தில்தான் உட்கார வைக்க வேண்டும். இல்லையேல் நீ ஓய மாட்டாய் போல் இருக்கிறது'' என்று முறையிட்டார் ஃபேத்யா மாமா.

''சிறுவர்களைக் கடிந்து கொள்ளலாகாது'' என்று அவர் மனைவி அவரிடம் சொன்னார். ''கவிதைகளைப் பாராயணம் பண்ணி ஒப்புவித்துப் பழகிக் கொள்கிறார்கள்.''

ஆனால் ஃபேத்யா மாமாவுக்கு வேதனை பொறுக்க முடியவில்லை. நெற்றியை அழுத்திவிட்டுக் கொண்டார். தலைவலி வந்து விட்டதோ, என்னவோ? நான் முடித்ததும், மீஷா உற்சாகமாய் ஆரம்பித்தான்:

அமைதி அரசோச்சும் உக்ரேனிய இரவு
நிர்மல வானம், கண்சிமிட்டும் விண்மீன்கள்...

''ஆகா, உக்ரைனுக்கு வந்து விட்டோமா? இன்னும் எங்கெல்லாம் பறக்கப் போகிறோமோ, தெரியவில்லை!'' என்று பின்புறத்திலிருந்த பயணிகள் சிரித்துக் கொண்டார்கள்.

அடுத்த ரயில் நிலையத்தில் புதிதாகச் சில பயணிகள் எங்கள் பெட்டியில் ஏறினார்கள். ''கவிதை ஒப்பிக்கிறார்கள், பயணம் இங்கே சுவாரசியமாக இருக்கும் போல் தெரிகிறது'' என்றார், அவர்களில் ஒருவர்.

இதற்கிடையில் மீஷா சுற்றுப் பயணம் செய்து காக்கஸஸ் வந்தடைந்து விட்டான்:

கீழே காலுக்கு அடியில் காக்கஸஸ்,
மேலே மலை உச்சியில் தனியே நிற்கிறேன்
முகட்டு விளிம்பில்...

உலகெங்கும் சுற்றி வர விரும்பிய மீஷா, வடபுலனை அடைந்ததும் தொண்டை கம்மிப் போய், இருக்கைக்கு அடியில் என்மீது பாதத்தால் திரும்பவும் தட்டினான். முன்பு போலவே பாட்டைத் தவிர வேறு ஒன்றும் நினைவுக்கு வராமல் நான், பாட்டைக் கவிதை போல் கூற முற்பட்டேன்:

உலகெங்கும் தேடியலைந்தேன்,
கண்டிலேன் என் உள்ளத்து அரசியை....

லேனா மறுபடியும் சிரித்துக் கொண்டு, கேட்டாள்: ''ஒரு கவிதைகூட தெரியாதா, என்ன?''

''நான் என்ன செய்வேன்? எனக்குத் தெரிந்தவற்றை மீஷா சொல்லி விட்டான்'' என்று கூறி, புதிதாய் ஒரு பாட்டை ஆரம்பித்தேன்:

துணிவும் துடிப்பும் மிக்க
தலை எந்தன் தலை,
என்னிடமே இருக்குமா இனியும்
என்பது அறியேன்...

''தொடர்ந்து நீ இப்படி எங்களைப் படுத்துவாயானால் உன் தலை உன்னிடம் இருக்காதுதான்'' என்று சொல்லி ஃபேத்யா மாமா நெற்றியை அழுத்திவிட்டுக் கொண்டார். பிறகு இருக்கைக்கு அடியிலிருந்து பெட்டியை இழுத்துக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே நடைவழிக்குச் சென்றார்.

எங்கள் ரயில்வண்டி நகரை நெருங்கிக்கொண்டிருந்தது. பயணிகள் தமது சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டார்கள். பலரும் நடைபாதைக்குச் சென்றார்கள். நாங்கள் எங்களுடைய கான்வஸ் பையையும் பெட்டியையும் எடுத்துக் கொண்டு வெளியே கதவை நோக்கிச் சென்றோம். ரயில் நின்றதும் நாங்கள் கீழே இறங்கி ரயில் நிலையத்திலிருந்து வெளியேறி வீட்டை நோக்கி நடந்தோம். பெட்டியிலிருந்து சப்தம் ஏதும் இல்லை.

''இதைப் பாரேன், இந்த நாய்க் குட்டியை! வழி நெடுக முனகிக் கொண்டிருந்தது, இப்போது சப்தம் போட வேண்டிய நேரம் வந்ததும் அமைதியாக இருக்கிறது!'' என்றான் மீஷா.

''பெட்டியைத் திறந்து பார்க்கலாம், மூச்சுத் திணறிப் போய் கிடக்கிறதோ, என்னமோ?'' என்றேன்.

மீஷா தன் கையிலிருந்த பெட்டியைத் தரையிலே வைத்து அதைத் திறந்தான். நாங்கள் துணுக்குற்றுப் போனோம். அதனுள் துருஷோக்கு இல்லை! புத்தகங்களும் நோட்டுகளும் ஒரு டவலும் சோப்பும் மூக்குக்கண்ணாடியும் பூப்பின்னல் ஊசிகளும்தான் இருந்தன.

''துருஷோக்கு என்ன ஆயிற்று?'' என்று திகைப்புடன் கேட்டான் மீஷா.

என்ன ஆயிற்று என்று உடனே புரிந்து கொண்டு, ''இது நம்முடைய பெட்டி அல்ல!'' என்றேன் நான்.

''ஆமாம், நம்முடையதில் துளைகள் இருக்கும். அதோடு இது சிவப்பு நிறப் பெட்டி, நம்முடையது பழுப்பு நிறம். நான் அந்த ஆளுடைய பெட்டியை எடுத்து வந்து விட்டேன்.''

''வா சீக்கிரம்! ஓடிப் போய்த் தேடிப் பார்க்கலாம். இருக்கைக்கு அடியில் நம்முடைய பெட்டி கிடைத்தாலும் கிடைக்கும்.''

இருவரும் ரயில் நிலையத்துக்கு ஓடோடி வந்தோம். காலி ரயில் வண்டி

அங்கேதான் நின்றிருந்தது. ஒவ்வொரு பெட்டியாக ஏறி எல்லா இருக்கைகளின் அடியிலும் தேடினோம்.

''தவறிப் போய் நம்முடைய பெட்டியை யாரோ எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.''

''மறுபடியும் ஒரு தரம் தேடிப் பார்க்கலாம்.''

மீண்டும் எல்லா பெட்டிகளிலும் ஏறித் தேடினோம், கிடைக்கவில்லை. யாருடைய பெட்டியையோ வைத்துக் கொண்டு, என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தோம். அப்போது அங்கே போய்க் கொண்டிருந்த கண்டக்டர் ஒருவர் எங்களை வண்டியிலிருந்து உடனே இறங்குமாறு கத்தினார்:

''பேசாமல் உடனே இறங்குங்கள்!''

நாங்கள் வீட்டுக்குத் திரும்பி நடந்தோம். மீஷாவின் வீட்டுக்குச் சென்றதும் நான் அவனுடைய சாமான்களை எனது கான்வஸ் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தேன். மீஷாவின் பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டதும் அவன் அம்மா அவனைக் கேட்டார்:

''உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படி இருக்கிறாய்?''

''துருஷோக்கு தொலைந்துவிட்டது.''

''துருஷோக்கா? என்ன அது?''

''என்னுடைய நாய்க் குட்டி, நான் எழுதிய கடிதம் இன்னும் வரவில்லையா?''

''இல்லையே.''

''விவரமாய் எழுந்தியிருந்தேனே.'' துருஷோக்கு எவ்வளவு அருமையான நாய்க் குட்டி, எப்படி இருவருமாகச் சேர்ந்து அதை ரயிலில் கொண்டு வந்தோம் என்று மீஷா அவன் அம்மாவிடம் சொன்னான். முடிவை நெருங்கியதும் அவன் அழ ஆரம்பித்து விட்டான். நான் என் வீட்டுக்குத் திரும்பினேன், அதன் பிறகு என்ன நேர்ந்ததென்று எனக்குத் தெரியாது.

மறு தினம் மீஷா என் வீட்டுக்கு வந்தான்.

''இப்போது என் நிலை என்ன தெரியுமா, உனக்கு? நான் ஒரு திருடனாகி விட்டேன்.''

''அதெப்படி?''

''வேறு ஒருவருடைய பெட்டியை எடுத்து வந்து விட்டேனே.''

''தவறுதலாய் நேர்ந்ததுதானே.''

''திருடனும் தவறுதலாய் நேர்ந்ததென்றுதான் சொல்வான்.''

''யாரும் உன்னைத் திருடன் என்று சொல்ல மாட்டார்கள்.''

''சொன்னால்தானா? பெட்டியின் சொந்தக்காரர் அதைத் தேடிப் பிடிக்க முயன்று கொண்டிருப்பார். அவரிடம் நாம் பெட்டியைத் தந்தாக வேண்டும்.''

''அவரை எப்படி நீ கண்டுபிடிப்பாய்?''

''பெட்டி ஒன்று கிடைத்ததென்று எழுதி நகரெங்கும் ஒட்டப் போகிறேன். பெட்டியின் சொந்தக்காரர் அதைப் படித்ததும் என்னிடம் வருவார்.''

''சரியான யோசனே! அப்படித்தான் செய்ய வேண்டும்.''

காகிதங்களே எடுத்து வந்து சதுரமாய்க் கிழித்துக் கொண்டு ஒவ்வொன் றிலும் அச்சு எழுத்துக்களில் எழுதிேேனும்:

''ரயில் பெட்டியில் கிடைத்தது: ஒரு பெட்டி. சொந்தக்காரர் பின்வரும் முகவரியில் விசாரிக்க வேண்டும்: மீஷா கஸ்லோவ், பெஸ்ச்சானயா தெரு, கட்டடம் 8, வீடு 3.''

இப்படி இருபது துண்டுக் காகிதங்களில் எழுதியதும் நான் சொன்னேன்:

''தொலேந்து போன எங்கள் நாய்க் குட்டியைத் தேடிக் கொண்டிருக்கி ேேம் என்று சொல்லி இன்னொரு அறிவிப்பும் எழுதுவோம். நம்மைப் போலவே தவறிப் போய் நம்முடைய பெட்டியை யாராவது எடுத்துச் சென் றிருக்கலாம் அல்லவா?''

''நமக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாரே அவர்தான் எடுத்துச் சென் றிருப்பார்'' என்ருன் மீஷா.

இன்னும் கொஞ்சம் காகிதங்களேக் கிழித்து ஒவ்வொன்றிலும் எழுதிேேனும்:

''பெட்டியில் நாய்க் குட்டியைக் கண்டவர், அதை மீஷா கஸ்லோவிடம் திருப்பித் தர வேண்டும், அல்லது எழுதித் தகவல் தெரிவிக்க வேண்டும். முக வரி: பெஸ்ச்சானயா தெரு, கட்டடம் 8, வீடு 3.''

ஒவ்வொரு தெரு முனேயிலும் விளக்குக் கம்பத்திலும் நாங்கள் இந்த அறிவிப்புகளே ஒட்டிச் சென்ருேம். எடுத்துச் சென்ற அறிவுப்புகள் விரைவில் தீர்ந்து போகவே மேலும் எழுதி எடுத்து வருவதற்காக மீஷாவின் வீட் டுக்குத் திரும்பிேேனும். நாங்கள் இந்த வேலேயில் ஈடு பட்டிருக்கையில் வெளிக் கதவின் மணி அடித்தது. மீஷா எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

''மீஷா கஸ்லோவைப் பார்க்க வேண்டும்'' என்று சொன்னர் வந்திருந்த ஒரு மாமி.

''எதற்காக?''

''என்னுடைய பெட்டியைத் தொலேத்து விட்டேன்.''

''ஓ! வாங்க உள்ளே! இதோ இருக்கிறது அந்தப் பெட்டி.''

''இதுவல்ல என் பெட்டி'' என்ருர் பெட்டியைப் பார்வையிட்ட அந்த மாமி.

''உங்களுடையது இல்லேயா?''

''என்னுடையது பெரியது, கறுப்பாய் இருக்கும்.''

''அப்படியானல், உங்கள் பெட்டி எங்களிடம் இல்லே'' என்ருன் மீஷா.

''எங்களுக்குக் கிடைத்தது இந்தப் பெட்டிதான். உங்கள் பெட்டி கிடைக்கையில் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அதைத் தருவோம்.''

''பிள்ளைகளே, நீங்கள் செய்வது சரியல்ல'' என்றார் அந்த மாமி. ''பெட்டி தொலைந்து விட்டதாக உங்களிடம் வருவோரிடம் நீங்கள் பெட்டியைக் காட்டக் கூடாது. எம்மாதிரியான பெட்டி, உள்ளே என்ன இருந்தது என்று முதலில் விசாரிக்க வேண்டும். அவர்கள் சொல்லும் விவரங்கள் சரியாக இருந்தால்தான் பெட்டியை அவர்களிடம் தர வேண்டும். இல்லையேல் யார் வேண்டுமானாலும் வந்து இதுதான் தமது பெட்டியென்று சொல்லி உங்களிடமிருந்து வாங்கிச் சென்று விடுவார்கள், பெட்டி அவர்களுடையதாக இருக்காது!''

''ஆமாம், நீங்கள் சொல்லுவது சரிதான்! ஆலோசனை இல்லாமல் செய்து விட்டோம்!'' என்றான் மீஷா.

அந்த மாமி திரும்பிச் சென்றார்.

''பார்த்தாயா? போதிய அளவு அறிவிப்புகளை எழுதி ஒட்டுவதற்குள், வர ஆரம்பித்து விட்டார்கள்'' என்று மீஷா மகிழ்ந்து கொண்டான். ''துருஷோக்கு கிடைத்துவிடும் போல் தோன்றுகிறது எனக்கு.''

அன்றைய தினம் வேறு யாரும் வரவில்லை. ஆனால் மறு நாளன்று ஓயாமல் பலரும் வந்து விசாரித்துச் சென்றார்கள். இத்தனை பேரா பெட்டிகளையும் மற்றும் பலவற்றையும் தொலைத்துவிட்டுத் தேடி அலைகிறார்கள் என்று நாங்கள் வியந்து கொண்டோம். ஒருவர் தமது பெட்டியை டிராம் வண்டியில் மறந்து விட்டு சென்றதாகவும், இருந்தாலும் இதைப் பார்க்கலாமென வந்ததாகவும் சொன்னார். இன்னொருவர் ஆணிகள் வாங்கி நிறைத்து வைத்திருந்த கைப்பெட்டியை பஸ்ஸில் தவற விட்டுவிட்டார். மூன்றாவது ஒருவர் சென்ற ஆண்டில் தொலைந்து போன தமது பெட்டியாக இருக்குமோ என்று நினைத்து எங்களிடம் வந்தார். 'தொலைந்தவை மீட்பவை' அலுவலகத்துக்கு வந்து விசாரிப்பது போல் அத்தனை பேர் எங்களிடம் வந்து விசாரித்துச் சென்றார்கள். நாளுக்கு நாள் மேலும் மேலும் அதிகமானவர்கள் வந்து விசாரித்தார்கள்.

''வேடிக்கைதான், வருவோர் எல்லோரும் பெட்டியைத் தொலைத்தவர்களாகவே இருக்கிறார்கள், பெட்டியை எடுத்துச் சென்றவர்கள் யாரும் வரக் காணோமே'' என்றான் மீஷா.

''தொலைத்தவர் தாம் தொலைத்ததைத் தேடிக் கொண்டு ஓடி வருவார், எடுத்தவர் தாம் எடுத்ததைத் திருப்பித் தருவதற்காக ஏன் ஓடி வருகிறார்? கவலையின்றி வீட்டிலேதான் இருப்பார் அவர்.''

''எனக்குக் கடிதமாவது எழுதலாமே. நாம் அவரிடம் சென்று துருஷோக்கைப் பெற்றுக் கொள்வோம் அல்லவா?'' என்று கேட்டான் மீஷா.

ஒரு நாள் நான் மீஷாவுடன் அவன் வீட்டில் இருந்தேன். வெளிக் கதவின் மணி ஒலித்தது. மீஷா ஓடிச் சென்று திறந்தான். வந்தது தபால்காரர்.

''துருஷோக்கைப் பற்றிய கடிதமாக இருக்கலாம்'' என்று கூவியவாறு மீஷா கடிதத்துடன் ஓடி வந்தான். அதில் எழுதப்பட்டிருந்த முகவரி படிக்க முடியாதபடி அத்தனைதரம் அதன் மீது முத்திரைகள் குத்தப்பட்டிருந்தன. பலதரம் தபால் நிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டு முடிவில் இங்கு வந்து சேர்ந்த கடிதம் அது.

''இது எனக்கு அல்ல'' என்றான் அவன். ''அம்மாவுக்கு வந்திருக்கிறது. முகவரி சரியாய் இல்லை. பல நாட்கள் சுற்றியடிக்கப்பட்டு வந்திருக்கிறது.''

''அம்மா!'' என்று கூவினான் அவன். ''உனக்குக் கடிதம் வந்திருக்கிறது. நம்முடைய முகவரிகூட சரியாகத் தெரியாத யாரோ ஒருவர் எழுதியிருக்கிறார்.''

''எங்கே அது?''

''இதோ இருக்கிறது.''

மீஷாவின் அம்மா உறையைப் பிரித்துக் கடிதத்தை எடுத்து உரக்கப் படிக்க ஆரம்பித்தார்:

''அன்புக்குரிய அம்மா!

''அருமையான நாய்க் குட்டி ஒன்றை இங்கிருந்து எடுத்து வந்து வளர்க்க விரும்புகிறேன். நீ அனுமதிக்க வேண்டும்....''

''அடே, நீ எழுதிய கடிதம் ஆயிற்றே!'' என்று அவர் வியந்து கொண்டார்.

நான் பலக்கச் சிரித்து விட்டேன். மீஷாவுக்கு முகம் செக்கச் சிவந்து போயிற்று, அறைக்குள் இருக்க முடியாமல் வெளியே ஓடினான்.

பிறகு நாங்கள் துருஷோக்கை இனி பார்க்க முடியுமென்ற நம்பிக்கையையே இழந்து விட்டோம். மீஷா மட்டும் அதைப் பற்றி அடிக்கடி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பான்.

''துருஷோக்கு இப்பொழுது எங்கே இருக்கிறதோ? அதை வளர்த்து வருகிற ஆள் எப்படிப் பட்டவரோ? அவர் மோசமான ஆளாய் இருப்பாரோ? துருஷோக்கை அடிப்பவராக இருப்பாரோ? பெட்டி யார் கையிலும் அகப்படாமல், துருஷோக்கு அதனுள் பட்டினி கிடந்து செத்துப் போயிருந்தால்? அது என்னிடம் திரும்பி வர வேண்டாம், எங்கோ அது நல்லபடியாக இருப்பதாய்ச் செய்தி கிடைத்தால் போதும்.''

எங்களுக்குக் கோடை விடுமுறை முடிவடைந்தது. பள்ளிக்கூடம் போக வேண்டிய நாள் வந்தது. நெடுநாட்கள் ஆகிவிட்டதால் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு வகுப்புகள் ஆரம்பமாவது குறித்து எங்களுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. முதல் நாளன்று அதிகாலையிலே எழுந்து தயார் செய்தோம், சுத்தமான புதிய சீருடுப்புகளை உடுத்திக் கொண்டோம். மீஷாவை எழுப்ப வேண்டுமென்று நான் அவன் வீட்டுக்குச் சென்றேன், மாடிப்படியில் அவனைச்

சந்தித்தேன். என்னை எழுப்புவதற்காக அவன் என் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான்.

எங்களுடைய பழைய ஆசிரியையே எங்களுக்கு வருவாரென நினைத்திருந்தோம், ஆனால் அவர் வேறொரு பள்ளிக்கு மாற்றிக் கொண்டு சென்றுவிடவே, புதிய ஆசிரியை வந்திருந்தார். பாடங்களது நேர அட்டவணையைத் தெரிவித்துவிட்டு, எங்களை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, ஒவ்வொரு பெயராகக் கூப்பிட்டு எவ்வொருவரையும் கூர்ந்து கவனித்தார்.

''சரி, புஷ்கினது கவிதையான குளிர் காலத்தை நீங்கள் சென்ற ஆண்டில் படித்தீர்கள் அல்லவா?'' என்று கேட்டார்.

''படித்தோம்!'' என்று எல்லோருமாகச் சேர்ந்து பதிலளித்தோம்.

''யாராலும் அதை ஒப்புவிக்க முடியுமா?'' யாரும் பதில் சொல்லவில்லை.

''உனக்குத் தெரியுமே'' என்று நான் மீஷாவின் காதுக்குள் சொன்னேன்.

''தெரியும்தான்'' என்றான் அவன்.

''உயர்த்து கையை!''

கையை உடனே உயர்த்தினான்.

''நீ இங்கே வந்து, சொல்லு பார்க்கலாம்'' என்றார் ஆசிரியை.

மீஷா உடனே ஆசிரியைக்கு அருகில் போய் நின்று, ஆர்வம் பொங்கும் குரலில் ஒப்புவித்தான்:

வெள்ளைப் பனி! அதில் வண்டியோட்டும் குடியானவன்
உள்ளக் களிப்புற்றே புதுத்தடம் பதிக்கின்றான்,
புதுப் பனியை முகரும் அவன் குதிரையும் தான்
புது முறுக்குடன் துள்ளிக் குதித்து ஓடுகிறது...

அந்த நெடுங் கவிதையை அவன் தொடர்ந்து ஒப்புவித்துச் சென்றான். எங்களது புதிய ஆசிரியை அவனைக் கூர்ந்து கவனித்தார். பிறகு எதையோ நினைவுக்குக் கொண்டு வர முயலுகிறவரைப் போல் புருவங்களைச் சுளித்துக் கொண்டு ஆலோசித்தார். முடிவில் கையை நீட்டிக் காட்டி, ''போதும், இப்போது எனக்கு நினைவு வருகிறது. அன்று ரயிலில் வழி நெடுகக் கவிதைகள் ஒப்புவித்து வந்தாயே, நீதானே அது?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்று சொல்லி மீஷா திருதிருவென முழித்தான்.

''போய் உன் இடத்தில் அமர்ந்து கொள். பள்ளிக்கூடம் முடிந்ததும் ஆசிரியர்களது அறைக்கு வந்து என்னைப் பார்.''

''கவிதையின் எஞ்சிய பகுதியைச் சொல்ல வேண்டாமா?

''வேண்டாம். உனக்கு அது நன்றாகத் தெரியுமென்பது தெளிவாகவே விளங்குகிறது.''

இருவருக்கான சாய்வு மேசையில் எனக்குப் பக்கத்தில் திரும்பி வந்து உட்கார்ந்த மீஷா, மெதுவாய் என்னிடம் சொன்னான்:

''அவரேதான் அது! ரயிலில் அந்தச் சிறுமி லேனுவுடனும் சிடுசிடுப்பான அந்த மனிதரோடும் வந்தாரே, அவரேதான். அந்த மனிதரின் பெயர் ஃபேத்யா மாமா, நினைவு இருக்கிறதா?''

''எனக்குத் தெரியும், நீ ஒப்புவிக்க ஆரம்பித்ததும் அவரை நான் அடையாளம் தெரிந்து கொண்டுவிட்டேன்.''

''ஆசிரியர்களது அறைக்கு வரச் சொல்லியிருக்கிருரே, ஏன்? ரயிலில் அப்படிச் சப்தம் போட்டோமே, அதைப் பற்றிச் சொல்வதற்காக இருக்குமோ?''

அடுத்த வகுப்புகளின் போதும் நாங்கள் இதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தோம். நேரம் போவதே தெரியாமல் வகுப்புகள் யாவும் முடிவுற்றன. நாங்கள் இருவரும்தான் வகுப்பறையை விட்டுக் கடைசியாக வெளியே சென்றவர்கள். மீஷா நேரே ஆசிரியர்களது அறைக்குள் நுழைந்தான், நான் வெளியே காத்திருந்தேன். முடிவில் அவன் வெளியே வந்து சேர்ந்தான்.

''ஆசிரியை என்ன சொன்னுர்?''

''நாம் எடுத்து வந்தது அவருடைய பெட்டி. அவருடையதல்ல, அந்த ஃபேத்யா மாமாவுடையது. தவறிப் போய் நாம் வேறு யாருடைய பெட்டியையாவது எடுத்துச் சென்ருேமா என்று கேட்டார். ஆமாம் என்றேன். அதனுள் என்ன இருந்தது என்று கேட்டார்; நான் சொன்னேன். பெட்டி தங்களுடையதுதான் என்று சொல்லி, முகவரியை எழுதித் தந்தார். இன்று நாம் அதை அவரிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்.'' முகவரி குறிக்கப்பட்டிருந்த காகிதத்தை என்னிடம் காட்டினுன்.

நாங்கள் வீட்டுக்கு ஓடோடிச் சென்று, பெட்டியை எடுத்துக் கொண்டு ஆசிரியையின் வீட்டுக்குப் போனுேம். லேனு கதவைத் திறந்தாள்.

''யார் வேண்டும்?'' என்று கேட்டாள் அவள்.

எங்களுடைய புதிய ஆசிரியையின் பெயரை இருவரும் மறந்துவிட்டோம்.

''இதோ சொல்கிறேன்'' என்ருன் மீஷா. ''இந்தக் காகிதத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.... நதேழ்தா வீக்தரவ்னு.''

''பெட்டியையா கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று வினுவினுள் லேனு.

''ஆமாம்.''

''வாங்க, உள்ளே.''

அவள் எங்களை முன்னறைக்கு அழைத்துச் சென்ருள்.

''நாதியா அத்தை! ஃபேத்யா மாமா! சிறுவர்கள் இருவரும் பெட்டியை எடுத்து வந்திருக்கிருர்கள்!'' என்று அங்கிருந்து பலத்த குரலில் அறிவித்தாள்.

அவளுடைய அத்தையும் மாமாவும் அறைக்குள் வந்தார்கள். ஃபேத்யா மாமா பெட்டியைத் திறந்து பார்த்தார். யாவற்றுக்கும் மேல் அவருடைய மூக்குக் கண்ணுடி இருக்கக் கண்டார்.

''இதோ இருக்கிறதே, நான் விரும்பும் மூக்குக் கண்ணாடி'' என்று அவர் அதை எடுத்துப் போட்டுக் கொண்டார். ''இது திரும்பி வந்துள்ளது குறித்து நான் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன். புதிய மூக்குக் கண்ணாடி எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை.''

''எல்லா சாமான்களும் இதனுள் இருக்கின்றன'' என்றான் மீஷா. ''சொந்தக்காரர் வந்து சேருவார் என்று இத்தனை நாட்கள் காத்திருந்தோம். ரயிலில் பெட்டி ஒன்று கிடைத்ததென்று சொல்லி நகரெங்கும் பல இடங்களில் நாங்கள் அறிவிப்பு எழுதி ஒட்டியிருந்தோம்.''

''அப்படியா? அறிவிப்புகளைப் படிக்கும் பழக்கம் இல்லை எனக்கு'' என்று கூறினார் ஃபேத்யா மாமா. ''ஆனால் இனிமேல் எல்லா அறிவிப்புகளையும் தவறாமல் படிப்பேன்.''

லேனா அறையிலிருந்து வெளியே சென்றாள். சிறிது நேரத்துக்குப் பிறகு அவள் திரும்பி வந்த போது அவள் பின்னால் ஒரு நாய்க் குட்டியும் வந்தது. உடல் முழுதும் அது பழுப்பாய் இருந்தது, ஒரேயொரு காது மட்டும் கறுப்பாய் இருந்தது.

''இதைப் பாரேன்!'' என்றான் மீஷா, என் காதுக்குள்.

நாய்க் குட்டியின் காதுகள் குத்திட்டு நிற்க அது எங்களைப் பார்த்தது.

''துருஷோக்கு!'' என்று இருவரும் சேர்ந்து கத்தினோம்.

துருஷோக்கு ஆனந்தக் கூச்சலிட்டு ஓடி வந்து எங்கள் மீது தாவித்தாவிக் குதித்தது, அருமையாகக் குரைத்து கீச்சிட்டு வாலைக் குழைத்துக் கொண்டது.

''எனது அருமை துருஷோக்கு!'' என்று கூவியவாறு மீஷா அதைத் தூக்கினான். ''செல்லப் பையா, எங்களை நீ மறந்துவிடவில்லையே?''

துருஷோக்கு அவன் முகத்தை நக்கியது, அவன் துருஷோக்குக்கு முத்தம் தந்தான்.

லேனா கைகளைத் தட்டி வியந்தவாறு கூவினாள்:

''பெட்டியிலே இதை நாங்கள் கொண்டு வந்தோம்! தவறிப் போய் உங்களுடைய பெட்டியை எடுத்து வந்துவிட்டோம். ஃபேத்யா மாமா செய்த வேலை!''

''ஆமாம், நான்தான் தவறிழைத்து விட்டேன்!'' என்றார் அவர். ''முதலில் நான் உங்களுடையதை எடுத்துச் சென்றேன், பிறகு நீங்கள் எஞ்சியிருந்ததை எடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று.''

எங்களுடைய பெட்டியை அவர்கள் எங்களிடம் திருப்பித் தந்தார்கள். துருஷோக்கை நாங்கள் எடுத்துச் செல்வதை லேனா விரும்பவில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. முத்து முத்தாய்க் கண்ணீர் அவள் கன்னங்களில் உருண்டு ஓடியது. அடுத்த கோடையில் தியான்கா திரும்பவும் குட்டி போடும்,

அந்தக் குட்டிகளில் சிறந்ததாகப் பார்த்து ஒன்றை அவளுக்குக் கொண்டு வந்து கொடுப்பதாக மீஷா அவளிடம் சொன்னான்.

''இதை வாக்குறுதியாகக் கருதி நான் காத்திருப்பேன், மறந்துவிடக் கூடாது!'' என்றாள் அவள்.

அவர்கள் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம். துருஷோக்கை மீஷா தூக்கி வந்தான். அது தலையைத் திருப்பித் திருப்பிச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு வந்தது. வியப்பால் கண்கள் பளிச்சிட யாவற்றையும் உற்று நோக்கியது. லேனா அதை எங்கும் அழைத்துச் சொல்லாமல் வீட்டிலேயே வைத்திருந்தாள் என்பது தெரிந்தது. நகரில் எதையும் பார்த்திராத துருஷோக்கு ஒவ்வொன்றையும் கண்டு அதிசயப் பட்டுக் கொண்டது.

மீஷாவின் வீட்டுக்கு முன்னால் எங்களுக்காக இரு பெண்களும் ஒரு ஆடவரும் காத்திருந்தனர்.

''காணாமற் போன பெட்டிக்காகவா வந்திருக்கிறீர்கள்'' என்று மீஷா அவர்களிடம் கேட்டான்.

''ஆமாம், நீதானா அந்தப் பெட்டியைக் கண்டெடுத்த பையன்?''

''ஆமாம், ஆனால் பெட்டி ஏதும் இப்போது எங்களிடம் இல்லை. பெட்டியை அதன் சொந்தக்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டோம்.''

''பிறகு ஏன் நீ இந்த அறிவிப்புகளை கிழித்தெறியாமல் விட்டு வைத்திருக்கிறாய்? வீணில் எங்களை இவ்வளவு தூரம் வந்து அலையச் செய்வது சரியா?''

இவ்வாறு முறையிட்டு விட்டு அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். அன்றைய தினமே மீஷாவும் நானும் எல்லா இடங்களுக்கும் சென்று, முன்பு நாங்கள் ஒட்டியிருந்த அறிவிப்புகளைப் பிய்த்தெறிந்தோம்.

தொலைபேசி

மீஷாவும் நானும் ஒரு நாள் விளையாட்டுச் சாமான் கடைக்குப் போயிருந்தோம். அற்புதமான விளையாட்டுத் தொலைபேசி அங்கே விற்கப்படக் கண்டோம். ஒரு மரப் பெட்டியில் இரு தொலைபேசிப் பொறிகளும், இரண்டையும் இணைப்பதற்கு ஒரு பெரிய கம்பிச் சுருளும் இருந்தன. ஒரு பொறியை ஒரு வீட்டிலும் மற்றொன்றைப் பக்கத்து வீட்டிலும் வைத்து இரண்டையும் கம்பியால் இணைத்தோமானால், நாங்கள் இருவரும் அவரவர் வீட்டிலிருந்தே ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளலாம் என்று கடைப் பெண் எங்களிடம் சொன்னாள்.

''அற்புதமான விளையாட்டுச் சாமான்! இதைத்தான் நாம் வாங்க வேண்டும்!'' என்றான் மீஷா. ''இரண்டு தரம் விளையாடிவிட்டு உடைத்தெறியும் படியானது அல்ல, நமக்குப் பயன்படும் நல்ல சாமான்!''

''ஆமாம், வசதியான நல்ல கருவி!'' என்றேன் நான். ''என்னுடன் நீ பேச விரும்பும் போது ஒலிவாங்கியைக் கையில் எடுத்துக் கொண்டால் போதும், உடனே பேசலாம்—வீட்டை விட்டு நகர வேண்டியதில்லை.''

''பிரமாதமாய் இருக்கும்!'' என்று மகிழ்ந்து கொண்டான் மீஷா. ''வீட்டிலிருந்தபடி வேண்டும் போது நாம் பேசிக் கொள்ளலாம்!''

தொலைபேசி வாங்குவதென்று அந்த நிமிடமே மீஷாவும் நானும் முடிவு செய்து, அதற்காக காசு சேர்க்க ஆரம்பித்தோம். இரண்டு வாரங்கள் வரை நாங்கள் ஐஸ் கிரீம் சாப்பிடவில்லை, திரைப்படம் பார்க்கவில்லை—கிடைத்த காசைச் செலவிடாமல் சேர்த்து வந்தோம். போதுமான தொகை சேர்ந்ததும் உடனே தொலைபேசியை வாங்கினோம்.

மரப் பெட்டியுடன் கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பியதும், ஒரு தொலைபேசியை என்னுடைய அறையில் வைத்துக் கம்பியை அதனுடன் இணைத்தோம். பிறகு கம்பிச் சுருளை சன்னல் வழியே வெளியே விட்டுப் பிரித்து நேரே கீழ் மாடியில் மீஷாவின் அறைக்குக் கொண்டு போனோம். மற்றொரு தொலைபேசியை அவன் அறையில் வைத்துக் கம்பியின் எதிர் முனையை அதனுடன் இணைத்தோம்.

''சரி, பேசிப் பார்ப்போம்'' என்றான் மீஷா. ''நீ மாடிக்கு ஓடி உன்னுடைய தொலைபேசியில் கேட்டுப் பார்.''

நான் படியில் ஏறி என் அறைக்கு ஓடி ஒலிவாங்கியைக் கையில் எடுத்தேன், மீஷா கூச்சலிடுவது காதில் விழுந்தது:

''ஹலோ! ஹலோ!''

''ஹலோ!''—நானும் கூச்சலிட்டேன்.

''நான் பேசுவது கேட்கிறதா?''

''கேட்கிறது, உனக்குக் கேட்கிறதா, நான் பேசுவது?''

''கேட்கிறதே! பிரமாதம்! என் குரல் நன்ருய்க் கேட்கிறதா?''

''ரொம்ப நன்ருய்க் கேட்கிறது. உனக்குக் கேட்கிறதா?''

''ஓ, கேட்கிறதே! ஹ—ஹ—ஹா! நான் சிரிப்பது கேட்கிறதா?''

''கேட்கிறது. ஹ—ஹ—ஹா! உனக்குக் கேட்கிறதா?''

''ஜோராய்க் கேட்கிறதே! இரு, இதோ மேலே ஓடி வருகிறேன்.''

மீஷா மேலே என் அறைக்கு ஓடி வந்தான். நாங்கள் மகிழ்ச்சி தாங்க மாட்டாமல் குதித்து ஆடினேம்.

''இதை வாங்குவதென நாம் செய்த முடிவு மெச்சத்தக்கது. சிறப்பாய் அமைந்து விட்டது, இல்லையா?''

''ஆமாம், சந்தேகமில்லை.''

''சரி, நான் கீழே போய் என் அறையிலிருந்து தொலைபேசியில் பேசுகிறேன்.''

மீஷா அவனுடைய அறைக்கு ஓடினன். சில கணங்களுக்கு எல்லாம் தொலைபேசி மணி அடித்தது. ஒலிவாங்கியை எடுத்து,

''ஹலோ'' என்றேன்.

''நான் பேசுவது கேட்கிறதா?''

''கேட்கிறது.''

''தெளிவாகக் கேட்கிறதா?''

''தெளிவாகத்தான் கேட்கிறது.''

''சரி, எதைப் பற்றியாவது நாம் பேச வேண்டும்.''

''பேசலாம், எதைப் பற்றிப் பேசலாம், சொல்லு.''

''எதைப் பற்றி வேண்டுமானுலும் பேசலாம். இதை நாம் வாங்கியதற்காக நம்மை நாம் பாராட்டிக் கொள்ள வேண்டும், இல்லையா?''

''ஆமாம், பாராட்டிக் கொள்ளத்தான் வேண்டும்.''

''நாம் இதை வாங்காமல் விட்டிருந்தால் நன்ருய் இருந்திருக்காது, இல்லையா?''

''இருந்திருக்காதுதான்.''

''உம்.''

''என்ன உம்?''

''பேசாமல் ஏன் சும்மாயிருக்கிறே?''

''நீ ஏன் பேசாமலிருக்கிருய்?''

''என்ன பேசுவது, தெரியவில்லையே'' என்ருன் மீஷா. ''எப்போதுமே இப்படித்தான் ஆகும். பேச வேண்டியபோது பேசுவதற்கு ஒன்றும் இருக்காது.

பேசக் கூடாத நேரத்தில் நம்மையும் மீறி பேசுவதற்குப் பலவும் இருக்கும்.''

''இதைக் கேள் நீ: இருவரும் ஆலோசித்துப் பார்ப்போம், என்ன பேசுவதென்று தெரிந்ததும் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசிக் கொள்வோம்.''

''சரி, அப்படியே செய்யலாம்.''

ஒலிவாங்கியைத் திருப்பி வைத்து விட்டு நான் பலமாக ஆலோசிக்க முற்பட்டேன். திடுமென தொலைபேசி மணி அடித்தது.

''ஆலோசித்து விட்டாயா நீ?''

''இன்னும் இல்லையே.''

''நானும் இன்னும் ஆலோசித்தாகவில்லை.''

''பிறகு ஏன் அதற்குள் கூப்பிடுகிறாய்?''

''நீ ஆலோசித்து வைத்திருப்பாய் என்று நினைத்தேன்.''

''ஆலோசித்து முடித்திருந்தால் உன்னைக் கூப்பிட்டிருப்பேனே.''

''நீ மறந்து விட்டாயோ என்று நினைத்தேன்.''

''அதெப்படி மறந்து போவேன்? நான் என்ன அசட்டுக் கழுதையா?''

''யார் சொன்னது உன்னைப் போய் அசட்டுக் கழுதையென்று? நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை.''

''வேறு என்ன சொல்கிறாய் நீ?''

''நான் ஒன்றும் சொல்லவில்லை. அசட்டுக் கழுதை என்று சொல்லவில்லை.''

''சரி, அசட்டுப் பேச்சு பேசியது போதும்! வீட்டுப் பாடங்களைச் செய்து முடிப்போம், பிறகு பேசலாம்.''

''சரி, முதலில் பாடங்களை செய்து முடிப்போம்.''

ஒலிவாங்கியைத் திருப்பி வைத்து விட்டு வீட்டுப் பாடங்களைச் செய்வதற்காக மேசையின் முன்னால் உட்கார்ந்தேன். உடனே தொலைபேசி மணி மறுபடியும் ஒலித்தது.

''இதோ நான் பியானோ வாசித்துப் பாட்டுப் பாடிக் காட்டுகிறேன், கேள்'' என்றான் மீஷா.

''சரி, பாடு கேட்கிறேன்.''

முதலில் கரமுரவென்று சப்தம் கேட்டது, பிறகு பியானோ இசை ஆரம்பமாயிற்று. பிறகு மீஷா புது விதமான குரலில் பாடக் கேட்டேன்.

''இவன் இப்படிப் பாடுவதற்கு எப்போது கற்றுக் கொண்டான்?'' என்று என்னுள் நான் வியந்து கொண்டேன்.

அந்த நேரத்தில் மீஷா என் அறைக்குள் ஓடி வந்தான். என்னைப் பார்த்து ஏளனம் செய்வது போல் நகைத்து விட்டுக் கேட்டான்: ''நான் பாடுகிறேன் என்று நினைத்தாய்? இல்லை, இசைத் தட்டுப் போட்டிருக்கிறேன், தொலைபேசி மூலம் இங்கே கேட்கிறது. ஒலிவாங்கியைத் தா என்னிடம், கேட்டுப் பார்க்கிறேன்.''



ஒலிவாங்கியை அவனிடம் கொடுத்தேன். அதைக் காதில் வைத்துச் சற்று நேரம் கேட்டபின், ஒலிவாங்கியை அவசரமாக என்னிடம் திருப்பித் தந்து விட்டு அவன் கீழே ஓடிஞன். அதை நான் காதில் வைத்துக் கேட்டேன். கிறீச்—கிறீச் என்ற ஓசைதான் கேட்டது. இசைத்தட்டு முடிந்து விட்டது. மறுபடியும் நான் வீட்டுப் பாடங்கள் செய்ய முற்பட்டேன். ஆனல் தொலைபேசி மணி மீண்டும் ஒலித்தது. ஒலிவாங்கியை எடுத்து ''ஹலோ'' என்றேன்.

''லொள்! லொள்!''

''ஏன் நாய் மாதிரிக் குரைக்கிருய்?''

''நானல்ல, துருஷோக்கு உன்னுடன் பேசுகிறது. ஒலிவாங்கியை அது கடிக்கிறது, சப்தம் கேட்கிறதா உனக்கு?''

''கேட்கிறது.''

''நான் ஒலிவாங்கியை அதன் வாயருகே பிடித்துக் கொண்டிருக்கிறேன். அது கடிக்கிறது.''

''ஒலிவாங்கி வீணுகிவிடும், வேண்டாம் இந்த வேலை.''

''இல்லை, இது உலோகத்தாலானது, வீணுகிவிடாது.... ஏய்! என்னைக் கடிக்காதே! (உர்-ர்-ர்!) என்னையே கடிக்கப் பார்க்கிறது, கேட்கிருயா நீ?''

''கேட்கிறேன், கேட்கிறேன்!''

திரும்பவும் நான் பாடங்களில் கவனம் செலுத்தினேன். ஒரு நிமிடத்துக்குப் பிறகு தொலைபேசி மணி மறுபடியும் ஒலித்தது. ஒலிவாங்கியை எடுத்தேன்.

''புஸ்... புஸ்'' என்று அதிலிருந்து சப்தம் கேட்டது.

''எதற்காக நீ ரீங்காரம் செய்கிருய்?''

''ஈ ரீங்காரமிடுகிறது.''

''என்ன?''

''ஈயைப் பிடித்து ஒலிவாங்கியின் முன்ஞல் காட்டுகிறேன், அது ரீங்காரமிடுகிறது.''

அன்று மாலை முழுதும் மீஷாவும் நானும் தொலைபேசியில் ஒருவரையொருவர் கூப்பிட்டுக் கொண்டிருந்தோம். பேசினேம், பாடினேம், உறுமினேம், கத்தினேம், முணுமுணுக்கும் குரலில் உரையாடினேம். யாவும் தெளிவாகவே காதில் விழுந்தன. அன்று வீட்டுப் பாடங்களை செய்து முடிப்பதற்கு நெடுநேரமாகி விட்டது. படுக்கப் போகுமுன் கடைசியாக ஒரு தரம் மீஷாவுக்குப் போன் செய்யலாமென்று ஒலிவாங்கியை எடுத்து அவனைக் கூப்பிட்டேன். ஆனல் அவன் பதிலளிக்கவில்லை. தொலைபேசி வீணுமற் போயிருக்குமோ? மறுபடியும் பொத்தானை அழுத்திக் கூப்பிட்டுப் பார்த்தேன், அப்போதும் பதில் இல்லை. என்ன ஆயிற்று என்று பார்த்துவிட்டு வருவதற்காக அவன் அறைக்கு ஓடினேன்.

மீஷா தொலைபேசியை அக்கு அக்காகப் பிரித்தெடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். மின்கலத்தைத் தனியே எடுத்து விட்டான், மணியையும் கழற்றிவிட்டான். ஒலிவாங்கியை இப்போது பிரித்தெடுத்துக் கொண்டிருந்தான்.

''என்ன செய்கிறாய் நீ? நிறுத்து!''

''தொலைபேசி எப்படி வேலை செய்கிறதென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பிரித்தெடுத்துப் பார்த்து விட்டு யாவற்றையும் மறுபடியும் கோத்து இணைத்து முடுக்கி விடுவேன்.''

''முடியாது உன்னால். கோத்து இணைக்க விவரம் தெரிந்திருக்க வேண்டும்.''

''என்ன பெரிய விவரம் இருக்கிறது இதில்? எல்லாம் எனக்குத் தெரியும்.''

ஒலிவாங்கியிலிருந்து திருகாணிகளைக் கழற்றியெடுத்தான். அதைத் திறந்து உலோகத் துண்டுகளைப் பிரித்தெடுத்தபின், வட்டத் தகடு ஒன்றைத் தனியே எடுக்க முயன்றான். தகடு கழன்று விழுந்ததும் உள்ளிருந்த கருப்புத் தூள் மேசையின் மேல் கொட்டிற்று. மீஷா திடுக்குற்றுவிட்டான். தூளை அள்ளியெடுத்து ஒலிவாங்கியினுள் போட்டான்.

''என்ன காரியம் செய்திருக்கிறாய், பார்!'' என்றேன் நான்.

''கவலைப்படாதே, யாவற்றையும் முன்பு இருந்தது போலவே திருப்பி வைத்து முடுக்கி விடுகிறேன்.''

உறுப்புகளை இணைத்துப் பொருத்தி வைக்க முற்பட்டான். கடினமான வேலையாக இருந்தது இது. திருகாணிகள் மிகவும் சிறியவை, உரிய இடத்தில் அவற்றை வைத்து முடுக்குவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. இந்த வேலை செய்து முடிக்கப்பட்டதும் ஒரு சிறு உலோகத் துண்டும் இரண்டு திருகாணிகளும் எஞ்சியிருந்தன.

''இந்தத் துண்டு எங்கிருந்து வந்தது?'' என்று கேட்டேன்.

''ஐயோ, சரியான முட்டாள் நான்! இவற்றை உள்ளே வைத்துப் பொருத்த மறந்து விட்டேன்'' என்றான் மீஷா. ''மறுபடியும் ஒலிவாங்கியைப் பிரித்தெடுத்துச் சரி செய்தாக வேண்டும்.''

''நான் வீட்டுக்குப் போகிறேன். யாவற்றையும் நீ சரி செய்ததும் எனக்கு போன் செய்.''

நான் என் அறைக்குச் சென்று நெடு நேரம் காத்திருந்து பார்த்தபின் படுத்துறங்கி விட்டேன்.

மறு நாள் காலை தொலைபேசி மணி அடித்தது. படுக்கையிலிருந்து துள்ளியெழுந்து ஒலிவாங்கியை எடுத்து,

''ஹலோ'' என்று கத்தினேன்.

''உறுமாதே நீ'' என்று பதில் வந்தது.

''நான் ஒன்றும் உறுமவில்லை, பேசுகிறேன்'' என்றேன்.

''உறுமுவதை நிறுத்து என்கிறேன். மனிதக் குரலில் பேசத் தெரியாதா உனக்கு?'' என்று மீஷா கத்தினன்.

''மனிதக் குரலில்தான் பேசுகிறேன். எதற்காக உறும வேண்டும் நான்?''

''நீ வேடிக்கை செய்தது போதும் நிறுத்து! உன் அறையில் பன்றி இல்லை என்பது தெரியும் எனக்கு.''

''இங்கு பன்றி இல்லையென்றுதான் நானும் சொல்கிறேன்.'' எனக்குக் கோபம் வந்து விட்டது.

மீஷா மௌனமாகிவிட்டான்.

இரண்டொரு நிமிடத்துக்குப் பிறகு அவன் என் அறைக்குள் நுழைந்தான்.

''நீ ஏன் ஒலிவாங்கியை எடுத்து வைத்துக் கொண்டு ஓயாமல் உறுமினுய்?''

''நான் ஒன்றும் உறுமவில்லை.''

''உன் உறுமலைக் கேட்டிருந்துவிட்டுதானே இங்கே வருகிறேன்.''

''எதற்காக நான் உறும வேண்டும்?''

''எனக்கு எப்படித் தெரியும்? நீ உறுமியதுதான் என் தொலைபேசியில் எனக்குக் கேட்டது. உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், நீ கீழே சென்று என் தொலைபேசியில் கேட்டுப் பார்.''

நான் கீழே அவன் அறைக்குச் சென்று ஒலிவாங்கியை எடுத்துப் பொத்தானை அழுத்தினேன்.

''ஹலோ!'' என்று கத்தினேன்.

ஒலிவாங்கியிலிருந்து பன்றி உறுமுவது போன்ற ''உர்-ர்-ர்-ரும்! உர்-ர்-ரும்!'' என்ற சப்தம்தான் கேட்டது. என்ன ஆயிற்று என்று உடனே எனக்குப் புரிந்தது. மீஷாவிடம் திரும்பி ஓடினேன்.

''எல்லாம் நீ செய்த வேலைதான். நீதான் தொலைபேசியை உடைத்து வீணுக்கினுய்.''

''எதையும் நான் உடைக்கவில்லை.''

''ஒலிவாங்கியைக் கோத்து இணைக்கையில் எதையோ உடைத்திருக்கிருய்.''

''உறுப்புகளைத் தவருக வைத்து இணைத்து முடுக்கியிருக்கிறேன். திரும்பவும் பிரித்துச் சரி செய்து விடுகிறேன்.''

''அதெப்படி சரி செய்வாய்?''

''உன்னுடைய ஒலிவாங்கியைப் பிரித்து உள்ளே எப்படி இருக்கிறதென்று பார்த்து, அதே போல் என்னுடையதையும் வைத்துச் சரி செய்து விடுகிறேன்.''

''வேண்டாம், வேண்டாம்! என்னுடைய தொலைபேசியையும் நீ பிரித்துக் கெடுப்பதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை.''



''நீ பயப்படாதே, நான் கவனமாக வேலை செய்வேன், கெடுத்துவிட மாட்டேன். எப்படியும் என்னுடையதை நான் சரியானபடி வைத்துப் பொருத்தினால்தானே தொலைபேசியில் நாம் பேசிக் கொள்ள முடியும்?''

அவனுடைய ஒலிவாங்கியைச் சரி பண்ணுவதற்கு என்னென்னமோ செய்த பின், உறுமல் மட்டுமன்றி எந்த விதமான சப்தமும் அதில் கேட்கவில்லை.

''இனி என்ன செய்வது?'' என்று கேட்டேன்.

''நான் சொல்கிறேன் கேள்'' என்ருன் மீஷா. ''இதை நாம் வாங்கினோமே, அந்தக் கடைக்கே எடுத்துச் செல்வோம். அவர்கள் இதைச் சரி செய்து தந்தாலும் தரலாம் அல்லவா?''

நாங்கள் அந்தக் கடைக்கு சென்று கேட்டுப் பார்த்தோம். தொலைபேசிகளைச் சரி செய்யும் வேலையைத் தாம் மேற்கொள்வதில்லை என்று அவர்கள் கூறி விட்டனர். வேறு எங்கே எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் தமக்குத் தெரியாது என்ருர்கள். அன்றைய பொழுது எங்களுக்கு வீணுகியதுதான் மிச்சம். பிறகு திடுமென மீஷாவுக்கு ஒரு யோசனை உதித்தது.

''இந்த யோசனை எப்படி முன்பே எனக்கு உதிக்காமல் போயிற்றோ, தெரியவில்லை'' என்ருன் அவன். ''நாம் என்ன செய்யலாமென்று சொல்கிறேன் கேள். நமது தொலைபேசிகள் மூலம் நாம் தந்தி அடித்து ஒருவருக்கு ஒருவர் தகவல் தெரிவித்துக் கொள்ளலாம்.''

''அது எப்படி?''

''ரொம்ப சுலபம் இது: கட்டு-கட-கட்டு. நமது தொலைபேசியின் மணி கெட்டுப் போய்விடவில்லை, வேலை செய்கிறது. கணப் பொழுதுக்கு அடித்தால் 'கட்டு' என்றும், அதிக நேரம் அடித்தால் 'கட' என்றும் வைத்துக் கொள்வோம். பிறகு மார்ஸ் குறிமுறையை நாம் பயின்று கொண்டால் போதும், ஒருவருக்கொருவர் தந்திச் செய்திகளை அனுப்பிக் கொள்ளலாம்.''

மார்ஸ் குறிமுறையை வாங்கி வந்து இருவரும் ஒவ்வோர் எழுத்துக்குமான குறியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தோம். கடினமாகவே இருந்தது. ஆனால் சில நாட்களுக்குள் எளிய சொற்களை இந்தக் குறிமுறையின்படி தந்தி அடிக்கப் பழகிக் கொண்டோம். தொலைபேசியில் பேசுவதைக் காட்டிலும் இது சுவையானதாகவே இருந்தது. ஆனால் எங்களது தந்தித் தொடர்பு அதிக நாட்களுக்கு நீடிக்கவில்லை. ஒரு நாள் காலையில் நான் தந்தி மூலம் மீஷாவைக் கூப்பிட்டேன். ஆனால் அவனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. இன்னும் அவன் தூங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆகவே சற்று நேரத்துக்குப் பிற்பாடு திரும்பவும் தந்தி மூலம் கூப்பிட்டேன். இப்போதும் பதில் கிடைக்கவில்லை. ஆகவே அவனுடைய வீட்டிற்குச் சென்று கதவு மணியை அழுத்தினேன். அது புதிதாகப் பொருத்தப் பட்டிருந்த மணி. மீஷா கதவைத் திறந்தான்.

எங்களுடைய புதிய மணி எப்படி இருக்கிறது? நான் தயார் செய்த மணி'' என்றான் அவன்.

''எபடி நீ அதைத் தயார் செய்தாய்?''

''தொலைபேசியி ருந்து.''

''அது எப்படி?''

''எளிமையிலும்'' எளிமையானது. தொலைபேசியிலிருந்து மணியையும் குமிழ்ப் பொத்தானையும் பிரித்தெடுத்தேன். மின்கலத்தையும் எடுத்தேன். தக்கபடி இணைத்துப் பொருத்திக் கதவு மணியாக்கினேன். விளையாட்டுச் சாமானாக இருந்தது, இப்போது வீட்டுக்குப் பயன்படும் பொருளாகி விட்டது.''

''தொலைபேசியைப் பிரித்தெடுக்க உனக்கு உரிமை இல்லை'' என்றேன் நான்.

''எனக்குச் சொந்தமானவற்றை எதுவும் செய்ய எனக்கு உரிமை உண்டு. உன்னுடையதையா நான் பிரித்தெடுத்தேன்?''

''ஆனால் தொலைபேசி நம் இருவருக்கும் சொந்தமானது. இதை இப்படி நீ பிரித்தெடுப்பாய் என்று தெரிந்திருந்தால் உன்னுடன் கூட்டு சேர்ந்து இதை வாங்க நான் சம்மதிருக்க மாட்டேன். யாருடனும் பேச முடியாத என்னுடைய தொலைபேசியால் எனக்கு எந்த பயனும் இல்லையே.''

''நாம் ஏன் தொலைபேசியில் பேசிக் கொள்ள வேண்டும்? அருகருகே வசிக்கிறோம், வேண்டும் போது நாம் இப்படி நேரில் சந்தித்துப் பேசிக் கொள்ளலாம்.''

''இனி உன்னுடன் பேச எனக்கு விருப்பமில்லை!''

அவன் மீது எனக்கு வந்த கோபத்தில் மூன்று நாட்கள் வரை அவனுடன் நான் பேசவே இல்லை. தனியாக விளையாடிச் சலிப்புற்றுப் போனதும், நானும் எனது தொலைபேசியைப் பிரித்தெடுத்தேன். எங்கள் வீட்டுக்கு ஒரு புதிய கதவு மணி தயார் செய்தேன். மீஷா செய்திருந்ததை விட என்னுடைய தயாரிப்பு நன்றாக இருந்தது. மின்கலத்தைக் கதவுக்கு மேல் சுவர் அலமாரியில் வைத்துக் கம்பிகளைக் கதவுக் கீல் ஓரமாய்க் கீழே எடுத்து வந்தேன். குமிழ்ப் பொத்தானைக் கதவின் வெளிப்புறத்தில் வைத்துத் திருகாணிகள் கொண்டு திருகிப் பொருத்தினேன். மீஷா செய்திருந்ததைப் போல் அவந்தரையாக அதை நான் கம்பியில் தொங்க விடவில்லை. நான் செய்திருந்த வேலை குறித்து எனது பெற்றோர்கள் என்னைப் பாராட்டினர்.

நான் செய்த மணியைப் பற்றி மீஷாவிடம் சொல்வதற்காக கீழே இறங்கி அவன் வீட்டுக்குச் சென்று கதவு மணியை அழுத்தினேன். ஆனால் யாரும் கதவைத் திறக்கவில்லை. மணி சரியாக வேலை செய்யவில்லையென்று நினைத்து, கதவைத் தட்டினேன். மீஷா கதவைத் திறந்தான்.

''கதவு மணி வேலை செய்யவில்லையா?'' என்று கேட்டேன்.

''இல்லை.''

''ஏன்?''

''மின்கலத்தை அக்கு அக்காகப் பிரித்தெடுத்து விட்டேன்.''

''ஏன் அப்படிச் செய்தாய்?''

''அது எப்படி செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ள விரும்பினேன்.''

''இப்பொழுது உன்னிடம் தொலைபேசியும் இல்லை, கதவு மணியும் இல்லை.''

''இல்லைதான்'' என்று கூறி அவன் பெருமூச்சு விட்டான்.

மீஷா ஏன் இப்படிச் சாமான்களைப் பிரித்தெடுத்து எதற்கும் உதவாதபடிச் செய்கிறான் என்று நினைத்தபடி நான் என் அறைக்குத் திரும்பிச் சென்றேன். அவனது இந்த இயல்பை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டேன்.

அன்று இரவு படுத்த போது எனக்குத் தூக்கம் வரவில்லை. நாங்கள் வாங்கிய தொலைபேசியையும் பிறகு அதிலிருந்து நாங்கள் செய்த கதவு மணிகளையும் பற்றி நினைத்தவாறு படுத்திருந்தேன். பிறகு மின்விசை குறித்து ஆலோசித்துப் பார்த்தேன். மின்கலத்துள் அது எப்படி, எப்பொருள்களிலிருந்து உதிக்கிறது? எல்லாரும் தூங்கிக் கொண்டிருக்கையில் நான் தூங்காமல் இதைப் பற்றிச் சிந்தித்தேன். முடிவில் படுக்கையை விட்டு எழுந்து விளக்கைப் பொருத்தினேன், மின்கலத்தைக் கீழே எடுத்து அதைப் பிரித்து உள்ளே என்ன இருக்கிறதென்று பார்த்தேன். அதனுள் திரவம் இருந்தது. துணியில் சுற்றிய கருப்புத் தண்டு ஒன்று அந்தத் திரவத்துள் வைக்கப் பட்டிருந்தது. மின்விசை இந்த திரவத்திலிருந்தே உதிக்கிறது என்று இப்போது நான் கண்டு கொண்டேன். திரும்பிச் சென்று படுத்தேன், தூக்கம் வந்து விட்டது.

பூ வாணம்

புத்தாண்டு விழா நெருங்கி வந்து விட்டது, மீஷாவும் நானும் மும்முரமாக வேலை செய்தோம். விழா கொண்டாடுவதற்கு வேண்டியவை யாவற்றையும் தயாரித்தோம். புத்தாண்டு பிர் மரத்தை அலங்கரிப்பதற்காக வண்ணக் காகிதங்களில் தோரணங்களும் கொடிகளும் செய்தோம், சிங்கார ஒப்பனைகள் பலவும் தயாரித்தோம். வேலைகள் எல்லாம் நன்றாகவே நடந்தேறி வந்தன, அப்பொழுது மீஷாவுக்கு எங்கிருந்தோ ''விளையாட்டு இரசாயனம்'' என்றொரு புத்தகம் கிடைத்தது. பூவாணமும் மத்தாப்பும் எப்படிச் செய்வதென்று அந்தப் புத்தகத்தில் மீஷா படித்தான்.

எல்லா குளறுபடிக்கும் அதுவேதான் காரணம்! கந்தகத்தையும் சர்க்கரையையும் கல்வத்தில் வைத்து இடித்துப் பொடி பண்ணுவதிலும், அலுமினியத்தைச் செதுக்கிச் சீவலாக்குவதிலும் முழு நேரத்தையும் செலவிடமுற்பட்டான். பிறகு இவற்றை ஒன்று சேர்த்து இந்தக் கலவையை எரியவிட்டுச் சோதனை நடத்திப் பார்த்தான். வீடு பூராவும் ஒரே நெடியும் புகையுமாகி மூச்சுத் திணறியதே அன்றி மத்தாப்பூப் பொறிகள் பீறிட்டெழவில்லை. பக்கத்து வீட்டுக்காரர்கள் புகார் செய்தார்கள், ஆனால் மீஷா எதையும் பொருட்படுத்தாமல் வேலை செய்து வந்தான். அது மட்டுமல்ல, எங்கள் வகுப்பைச் சேர்ந்த சிறுவர்கள் சிலரையும் தனது புத்தாண்டு விழாக் கொண்டாட்டத்துக்கு வருமாறு அவன் அழைத்தான். பூவாணங்கள் கொளுத்திப் பிரமாதமாகக் கொண்டாடப் போவதாக அவர்களிடம் பெருமையடித்துக் கொண்டான்.

''பூவாணம் தெரியுமா? வெள்ளிச் சுடர்களும் வண்ணத் தீப்பொறிகளும் பீறிட்டெழும்.''

''பூவாணத்தை உன்னால் செய்ய முடியப் போவதில்லை. அவர்களிடம் போய் பெருமையாக அறிவிக்கிறாயே, ஏன்?'' என்று நான் கேட்டேன்.

''ஏன் முடியாதாம்? நிறைய அவகாசம் இருக்கிறது, நான் தயார் செய்து விடுவேன்'' என்றான் அவன்.

விழாவிற்கு முந்திய நாளன்று மீஷா மேலே மாடிக்கு என் வீட்டிற்கு வந்து என்னைக் கூப்பிட்டான். ''புறப்படு, காட்டுக்குப் போய் பிர் மரங்களைக் கொண்டு வந்துவிடலாம்.''

''மணியாகிவிட்டது. இன்று போய்வர முடியாது, நாளைக்குப் போகலாம்'' என்றேன்.

''நாளைக்கு நாம் மரங்களை அலங்கரித்தாக வேண்டுமே.''

''மாலையில் அலங்கரிக்கலாம். நாளைக்குப் பள்ளிக்கூடம் முடிந்ததும் போய் மரங்களைக் கொண்டு வந்து விடலாம்.''

கொரேல்கினோ கிராமத்துக்குச் சென்று மரங்களை வெட்டி வருவதென்று முன்பே நாங்கள் முடிவு செய்திருந்தோம். நத்தாஷா மாமி இந்தக் கிராமத்தில்தான் வசித்து வந்தார், கோடை விடுமுறையின் போது நாங்கள் அவர் வீட்டில்தான் தங்கியிருந்தோம். அவருடைய கணவர் வனத்துறைப் பணியாளர். புத்தாண்டு பிர் மரங்களுக்கு அவரிடம் வந்து சொல்லிவிட்டு நேரே காட்டிலிருந்து வெட்டியெடுத்துக் கொள்ளலாமென்று அவர் சொல்லியிருந்தார். அங்கே போய் மரம் கொண்டு வருவதற்கு அம்மாவும் அனுமதி அளித்திருந்தார்.

மறுநாள் மதிய உணவருந்தியதும் நான் மீஷாவிடம் சென்றேன். பூவாணத்துக்காக அவன் தூள் இடித்துக் கொண்டிருந்தான்.

''போதும், நேரமாகிறது. இந்த உருப்படாத வேலைக்கு இதுவல்ல நேரம். முன்பே செய்திருக்க வேண்டும்.''

''முன்பேதான் செய்திருந்தேன், ஆனால் கந்தகம் போதிய அளவு சேர்க்கவில்லை. பூவாணத்திலிருந்து பூ வரவில்லை, புஸ்ஸிட்டு விட்டு நின்று விடுகிறது.''

''போதும் தூக்கியெறிந்துவிட்டுப் புறப்படு! என்ன செய்தாலும் பூவாணம் வரப் போவதில்லை.''

''இந்தத் தரம் வந்துவிடும், பாரேன். கந்தகத்தைக் கொஞ்சம் அதிகமாகச் சேர்த்தால் நிச்சயம் வந்துவிடும். அங்கே சன்னல் மேடையில் இருக்கும் அலுமினியச் சட்டியை எடுத்துக் கொடு என்னிடம்.''

''இங்கே சட்டி எதுவும் இல்லை, இந்தத் தட்டுதான் இருக்கிறது.''

''அது ஒன்றும் தட்டு இல்லை; சட்டியாகத்தான் இருந்தது. என்னிடம் கொடு அதை.''

அவனிடம் அதைக் கொடுத்தேன். அதை வாங்கி அரத்தால் வேகம் வேகமாய் அதன் விளிம்பை ராவினான் அவன்.

''சட்டியாக இருந்ததை இப்படித்தான் நீ தட்டாய் மாற்றினாயா?''

''ஆமாம், சட்டியைப் போலத் தட்டும் பல காரியங்களுக்கும் பயன்படக் கூடியதுதான்.''

''உன் அம்மா ஒன்றும் சொல்லவில்லையா?''

''ஒன்றும் சொல்லவில்லை. இதைப் பற்றி இன்னும் அம்மாவுக்குத் தெரியாது.''

''தெரிந்ததும் என்ன ஆகும்?''

''பெரிதாய் ஒன்றும் ஆகிவிடாது. நான் பெரியவனானதும் அம்மாவுக்குப் புதிதாய் ஒரு சட்டி வாங்கித் தருவேன்.''

''அது வரை அம்மா காததிருக்க வேண்டுமே.''

''சட்டிதானே, போனால் போகிறது போ!'' என்று சொல்லி அவன் ராவிச் சென்றான். போதிய அளவு அலுமினியச் சீவல் சேர்ந்ததும் கல்வத்திலிருந்த கந்தகப் பொடியையும் அதனுடன் சேர்த்து, இந்தக் கலவையில் கொஞ்சம் கோந்தையும் கலந்து பிசைந்தான். அது கெட்டியான களி போலாகி விட்டது. இந்தக் களியை அவன் பெரிய பெரிய சுருட்டுகளாய் உருட்டியெடுத்து சிறு கம்பிகளை அவற்றுள் குத்திச் செருகினான். பிறகு இவற்றை உலர வைப்பதற்காக ஒட்டுப் பலகையில் வைத்து அடுக்கினான்.

''காய்ந்ததும் இவை பூவாணங்களாகிவிடும், பாரேன். ஆனால் துருஷோக்கின் கண்ணில் படாமல் இவற்றை ஒளித்து வைத்தாக வேண்டும்.''

''ஏன்?''

''அது இவற்றைத் தின்று விடும்.''

''பூவாணத்தை எந்த நாயும் தின்னாது.''

''மற்ற நாய்கள் தின்னாமல் இருக்கலாம், துருஷோக்கு இவற்றை சும்மா விடாது. இவற்றில் ஒன்றை முன்பு அது மென்று தின்ற போது நான் கையும் மெய்யுமாகப் பிடித்தேன். சுவையான தின்பண்டமென அது நினைத்துக் கொண்டிருக்கிறது.''

''வாயு அடுப்புப் பெட்டியினுள் இவற்றை வைத்து மூடு. துருஷோக்கால் கண்டு பிடிக்க முடியாது, பெட்டியின் கதகதப்பில் சீக்கிரம் இவை உலர்ந்து விடும்.''

''வேண்டாம், அப்படி நினைத்துதான் முன்பு நான் செய்த வாணங்களை அடுப்புப் பெட்டியினுள் வைத்தேன். பிறகு அம்மா அதைத் திறந்து அடுப்பைப் பற்ற வைத்ததும் வாணங்கள் எரிந்து போயின. இவற்றை நான் அலமாரி மீது வைக்கிறேன்.''

அவன் ஒரு நாற்காலி மீதேறி ஒட்டுப் பலகையை அலமாரியின் மேல் வைத்தான்.

''எந்நேரமும் துருஷோக்கு என் சாமான்களைத் தூக்கிக்கொண்டு ஓடி விடுகிறது. முன்பு ஒரு தரம் எனது இடது கால் பூட்சை மறைத்து வைத்து விட்டது. எங்கெங்கு எல்லாமோ தேடிப் பார்த்தோம், கிடைக்கவில்லை. முடிவில் வலது கால் பூட்சைக் குப்பையில் எறிந்தோம். இனி அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? காணாமற் போன இடது கால் பூட்சு அதன் பிறகு கிடைத்தது, துருஷோக்கு அதைக் கொண்டு போய் அடுப்புக்கு அடியில் ஒளித்து வைத்திருந்தது. ஆனால் வலது கால் பூட்சை எறியாமல் வைத்திருந்தால் இப்போது இடது கால் பூட்சை எறிந்திருக்க வேண்டியதில்லை. ஆனால் முன்பே அதை எறிந்து விட்டோமாதலால், இதையும் கொண்டு போய் எறிய வேண்டியதாயிற்று. நன்றாயிருந்த ஒரு ஜோடி பூட்சு, ஒவ்வொன்றாய் இரண்டையும் குப்பையிலே எறிந்தோம்.''

''ஐயோ, நேரமாகி விட்டது! கோட்டை மாட்டிக் கொண்டு கிளம்பு சீக்கிரம்!'' என்று நான் கத்தினேன்.

மீஷா மேல்கோட்டையும் தொப்பியையும் எடுத்துப் போட்டுக் கொண்டான். கையில் ஒரு கோடரியுடன் நாங்கள் ரயில் நிலையத்துக்கு விரைந்தோம். எங்களுடைய ரயில் வண்டி புறப்பட்டுச் சென்றதும் நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்தோம். அடுத்த வண்டிக்காகக் காத்திருந்தோம், முடிவில் அது வந்து சேர்ந்தது. முடிவின்றி நெடு நேரம் நீடிப்பதாகத் தோன்றிய பயணத்துக்குப் பிற்பாடு கொரேல்கினோ வந்திறங்கினோம். நேரே வனத்துறை அலுவலகத்துக்குச் சென்றோம். அங்கே அவர் இரண்டு பிர் மரங்களை வெட்டியெடுத்துச் செல்ல அனுமதிச் சீட்டு எழுதிக் கொடுத்தார். வனத்தில் எப்பகுதியில் வெட்டிக் கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு அவர் காண்பித்தார்.

காட்டுக்குள் புகுந்து நாங்கள் அவர் காண்பித்த பகுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே நாற்புறத்திலும் பிர் மரங்களாய் இருந்தன. ஆனால் அவற்றில் ஒன்று கூட மீஷாவுக்குப் பிடிக்கவில்லை.

''என்னை நன்கறிந்தவன்தானே நீ'' என்றான் மீஷா. ''இங்கே வந்தபின் யாவற்றிலும் சிறந்த மரமாகப் பார்த்து எடுத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் இவ்வளவு தூரம் வந்ததில் அர்த்தமே இல்லை.''

இருவரும் தொடர்ந்து மேலும் மேலும் காட்டின் உட்பகுதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம்.

''இருட்டாகி விடும், சீக்கிரமாய் வேலையை முடித்துக் கொண்டு நாம் திரும்பியாக வேண்டும்'' என்றேன் நான்.

''நல்ல மரமாக ஒன்றுகூட கண்ணில் படவில்லையே, உள்ளே சென்று தேடினால்தான் கிடைக்கும்.''

''இதோ இந்த மரம் நன்றாய் இருக்கிறது.''

மீஷா அதைப் பரிசீலனை செய்தான். ''இது ஒன்றும் நன்றாய் இல்லை. பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது'' என்றான்.

''என்ன?''

''உயரம் போதாது. இது எனக்கு வேண்டாம்.''

அடுத்தபடி நாங்கள் வந்தடைந்த மற்றொரு நல்ல மரத்தைப் பார்த்துவிட்டு ''இது நொண்டி மரம்'' என்றான் மீஷா.

''நொண்டியா?''

''கால் எவ்வளவு கோணலாய் இருக்கிறது, பார்.''

''கால் எங்கே இருக்கிறது?''

''அடிமரத்தைச் சொல்கிறேன்.''

''அடிமரம் என்றால் அடிமரமென்றே சொல்லு.''

இன்னொரு நல்ல மரத்தை நாங்கள் வந்தடைந்தோம்.

''இது வழுக்கை'' என்ருன் மீஷா.

''பிர் மரம் வழுக்கையாவது எப்படி? உன் தலைதான் வழுக்கை!''

''நன்ருகப் பார், இந்த மரம் வழுக்கைதான். முடி இல்லை, அடிமரம்தான் இருக்கிறது. இது மரமல்ல, வெறுங் குச்சி.''

இப்படியே அவன் ஒவ்வொரு மரத்தையும் வேண்டாமென்று கூறிச் சென்ருன். ஒன்று வழுக்கை, மற்ருென்று நொண்டி, மூன்ருவது ஒன்றிடம் வேறு ஏதோ ஒரு குறை என்று கூறிஞன்.

''நீ இப்படிச் செய்தால் மரங்களை வெட்டிக் கொண்டு இரவுக்கு முன்பு நாம் திரும்ப முடியாது'' என்று மீஷாவிடம் சொன்னேன்.

பிறகு நான் எனக்குப் பிடித்தமான ஒரு மரத்தைத் தேடிப் பிடித்தேன். அதை வெட்டியதும் கோடரியை மீஷாவிடம் தந்தேன்.

''சீக்கிரமாய் நீயும் ஒரு மரத்தை வெட்டிக் கொள். நேரமாகி விட்டது, நாம் வீட்டுக்குத் திரும்பியாக வேண்டும்'' என்றேன்.

காடு முழுதும் சென்று தேடுவதென உறுதி பூண்டு விட்டது போல் மீஷா தொடர்ந்து காட்டுக்குள் போய்க் கொண்டிருந்தான். நயமாகச் சொல்லிப் பார்த்தேன், பிறகு அவனை ஏசினேன், ஆனல் பயனில்லை. முடிவில் ஒரு மரம் நன்ருக இருப்பதாகச் சொல்லி அதை வெட்டிஞன். உடனே நாங்கள் அங்கிருந்து திரும்பி ரயில் நிலையத்தை நோக்கி நடந்தோம். நடந்தோம், நடந்தோம், அப்படியும் காடு முடிவதாக இல்லை.

''தப்பான திசையில் செல்கிருேமா, என்ன?'' என்று கேட்டான் மீஷா.

உடனே நாங்கள் எதிர்த் திசையில் நடக்கலாளுேம். நெடு நேரம் நடந்தும் காட்டை விட்டு வெளியே வர முடியவில்லை. இருட்டாகி வந்தது. இடப் புறம் திரும்பிச் சென்ருேம், பிறகு வலப் புறம் திரும்பிளுேம். வழி தெரியாமல் காட்டில் சிக்கிக் கொண்டு விட்டோம் என்பது தெரிந்தது.

''பார்த்தாயா? நீதான் காரணம், இருட்டிலே காட்டில் சிக்கிக் கொண்டு விட்டோம்'' என்றேன் நான்.

''சீக்கிரமாய் இருட்டி விட்டது, அதற்கு நாஞ காரணம்?''

''உனக்கு வேண்டிய மரத்தைத் தேர்வு செய்வதற்கு நீ எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டாய்? வீட்டில் எவ்வளவு நேரத்தை வீணக்கிஞய்? இரவு நாம் இங்கே காட்டிலேயேதான் தங்கியாக வேண்டும்.''

''அதெப்படிக் காட்டிலே தங்குவது? முடியாது, முடியாது!'' என்று மிரண்டு போய்க் கத்திஞன் மீஷா. ''பையன்களை வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்திருக்கிறேன். எப்படியாவது நாம் பாதையைக் கண்டுபிடித்தாக வேண்டும்.''

விரைவில் நன்ருக இருட்டி விட்டது. வானத்திலிருந்து வெண்ணிலா எங்களை உற்று நோக்கியது. கரிய அடிமரங்கள் பூத உருவங்களாக எங்களைச்

சுற்றிலும் மௌனமாய் நின்றிருந்தன. ஒவ்வொரு மரத்துக்குப் பின்னுலும் ஓநாய்கள் ஒளிந்து நிற்பது போல் தோன்றவே, நாங்கள் பயந்து போய் முன்னே செல்ல முடியாமல் நின்று விட்டோம்.

''அபயக் குரலெழுப்பிக் கூச்சலிட்டுப் பார்ப்போம்'' என்ருன் மீஷா.

''ஓகோ!'' என்று நாங்கள் கூச்சலிட்டோம்.

''ஓகோ!'' என்று காடு எதிரொலி எழுப்பியது.

''ஓகோ-கோ!'' என்று மேலும் பலமாய் நாங்கள் கூச்சலிட்டோம்.

''ஓகோ-கோ!'' என்று எதிரொலி கேட்டது.

''போதும், இனி கூச்சலிட வேண்டாம்'' என்ருன் மீஷா.

''ஏன்?''

''ஓநாய்கள் நமது குரலைக் கேட்டு இங்கே ஓடி வரக் கூடும்.''

''இங்கே ஓநாய்கள் இருப்பதாகத் தெரியவில்லை.''

''இருந்தால் என்ன செய்வது? வேகமாக நடப்பதுதான் நல்லது.''

''நாம் நேரே நடக்க வேண்டும், இல்லையேல் நம்மால் சாலையை அடைய முடியாது'' என்றேன் நான்.

மறுபடியும் நாங்கள் நடக்க ஆரம்பித்தோம். மீஷா திரும்பித் திரும்பி பின்புறம் பார்த்தவாறு நடந்தான்.

''நம்மிடம் துப்பாக்கி இல்லை, ஓநாய்கள் தாக்கினுல் என்ன செய்வது?'' என்று கேட்டான் மீஷா.

''கொள்ளிக் கட்டைகளை அவற்றின் மீது எறிவோம்'' என்றேன் நான்.

''கொள்ளிக் கட்டைகளுக்கு எங்கே போவது?''

''சொக்கப்பனை கொளுத்தலாம், அதிலிருந்து கொள்ளிக் கட்டைகள் கிடைக்கும்.''

''உன்னிடம் தீப்பெட்டி இருக்கிறதா?''

''இல்லையே.''

''மரத்தில் அவற்ருல் ஏற முடியுமா?''

''எவற்ருல்?''

''ஓநாய்களால்.''

''ஓநாய்களால் மரத்தில் ஏற முடியாது.''

''அப்படியானுல் நம்மை அவை தாக்கினுல் நாம் மரத்திலே ஏறி, பொழுது விடியும் வரை மேலே கிளையில் உட்கார்ந்திருக்கலாமே.''

''ஆளைப் பார்! இராப் பொழுது முழுதும் மரக் கிளையில் உட்கார்ந்திருக்க முடியாது.''

''ஏன் முடியாது?''

''குளிரில் விறைத்துப் போய் கீழே விழ வேண்டியதுதான்.''

''அப்படியொன்றும் குளிராய் இல்லை.''

''நடந்து கொண்டிருக்கிறோம், அதனால் குளிர் தெரியவில்லை. அசையாமல் கிளையில் உட்கார்ந்து பார், சற்று நேரத்துக்குள் விறைத்துப் போய் விடுவாய்.''

''ஏன் அசையாமல் உட்கார வேண்டுமாம்? கால்களை ஆட்டிக் கொண்டிருக்கலாமே'' என்றான் மீஷா.

''இராப் பொழுது முழுதும் கால்களை ஆட்டிக் கொண்டு மரக் கிளையில் உட்கார்ந்திருப்பாயா நீ? களைத்துப் போய் கீழே விழுந்து விடுவாய்.''

புதர்களுக்கு இடையே நாங்கள் சிரமப்பட்டு நடந்தோம். ஆங்காங்கே இடறிக்கொண்டு கனத்த வெண் பனியினுள் விழுந்து எழுந்தோம். அடியெடுத்து வைப்பது மேலும் மேலும் கடினமாகி வந்தது. நாங்கள் களைத்துப் போய் விட்டோம்.

''மரங்கள் வேண்டாம், விட்டொழித்து விடலாம்'' என்றேன்.

''முடியாது, இரவு கொண்டாட்டத்துக்காகப் பையன்கள் வருகிறார்கள். பிர் மரம் இல்லாமல் கொண்டாடுவது எப்படி?''

''வீட்டுக்கு நாம் திரும்பிப் போனாலே போதும்! பிர் மரங்கள் வேண்டாம் நமக்கு!''

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது'' என்றான் மீஷா. ''முறை வைத்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராகச் செல்வோம், முதலில் போகிறவன் வகுத்தளிக்கும் பாதையில் பின்னால் வருகிறவன் சிரமமின்றிச் செல்லலாம்.''

சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டோம். பிறகு மீஷா முன்னால் சென்றான், அவன் வகுத்திட்ட பாதையில் நான் பின்தொடர்ந்தேன். கொஞ்ச தூரம் நடந்ததும், மரத்தை ஒரு தோளிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதற்காக நான் நின்றேன். பிறகு எதிரே நான் பார்த்த போது மீஷா என் கண்ணில் படவில்லை. மாயமாய் எங்கோ மறைந்து விட்டான்!

''மீஷா'' என்று கத்தினேன்.

பதிலில்லை.

''மீஷா! நீ எங்கே இருக்கிறாய்?''

அப்போதும் பதிலில்லை.

மெல்ல அடி மேல் அடி வைத்து எச்சரிக்கையுடன் நடந்தேன். திடுமென ஆழமான பள்ளத்தின் விளிம்பை வந்தடைந்தேன். சரிவிலே வழுக்கி விழப் போன நான் சமாளித்துக் கொண்டு விளிம்பிலே நின்றேன். பள்ளத்தின் அடியில் கரிய நிழல் உருவம் அசைவது தெரிந்தது.

''மீஷா, நீயா அது?''

''ஆமாம், நான்தான், வழுக்கி விழுந்து விட்டேன்.''

''நான் கூப்பிட்டதற்கு நீ ஏன் பதிலளிக்காமல் வாயை மூடிக் கொண்டு இருந்தாய்?''

''நான் காலே காயப்படுத்திக் கொண்டுவிட்டேன். எப்படி என்ஞல் பதிலளிக்க முடியும்?''

நான் சரிவிலே இறங்கி கீழே போய்ச் சேர்ந்தேன். அங்கே ஒரு சாலே இருந்தது, அதன் நடுவில் மீஷா முழங்காலே தடவிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''என்ன ஆயிற்று உனக்கு?''

''வழுக்கி விழுந்ததில் கால் சுளுக்கிக் கொண்டது, முழங்கால் முட்டில் அடிபட்டு விட்டது.''

''வலிக்கிறதா?''

''வலி தாங்க முடியவில்லே. இங்கே நான் சற்று நேரம் உட்கார்ந்து இருந்தாக வேண்டும்.''

''சரி'' என்று சொல்லி, வெண்பனியில் அவனுக்குப் பக்கத்தில் நானும் உட்கார்ந்து கொண்டேன். உடம்பு சில்லிட்டுப் போகும் வரை இருவரும் அங்கே உட்கார்ந்திருந்தோம்.

''இப்படியே உட்கார்ந்திருந்தால் குளிரில் சாக வேண்டியதுதான்'' என்றேன் நான். ''எழுந்து இந்தச் சாலேயிலே நடப்போம், ரயில் நிலேயம், வனத்துறை அலுவலகம், அல்லது ஏதாவது ஒரு கிராமத்துக்கு இந்தச் சாலே போய்ச் சேர்ந்தாக வேண்டும். நாம் காட்டிலே உயிரை விடுவது சரியல்ல.''

மீஷா எழுந்து நிற்க முயற்சி செய்தான். முனகிக் கொண்டு மறுபடியும் உட்கார்ந்து விட்டான்.

''முடியவில்லே என்ஞல்'' என்ருன்.

''என்ன செய்யலாம்? சரி, உன்னே நான் முதுகில் தூக்கிச் செல்கிறேன்'' என்றேன்.

''என்னேத் தூக்க முடியாது உன்ஞல்.''

''முயற்சி செய்து பார்க்கிறேன்.''

பெரு முயற்சி செய்து அவன் எழுந்து முனகியவாறு மெல்ல என் முதுகில் ஏறிக் கொண்டான். கல்லேப் போல் அல்லவா கனமாய் இருந்தான்! முக்கிக் கொண்டு மெல்ல எழுந்து உடலேக் கவிழ்த்து மடக்கிக் கொண்டு நின்றேன்.

''சரி, புறப்படு'' என்ருன் மீஷா.

இரண்டு மூன்று அடியெடுத்து வைத்து நடந்தேன், அதற்குள் வழுக்கிக் கொண்டு விழுந்தேன்.

''ஐயோ, என்னேக் கொல்லவா விரும்புகிருய்?''

''வழுக்கி விட்டது.''

''உன்ஞல் முடியாத போது, ஏன் என்னேத் தூக்கிச் செல்வதாகச் சொன்ஞய்?''

''என் உயிரை வாங்குகிருய் நீ. முதலில் வீட்டில் நேரத்தை வீணுக்கினுய்; பிறகு மரத்தைத் தேர்வு செய்வதாகச் சொல்லி பொழுதைப் போக்கினுய்;

இப்பொழுது முழங்காலைக் காயப்படுத்திக் கொண்டு நடக்க முடியாமல் உட்கார்ந்திருக்கிறாய். உன்னால் இருவரும் இங்கே காட்டிலே சாகப் போகிறோம்.''

''நீ சாக வேண்டாம். தனியே வீட்டுக்குப் போய்ச் சேரு. நான்தான் யாவற்றுக்கும் காரணம். இங்கே வந்து மரம் வெட்டி செல்வோமென நான் தானே சொன்னேன்.''

''உன்னை இங்கே விட்டுவிட்டு எப்படிப் போவது நான்?''

''அதனால் என்ன? கால் வலி சரியாகும் வரை இங்கே காத்திருந்து விட்டு பிறகு தனியே புறப்பட்டு வந்து விடுவேன்.''

''போதும், வாயை மூடு! உன்னை விட்டுவிட்டு நான் எங்கேயும் போகப் போவதில்லை. இருவருமாகச் சேர்ந்து இங்கே வந்தோம், இருவருமாகச் சேர்ந்துதான் இங்கிருந்து திரும்ப வேண்டும். திரும்பிச் செல்வதற்கு நாம் ஏதாவது ஒரு வழி கண்டாக வேண்டும்.''

''என்ன வழி இருக்கிறது?''

''சறுக்கு ஊர்தி ஒன்று தயார் செய்வோம். நம்மிடம் கோடரி இருக்கிறதே.''

''கோடரியிலிருந்து சறுக்கு ஊர்திசெய்துவிட முடியுமா?''

''முட்டாள் மாதிரி பேசாதே. கோடரியால் மரத்தை வெட்டுவோம், மரத்துண்டுகளைச் சேர்த்துச் சறுக்கு ஊர்தி செய்வோம்.''

''ஆனால் நம்மிடம் ஆணி இல்லையே?''

''ஆமாம், ஆணி இல்லை. வேறு என்ன வழி என்று ஆலோசனை செய்வோம்'' என்றேன் நான்.

நான் ஆலோசிக்க முற்பட்டேன். மீஷா வெண்பனியிலே அமர்ந்திருந்தான். என்னுடையை பிர் மரத்தை அவனிடம் இழுத்து வந்து போட்டுவிட்டு நான் சொன்னேன்:

''நீ இந்த மரத்தின் மீது உட்கார்ந்து கொள், இல்லையேல் உனக்குச் சளிப்பு பிடித்துக் கொள்ளும்.''

அவன் மெல்ல நகர்ந்து மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டான். அப்போது திடுமென எனக்கு ஒரு யோசனை உதித்தது.

''மீஷா, இந்த மரத்தையே சறுக்கு ஊர்தியாகப் பயன்படுத்திக் கொள்ளலாமே'' என்றேன்.

''அது எப்படி?''

''நன்றாகப் பிடித்துக் கொண்டு இப்படியே அசையாமல் உட்கார்ந்து கொள், நான் மரத்தைப் பிடித்து இழுத்துச் செல்கிறேன்.''

நான் அடிமரத்தைப் பிடித்துக் கொண்டு இழுத்தேன். அருமையான யோசனை! சாலையில் உறைந்து இறுகியிருந்த பனியில் மரம் இலாவகமாக வழுக்கிச் சென்றது.

''பிரமாதம்!'' என்றேன் நான். ''இந்தா, கோடரியை நீ வைத்துக் கொள்.''

கோடரியை அவனிடம் தந்தேன். இரு கைகளாலும் நான் மரத்தை இழுத்துக் கொண்டு ஓடினேன். விரைவில் நாங்கள் காட்டிலிருந்து வெளியே வந்து சேர்ந்தோம். தொலைவில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

''மீஷா, அதோ தெரிகிறது ரயில் நிலையம்!''

ரயில் வண்டி வரும் சப்தம் கேட்டது.

''சீக்கிரம்! ரயிலை நாம் தவற விட்டுவிடக் கூடாது!'' என்று கத்தினான் மீஷா.

நான் முழு பலத்தையும் பிரயோகித்து இழுத்துக் கொண்டு ஓடினேன்.

''இன்னும் கொஞ்ச தூரம்தான், ஓடு வேகமாய்'' என்றான் மீஷா.

வண்டி ரயில் நிலையத்தில் வந்து நின்ற சில விநாடிகளுக்கு எல்லாம் நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்து விட்டோம். உடனே நான் மீஷாவுக்குக் கை கொடுத்து உதவினேன். நொண்டிக் கொண்டு அவன் வண்டியினுள் ஏறினான். மரத்தை இழுத்துக் கொண்டு நானும் உள்ளே ஏறியபோது வண்டி நகர ஆரம்பித்து விட்டது. பெட்டியினுள் பிர் மரத்தைக் கொண்டு வருகிறாயே என்று பயணிகள் முணுமுணுத்துக் கொண்டனர்.

''இவ்வளவு திராபையான மரம் எங்கே கிடைத்தது உங்களுக்கு?'' என்று அவர்களில் ஒருவர் கேட்டார்.

காட்டில் நாங்கள் சிக்கிக் கொண்டு தவித்ததைக் கேட்டதும் அவர்கள் எல்லாருக்கும் எங்களிடம் அனுதாபம் ஏற்பட்டு விட்டது. மீஷாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஓர் அன்னை அவனுடைய புதைமிதியைக் கழற்றி அவன் முழங்கால் காயத்தைப் பார்வையிட்டார்.

''வெறும் சிராய்ப்புதான், பயப்பட வேண்டியதில்லை'' என்றார் அவர்.

''கால் முறிந்து விட்டது என்று அல்லவா நினைத்தேன்'' என்றான் மீஷா.

''பயப்படாதே நீ, உயிர் பிழைத்துக் கொண்டு விடுவாய்'' என்று யாரோ ஒருவர் கூறவே, எல்லாரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

மற்றோர் அன்னை எங்களுக்குப் பன் ரொட்டி தந்தார், மூன்றாவது ஒருவர் மிட்டாய் கொடுத்தார். இவற்றை நாங்கள் பெரிதும் பாராட்டினோம், ஏனென்றால் எங்களுக்கு நல்ல பசி.

''நம் இருவருக்குமாக ஒரே ஒரு மரம்தானே இருக்கிறது, என்ன செய்வது?'' என்று நான் மீஷாவைக் கேட்டேன்.

''இது ஒன்றும் பெரிய பிரச்சினையல்ல. இன்று இரவு மரம் என்னிடம் இருக்கட்டும், நாளைக்கு நீ எடுத்துக் கொள்ளலாம்.''

''நன்றாய் இருக்கிறதே இது! காட்டில் முழுத் தொலைவுக்கும் நான் மரத்தை இழுத்து வந்தேன், பிறகு உன்னை அதன் மேல் உட்கார வைத்து

இழுத்துக் கொண்டு ஓடி வந்தேன். முடிவில். புத்தாண்டு பிறக்கையில் எனக்கு மரம் கிடைக்காது என்கிறுயே!''

''இன்று இரவுக்கு மட்டும்தான் எனக்கு வேண்டுமெனக் கேட்கிறேன். பொழுது விடிந்ததும் உன்னிடம் கொடுத்து விடுகிறேன்.''

''நல்ல ஆளப்பா நீ! எல்லாரும் இன்று இரவு புத்தாண்டு கொண்டாடுவார்கள். என்னிடம் பிர் மரங்கூட இருக்காது!''

''இது தெரியவில்லையா உனக்கு? இன்று இரவு பையன்கள் வருகிறுர்கள். மரமில்லாமல் நான் என்ன செய்வேன், சொல்லு.''

''உன்னுடைய பூவாணத்தைக் கொளுத்திக் காட்டு, பிர் மரம் அவர்கள் பார்த்திராத ஓர் அதிசயம் அல்லவே.''

''பூவாணம் எரியுமென்று நான் நினைக்கவில்லை. இருபது தரத்துக்குக் குறையாமல் செய்து பார்த்துவிட்டேன், ஒரு தரங்கூட எரிந்து பொறி கிளம்பவில்லை. வீடு முழுவதும் புகை மண்டியதுதான் மிச்சம்.''

''இந்தத் தரம் நீ செய்திருப்பவை எரியலாமல்லவா?''

''எரியப் போவதில்லை, எனக்குத் தெரியும். பூவாணத்தைப் பற்றிய பேச்சையே நான் எடுக்கப் போவதில்லை. பையன்கள் அதைப் பற்றி மறந்து போயிருப்பார்கள்.''

''நான் பந்தயம் கட்டுகிறேன், யாரும் மறந்திருக்க மாட்டார்கள். நீ அப்படி பெருமை அடித்துக் கொண்டிருக்கக் கூடாது.''

''என்னிடம் மரம் இருந்தால் ஏதாவது சொல்லி சரிக்கட்டி விடுவேன். மரமும் இல்லாவிட்டால், அவர்களிடம் நான் என்ன சொல்ல முடியும்?''

''நான் ஒன்றும் மரத்தை உனக்குத் தரப் போவதில்லை. ஒரு புத்தாண்டுக்குக்கூட நான் மரம் வைக்காமல் இருந்ததில்லை.''

''நீ என் நண்பன், எந்நாளும் என்னை நீ சிக்கலில் தவிக்க விட்டதில்லை.''

''வாழ்வெல்லாம் உன்னை நான் சிக்கலிலிருந்து விடுவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்கிறுய்?''

''இல்லை, இதுதான் கடைசித் தரம். இதற்குப் பதில் என்னிடமிருந்து நீ எது வேண்டுமாளுலும் கேள், தருகிறேன். எனது பனிச் சறுக்கு மட்டை, சறுக்கு பூட்சு, ஸ்லைடு புரொஜக்டர் அல்லது அஞ்சல் தலை ஆல்பம் வேண்டுமா? என்னிடம் இருப்பவை எல்லாம் உனக்குத் தெரியும், எதை வேண்டுமாளுலும் எடுத்துக் கொள்.''

''சரி, அப்படியாளுல் உன்னுடைய துருஷோக்கை எனக்குத் தா'' என்றேன்.

மீஷா முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆலோசித்தபடி அமர்ந்திருந்தான், பதில் சொல்லவில்லை. பிறகு என் பக்கம் திரும்பி, துயரம் தோய்ந்த கண்களால் என்னைப் பார்த்தவாறு சொன்ஞன்:

''அதை நான் உனக்குத் தருவதற்கில்லை.''

''எது வேண்டுமாயினும் எடுத்துக் கொள் என்றல்லவா சொன்னாய்?''

''துருஷோக்கு என் நினைவில் இல்லை. என்னுடைய பொருள்களில்தான் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள் என்றேன். துருஷோக்கு பொருளல்ல, அது உயிருள்ளது.''

''அதனால் என்னவாம்? சாதாரண நாய்தானே, அது ஒன்றும் சாதி நாயல்லவே.''

''அது சாதி நாயாக இல்லாதது அதன் குற்றமல்ல. அது என் மீது ஆசையாக இருக்கிறது. நான் வெளியே சென்று விட்டால் அது என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறது. நான் திரும்பி வந்ததும் மகிழ்ச்சியடைந்து வாலை ஆட்டுகிறது. என்ன நடந்தாலும் நடக்கட்டும், நான் கவலைப்படப் போவதில்லை. பையன்கள் என்னைக் கலாட்டா செய்யட்டும், பரவாயில்லை. ஆனால் நான் ஒருபோதும் எனது துருஷோக்கை விற்கமாட்டேன். நீ ஒரு டன் தங்கம் கொடுப்பதானாலும் சரி, துருஷோக்கை நான் விட்டுப் பிரிய மாட்டேன்.''

''சரி, மரத்தை உனக்கு இனமாகவே தருகிறேன், எடுத்துக் கொள்.''

''இனமாக எதற்காகத் தருகிறாய்? என்னிடமிருக்கும் பொருள்களில் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள் என்று சொன்னேனே. எனது ஸ்லைடு புரொஜக்டரையும் அதைச் சேர்ந்த எல்லா ஸ்லைடுகளையும் எடுத்துக் கொள். உனக்கு அது மாதிரி ஒன்று வாங்க வேண்டுமென்று நெடுநாளாய் சொல்லி வரவில்லையா நீ?''

''அதெல்லாம் எனக்கு வேண்டாம், மரத்தை நீ சும்மாவே எடுத்துக் கொள்.''

''என்ன பாடுபட்டு மரத்தைக் கொண்டு வந்திருக்கிறாய்; சும்மாவே தருகிறேன் என்கிறாயே, ஏன்?''

''அதனாலென்ன? மரத்துக்குப் பதில் எனக்கு எதுவும் வேண்டாம்.''

''மரத்தை நான் இனமாக வாங்கிக் கொள்ள விரும்பவில்லை.''

''வெறும் இனமல்ல அது. நமது நட்பினைக் கருதி அதை உனக்குத் தருகிறேன், அதனால் மகிழ்ச்சியுடன் நீ வாங்கிக் கொள்ள வேண்டும். நமது நட்பு எந்த புரொஜக்டரையும்விட முக்கியமானது. இந்த பிர் மரம் நம் இருவருக்கும் பொதுவானதாக இருக்கட்டும்.''

நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில் ரயில் வண்டி எங்கள் நிலையத்தில் வந்து நின்றது. மிகவும் சீக்கிரமாகவே நாங்கள் வந்துவிட்டதாக நினைத்தோம். மீஷா இன்னமும் கொஞ்சம் நொண்டிக் கொண்டுதான் வண்டியிலிருந்து இறங்கினான், ஆனால் முழங்கால் முன்பு போல் இப்போது அவனுக்கு வலிக்கவில்லை.



முதலில் நான் எனது மாடிக்குச் சென்று நல்லபடியாகவே இருக்கிறேன் என்று என் அம்மாவிடம் சொன்னேன். பிறகு கீழே இறங்கி மீஷாவின் வீட்டுக்கு ஓடினேன்—எங்களுடைய பிர் மரத்தை அலங்கரிப்பதற்காக.

அதற்குள் மீஷா அதை அறையின் நடுவில் பொருத்தி வைத்திருந்தான். பட்டை உரிந்து போன இடங்களில் பச்சைக் காகிதத்தை ஒட்டிக் கொண்டிருந்தான். நாங்கள் அலங்கார வேலைகள் யாவற்றையும் செய்து முடிப்பதற்குள் பையன்கள் வர ஆரம்பித்து விட்டார்கள்.

''என்ன இது? எங்களை வரச் சொல்லி அழைத்து விட்டு, இன்னும் மரத்தை அலங்கரித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கலாமா?'' என்று அவர்கள் கேட்டனர்.

காட்டில் நடந்தவற்றை நாங்கள் அவர்களிடம் விவரமாகச் சொன்னோம். மீஷா தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், கொஞ்சம் சொந்த கதையும் சேர்த்துக் கொண்டான். காட்டில் எங்களை ஓநாய்கள் விரட்டிக் கொண்டு ஓடி வந்தன, அவற்றிடமிருந்து தப்புவதற்காக நாங்கள் மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்திருந்தோம் என்றான். அவன் கூறியதை யாரும் நம்ப வில்லை. எல்லாரும் பலக்கச் சிரித்து அவனைக் கேலி செய்தார்கள். அவர்களை நம்ப வைப்பதற்காக மீஷா எவ்வளவோ முயன்றும் பயனில்லாமற் போகவே, தோள்களை உலுக்கிக் கொண்டு அவனும் ஏனையோருடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

மீஷாவின் பெற்றோர் புத்தாண்டு விழா கொண்டாடுவதற்காகப் பக்கத்து வீட்டிற்குச் சென்றனர். அவன் அம்மா எங்களுக்காக பழக் கேக்கும், சுவை யான பல தின்பண்டங்களும் செய்து வைத்திருந்தார். மகிழ்ச்சி பொங்க கொண்டாடும்படி எங்களிடம் சொல்லிவிட்டு அவர் புறப்பட்டுச் சென்றார்.

சிறுவர்கள் தனியே விடப்பட்டதும் யாருக்கும் தலை கால் புரியவில்லை. அறை அமர்க்களமாகி விட்டது. நாங்கள் சிரித்த சிரிப்பிலும் எழுப்பிய கூச் சலிலும் கூரைத் தளமே தகர்ந்து விழுந்துவிடும் போலாகி விட்டது. யாவரை யும்விட மீஷாதான் அதிகமாகக் கூச்சல் போட்டான். ஏன் அப்படி அவன் களேபரம் செய்தான் என்று எனக்குப் புரிந்தது. பூவாணத்தைப் பற்றி யாருக் கும் நினைவு வந்து விடுமோ என்று அவன் அஞ்சினான். ஆகவே புதுப் புது விளையாட்டுகளாய் ஆலோசித்து அவன் கூத்தடித்துக் கொண்டிருந்தான்.

பிறகு நாங்கள் பிர் மரத்தின் வண்ண மின் விளக்குகளை எரிய விட்டோம். மணி பன்னிரண்டு அடித்தது.

''இன்பப் புத்தாண்டு!'' என்று மீஷா கூச்சலிட்டான்.

''இன்பப் புத்தாண்டு!'' என்று எல்லாருமாகச் சேர்ந்து கூவினோம்.

யாவும் நல்லபடியாகவே முடிவுற்றுவிட்டதாக நினைத்துக் கொண்டு மீஷா கத்தினான்:



''எல்லாரும் உட்காருங்கள்! கேக்கும் தேநீரும் சாப்பிடலாம்.''

''பூவாணம் எங்கே?'' என்று யாரோ ஒரு பையன் கேட்டான்.

''ஓ... பூவாணம் தயாராகவில்லை.''

''பூவாணம் எரித்துக் காட்டப் போவதாகச் சொல்லித்தானே எங்களை அழைத்தாய்? பொய்யா சொன்னாய் நீ?''

''பொய் சொல்லவில்லை. பூவாணம் என்னிடம் இருக்கிறது. ஆனால் ஈரமாய் இருக்கிறது, காயவில்லை.''

''எங்கே எடு பார்க்கலாம். ஒருவேளை இதற்குள் காய்ந்திருந்தாலும் இருக்கும்.''

விருப்பமில்லாமலே மீஷா நாற்காலி மீது ஏறினான். சுருட்டுகளைப் போ லிருந்த அவை நன்றாய் உலர்ந்து கெட்டியாக இருந்தன.

''பார்த்தாயா? நன்றாய் உலர்ந்து விட்டன! எங்களை ஏன் ஏமாற்று கிறாய்?'' என்று பையன்கள் கூச்சலிட்டனர்.

''பார்ப்பதற்கு உலர்ந்துவிட்ட மாதிரி இருக்கின்றன, உண்மையில் உலர வில்லை. இவற்றைக் கொளுத்தி எரியவிட முடியாது'' என்றான் மீஷா.

''எரியவிட்டுப் பார்ப்போம்.''

பையன்கள் அந்தச் சுருட்டுகளை அவனிடமிருந்து பிடுங்கிக் கம்பிகளைச் சேர்த்து இணைத்துத் தலைகீழே பிர் மரத்தில் கட்டித் தொங்க விட்டனர்.

''கொஞ்சம் பொறுங்கள்!'' மீஷா மன்றாடினான். ''முதலில் ஒன்றை மட்டும் எரியவிட்டுப் பார்ப்போம்.''

ஆனால் அதை யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒருவன் தீப் பெட்டியை எடுத்து வந்தான். எல்லாச் சுருட்டுகளையும் அவர்கள் ஒரே நேரத் தில் கொளுத்தி விட்டனர். அறையினுள் பாம்புகள் சீறுவது போல் உஸ் ஸென்று பெருஞ் சப்தம் எழுந்தது. எல்லாரும் சிதறி ஓடினர். திடுமெனப் பூ வாணங்கள் வெடித்தன, உடனே வண்ணத் தீப்பொறிகள் பீறிட்டெழுந்தன. வாண வேடிக்கை நடைபெறுவது போல் இருந்தது. இன்னுங்கூட சிறப்பாக இருந்ததெனச் சொல்லலாம். எரிமலை வெடித்து நெருப்பைக் கக்குவது போல் இருந்தது. வண்ணப் பொறிகளின் பிரகாசத்தில் கண் கூசியது. நாங்கள் பரவசமடைந்தவர்களாய்ப் பார்த்துக் கொண்டு நின்றோம்.

கடைசிப் பொறியும் பளிச்சிட்டு விட்டு அணைந்தது. அறை முழுதும் காரமான புகை நிறைந்து விட்டது. நாங்கள் தும்மினோம், இருமினோம், கண் களைக் கசக்கிக் கொண்டோம். பிறகு எல்லாருமாக முன்னறைக்கு ஓடினோம். புகை அங்கும் எங்களை விரட்டிக் கொண்டு வந்தது. பையன்கள் அவசரமா கக் கோட்டையும் தொப்பியையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

''போகாதீர்கள்! தேநீரும் கேக்கும் சாப்பிட வேண்டும்'' என்று மீஷா கத்தினான்.

ஆனல் யாரும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கோட்டை மாட்டிக் கொண்டு எல்லாரும் வெளியே ஓடினர்கள். மீஷா என் கையைப் பற்றிக் கொண்டான்.

''நீயாவது தங்கியிரு! என் நண்பன் நீ. இருவருமாகச் சேர்ந்து தேநீரும் கேக்கும் சாப்பிடுவோம்'' என்ருன்.

மீஷாவும் நானும் மட்டும்தான் வீட்டினுள் எஞ்சியிருந்தோம். புகை சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. இன்னமும் அறைக்குள் செல்ல முடியவில்லை. மீஷா ஈரக் கைக்குட்டையை முகத்தில் கட்டிக் கொண்டு அறைக்குள் புகுந்து மேசை மீதிருந்த கேக்கை அவசரமாக எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் ஓடி வந்தான்.

கெட்டிலில் தண்ணீர் கொதித்ததும் இருவரும் தேநீரும் கேக்கும் சாப்பிடுவதற்காக உட்கார்ந்தோம்.

சுவையான பழக் கேக்கு அது. ஆனல் கந்தகப் புகையின் வீச்சம் அதில் கடுமையாக வீசியது. நாங்கள் அதைப் பொருட்படுத்தாமலே பாதிக் கேக்கை சாப்பிட்டுவிட்டு, மற்ருெரு பாதியை துருஷோக்கிடம் கொடுத்தோம்.

உல்லாசக் குடும்பம்

(புத்தகத்திலிருந்து சில பக்கங்கள்)

வழி காணுதல்

அன்று இரவு என்னால் தூங்க முடியவில்லை. கண்கள் விரியத் திறந்திருக்க, படுக்கையில் படுத்துக்கொண்டு அடைகாப்புப் பொறியைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தேன். பழைய மண்ணெண்ணெய் விளக்கை நாங்கள் உபயோகித்துக் கொள்ள அனுமதிக்கும்படி அம்மாவிடம் கேட்டுப் பார்க்கலாமென முதலில் நினைத்தேன். ஆனால் விளக்கைக் கொளுத்தி நாங்கள் எதுவும் செய்ய அம்மாவிடமிருந்து அனுமதி கிடைக்காதென்று எனக்குத் தெரியும். தீ பிடித்துக் கொள்ளுமென்று அம்மாவுக்கு பயம். அதனால் தீப்பெட்டியைக் கூட அம்மா என் கண்ணில் படாதபடி எங்காவது ஒளித்து வைப்பது வழக்கம். மீஷாவின் அம்மாவுங்கூட விளக்கை ஒளித்து வைத்திருந்தார், ஒருபோதும் அவர் அதை எங்களுக்குத் தரமாட்டார். என்ன செய்யலாமென்று நினைத்தபடி நான் தூங்க முடியாமல் படுத்திருந்தேன்.

திடுமென எனக்கு ஓர் எண்ணம் உதித்தது. மின்விளக்கின் பல்பினுடைய வெப்பத்தைக் கொண்டு அடைகாப்புப் பொறியினுள் நீரைச் சூடாக்கலாமே என்று நினைத்தேன். படுக்கையிலிருந்து எழுந்து மேசை விளக்கைப் போட்டு, பல்பின் மீது விரலை வைத்து அது போதிய அளவு வெப்பம் வெளியிடுகிறதா என்று பார்த்தேன். சில விநாடிகளில் பல்பு சூடாகிவிட்டது. அதன் மேல் விரலை வைத்திருக்க முடியவில்லை. சுவரிலிருந்த வெப்பமானியை எடுத்து பல்பின் மேல் அதன் முனையை வைத்தேன். பாதரசம் வேகமாக உயர்ந்து விரைவில் வெப்பமானியின் உச்சிக் கோட்டுக்கும் மேலே சென்றுவிட்டது. மின் விளக்கு மிகுதியாகவே வெப்பம் வெளியிடுகிறது, நான் நினைத்தது சரிதான் என்பது தெரிந்தது.

மறு நாள் எனது திட்டத்தை மீஷாவிடம் சொன்னேன். பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியதும், அலமாரியிலிருந்த பழைய மேசை மின்விளக்கை அம்மாவிடமிருந்து கேட்டு வாங்கினேன். அதைக் கொண்டு நாங்கள் நீரைச் சுட வைக்க ஆரம்பித்தோம். அடைகாப்புப் பொறியின் நீர்க் குவளைக்கு அடியில் எண்ணெய் விளக்கு இருக்க வேண்டிய இடத்தில் மேசை மின்விளக்கை வைத்தோம். மீஷா புத்தகங்களை எடுத்து வந்து விளக்குக்கு அடியில் வைத்தடுக்கி விளக்கின் பல்பு நீர்க் குவளையை ஒட்டினாற் போல் அமையும்படிச் செய்தான்.

நான் பொத்தானை அழுத்தி விளக்கை எரியவிட்டேன். அடைகாப்புப் பொறியின் வெப்பமானியை உற்று நோக்கியவாறு இருவரும் காத்திருந்தோம். பாதரசம் முதலில் உயராமல் அப்படியே இருந்தது. எங்கள் முயற்சி பலிக்கப் போவதில்லை என்றே நினைத்தோம், அப்போது மின்விளக்கின் வெப்பத்தில் நீர் சூடாகி பாதரசம் மெல்ல உயர ஆரம்பித்தது.

அரைமணி நேரத்தில் அது 102 டிகிரிக்கு உயர்ந்து விட்டது. மீஷா மகிழ்ச்சி தாங்க மாட்டாமல் கை தட்டிக் கூவினான்:

''சபாஷ்! கோழிக் குஞ்சுக்கு வேண்டிய வெப்பநிலை இதுதான்! மின் விசை எவ்விதத்திலும் மண்ணெண்ணெய்க்குக் குறையாத சிறப்புடையதாய் இருக்கிறதே!''

''சந்தேகம் என்ன?'' என்றேன் நான். ''மின்விசை இன்னுங்கூட மேலானது, தீ பிடிக்கும் அபாயம் இல்லை இதனிடம்.''

இதற்கிடையில் வெப்பமானியில் பாதரசம் தொடர்ந்து உயர்ந்து சென்று 104 டிகிரியை அடைந்துவிட்டது.

''போதும், நில்!'' என்று கத்தினான் மீஷா.

''எப்படியாவது நாம் இதை நிறுத்தியாக வேண்டும்'' என்றேன்.

''எப்படி நிறுத்துவது? எண்ணெய் விளக்கில் திரியைக் கீழே இறக்கித் தீயைக் குறைக்கலாம்.''

''மின்விளக்கில் என்ன செய்வது?''

''உன் மின்விசை நமது வேலைக்கு ஒத்து வராது'' என்றான் மீஷா.

''ஏன் என் மின்விசை என்கிறாய்? எனக்கு மட்டுமின்றி உனக்கும் உரியதாயிற்றே.''

''மின்விளக்கின் பல்பால் நீரைச் சுட வைக்கும் அரிய ஆலோசனையை நீதானே சொன்னாய்! வெப்பமானியைப் பார், வெப்பநிலை 108 டிகிரிக்கு உயர்ந்துவிட்டது. இப்படியே உயர்ந்து சென்றால் முட்டைகள் வெந்துதான் போகும், குஞ்சு ஒன்றும் கிடைக்காது.''

''நான் ஒரு வழி சொல்கிறேன்! விளக்கின் உயரத்தைக் குறைப்போம்'' என்றேன் நான். ''நீர்க் குவளைக்கும் பல்புக்குமுள்ள இடைவெளி அதிகமானதும் நீரின் வெப்பநிலை குறைந்து போகும்.''

விளக்குக்கு அடியிலிருந்து புத்தகங்களில் மிகவும் தடியான புத்தகத்தை எடுத்துவிட்டு நாங்கள் காத்திருந்தோம். பாதரசம் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கி 102 டிகிரியில் வந்து அங்கேயே நிலைத்து நின்றது. நாங்கள் இருவரும் பெருமூச்சு விட்டுக் கொண்டோம்.

''யாவும் சரியானபடி அமைந்து விட்டன. இனி நாம் குஞ்சு பொரிக்க ஆரம்பிக்கலாம்'' என்றான் மீஷா.

அது எப்படி?

மூன்று வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலைப் பொழுது. சமையலறையில் எங்களுடைய மின்விளக்கு தொடர்ந்து வெப்பம் அளித்து, அடைகாப்புப் பொறியை வெதுவெதுப்பான நிலையிலேதான் வைத்திருந்தது. ஆனால் நாங்கள் அறவே நம்பிக்கை இழந்துவிட்டோம். மீஷா எங்கள் பொறியிடம் மண்டியிட்டு வாய் பேசாமல் அமர்ந்தபடி கையில் ஒரு முட்டையை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். முட்டையை உடைத்துப் பார்ப்பதா, இன்னும் இரண்டொரு நாள் பொறுத்திருக்கலாமா என்று எங்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. திடுமென மீஷா முழி பிதுங்க என்னை விழித்துப் பார்த்தான். என் முதுகுக்குப் பின்னால் ஏதோ பயங்கரம் நிகழ்வதாக நினைத்து வெடுக்கெனப் பின்பக்கம் திரும்பினேன். ஆனால் அங்கே ஒன்றுமில்லை. ஒன்றும் புரியாமல் நான் மீண்டும் மீஷாவின் பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

''இதைப் பாரேன்!'' என்று கூவி தன் கையிலிருந்த முட்டையை என்னிடம் கொடுத்தான்.

அந்த முட்டையில் எந்த அதிசயமும் இருப்பதாக முதலில் எனக்குப் படவில்லை. பிறகு கூர்ந்து நோக்கியதும் ஒரு பக்கத்தில் மெல்லிய வீறல் விட்டிருந்தது தெரிந்தது.

''என்ன இது? முட்டையை நீ எதிலாவது மோதியிருப்பாய்.''

இல்லையென்று அவன் தலையை ஆட்டினான்.

''குஞ்சு என்றா நினைக்கிறாய்?''

அவன் வாய் பேசாமல் தலையை ஆட்டினான்.

''நிச்சயம்தானா?''

''நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.''

வீறல் விட்டிருந்த இடத்தில் விரல் நகத்தால் மெல்ல முட்டை ஓட்டினைக் கீறிப் பார்த்தேன். இப்பொழுது அதில் சிறு ஓட்டை உண்டாகிவிட்டது. குஞ்சின் மஞ்சள் அலகு நொடிப் பொழுதுக்கு அந்த ஓட்டையில் தோன்றி மறைந்தது.

ஆனந்தப் பரவசத்தால் எங்களுக்கு வாயடைத்துப் போய்விட்டது. பூரிப்புற்று ஒருவரையொருவர் பார்த்தபடி சில வினாடிகள் உட்கார்ந்திருந்தோம்.

''விந்தையிலும் விந்தையேதான்!'' என்று கூச்சலிட்டுச் சிரித்தான் மீஷா. ''வா, ஓடுவோம்! முதலில் எங்கே ஓடலாம்?''

''எங்கே? எதற்காக ஓட வேண்டும்?''

''பையன்களிடம் சொல்ல வேண்டும்!''


மீஷா இதைச் சொல்லி முடிப்பதற்குள் கதவருகே ஓடிவிட்டான்.

''இரு, இரு! முட்டையைத் திருப்பி வை. அதை வெளியே எடுத்துச் செல்லக் கூடாது.''

அடைகாப்புப் பொறியினுள் முட்டையை அவன் திருப்பி வைத்தான். அந்த நேரத்தில் எங்கள் நண்பன் கோஸ்த்யா உள்ளே வந்தான்.

''ஒரு முட்டையில் குஞ்சு வந்துவிட்டது!'' என்று மீஷா ஆனந்தம் பொங்கும் குரலில் அறிவித்தான்.

''பொய் சொல்லாதே!''



''இல்லே, மெய்தான்!''

''எங்கே காட்டு பார்க்கலாம்.''

''இதோ பார்'' என்று கூறி மீஷா அடைகாப்புப் பொறியின் மூடியைத் திறந்தான். கோஸ்த்யா அதனுள் உற்று நோக்கினன்.

''குஞ்சு எங்கே? முட்டைகள்தான் இருக்கின்றன.''

வீறல் விழுந்த முட்டையில் அடையாளக் குறி இட மீஷா மறந்து விட்டான். அந்த முட்டையைத் தேடியெடுப்பதற்குள் பெரும் பாடாகிவிட்டது. முடிவில் அவன் அதைத் தேடிப் பிடித்துக் கோஸ்த்யாவிடம் காட்டினன்.

''ஓய்! மெய்யான குஞ்சு அல்லவா, ஓட்டை வழியே அலகைக் காட்டு கிறது!'' என்று கத்தினன் கோஸ்த்யா.

''மெய்யான குஞ்சுதான், சும்மா வேடிக்கை காட்டுகிறேம் என்ற நினைத் தாய்?''

''இதோ வருகிறேன்! மற்ற பையன்களேயும் கூப்பிட்டு வருகிறேன்!'' என்றன் கோஸ்த்யா.

''சீக்கிரமாகக் கூப்பிட்டு வா. இனி குஞ்சு பொரிக்குமென்று அவர்கள் நம்பவில்லே. மாலேப் பொழுது முழுதும் அவர்களில் யாரும் ஒரு தரங்கூட இங்கே வரவில்லே.''

''எல்லாரும் என் வீட்டில்தான் இருக்கிருர்கள். எலலாருமாய் இங்கு வந்து தொந்தரவு செய்யக் கூடாதென்றுதான் என்னேப் போய் பார்த்து விட்டு வரும்படி அனுப்பினர்கள்.''

கோஸ்த்யா அவசரமாய் வெளியே சென்று படிக்கட்டில் இறங்கி ஓடினன்.

''அம்மாவிடம் சொல்ல மறந்துவிட்டேன்'' என்று கத்திக் கொண்டு மீஷா அம்மாவைக் கூப்பிட்டு வருவதற்காகச் சென்றன்.

உடனே நான் முட்டையை எடுத்துக் கொண்டு, அதை என் அம்மாவிடம் காட்டுவதற்காக மாடிக்கு என் வீட்டுக்கு ஓடினேன். அம்மா அதைப் பார்த்து விட்டு குஞ்சு குளிரால் தாக்கப்படுமுன் முட்டையை அடைகாப்புப் பொறி யினுள் கொண்டு போய் வைக்கச் சொன்னர்.

நான் கீழே இறங்கி மீஷாவின் வீட்டுக்கு ஓடி வந்தேன். சமையலறையில் மீஷா ஆவேசம் வந்தவன் மாதிரி குதித்துக் கொண்டிருந்தான். அவன் அப்பாவும் அம்மாவும் சிரித்துக் கொண்டு நின்றிருந்தார்கள். நான் உள்ளே நுழைந்ததும், ''முட்டையை எங்கே வைத்தேன், தெரியுமா உனக்கு?'' என்று கத்தினன். ''எல்லா முட்டைகளேயும் எடுத்துப் பார்த்து விட்டேன், எங்கும் தேடிவிட்டேன், கிடைக்கவில்லே.''

''என்னிடம் இருக்கிறதே'' என்றேன் நான்.

''அது எப்படி நீ அதை இங்கிருந்து எடுத்துச் செல்லலாம்? இங்கே நான் ஓர் இடம் பாக்கியில்லாமல் தேடிக் கொண்டிருக்கிறேன்.''

''சப்தம் போட வேண்டாம்'' என்ருர் மீஷாவின் அம்மா. ''ஒரேயொரு முட்டைக்காக இப்படியா சப்தம் போடுவார்கள்.''

''இதைப் பாரேன்! சாமானிய முட்டை அல்ல இது'' என்ருன் மீஷா.

அவன் அம்மா அந்த முட்டையை வாங்கி ஓட்டை வழியே துருத்திக் கொண்டு தெரிந்த சிறிய அலகை வியப்புடன் பார்த்தார். அவன் அப்பாவும் அதைப் பார்த்தார்.

''அதிசயம்தான்'' என்று அவன் அப்பா வியந்து கொண்டார்.

''அதிசயம் ஒன்றும் இல்லை, இயற்கை நிகழ்ச்சிதான்'' என்ருன் மீஷா.

''நீதான் இயற்கை நிகழ்ச்சி'' என்று சொல்லிச் சிரித்தார் அவர். ''முட்டையிலிருந்து குஞ்சு தோன்றுவதில் அதிசயமில்லைதான். ஆனால் நீங்கள் இருவரும் இத்தனை நாட்களாய் இவ்வளவு பொறுமையாகக் காத்திருந்தது அதிசயம்தான். உங்களுடைய இந்த வேலையால் பயன் ஏதும் கிடைக்குமென நான் நினைக்கவேயில்லை.''

''பிறகு ஏன் எங்களிடம் ஒன்றும் சொல்லவில்லை நீங்கள்?''

''தெருவிலே ஓடுவதை விட இந்த வேலை உங்களுக்கு நல்லதுதானே என்று இருந்தேன்.''

அப்போது மீஷாவின் தங்கை மாயா சமையலறைக்குள் வந்தாள். கோழிக் குஞ்சு பற்றி நாங்கள் பேசியது காதில் விழுந்ததும் படுக்கையிலிருந்து அவள் எழுந்து ஓடி வந்து விட்டாள். முட்டையை அவளிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னேம். ஓட்டைக்குள் பார்க்க வேண்டுமென்று கண்ணை அதன் அருகே கொண்டு போய் அவள் உற்று நோக்கினுள். சரியாக அந்த நேரத்தில் குஞ்சு ஓட்டை வழியே தனது அலகைத் துருத்திக் காட்டியது.

''அலகால் என்னைக் குத்தப் பார்க்கிறதே!'' என்று கூவினுள் மாயா. ''முட்டைக்குள்ளிருந்து இன்னும் வெளியே வரவில்லை, அதற்குள் சண்டைக்கு வருவதைப் பாரேன்!''

''குஞ்சிடம் போய் நீ கத்தாதே'' என்று சொல்லி, மீஷா அவளிடமிருந்து முட்டையை வாங்கி அடைக்காப்புப் பொறியினுள் வைத்தான்.

பிறகு ஒரு நிமிடத்துக்கு எல்லாம் வெளியே பலரும் தடதடவென ஓடி வரும் சத்தம் கேட்டது. எங்கள் நண்பர்கள் எல்லாரும் சமையலறையினுள் வந்து குவிந்துவிட்டார்கள். மீண்டும் முட்டையை வெளியே எடுத்து அவர்களிடம் தந்தோம். ஒவ்வொருவரும் ஓட்டை வழியே முட்டையினுள் பார்க்க விரும்பினர்.

''பார்த்தது போதும் திருப்பிக் கொடுங்கள்! அடைகாப்புப் பொறியினுள் முட்டையைத் திருப்பி வைக்க வேண்டும், இல்லையேல் குஞ்சு குளிரால் தாக்கப்பட்டு விடும்'' என்று மீஷா அவர்களிடம் சொன்னுன்.

ஆனால் யாரும் இதைக் கேட்பதாக இல்லை. முடிவில் நாங்கள் முட்டையை அவர்களிடமிருந்து பிடுங்கிப் பொறியினுள் வைத்தோம்.

"வேறு எந்த முட்டையிலாவது வீறல் விட்டிருக்கிறதா?" என்று கேட்டான் வீத்யா.

ஒவ்வொரு முட்டையாய் எடுத்துப் பார்த்தோம், வேறு எதிலும் வீறல் இல்லை.

"இதுவரை ஐந்தாம் எண் முட்டை ஒன்றில் மட்டுமே வீறல் ஏற்பட்டிருக்கிறது" என்றான் மீஷா.

"பிற முட்டைகளிலும் இதே போல் குஞ்சு வரவே செய்யும்" என்றான் கோஸ்த்யா.

"இனி பிற முட்டைகளில் குஞ்சு பொரியாவிட்டாலும் பாதகமில்லை" என்றான் மீஷா, வெற்றிக் களிப்பு அவன் முகத்தில் பளிச்சிட்டது. "இந்த ஒரு குஞ்சே போதும் எனக்கு. எங்கள் முயற்சி வெற்றியடைந்து விட்டது என்பதற்கு இந்த ஒரு குஞ்சு போதும்!"

"முட்டை ஓட்டை உடைத்துக் குஞ்சு வெளியே வர அதற்கு நாம் உதவி புரியலாமே" என்றான் சேன்யா.

"உள்ளே குஞ்சு ஒடுங்கிக் கொண்டு இருக்கும்."

"ஓட்டை நாம் உடைக்கலாகாது" என்று மீஷா கண்டிப்பு தொனிக்கக் கூறினான். "குஞ்சின் தோல் மிகவும் மிருதுவானது. ஓடு குத்தி அதைக் காயப் படுத்திவிடும்."

முட்டையை உடைத்துக் கொண்டு குஞ்சு வெளியே வருவதைப் பார்க்க வேண்டுமென்று எல்லாப் பையன்களும் காத்திருந்தனர். ஆனால் குஞ்சு வெளியே வருவதாகத் தெரியவில்லை. நேரமாகிவிடவே, அவர்கள் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர்.

"கவலைப்படாதீர்கள், ஏனைய முட்டைகளிலிருந்தும் குஞ்சு வெளிவரும், அப்போது நீங்கள் பார்க்கலாம்" என்று சொல்லி மீஷா அவர்களை வழியனுப்பி வைத்தான்.

பையன்கள் போய்ச் சேர்ந்ததும் மீஷா மீண்டும் ஒவ்வொரு முட்டையாக எடுத்துக் கவனமாகப் பரிசீலனை செய்தான். இன்னொரு முட்டையிலும் வீறல் விட்டிருக்கக் கண்டான்.

"இதைப் பாரேன்! பதினொன்றாம் முட்டையிலும் குஞ்சு வரப் போகிறது" என்று கூவினான் அவன்.

நான் அந்த முட்டையைப் பார்த்தேன், அதிலும் வீறல் விட்டிருந்தது.

"அடாடா, பையன்கள் போய் விட்டார்களே!" என்றேன் நான். "நேரமாகிவிட்டது. இனி அவர்களைத் திருப்பிக் கூப்பிட முடியாது."

''அட பாவமே! போகட்டும் போ, நாளைக்குக் குஞ்சுகள் வெளியே வந்து விடும், அப்போது அவர்கள் வந்து பார்க்கட்டும்'' என்றான் மீஷா.

பூரிப்புற்றவர்களாய் நாங்கள் இருவரும் அடைகாப்புப் பொறிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தோம்.

''நம்மைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் யாரும் இருக்கமாட்டார்கள்'' என்று மகிழ்ந்து கொண்டான் மீஷா.

நள்ளிரவு ஆகிவிட்டது. எங்கும் நிசப்தமாய் இருந்தது, எல்லாரும் தூங்கிவிட்டனர், ஆனால் கொஞ்சங்கூட தூக்கக் கலக்கமின்றி நாங்கள் காத்திருந்தோம்.

சுமார் இரண்டு மணிக்கு எட்டாவது, பத்தாவது எண் முட்டைகளில் வீறல் இருக்கக் கண்டோம். அடுத்த தரம் நாங்கள் அடைகாப்புப் பொறியினுள் பார்த்த போது எங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. ஓட்டை உடைத்து வெளியே வந்துவிட்ட சின்னஞ் சிறு குஞ்சு ஒன்று முட்டைகளுக்கு இடையே துள்ளித் துடித்துக் கொண்டிருந்தது. எழுந்து நிற்க முடியாமல் விழுந்து கொண்டிருந்தது.

பரபரப்பால் எனக்கு நெஞ்சு துடித்தது. குஞ்சைக் கையில் எடுத்துப் பார்த்தேன். இன்னமும் அது ஈரமாகவே, பார்ப்பதற்குப் பரிதாபமாய் அலங்கோலமாக இருந்தது. இறகுகளுக்குப் பதில் பஞ்சு போன்ற சென்னிற முடிகளே காணப்பட்டன, அதன் சிவந்த சவ்வு போன்ற தோலில் இவை ஒட்டிக் கொண்டிருந்தன. வீட்டிலே நாங்கள் தயாரித்து வைத்திருந்த ஈரடுக்கு வென்னீர்ச் சட்டியின் மூடியைத் திறந்து, கதகதப்பான மேலடுக்கினுள் குஞ்சை ஈரம் காய்வதற்காக வைத்தேன். உடைந்த முட்டை ஓட்டின் இரு துண்டுகளையும் மீஷா அடைகாப்புப் பொறியிலிருந்து வெளியே எடுத்தான்.

''அதிசயம்தான், முட்டை ஓட்டுக்குள் இந்தக் குறுகலான இடத்தில் இவ்வளவு பெரிய குஞ்சு எப்படித்தான் இருக்க முடிந்ததோ'' என்று மீஷா வியந்து கொண்டான்.

குஞ்சு அடைந்திருந்து வெளியே வந்த அந்த ஓட்டுடன் ஒப்பிடுகையில் குஞ்சு மிகப் பெரிதாய் இருப்பதாகவே தோன்றியது. கால்களை உடலுடன் அணைத்து ஒட்டி வைத்துத் தலையை பக்கவாட்டில் திருப்பி அழுத்திக் குஞ்சு சுருட்டி மடக்கிக் கொண்டு அந்த ஓட்டுக்குள் இருந்திருக்க வேண்டும். ஓட்டிலிருந்து வெளிப்பட்டபின் கழுத்தை உயர்த்திக் கால்களை நீட்டி விரித்ததும் குஞ்சு பெரிதாகத் தோன்றியது.

உடைந்த முட்டை ஓட்டின் இரு துண்டுகளையும் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த மீஷா திடுமெனக் கூச்சலிட்டான்:

''இது வேறொரு குஞ்சு!''

''அதெப்படி வேறொன்று?''

''முதலாவது குஞ்சு அல்ல இது. முதலில் வீறல் விட்டது 5ஆம் எண் முட்டை. இந்தக் குஞ்சு 11ஆவது எண் முட்டையிலிருந்து வெளிவந்திருக்கிறது'' என்று சொல்லி முட்டை ஓட்டில் இருந்த எண்ணை என்னிடம் காட்டினுன் அவன்.

அடைகாப்புப் பொறியினுள் நாங்கள் பார்த்தோம். 5ஆம் எண் முட்டை, முன்பு நாங்கள் அதை வைத்திருந்த அதே நிலேயில் இருக்கக் கண்டோம்.

''அது எப்படி? இந்த குஞ்சுதான் யாவற்றுக்கும் முதலாய் ஓட்டில் வீறலே உண்டாக்கியது, ஆனல் இன்னும் இது வெளியே வர விருப்பமின்றி அடைந்திருக்கிறதே'' என்றேன் நான்.

''ஓட்டை உடைப்பதற்கு இன்னும் அது போதிய பலம் பெறவில்லே'' என்முன் மீஷா. ''தக்க பலம் பெறும் வரை உள்ளேயே இருக்கட்டும்.''

பிறந்த விழா

அடுத்த நாள் மாலேக்குள் எங்களுடைய வென்னீர்ச் சட்டியின் மேலடுக்கில் நாங்கள் பத்து குஞ்சுகளே வைத்திருந்தோம். 5ஆம் எண் முட்டையின் குஞ்சுதான் யாவற்றுக்கும் கடைசியாக வெளியே வந்தது. கடைசி வரை அது வெளியே வருவதாய் இல்லே. முட்டையிலிருந்த வீறலே நாங்கள் பெரிதாக்கி, அதை வெளியே வரச் செய்தோம். நாங்கள் உதவியிராவிடில் அது வெளியே வந்தே இருக்காது. மற்ற குஞ்சுகளேப் போல் அது தெம்பாய் இல்லே, சிறியதாய் இருந்தது—அதிக நாட்களுக்கு முட்டையினுள் அது அடைந்திருந்தன் விளேவு போலும்,

மாலேப் பொழுது முடிவடைந்த போது இரண்டே இரண்டு முட்டைகள் தான் எங்கள் பொறியினுள் எஞ்சியிருந்தன. வீறலுக்கான அறிகுறி ஏதுமின்றி பெட்டியின் மையத்தில் அவை தனியே கிடந்தன, பார்க்கப் பாவமாக இருந்தது. பொறியை நாங்கள் தொடர்ந்து கதகதப்பாக்கிக் கொண்டிருந்தோம். மறுநாள் காலேயிலும் அந்த முட்டைகளில் எந்த மாற்றமும் தென்படவில்லே. எல்லாக் குஞ்சுகளும் வென்னீர்ச் சட்டியின் மேலடுக்கில் இரவை இனிய முறையில் கழித்தன.

காலேயில் நாங்கள் இந்தக் குஞ்சுகளே எடுத்துத் தரையில் விட்டோம். பொசுபொசுப்பான சிறிய மஞ்சள் உருண்டைகளாக இருந்த இவை கீச்சிட்டுக் கத்தின. பிரகாசமான வெளிச்சத்தில் கண்களே சிமிட்டிக் கொண்டன, சில குஞ்சுகள் தமது சின்னஞ் சிறு கால்களே ஊன்றி நிமிர்ந்து நின்றன, ஏனேய சில குஞ்சுகள் நிற்க முடியாமல் ஆடி விழுந்து கொண்டிருந்தன. அடிக்கு ஒரு

தரம் விழுந்து எழுந்து சில குஞ்சுகள் எங்களிடமிருந்து விலகி ஓட முயன்றன. ஒன்றிரண்டு தரையிலிருந்த கறுப்புப் புள்ளிகளைக் கொத்திக் கொண்டு நின்றன.

''குஞ்சுகளுக்குப் பசிக்கிறது'' என்முன் மீஷா.

நாங்கள் ஒரு முட்டையை வேக வைத்து, முட்கரண்டியால் தூளாக்கித் தரையில் தூவினேம். உணவு கிடைத்திருக்கிறது, தாம் இதைக் கொத்தித் தின்ன வேண்டுமென்று குஞ்சுகளுக்குத் தெரியவில்லை. அவற்றின் அலகுக்கு அருகே முட்டைத் தூளைக் காட்டினேம், அப்போதும் அவை தின்னவில்லை. அந்த நேரத்தில் மீஷாவின் அம்மா சமையலறைக்குள் வந்தார்.

''குஞ்சுகள் கொத்தித் தின்னவில்லையே!'' என்று மீஷா அவரிடம் சொன்ஞன்.

''அவற்றுக்குத் தெரியவில்லை, நீ கற்றுத் தர வேண்டும்.''

''எப்படிக் கற்றுத் தருவேன்? சொல்லிப் பார்த்தேன், அவை கேட்கவில்லை.''

''சொன்னல் புரியுமா குஞ்சுகளுக்கு? விரலால் தரையில் தட்டிக் காட்ட வேண்டும்.''

உடனே மீஷா தரையில் குஞ்சுகளுக்கு அருகே அமர்ந்து கொண்டு விரலால் முட்டைத் தூளுக்கு அருகே தட்டிக் காட்டினன். அவன் விரல் தரையில் கொத்துவதைப் பார்த்ததும், தரையில் இருப்பவை உணவென்று தெரிந்து கொண்டு குஞ்சுகளும் கொத்த ஆரம்பித்தன. தரையில் சிதறிக் கிடந்த முட்டைத் தூள் இதன் பிறகு ஒரு நிமிடத்துக்குள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

பிறகு நாங்கள் ஒரு வட்டிலில் தண்ணீர் நிரப்பித் தரையிலே வைத்தோம், உடனே குஞ்சுகள் குடிக்க ஆரம்பித்தன. எப்படிக் குடிப்பதென்று அவற்றுக்கு நாங்கள் கற்றுத் தர வேண்டியிருக்கவில்லை. பிறகு அவை யாவும் ஒன்று கூடி ஒன்ருேடொன்று ஒட்டிக் கொண்டு நின்றன. குளிருக்கு அடக்கமாய் இருக்கும் பொருட்டு உடனே அவற்றை நாங்கள் கதகதப்பு சட்டிக்குள் எடுத்து வைத்தோம்.

அன்று பள்ளிக்கூடத்தில் எங்கள் ஆசிரியை வகுப்பறைக்குள் நுழைந்ததும் நாங்கள் அவரைச் சுற்றிக் கொண்டு குஞ்சுகளைப் பற்றி அவரிடம் சொன்னேம். அவர் வியந்து மகிழ்ந்து கொண்டார்.

''குஞ்சுகளது பிறந்த விழாவினை ஒட்டி உங்களுக்கு வாழ்த்துரைக்கிறேன்'' என்ருர் எங்கள் ஆசிரியை.

எல்லாரும் சிரித்தார்கள்.

''குஞ்சுகளது பிறந்த விழாவை நேற்று நாம் கொண்டாடவில்லை, இன்ருவது கொண்டாடுவோம்'' என்ருன் வித்யா.

''ஆமாம், இன்று கொண்டாடலாம்!'' என்று எல்லாரும் சேர்ந்து கூச்சலிட்டனர்.

''மரியா பெத்ரோவ்னு, பிறந்த விழா கொண்டாட்டத்துக்கு நீங்களும் வர வேண்டும்.''

''சரி, நானும் வருகிறேன். குஞ்சுகளுக்கு அன்பளிப்பு கொண்டு வருகிறேன்'' என்ருர் அவர்.

''நாங்களும் அன்பளிப்பு கொண்டு வருகிருேம்!'' என்று எல்லாரும் அறிவித்தனர்.

மீஷாவும் நானும் அன்று பிற்பகலில் விருந்தினர்களது வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தோம். அவர்கள் கொண்டு வரும் அன்பளிப்பைப் பார்ப்பதற்காக நாங்கள் துடித்துக் கொண்டிருந்தோம்.

சேன்யாதான் யாவருக்கும் முதலில் வந்து சேர்ந்தான். மலர்க் கொத்தைக் கொண்டு வந்தான் அவன்.

''எதற்காக இந்த மலர்?'' என்று கேட்டான் மீஷா.

''என்னுடைய அன்பளிப்பு!''

''இந்த அன்பளிப்பு எதற்கு? குஞ்சுகள் இதைத் தின்னவா முடியும்?''

''தின்ன முடியாது, ஆனல் அவை மலர்களைப் பார்த்து மகிழலாம் அல்லவா?''

''அவற்றுக்கு மலர்களைப் பார்க்கவும் தெரியாது, மகிழவும் தெரியாது.''

''சரி, அவை பார்க்க வேண்டாம். பூக் கும்பத்தில் வைத்துப் பார், நன்ருயிருக்கும்.''

நாங்கள் கண்ணுடிப் பூக் கும்பத்தில் நீரை விட்டு மலர்களை அதில் வைத்தோம்.

அடுத்தபடி வந்த செர்கேயும் வாதிக்கும் வெண்மலர்களை எடுத்து வந்தார்கள்.

''எல்லாரும் மலர் கொண்டு வருவதெனப் பேசி முடிவு செய்திருந்தீர்களா, என்ன?'' என்று மீஷா முணுமுணுத்தான்.

''ஏன் எங்களுடைய அன்பளிப்பு பிடிக்கவில்லையா உனக்கு?'' என்று கேட்டான் வாதிக். ''அன்பளிப்பாக வந்ததை எத்தனை மாற்றென உறைத்துப் பார்க்கக் கூடாது, தெரியும் அல்லவா உனக்கு?''

அந்த மலர்களையும் வாங்கி பூக் கும்பத்தில் வைத்தோம்.

வான்யா ஒரு ராத்தல் ஓட்ஸ் தானியம் கொண்டு வந்தான்.

''குஞ்சுகள் இதைத் தின்னுமா, தெரியவில்லையே'' என்று மீஷா சந்தேகம் தொனிக்கக் கேட்டான்.

''கொடுத்துப் பாரேன், தெரிகிறது'' என்ருன் வான்யா.

''வேண்டாம், மரியா பெத்ரோவ்னு வந்தபின் அவரிடம் கேட்டுப் பார்ப்போம்.''

விரைவில் மரியா பெத்ரோவ்ளுவும் வந்து சேர்ந்தார். கையில் அவர் ஒரு சிறு காகிதப் பை கொண்டுவந்திருந்தார். அதனுள் ஒரு பால் புட்டி இருந்தது.

''குஞ்சுகளுக்குப் பால் கொடுக்கலாமென்று எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே'' என்ருன் மீஷா.

''இது பால் அல்ல, மோர். குஞ்சுகளுக்கு முதலில் சில நாட்களுக்கு நிறைய மோர் வேண்டும். குஞ்சுகளுக்கு மிகவும் பிடித்த உணவு இது'' என்ருர் எங்கள் ஆசிரியை.

குஞ்சுகளைக் கதகதப்பான சட்டியிலிருந்து எடுத்துத் தரையிலே விட்டு அவற்றின் எதிரே ஒரு வட்டிலில் மோரை ஊற்றி வைத்தோம். வட்டிலைச் சுற்றி நின்று கொண்டு அவை வேகமாகக் கொத்திக் கொத்தி மோரைக் குடித்தன.

''குஞ்சுகளுக்கு இதுதான் சரியான அன்பளிப்பு. அவற்றுக்குப் பிடித்தமானது எதுவென்று பார்த்து அல்லவா கொண்டுவரவேண்டும்?'' என்ருன் மீஷா.

வீத்யாவும் ழேன்யாவும் ஒரு ராத்தல் தினை தானியம் கொண்டு வந்தனர். அடுத்தபடியாக வந்த லியோஷா ஒரு கிலுகிலுப்பையைக் கொடுத்துவிட்டுச் சொன்ளுன்:

''எதை வாங்குவதென்று தெரியவில்லை. இந்த கிலுகிலுப்பையைப் பார்த்ததும் இதுதான் நல்லது என்று வாங்கி வந்தேன்.''

''நல்லதுதான், நல்லதுதான்'' என்று மீஷா அவனைக் கேலி செய்தான். ''கோழிக் குஞ்சுகளுக்குக் கிலுகிலுப்பையை அன்பளிப்பாகத் தரலாமென்ற ஆலோசனை உன்னையன்றி வேறு யாருக்கும் வராதே.''

''குஞ்சுகளுக்கு எதைக் கொண்டு வருவதென்று எனக்கு எப்படித் தெரியும்? இதுவே அவற்றுக்குப் பிடித்தமானதாய் இருந்தாலும் இருக்கும்'' என்று சொல்லிக் குஞ்சுகளுக்கு எதிரே அவன் அந்தக் கிலுகிலுப்பையை ஆட்டிளுன். குஞ்சுகள் மோர் குடிப்பதை நிறுத்தி விட்டுத் தலையை உயர்த்திப் பார்த்தன.

''பார்த்தாயா, அவற்றுக்குப் பிடித்தமானதாகவே இருக்கிறது!'' என்று அவன் சிரித்தான். அவனுடன் சேர்ந்து எல்லாரும் சிரித்தோம்.

''சரி, சும்மா இரு நீ! அவை அமைதியாக மோர் குடிக்கட்டும்'' என்ருன் மீஷா.

குஞ்சுகளுக்கு ஓட்ஸ் தானியம் கொடுக்கலாமா என்று நான் மரியா பெத்ரோவ்ளுவைக் கேட்டேன். எந்த தானியமும் தரலாம், ஆளுல் வேக வைத்துத் தர வேண்டுமென்று சொன்ளுர் அவர்.

''எப்படி வேக வைப்பது?'' என்று மீஷா கேட்டான்.

''கூழாகக் கிண்ட வேண்டும்'' என்ருர் அவர்.

ஓட்சை நாங்கள் கூழாகக் கிண்ட விரும்பிளுேம். ஆளுல் அதற்குள் கோஸ்த்யா வந்து சேர்ந்தான்.

''நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?'' என்று நாங்கள் அவனைக் கேட்டோம்.

''இதைப் பாருங்கள்'' என்று அவன் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தான். அதனுள் இரு மோதகங்கள் இருந்தன.

''ஓ, நல்ல அன்பளிப்புதான்.''

''பிறந்த விழா விருந்தில் இருக்க வேண்டியதாயிற்றே'' என்றான் அவன்.

''அதனுள் என்ன இருக்கிறது?''

''கொள்ளு.''

''அப்படிச் சொல்லு'' என்று கூவியவாறு மீஷா மோதகத்தை அவனிடமிருந்து வாங்கி உள்ளேயிருந்த கொள்ளை எடுக்கத் தொடங்கினான்.

''என்ன வேலை இது? மோதகம் வீணாகி விடும்'' என்று கோஸ்த்யா அவனைத் தடுத்தான்.

ஆனால் மீஷா அதைக் கேளாமல் உள்ளே இருந்த கொள்ளை எடுத்து ஒரு தட்டில் போட்டுக் குஞ்சுகளுக்கு முன்னால் கொண்டு போய் வைத்தான். குஞ்சுகள் உடனே அதைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன.

மீஷாவின் தங்கை எல்லாரும் குஞ்சுகளுக்கு அன்பளிப்பு எடுத்து வந்து கொடுத்ததைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தனது அறைக்குச் சென்று சிவப்பு ரிப்பனைத் துண்டு துண்டாகக் கத்தரித்து எடுத்து வந்தாள். கோழிக் குஞ்சு ஒவ்வொன்றின் கழுத்திலும் ரிப்பனைக் கட்டுவதற்கு அவளுக்கு நாங்கள் உதவினோம். பிறகு மலர்க் கும்பங்களை எடுத்துத் தரையில் வைத்தோம். இவற்றுக்குப் பக்கத்தில் மோர் வட்டில், கொள்ளு, தண்ணீர் ஆகிய யாவும் இருந்தன. கோழிக் குஞ்சுகளின் கழுத்தில் சிவப்பு ரிப்பன் கட்டப்பட்டிருந்தது. பிறந்த விழா சிறப்பாகவே நடந்தேறியது.

கீழே போய்க் குஞ்சுகளுக்குப் புல் கொண்டு வரப் போவதாகக் கோஸ்த்யா சொன்னான். ஆனால் மரியா பெத்ரோவ்னா அதற்குள் குஞ்சுகளுக்கு புல், கீரை முதலானவற்றைத் தரக் கூடாது என்று சொல்லி அவனைத் தடுத்தார்.

குஞ்சுகள் வேண்டிய மட்டும் தின்றதும் தண்ணீர் குடித்தன. பிறகு நாங்கள் அவற்றின் கழுத்தில் கட்டியிருந்த ரிப்பனைக் கழற்றியபின் குஞ்சுகளைக் கதகதப்பான சட்டியினுள் வைத்தோம். சமையலறையில் ஒரு மூலையில் தடுப்பு அமைத்துத் தரையில் வெந்நீர்ச் சட்டி ஒன்றை வைத்தோமானால், குஞ்சுகள் அந்தச் சட்டிக்கு அருகே கதகதப்பாய் அடைந்திருக்கும், அவற்றைச் சட்டிக்குள் வைத்திருக்க வேண்டியதில்லை என்றார் மரியா பெத்ரோவ்னா.

''ஆனால் குஞ்சுகளைக் கிராமப்புறத்துக்கு எடுத்துச் சென்று வளர்ப்பது தான் சிறந்தது. வீட்டிற்குள் அடைந்திருப்பது அவற்றுக்கு நல்லதல்ல'' என்றார் அவர்.

எங்களுடைய அடைகாப்புப் பொறியை அவரிடம் காட்டினோம். இரு முட்டைகள் இன்னமும் அப்படியேதான் இருந்தன.

''இவற்றிலிருந்து இனி குஞ்சு கிடைக்குமென நான் நினைக்கவில்லை. ஆனால் உங்களிடம்தான் இத்தனை குஞ்சுகள் இருக்கின்றனவே. சிரமப்பட்டுதான் நீங்கள் வேலை செய்திருக்கிறீர்கள்.''

''எல்லாரும் உதவி செய்தார்கள்'' என்றான் மீஷா.

''இப்படித்தான் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு கூட்டாக வேலை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் பெரிய வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடிக்கலாம்.''

''எங்கள் முயற்சி வீண்தான், பயனற்றதாகிவிடும் என்றே நினைத்தேன். ஏனெனில் ஒரு தரம் வெப்பநிலையைக் கவனியாது நாங்கள் குறைய விட்டு விட்டோம். முட்டைகள் குளிர்ந்து விட்டன'' என்று நான் கூறினேன்.

''முட்டைக் கரு சிறிது நேரம் குளிர்ந்து விட்டாலும் அது கெட்டுப் போவதில்லை'' என்றார் மரியா பெத்ரோவ்னா. ''கோழியுங்கூட உணவுக்காக தினமும் ஒரு முறை முட்டைகளை விட்டு விலகிச் செல்கிறதே. அப்பொழுது முட்டைகள் குளிர்ந்து போனாலும் கெட்டுப் போவதில்லை. அடைகாப்புப் பொறிகளிலும் முட்டைக் கரு இயற்கை சூழலில் இருக்கும் பொருட்டு தினமும் ஒரு தரம் முட்டைகளைக் குளிர்ந்து போக விடுகிறார்கள். மிதமிஞ்சி சூடாகி விடும்படிச் செய்வதுதான் இதனிலும் அபாயகரமானது.''

''ஒரு தரம் முட்டைகளை நான் சூடேறச் செய்து விட்டேன். வெப்பநிலை 104 டிகிரிக்கு உயர்ந்துவிட்டது'' என்றான் மீஷா.

''தக்க நேரத்தில் நீ அதைக் கவனித்து சூட்டைக் குறையச் செய்திருக்கிறாய். அதிக நேரம் அந்த வெப்பநிலையில் விட்டிருந்தால் முட்டைக் கருக்கள் நாசமாகியிருக்கும்.''

எஞ்சியிருந்த இரு முட்டைகளை அன்று மாலை நாங்கள் உடைத்துப் பார்த்தோம். அவற்றுள் கரு முழு வளர்ச்சி பெறவில்லை. ஏதோ காரணத்தால் அவற்றின் வளர்ச்சி தடைப்பட்டுப் போய் நாசமாகிவிட்டது. முட்டைகள் அளவுமீறி சூடாகும்படி விடப்பட்டிருந்த நேரத்தில் இவற்றின் கருக்கள் கெட்டு விட்டன போலும்.

இருபத்து மூன்று நாட்களாக இராப் பகலாய் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்த எங்களது மின்விளக்கை நாங்கள் அணைத்தோம். வெப்பமானியில் பாதரசத்தின் உயரம் குறைய ஆரம்பித்தது. அடைகாப்புப் பொறி குளிர்ந்து சென்றது. எங்களது உல்லாச குடும்பமாகிய பொசபொசப்பான பத்து மஞ்சள் நிறக் குஞ்சுகள் கதகதப்பான பானையினுள் மிக மும்முரமாக நகத்தால் பிறாண்டிக் கொண்டிருந்தன.

கழிப்பு இரும்பு

கேஞ மொத்தத்தில் நல்ல பையன்தான், மோசமானவன் அல்ல. வழக்கப் படி சொல்வதெனில், எல்லாச் சிறுவர்களேயும் போன்றவன்தான். செவ்விய கன்னங்களும் உருண்டை முகமும் சிறிய உருண்டை மூக்கும் குண்டுத் தலேயும் கொண்டு, கழுக்கு மொழுக்கெனத் திடகாத்திரமாய் இருந்தான். ஆனல் அவன் கழுத்து மட்டுமீறி குட்டையானது. கழுத்து இல்லாதவஞகவே தோன்றிஞன் அவன். உண்மையில் அவனுக்கும் ஒரு கழுத்து இருந்ததென்ரு லும், கோடை காலத்தில் அவன் காலரில்லாத குட்டைச் சட்டை போட்டுக் கொண்டபோது மட்டும்தான் அது வெளியே தெரிந்தது. குளிர் காலத்தில் கதகதப்பாய் உடுத்திக் கொண்டதும் அவன் கழுத்து கண்ணுக்குத் தெரி யாதபடி மறைந்து விடும். பெரிய தட்டிலே பூசனியை வைத்தது போல் அவன் தோள்களின் மீது உருண்டைத் தலேயை அழுத்தி வைத்திருப்பதாக நினேக்கத் தோன்றும். இதை ஒரு குற்றமாகச் சொல்லக் கூடாதுதான். சிறு வயதில் பலருக்குக் கழுத்து குட்டையாக இருப்பினும், வயது வந்ததும் அது வளர்ந்து விடுவதுண்டு.

உண்மையில் இது ஒரு பெரிய குறையல்ல.

சில சமயங்களில் கேஞ பொய் பேசுவான்—இதுதான் அவனிடமிருந்த மெய்யான ஒரு பெரிய குறை. பச்சைப் புளுகன் அல்ல, ஆயினும் எப்போதும் உண்மையே பேசுகிறவனும் அல்ல.

நம்மில் எல்லாருக்குமே நேர்வதுதான் இது—நம்மையும் அறியாமல் சில நேரம் நாம் பொய் சொல்ல நேர்வதுண்டு.

பள்ளிக்கூடப் படிப்பில் கேஞ அப்படி ஒன்றும் மோசமல்ல, எல்லாரை யும் போன்றவன்தான். மொத்தத்தில் அவன் நல்ல மாணவஞக விளங்க வில்லே. அடிக்கடி மூன்ருந்தர மதிப்பெண் வாங்கிஞன். சில நேரம் மோசமான மதிப்பெண்ணும் பெறுவதுண்டு. வீட்டில் பெற்ருேர்கள் வழக்கம் போல் விழிப்புடன் இருந்து, வீட்டுப் பாடங்களே அவன் செய்து முடிக்கிருஞ என்று கவனித்துக் கொள்ளத் தவறிவிடும் நாட்களில் இப்படிதான் நேர்ந்துவிடும்.

ஏற்கெனவே நாம் சொன்னது போல் அவனிடமிருந்த பெரிய குறை, எப்போதுமே அவன் உண்மை பேசுகிறவனல்ல என்பதுதான். அதாவது சில சமயம் அவன் நாக்கில் நரம்பின்றி பொய் சொன்ஞன். இதற்காக ஒரு தரம் அவன் கடுமையாகத் தண்டிக்கப்பட நேர்ந்தது.

அப்போது குளிர் காலம், அவனுடைய பள்ளிக்கூடம் கழிப்பு இரும்பு சேகரிக்கும் இயக்கத்தில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தது. நாடு எங்கிலு

மிருந்து கழிப்பு இரும்பைச் சேகரித்து ஆலைகளுக்கு அனுப்புவதற்குப் பள்ளிக் கூட சிறுவர்களும் சிறுமிகளும் உதவி வந்தனர். அவர்கள் தம்மிடையே போட்டி போட்டுக் கொண்டு கழிப்பு இரும்பைச் சேகரித்தனர். அதிக அளவில் சேகரிப்போரின் பெயர்கள் சிறப்பாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

கேனுவும் இந்த இயக்கத்தில் பங்கெடுத்துக் கொள்வதாக இருந்தான். ஆனால் கழிப்பு இரும்பு சேகரிப்பதற்காக அவன் புறப்பட்டுச் சென்ற முதல் நாளன்று வழியில் அவனது நண்பன் கோஷாவைச் சந்தித்தான்.

கேனுவைவிட கோஷா ஒரு வயது சிறியவன், ஒல்லியாக மெலிந்திருந்த வன். எந்நேரமும் அவன் துருதுருவென்று இருப்பவன், தக்கபடி ஆலோசித்து சுவையான விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்பவன். அதனால்தான் கேனு அவனைத் தனது பிரிய நண்பனாகக் கொண்டிருந்தான்.

கேனுவைப் பார்த்ததும் கோஷா அவனைக் கேட்டான்:

''எங்கே போகிறாய், இவ்வளவு அவசரமாய்?''

''கழிப்பு இரும்பு சேகரிக்கப் போகிறேன்'' என்றான் கேனு.

''என்னுடன் வா நீ, பனியிலே சறுக்கி விளையாடலாம், நன்றாயிருக்கும். பக்கத்துக் கட்டிடத்தின் வெளிமுற்றத்தில் பையன்கள் பனிச் சறுக்குச் சாய்வுத் தளம் தயார் செய்திருக்கிறார்கள்.''

உடனே இருவரும் பக்கத்துக் கட்டிடத்தின் வெளிமுற்றத்துக்குச் சென்று சாய்வுத் தளத்தின் பனியிலே சறுக்கி விளையாடினர். சறுக்கு ஊர்தி இல்லாத தால் இருவரும் கால்களில் நின்றபடி சறுக்கிச் சென்றனர். இது வசதியாக இருக்கவில்லை, நின்றபடி உச்சியிலிருந்து சறுக்க ஆரம்பித்து முடிவில் குப்புற வோ மல்லாந்தோ படுத்த நிலையில் அடி மட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

இப்படிச் சற்று நேரம் விளையாடிய பின் கோஷா சொன்னான்:

''இவ்வாறு செய்தோமானால் நமக்குக் காயம் பட்டுவிடும். சறுக்கு ஊர்தி ஒன்று வேண்டும். வீட்டுக்குப் போய் உன்னுடைய ஊர்தியை எடுத்து வாயேன்.''

எனவே கேனு வீட்டிற்குத் திரும்பித் தனது சறுக்கு ஊர்தியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

''சறுக்கு ஊர்தி எதற்காக உனக்கு?'' என்று அவன் அம்மா கேட்டார். ''கழிப்பு இரும்பு அல்லவா சேகரிக்கப் போவதாகச் சொன்னாய்?''

''இதை எடுத்துச் சென்றால் வேலை எளிதாக முடிவுறும். கனத்த இரும்புத் துண்டுகளை நான் சுமக்க வேண்டியதில்லை. சறுக்கு ஊர்தியில் வைத்து இழுத்துச் செல்வேன்.''

''அப்படியானால் சரிதான். எடுத்துச் செல்'' என்றார் கேனுவின் அம்மா.

அன்று பிற்பகல் முழுதும் அவன் கோஷாவுடன் சேர்ந்து சறுக்கு ஊர்தியில்

சறுக்கிச் சென்று விளையாடினுன். முடிவில் அவன் வீட்டுக்குத் திரும்புகையில் நெடு நேரமாகிவிட்டது. உறைந்த பனி அவன் கோட்டில் அடையாய் ஒட்டியிருந்தது.

''எங்கே போயிருந்தாய்?'' என்று அவன் அம்மா திட்டினுர்.

''கழிப்பு இரும்பு சேகரித்தேன்.''

''அப்படியானுல் கோட்டில் ஏன் இப்படி உறை பனி ஒட்டியிருக்கிறது?''

''திரும்பி வருகையில் கொஞ்சம் வெண் பனியை உருட்டி விட்டெறிந்து விளையாடினேம்.''

''கொஞ்சம் உருட்டி எறிந்து விளையாடிய அழகா இது?'' என்று தலையை ஆட்டிக் கொண்டார் அவன் அம்மா.

''கழிப்பு இரும்பு எவ்வளவு சேகரித்தாய்?'' என்று அவன் அப்பா அவனை விசாரித்தார்.

''நாற்பத்து மூன்று கிலோகிராம்'' என்று சிறிதும் அசங்காமல் பொய் சொன்னுன் கேனு.

''பலே கைகாரனுய் இருக்கிருயே!'' என்று அவர் வியந்து கொண்டார். இது எத்தனை ராத்தல் என்று அவர் கணக்கிட ஆரம்பித்தார்.

''ராத்தலை இப்போது யாரும் உபயோகிப்பதில்லை'' என்று அவன் அம்மா சொன்னுர்.

''எத்தனை ராத்தலென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு நான் துறைமுகத்தில் சுமை ஏற்றும் தொழிலாளியாக வேலை செய்தவன். இரு நூறு ராத்தல் மீனுள்ள பீப்பாய்களை நாங்கள் கப்பலில் ஏற்றுவது வழக்கம். நாற்பத்து மூன்று கிலோ என்ருல் தொண்ணூறு ராத்தலுக்கும் அதிகமான சுமையாகிறது. எப்படி அதை உன்னுல் தூக்க முடிந்தது?''

''தூக்கவில்லை நான். சறுக்கு ஊர்தியில் வைத்து இழுத்துச் சென்றேன்'' என்று கேனு பதிலளித்தான்.

''சறுக்கு ஊர்தியில் இழுத்தாயா? அப்படித்தான் செய்ய வேண்டும். மற்றவர்கள் எவ்வளவு சேகரித்தார்கள்? உன்னைவிட அதிகமாகச் சேகரித்தார்களா? குறைவாகவா?''

''சிலர் குறைவாகவே சேகரித்தார்கள்—முப்பது கிலோவிலிருந்து முப்பத்தைந்து கிலோ இருக்கும். ஆனுல் ஒருவன் ஐம்பது கிலோவும், இன்னெருவன் ஐம்பத்திரண்டு கிலோவும் சேகரித்துத் தந்தனர்.''

''அப்படியா? உன்னைக் காட்டிலும் ஒன்பது கிலோ அதிகமாய் சேகரித்து விட்டான் என்று சொல்லு.''

''அதனுலென்ன? நாளைக்கு நான் யாவரையும் விட அதிகமாகச் சேகரிக்கப் போகிறேன்.''

''நீ அளவுக்கு மீறிய முயற்சியில் இறங்குவது நல்லதல்ல'' என்ருர் அவன் அம்மா.

''அதெல்லாம் இல்லே. எல்லாரும் ஒரே அளவு முயற்சிதான் எடுத்துக் கொள்கிருேம்.''

கேளு அன்று இரவு எதையும் வேண்டாமென்று சொல்லாமல் நிறைய சாப்பிட்டான். நல்ல பசியுடன் அவன் சாப்பிடுவதைப் பார்த்த போது அவன் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. அவன் போதிய அளவு சாப்பிடுவதில்லே, அவன் உடல் நலம் இதனுல் பாதிக்கப்படும் என்று நெடு நாளாக அவர்கள் குறைப்பட்டு வந்தனர். இப்பொழுது அவன் கூலப் பொங் கலே வாய் நிறையப் போட்டுக் குதப்பியதைப் பார்த்துவிட்டு அவன் அப்பா அவனுடைய தலேயை வருடியவாறு மெல்லச் சிரித்துவிட்டுக் கூறினுர்:

''உடல் உழைப்பு உடம்புக்கு நல்லது! பசி அதிகரிக்கிறது! இல்லேயா தம்பி? நீ என்ன சொல்கிருய்?''

''அப்படித்தான். சந்தேகம் என்ன?''

பிள்ளேப் பிராயத்திலேயே சிறுவர்கள் உழைப்பின் சிறப்பை தெரிந்து கொள்வது எவ்வளவு முக்கியமானதென்று அன்று இரவு அவன் பெற்ருேர் கள் பேசிக் கொண்டார்கள்.

''சிறு வயதில் உழைக்கக் கற்றுக் கொள்கிறவன் பிற்காலத்தில் யாருக் கும் சுமையாக இருக்க மாட்டான்'' என்று அவன் அப்பா கூறினுர்.

''யாருக்கும் நான் சுமையாய் இருக்க மாட்டேன்'' என்ருன் கேளு. ''என்னேயன்றி வேறு யாருக்கும் சுமையாக இருக்க மாட்டேன்.''

''நீ நல்ல பையன்'' என்று அவன் அப்பா ஆனந்தப்பட்டுக் கொண் டார்.

கேளு படுக்கச் சென்றதும், அவனது தாயிடம் அவன் அப்பா கூறினுர்:

''கேளுவின் நேர்மையை நான் போற்றுகிறேன். தான் சேகரித்த இரும் பின் அளவை அவன் மிகைப்படுத்திச் சொல்லியிருக்கலாம், ஏனேயோர் யாவரையும் விட தான் அதிகமாகச் சேகரித்ததாகக் கூறியிருக்கலாம். ஆனுல் அப்படி எல்லாம் சொல்லாமல், தன்னேக் காட்டிலும் இரண்டு பேர் அதிகம் சேகரித்ததை மறைக்காமல் நம்மிடம் சொன்னுன்.''

''எனக்குத் தெரியும், நமது சிறுவன் நேர்மையானவன்தான்'' என்று அவன் அம்மா ஒத்துக் கொண்டார்.


''சிறு பிள்ளேயாக இருக்கும் போதே நேர்மையாய் நடந்து கொள்ளக் கற்றுக் கொள்வது அவசியமாகும். நேர்மையானவன் பொய் சொல்ல மாட்டான்; யாரையும் ஏமாற்ற மாட்டான்; தன் தோழர்களேக் கைவிட மாட்டான்; தனக்கு உரியதல்லாத ஒன்றை எடுக்க மாட்டான். முயற்சி எடுத்துப் பாடுபடுவான், ஏனேயோர் வேலே செய்யும் போது தான் வீண் பொழுது

போக்க மாட்டான். அப்படிச் செய்கிறவனது வாழ்வு ஏனையோரது உழைப்பை உறிஞ்சி வாழும் புல்லுருவித்தனமான வாழ்வாகி விடும்.''

மறுநாள் காலை கேனு பள்ளிக்கூடத்துக்குச் சென்றதும், முந்திய பிற்பகலில் வகுப்பில் எல்லாரும் கழிப்பு இரும்பு சேகரித்த போது, ஏன் அவன் மட்டும் வரவில்லை என்று கேட்டார் அவன் ஆசிரியை. கேனு கொஞ்சமும் தயங்காமல் பதிலளித்தான். தான் வந்து கலந்துகொள்வதற்குத் தனது அம்மா அனுமதிக்கவில்லை என்றான். ஏனென்றால் தனது தங்கைக்கு நிமோனியா காய்ச்சல், மருத்துவ மனையில் இருந்த அவளுக்கு ஆரஞ்சுப் பழம் கொண்டு போய்க் கொடுக்கும்படி அம்மா தன்னை அனுப்பிவிட்டார், தங்கை சீக்கிரமாய் முழு நலமடைய அவளுக்கு ஆரஞ்சு தரவேண்டுமென மருத்துவ மனையில் சொல்லியிருந்தார்கள் என்றான். மருத்துவ மனைக்குப் போனதாகவும், தனக்கு இல்லாத ஒரு தங்கைக்கு ஆரஞ்சு எடுத்துச் சென்ற தாகவும் திடுமென ஏன் அவன் அப்படிப் பொய் சொன்னானே, தெரியவில்லை.

வீட்டுக்குத் திரும்பியதும் அவன் மதிய உணவு அருந்தினான். பிறகு கழிப்பு இரும்பு சேகரிக்கப் போவதாக அம்மாவிடம் சொல்லி விட்டுச் சறுக்கு ஊர்தியை இழுத்துக் கொண்டு கிளம்பினான். உண்மையில் அவன் பனிச் சறுக்குத் தளத்துக்குத்தான் சென்று விளையாடினான். இரவில் சாப்பிட்ட போது அதிக அளவில் இரும்பு சேகரித்தது யார், குறைவாகவும் சுமாராகவும் சேகரித்தது யார் என்ற விவரங்களை அப்பாவிடம் சொன்னான்.

நாள்தோறும் இவ்வாறே நடைபெற்று வந்தது. வீட்டுப் பாடங்களைச் செய்யாமல்





கேஞ ஒவ்வொரு நாளும் வெளியே சென்று முழு நேரமும் விளையாடிப் பொழுதைக் கழித்து வந்தான். வகுப்புகளில் மோசமான மதிப்பெண்கள் பெற ஆரம்பித்தான்.

அவன் தாய் ஆத்திரப்பட்டுக் கொண்டார்:

''இதென்ன அநியாயம்! கழிப்பு இரும்பு சேகரிக்கச் சொல்வதால் வரும் விளைவு அல்லவா இது? பள்ளிக்கூடச் சிறுவர்களை இப்படியா வேலை வாங்கு வார்கள்? வீட்டுப் பாடங்களைச் செய்வதற்கு உனக்கு நேரம் இல்லையே! நான் போய் உனது ஆசிரியையைப் பார்த்துப் பேசப் போகிறேன். பள்ளியில் அவர் கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்? சிறுவர்களுக்கு உரிய வேலை படிப்பா, அல்லது கழிப்பு இரும்பு சேகரிப்பா என்று எனக்குத் தெரிய வேண் டும்! இரண்டில் ஒன்றையே செய்ய முடியும் அவர்களால்!''

ஆனுல் வேலை அதிகமாக இருந்ததால் கேஞவின் ஆசிரியையிடம் சென்று பேசுவதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. கேஞ மோசமான மதிப்பெண் பெறுவது பற்றி அவன் அப்பாவிடம் சொன்னுல் பெரிய களேபரமாகி விடு மென்று நினைத்து, அவர் சொல்லாமலே இருந்துவிட்டார். வகுப்பில் கேஞ பின்தங்கிவிட்டது குறித்து அவன் அப்பா இவ்விதம் ஏதும் அறியாதவராக வே இருந்தார். மாலையில் கேஞ வீட்டுக்குத் திரும்பியதும் அவன் சேகரித்த இரும்பு குறித்து விசாரிப்பார். தமது மகன் கூறியதைக் குறித்துக் கொண்டு மொத்தம் இது வரை எவ்வளவு சேகரித்தான் என்று கூட்டிப் பார்ப்பார். யாவும் நன்ருகவே நடைபெறுவதாகத் தோன்றும்படி கேஞ தக்கபடி கதைத்து வந்தான். வகுப்பில் தன் ஆசிரியை தன்னை முன்மாதிரி மாணவனுக அறிவித்துச் சிறப்பாளர் பட்டியலில் தன் பெயரைச் சேர்த்திருப்பதாகச் சொன்னுன் அவன்.

முடிவில் ஒரு நாள் ரஷ்ய இலக்கணத்தில் சுழி வாங்கிக் கொண்டு கேஞ வீட்டுக்கு வந்து சேர்ந்தான். ஆனுல் தன் அம்மாவிடம் அவன் இதைப்பற்றிச் சொல்லவில்லை. வழக்கம் போல் சறுக்கு ஊர்தியை இழுத்துக் கொண்டு கழிப்பு இரும்பு சேகரிக்கப் புறப்பட்டுச் சென்ருன், அதாவது பனிச் சறுக்குத் தளத்துக்குப் போனுன்.

வகுப்பில் அன்று அவன் பெற்ற மதிப்பெண்களை பார்க்கவில்லையே என்று அவன் தாய்க்கு அதன் பிறகே நினைவு வந்தது. அவனது மதிப்பெண் குறிப் பேட்டை எடுத்துப் பார்த்தார் அவர். இலக்கணத்தில் அவன் சுழி வாங்கி யிருந்ததைக் கண்டதும் அவருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

''அநியாயம்! இப்படியே போனுல் பையன் வகுப்பிலே படுமட்டமான மாணவனெனப் பெயர் பெற்று விடுவானே. பள்ளியில் அவர்கள் கவலைப்படு வது எல்லாம் கழிப்பு இரும்பே தவிர மாணவர்களது படிப்பு அல்ல!'' என்று அவர் கூறிக் கொண்டார்.

உடனே அவர் தமது வேலேகளே அப்படியே போட்டு விட்டுப் பள்ளிக் கூடத்திற்கு விரைந்தார்.

நல்ல வேளேயாக கேனுவின் ஆசிரியை இன்னும் வீட்டுக்குச் சென்றுவிட வில்லே.

''நீங்கள் புறப்பட்டு வந்ததற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்'' என்றார் கேனுவின் ஆசிரியை. ''படிப்பில் கேனு பின் தங்கிவிட்டான், சிறிது காலமாகப் படு மோசமாகிவிட்டான். அதனால்தான் உங்களே வரச் சொல்லி நான் குறிப்பு எழுதிக் கொடுத்தனுப்பினேன்.''

''என்னே வரச் சொல்லி குறிப்பு எழுதியனுப்பினீர்களா? ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது, எனக்குக் குறிப்பு ஏதும் வரவில்லே. உங்களுடன் பேச வேண்டுமென்று நானாகவேதான் வந்திருக்கிறேன்'' என்றார் கேனுவின் தாய்.

''ஏன், நான் எழுதி அனுப்பிய குறிப்பு கிடைக்கவில்லேயா, உங்களுக்கு?''

''இல்லேயே.''

''அதிசயமாக அல்லவா இருக்கிறது? உங்களிடம் தரச் சொல்லி நேற்று முன் தினம் கேனுவிடம் அதைக் கொடுத்தேனே.''

''குறிப்பைக் கேனுவிடம்தான் கொடுத்தீர்களா? நிச்சயம்தானா?''

''நிச்சயம்தான், அவனிடம்தான் கொடுத்தேன்.''

''பிறகு ஏன் அவன் அதை என்னிடம் தரவில்லே?''

''நாளேக்கு அவசியம் நான் இதைப் பற்றி அவனிடம் விசாரிக்கிறேன். கேனு படிப்பதை நிறுத்திவிட்டானே, என்ன காரணமென்று உங்களிடம் கேட்க விரும்பினேன். வீட்டுப் பாடங்களே ஏன் அவன் செய்வதில்லே? இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லே.''

''நீங்கள் இதைப் பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லேயே. பிள்ளேகளே நீங்கள் கழிப்பு இரும்பு சேகரிப்பதற்காக அனுப்புகிறீர்கள், பிறகு அவர்கள் வீட்டுப் பாடங்களேச் செய்யவில்லேயே என்று ஆச்சரியப்படுகிறீர்கள்.''

''கழிப்பு இரும்புக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லேயே.''

''ஏன் சம்பந்தம் இல்லே? வீட்டுப் பாடங்களேச் செய்வதற்குப் பிள்ளே களுக்கு நீங்கள் எங்கே நேரம் தருகிறீர்கள்?''

''நீங்கள் சொல்வது புரியவில்லே எனக்கு. கழிப்பு இரும்பு சேகரிப்பதால் பிள்ளேகளுக்கு படிக்க நேரம் இல்லாமற் போவது எப்படி? வாரம் ஒரேயொரு பிற்பகலே மட்டும்தான் அவர்கள் கழிப்பு இரும்பு சேகரிப்பதற்காக செலவிடு கிறார்கள்.''

''ஹ-ஹ-ஹா! வாரத்துக்கு ஒரேயொரு பிற்பகல்தான் செலவிடுகிறார் களா?'' என்று கூறிச் சிரித்தார் கேனுவின் அம்மா. ''நாள் தவறாமல் அல்லவா போய்ச் சேகரிக்கிறார்கள்? கேனு ஒருவன் மட்டும் இது வரை ஒரு டன் இரும்பு சேகரித்திருக்கிறானே.''

''இதை உங்களுக்குச் சொன்னது யார்?''

''கேஞதான் சொன்ஞன்.''

''அப்படியா சேதி? உண்மையை நான் சொல்கிறேன், கேளுங்கள். கேஞ ஒரு கிலோ கூட சேகரிக்கவில்லே. ஒரு கிராம் கூட கொண்டு வர வில்லே!''

''நீங்கள் இப்படிச் சொல்லக் கூடாது! நேர்மையானவன் அவன், ஒரு போதும் பொய் சொல்லமாட்டான். வகுப்பில் அவனே முன்மாதிரியானவன் என்று அறிவித்துச் சிறப்பாளர் பட்டியலில் அவன் பெயரை நீங்களே சேர்த் தீர்களே.''

''என்ன? கழிப்பு இரும்பு சேகரிப்பதில் ஒரு தரங்கூட பங்கெடுத்துக் கொள்ளாதவனே எப்படி நான் அவ்வாறு அறிவித்திருக்க முடியும்? வகுப்பில் எல்லாரும் முதல் தரம் இரும்பு சேகரிக்கச் சென்ற போது அவன் தன் தங்கைக்கு நிமோனியா காய்ச்சல் என்று சொன்ஞன். உங்கள் மகள் காய்ச்சல் கண்டு மருத்துவமனேயிலா இருந்தாள்?''

''எந்த மகள்? எனக்கு மகள் இல்லேயே.''

''கேஞதான் சொன்ஞன், தன் தங்கை மருத்துவமனேயில் இருப்பதாகவும் அவளுக்கு ஆரஞ்சுப் பழம் கொண்டு போய்க் கொடுக்கும்படி அவனே நீங் கள் அனுப்பியதாகவும் கூறிஞன்.''

''நம்ப முடியவில்லேயே. அப்படியாஞல் இத்தனே நாட்களாக என்னே அவன் ஏமாற்றியா வந்திருக்கிருன்? இன்று கூட புறப்பட்டுச் சென்றிருக் கிருனே. கழிப்பு இரும்பு சேகரிக்கப் போவதாக அல்லவா கூறிஞன்!''

''இன்று வியாழக்கிழமை. சனிக்கிழமைகளில் மட்டும்தான் சிறுவர்களும் சிறுமிகளும் இரும்பு சேகரிக்கச் செல்கிருர்கள்.''

கேஞவின் தாய் கலங்கிப் போய்விட்டார். ஆசிரியையிடம் விடைபெற்றுக் கொள்வதற்குக்கூட மறந்து போய் அங்கிருந்து எழுந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார். என்ன நினேப்பது, என்ன செய்வது என்றே அவருக்குப் புரிய வில்லே. தாங்க முடியாதபடி தலேயை வலித்தது, ஓய்ந்து போய் உட்கார்ந் திருந்தார். தமது கணவர் மாலேயில் வீட்டுக்குத் திரும்பியதும் கேஞவின் ஆசிரியையிடம் தாம் சென்று பேசியதைப் பற்றி அவரிடம் சொன்ஞர். கேஞ வின் தாயைப் போலவே தந்தையும் அதிர்ந்துவிட்டார். கூண்டில் அடைபட்ட புலியைப் போல் ஆத்திரமாய் உறுமிக் கொண்டு அறையினுள் அவர் சுற்றிச் சுற்றி நடந்து வந்தார்.

''இத்தனே நாளாய் முழு நேரமும் பையன் பனியிலே சறுக்கிச் சென்று விளேயாடிவிட்டு அல்லவா வந்திருக்கிருன்!'' என்று கூறி, நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவர் அங்கும் இங்கும் சென்ருர். ''எப்படிப் பட்ட புளுகன்! அவனே நாம் வளர்த்திருக்கும் அழகே அழகு!''

''நாம் ஒன்றும் அவனுக்குப் பொய் பேசக் கற்றுத் தரவில்லே!'' என்ருர் கேனுவின் தாய்.

''எதற்கும் ஓர் அளவு உண்டு! அவன் வரட்டும், என்ன செய்கிறேன் பார்!'' என்று இரைந்தார் அவன் தந்தை.

அன்று மாலே கேனு வீட்டுக்குத் திரும்பி வர நெடு நேரமாகிவிட்டது. அன்று அவனும் அவன் நண்பன் கோஷாவும் நெடுந் தொலேவிலிருந்த பூங்காவுக்குச் சென்று விளேயாடினர். அங்கே ஆற்றங்கரையில் குன்றிலிருந்து பனிச் சரிவில் சறுக்கிச் சென்று உற்சாகமாக விளேயாடிவிட்டுத் திரும்பினர்.

ஆகவே நேரங் கழித்தே அன்று அவன் வீட்டுக்கு வந்தான். கோட்டு முழுதும் வெண்பனி ஒட்டியிருந்தது. அவனுக்கு மூச்சு வாங்கியது, களேத்துப் போயிருந்தான். அவனது உருண்டை முகம் செக்கச் சிவந்திருந்தது. நெற்றிக்கும் கீழே தணிந்துவிட்ட அவனது குல்லாய் அவன் பார்வையை மறைத்தது. தலேயை நன்ருக உயர்த்தி அவன் தன் முன்னுல் இருந்தவற்றை பார்க்க வேண்டியிருந்தது.

அவன் தாயும் தந்தையும் ஓடி வந்து பனியிலே தோய்ந்து போன கோட்டை அவனிடமிருந்து கழற்றிஞர்கள். அவன் உடலிலிருந்து ஆவி எழுந்தது.

''பாவம், பையன் எப்படிப் பாடுபட்டு வேலே செய்துவிட்டு வந்திருக்கிருன்! வியர்த்து அல்லவா வழிகிறது!'' என்ருர் அவன் தந்தை.

''இன்று நான் நூற்றைம்பது கிலோ சேகரித்தேன்'' என்ருன் கேனு.

''எவ்வளவு? இன்னெருு தரம் சொல்லு!''

''நூற்றைம்பது கிலோ.''

''எல்லா சாதனேகளேயும் மிஞ்சி விடும்படியான சாதனேயாக இருக்கிறதே! யாவற்றையும் கூட்டிப் பார்ப்போம்'' என்று சொல்லி அவன் அப்பா தமது நோட்டுப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். ''சரி முதல் நாளன்று 43 கிலோ சேகரித்தாய், அடுத்த நாள் 50 கிலோ, மொத்தம் 93 கிலோ. பிறகு 64—மொத்தம் 157. அதன் பிறகு 69—மொத்தம்... உம்-ம்-ம்...''

''மொத்தம் 226 கிலோ'' என்று கூட்டிச் சொன்னுன் கேனு.

''சரி, ஏனேயவற்றையும் சேர்த்துக் கூட்டுவோம்'' என்று சொல்லி ஏனேய நாட்களது கணக்கையும் சேர்த்துக் கூட்டிச் சென்ருர். ஒரு டன்னுக்கும் அதிகமாகிவிட்டது.

''பெருமைக்குரிய சாதனேதானே?''

''ஆமாம், வகுப்பில் நான் முதல் நிலே வகிப்பேன். ஆயினும் அதற்குள் நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது.''

''நிச்சயமாகச் சொல்ல முடியாதா? ஆனுல் நான் நிச்சயமாகச் சொல்கிறேன்!'' என்று அவன் அப்பா ஆத்திரமாகக் கூச்சலிட்டவாறு முட்டியை

உயர்த்திப் படாரென மேசை மீது அடித்தார். ''நீ அண்டப் புளுகன்! திருட்டுப் பையன்! சரியான புல்லுருவி!''

''புல்-புல்லுருவியா? என்ன அது?''

''புல்லுருவி தெரியாதா உனக்கு?''

''எ-எனக்குத் தெரியவில்லையே.''

''தான் உழைக்காமல் பிறர் உழைப்பில் வாழ முயலுகிறனே, அவனுக்குப் பெயர் புல்லுருவி.''

''நான் அப்படி ஒன்றும் முயல... முயலவில்லையே'' என்று முனகினன் கேனு.

''முயலவில்லை என்ற சொல்கிறய்? நாள்தோறும் சறுக்கு ஊர்தியிலே ஏறி சறுக்கிச் சென்று விளையாடிவிட்டுப் பொழுதெல்லாம் அரும் பாடுபட்டு உழைத்ததாகப் பெற்றேரிடம் கூறியவன் எவன்? ஆசிரியை கொடுத்தனுப்பிய குறிப்பை வீட்டில் தராமலிருந்தவன் எவன்? நான் சும்மா விடப் போவதில்லை, உண்மையைச் சொல்லு!

''குறிப்பா?.. அது என்ன குறிப்பு?''

''தெரியாத மாதிரி பாவனை செய்யாதே! ஆசிரியை உன்னிடம் கொடுத்த அந்தக் குறிப்பைச் சொல்கிறேன், எங்கே அது?'' என்று அதட்டினர் அவன் அப்பா.

''என்னிடம் இல்லையே அது.''

''நீ அதை என்ன செய்தாய்?''

''குப்பைக் கொட்டும் குழாயினுள் போட்டேன்.''

''குப்பையிலா எறிந்தாய்?'' என்று சீறியபடித் திரும்பவும் ஒரு தரம் முட்டியால் மேசையில் பலமாகத் தட்டி மேசையிலிருந்த கோப்பைகளைத் தடதடக்கச் செய்தார். ''ஆசிரியை உன்னிடம் அந்தக் குறிப்பை எதற்காகத் தந்தார்? குப்பையிலே எறிவதற்காகவா?''

''போதும், இப்படியா கத்துவது? பையன் மிரண்டு விடுவான்'' என்று கேனுவின் தாய் இடைமறித்துக் கூறினர்.

''இவன் ஒன்றும் மிரளுகிறவன் அல்ல! ஏனையோரை மிரளச் செய்கிறவன் இவன்! நாக்கில் நரம்பின்றி நம்மிடம் இவன் கூறியிருக்கும் பொய்களை நினைத்துப் பார்! ஒரு டன் கழிப்பு இரும்பைச் சேகரித்தானும்! சிறப்பாளர் பட்டியலில் இவன் பெயர் சேர்க்கப்பட்டு விட்டதாம்! என்னென்பது இந்த அவமானத்தை! இவனுடைய பள்ளிக்கூடத்தில் இனி என்னல் முகத்தைக் காட்ட முடியுமா? வெட்கக் கேடு!''

''கூச்சல் போட்டுப் பயனில்லை. பையனுக்கு நாம் தக்க தண்டனை அளிக்கவேண்டும். கூச்சல் போடுவதால் அவனுக்குப் படிப்பினை கிடைத்துவிடப் போவதில்லை. தவிரவும் இதனல் அவனது அகநிலை பாதிக்கப்படக் கூடும்.''

''கவலைப் படாதே நீ, எதுவும் பாதிக்கப்பட்டு விடாது. சரியானபடி இவனுக்குத் தண்டனை அளித்தாக வேண்டும், சந்தேகமில்லை.'' அவன் தந்தை நெடு நேரம் இரைந்து கொண்டிருந்தார். கேனு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இனி எந்நாளும் பொய் சொல்ல மாட்டேன் என்று உறுதி மொழி அளித்தான். வேலை செய்ய வேண்டிய நேரத்தில் சறுக்கி விளையாட மாட்டேன், எல்லா மாணவர்களுடனும் சேர்ந்து கழிப்பு இரும்பு சேகரிப்பேன் என்றான். ஆனால் அவன் தந்தை அவனை மன்னித்து விடவில்லை.

யாவற்றுக்கும் முடிவில் கேனு தக்கபடி தண்டிக்கப்பட்டான். அவனுக்கு என்ன தண்டனை கிடைத்ததென்று விவரிக்க வேண்டியதில்லை. தண்டிப்பதற்கு எத்தனையோ வழிகள் உண்டென்பது யாவருக்கும் தெரிந்ததுதான். ஆகவே தண்டிக்கப்பட்டான் என்பதை மட்டும் குறிப்பிட்டால் போதும்.

அவ்வாண்டில் குளிர் காலத்தில் அவன் திரும்பவும் ஒரு தரங்கூட பனியில் சறுக்கி விளையாடவில்லை. வெண்பனி விரைவில் உருக ஆரம்பித்து விட்டது, குளிர் காலம் முடிவுற்று விட்டது. அவ்வாண்டில் அவன் கழிப்பு இரும்பு சேகரிக்கவும் செல்லவில்லை. ஏனெனில் பள்ளி ஆண்டின் முடிவு நெருங்கி வந்தது. எல்லாரும் முழு நேரத்தையும் படிப்பிலே செலவிட வேண்டியிருந்தது. மோசமான மதிப்பெண் வாங்கவோ வகுப்பில் பின்தங்கிய நிலையில் விடப்படவோ யாரும் விரும்பவில்லை. ஆகவே கழிப்பு இரும்பு சேகரிக்கும் இயக்கம் அவ்வாண்டில் அதோடு முடிவடைந்தது.

மசிக் கறை

வகுப்பில் எல்லாரையும் ஃபேத்யா ரீப்கின் கிளுகிளுத்துச் சிரிக்க வைத்தது பற்றி உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அடிக்கடி அவன் எல்லாச் சிறுரையும் சிரிக்க வைப்பது வழக்கம். பாட நேரமா, இடை வேளையா என்று அவன் கவலைப்படுவதில்லை. ஒரு நாள் என்ன ஆயிற்று என்று சொல்கிறேன். மசிப் புட்டியை வைத்துக் கொண்டு ஃபேத்யாவும் கிரிஷாவும் சண்டை போட்டுக் கொண்டதிலிருந்து யாவும் ஆரம்பமாயின. உண்மையில் அதை ஒரு சண்டையென்க் கூற முடியாது. யாருக்கும் அடி பட்டு விடவில்லை, பெரிதாய் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. மசிப் புட்டியை ஒருவரிடமிருந்து ஒருவர் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று இருவரும் இழுத்துப் பறித்துக் கொண்டு நின்றனர். முடிவில், புட்டியிலிருந்த மசியில் சில துளிகள் வெளியே சிதறின. ஒரு துளி நேரே ஃபேத்யாவின் நெற்றியிலே தெறித்துக் கரிய கறையாகி விட்டது.

ஃபேத்யாவுக்கு முதலில் கோபம் வந்தது. ஆனால் வகுப்பில் எல்லாரும் அவனைப் பார்த்துச் சிரித்ததைக் கண்டதும் தனது நெற்றியில் மசிக் கறை பட்டது நல்லதுதான் என்று நினைத்தான். அதைக் கழுவாமல் இருந்தால் வேடிக்கையாகவே இருக்குமென முடிவு செய்தான்.

அடுத்த பாடத்துக்கு மணி அடித்தது. வகுப்பு அறைக்குள் ஆசிரியை வந்தார், பாடம் ஆரம்பமாகியது. குழந்தைகள் எல்லாரும் ஃபேத்யாவைத் திரும்பித்திரும்பிப் பார்த்து வாய்க்குள் கிளுகிளுத்துக் கொண்டவாறு அமர்ந்திருந்தனர். எதுவும் செய்யாமல் சும்மாயிருந்தே யாவரையும் தன்னால் சிரிக்க வைக்க முடிந்தது குறித்து ஃபேத்யாவுக்குப் பெருமையாகவே இருந்தது. உடனே அவன் மசிப் புட்டியில் விரலை விட்டு மூக்கிலும் கொஞ்சம் மசியைத் தடவிக்கொண்டான். அவனுடைய முகம் கோமாளி வேடம் பூண்டவனுடையது போன்றதாய் இருக்கவே எல்லாருக்கும் அடக்க முடியாதபடி சிரிப்பு வந்தது. சிலர் வாய்விட்டுச் சிரித்தும் விட்டனர். வகுப்பில் கிளுகிளுப்பும் சிரிப்புமாக இருக்க என்ன காரணமென்று ஆசிரியைக்கு முதலில் விளங்கவில்லை பிறகு ஃபேத்யாவின் முகத்தைப் பார்த்ததும் அவர் பாடத்தை நிறுத்திவிட்டு,

''உன் முகத்தில் இருப்பது என்ன? மசியா?'' என்று வியப்புடன் அவனைக் கேட்டார்.

''ஆமாம்'' என்று ஃபேத்யா தலையை ஆட்டினான்.

''இந்திய மசியா?'' என்று அவனது சாய்வு மேசையில் இருந்த புட்டியைச் சுட்டிக் காட்டிக் கேட்டார்.

''ஆமாம்'' என்று இளித்துக் கொண்டான் ஃபேத்யா.

ஆசிரியை தலையைக் கவிழ்த்துக் கொண்டு தமது மூக்குக் கண்ணுடிக்கு மேல் அவனை உற்றுப் பார்த்து, அவன் முகத்திலிருந்த கறைகளைப் பரிசீலித்தார். பிறகு தலையை அசைத்துக் கவலை தொனிக்கும் குரலில் கூறினர்:

''நீ செய்திருக்கும் இந்த வேலை அபாயமானது.''

''அபாயமானதா?'' என்று சற்றுக் கலக்கமடைந்தவனுகக் கேட்டான் ஃபேத்யா.

''ஆமாம், ஏனென்றல் இந்திய மசி நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களால் ஆனது. இந்த மசிப் பட்டதும் தோலில் நமைச்சல் உண்டாகும். அந்த இடத்தில் சிறு சினைப்புகள் தோன்றி அரிப்பாய் அரிக்கும். பிறகு இந்த சினைப்புகள் கொப்புளப் புண்களாகி முகமெங்கும் பரவும்.''

ஃபேத்யா பீதியடைந்து விட்டான். அவனுக்கு முகம் வாடிவிட்டது, வாய் பிளந்து கொண்டு தொங்கிற்று.

''இனி நான் மசியைப் பூசிக் கொள்ள மாட்டேன்'' என்று முனகிக் கொண்டான் அவன்.

''இனி நீ பூசிக் கொள்ள மாட்டாய் என்றுதான் நானும் நினைக்கிறேன்'' என்று சொல்லி ஆசிரியை திரும்பவும் பாடத்தை ஆரம்பித்தார்.

கைக்குட்டையால் ஃபேத்யா முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். பிறகு கிரிஷாவின் பக்கம் திரும்பிக் கலக்கம் கொண்ட குரலில் மெல்ல அவனிடம் கேட்டான்:

''இன்னும் இருக்கிறதா?''

''அப்படியேதான் இருக்கிறது'' என்று கிசுகிசுக்கும் குரலில் கிரிஷா பதிலளித்தான்.

ஃபேத்யா மறுபடியும் கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். பிறகு மசி ஒத்தும் காகிதத்தால் முகத்தைத் தேய்த்தான். ஆனல் மசிக் கறை போகவில்லை.

கிரிஷா தனது மசி ரப்பரை அவனிடம் கொடுத்து அதால் தேய்த்துப் பார்க்கச் சொன்னான்.

''இந்தா, இதால் தேய்த்தால் மசிக் கறை மறைந்துவிடும். இதாலும் கறையை நீக்க முடியாவிட்டால் உன் முகத்திலிருந்து இந்தக் கறையை அகற்ற முடியாது என்றுதான் அர்த்தம்.''

ஃபேத்யா அந்த சொர சொரப்பான ரப்பரால் முகத்தைத் தேய்த்துப் பார்த்தான். அப்போதும் கறை மறையவில்லை. நீரில் முகத்தை அலம்பிக் கொள்ளலாம் என்று நினைத்து கையை உயர்த்திக் காட்டினன். ஆனல் ஆசிரியை அதைக் கவனியாது பாடத்தை நடத்திக்கொண்டிருந்தார். ஃபேத்யாவால் அமைதியாய் இருக்க முடியவில்லை. இருக்கையிலிருந்து எழுந்து நின்று

கையைத் தலைக்கு மேல் முழு அளவுக்கும் உயர்த்திக் காட்டினான். ஆசிரியை அவன் பக்கம் திரும்பி என்ன வேண்டும் என்று கேட்டார்.

''வகுப்பிலிருந்து வெளியே சென்று முகத்தைக் கழுவிக் கொள்ள அனுமதி வேண்டும்'' என்று வேண்டினான், அவனைப் பார்ப்பதற்குப் பரிதாப மாக இருந்தது.

''அரிக்கவா ஆரம்பித்து விட்டது?''

''இல்லை... இன்னும் அரிக்க ஆரம்பிக்கவில்லை.''

''அப்படியானால் உட்கார். இடைவேளையில் போய் முகத்தைக் கழுவிக் கொள்ளலாம்.''

ஃபேத்யா உட்கார்ந்து கொண்டான். மறுபடியும் அவன் மசி ஒத்தும் காகிதத்தால் முகத்தைத் தேய்க்க முற்பட்டான்.

''அரிக்கிறதா என்ன?'' என்று கிரிஷா அவன் காதுக்குள் கேட்டான்.

''உ-ஹூம்... அரிப்பதாகத் தெரியவில்லை... இல்லை, கொஞ்சம் கொஞ்ச மாக அரிப்பு ஆரம்பமாகும் போல் இருக்கிறது. நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஆமாம், அரிக்க ஆரம்பித்துவிட்டது! என் முகத்தைப் பார், சினப்புகளா தோன்றிவிட்டன?''

''இன்னும் இல்லை. ஆனால் மசிக் கறையைச் சுற்றிலும் சிவப்பாய் இருக் கிறது.''

''சிவப்பாய் இருக்கிறதா? சிவப்பு எங்கிருந்து வந்தது? சினப்புகளும் கொப்புளங்களும் வரப் போவதற்கு அறிகுறியாக இருக்குமோ?''

ஃபேத்யா மறுபடியும் எழுந்து நின்று கையை உயர்த்திக் காட்டினான், வெளியே செல்ல அனுமதி கேட்டான்.


''அரிக்கிறது'' என்று சிணுங்கினான். சிரிப்பும் வேடிக்கையும் மறைந்து போய் இப்போது அவன் அழுகிற நிலையில் இருந்தான்.

''அரிக்கட்டும். அப்போதுதான் உனக்குப் புத்தி வரும், அபாயகரமான வற்றைத் திரும்பவும் முகத்தில் பூசிக் கொள்ளாமல் இருப்பாய்'' என்றார் ஆசிரியை.

ஃபேத்யா உட்கார்ந்து கொண்டான். வேதனை தாங்கமாட்டாமல் துன் புற்றான். பாடம் முடிவின்றி நீண்டு சென்றது. முகத்தை அவன் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அரிப்பதாகவும் சினைப்புகள் தோன்றி முகம் வீங்கிவிட்டதாகவும் நினைத்தான்.

''முகத்தைச் சொரியாதே, புண்ணாகிவிடும்'' என்று கிரிஷா அவனிடம் சொன்னான்.

முடிவில் மணி அடித்தது. உடனே ஃபேத்யா எழுந்து வெளியே ஓடினான். நேரே அலம்பு தட்டத்திடம் ஓடி இடைவேளை முழுதும் திரும்பத் திரும்ப முகத்தில் சோப்பைத் தேய்த்து அலம்பிக் கொண்டு நின்றான். அவனது



வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் எல்லாரும் சுற்றிலும் நின்று வேடிக்கை பார்த்தார்கள். பல தரம் தேய்த்துக் கழுவிய பின் மசிக் கறைகள் மறைந்து அவன் முகம் சுத்தமாகியது.

அதன் பிறகு அந்த வாரம் முழுதும் ஃபேத்யாவுக்குக் கிலியாகவே இருந்தது. முகத்தில் சினைப்புகள் வந்துவிடுமென்று அவன் அச்சத்துடன் காத்திருந்தான். ஆனால் சினைப்புகள் தோன்றவில்லை. வகுப்பில் பாடம் நடைபெறும் போது அவன் சிரிப்பதை நிறுத்திக் கொண்டு விட்டான். இடைவேளைகளின் போது மட்டுமே இப்போது அவன் சிரித்தான்.

சாமர்த்தியம்

வோவாவும் நானும் வெளியே சென்று விளையாட முடியவில்லை. சர்க்கரைக் கிண்ணத்தை உடைத்ததற்காக நாங்கள் வீட்டிலே இருக்க வேண்டுமென்று தண்டிக்கப்பட்டிருந்தோம். அம்மா வெளியே சென்றபின் சற்று நேரத்துக்கு எல்லாம் எங்கள் நண்பன் கோஸ்த்யா வந்து சேர்ந்தான்.

''மூவருமாய் ஏதாவது விளையாடலாம்'' என்றான் அவன்.

''ஒளிந்து விளையாடலாம்'' என்றேன் நான்.

''ஒளிந்து கொள்ள இங்கே இடம் இல்லை'' என்றான் கோஸ்த்யா.

''ஏன் இல்லை? உன்னால் கண்டுபிடிக்க முடியாதபடி நான் ஒளிந்து கொள்கிறேன், பார்! சாமர்த்தியம் இருந்தால் எதுவும் செய்யலாமே.''

''சரி, நீ போய் ஒளிந்து கொள். உன்னை நான் கண்டு பிடிக்கிறேனா, இல்லையா, பார்க்கலாம்.''

கோஸ்த்யா முன்னறைக்குச் சென்று இருபத்தைந்து வரை எண்ண ஆரம்பித்தான். வோவா படுக்கை அறைக்குள் ஒளிந்து கொள்வதற்காக ஓடினான்.

நான் இருட்டு உக்கிராண அறைக்கு ஓடினேன். அங்கே தரையில் கிடந்த கித்தானை என் மீது இழுத்துச் சுருட்டிக் கொண்டு ஒரு மூலையில் படுத்துக் கிடந்தேன்.

கோஸ்த்யா இருபத்தைந்து எண்ணி முடித்ததும், ஒவ்வொரு அறையாகச் சென்று எங்களைத் தேட ஆரம்பித்தான். கட்டிலுக்கு அடியில் ஒளிந்திருந்த வோவாவை உடனே அவன் பிடித்துவிட்டான். பிறகு என்னைப் பிடிப்பதற்காக ஒவ்வோர் இடமாக வந்து தேடிப் பார்த்தான். முடிவில் உக்கிராண அறைக்குள்ளும் வந்து எனக்குப் பக்கத்தில் நின்று சுற்றிலும் பார்த்துவிட்டு, ''வேண்டாத சாமான்களைத்தவிர இங்கு ஒன்றையும் காணுமே'' என்று பலக்கக் கூறினான். ''உடைந்த நாற்காலியும் பழைய கித்தான் சுருளும்தான் இருக்கின்றன.''

பிறகு படுக்கையறைக்குச் சென்றான்.

''எங்கே அவன்? அவன் எங்கே ஒளிந்து கொண்டான்? நீ பார்க்கவில்லையா?'' என்று அவன் வோவாவைக் கேட்டது என் காதில் விழுந்தது.

''ஆடை அலமாரியில் உட்கார்ந்திருப்பான்.'' என்று சொல்லி வோவா அதைத் திறந்து பார்த்துவிட்டு, ''இங்கே இல்லையே'' என்றான்.

''மேடை அலமாரிக்குள் இருப்பான்... இல்லையே! எங்கேதான் ஒளிந்திருக்க முடியும் அவன்?'' என்றான் கோஸ்த்யா.

''எனக்குத் தெரியும்'' என்று வோவா கத்தினான். ''இந்த நிலைப்பெட்டிக்குள் இருக்கிறான்.''

''ஆமாம்! இதற்குள்தான் இருக்க வேண்டும். முன்பே இதைப் பற்றி நினைக்காமல் எங்கெங்கோ போய்த் தேடினோமே!''

இருவருமாய் அந்தப் பெட்டியைத் திறக்க முயன்றனர். எவ்வளவோ முக்கியும் மூடியை அவர்களால் உயர்த்த முடியவில்லை.

''கெட்டியாக அல்லவா மூடப்பட்டிருக்கிறது'' என்றான் கோஸ்த்யா.

''உள்ளே உட்கார்ந்து மூடியை இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பான்.''

மூடியில் ஓங்கித் தட்டி இருவரும் கூச்சலிட்டனர்:

''போதும், வா வெளியே!''

''பெட்டியைத் தலைகீழாகப் புரட்டுவோம்'' என்றான் வோவா. ''தள்ளு! இன்னும் பலமாய்த் தள்ளு! உம்-உம்-உம்!'' தடாரெனப் புரண்டு விழுந்தது பெட்டி. வீட்டுச் சுவர்கள் அதிர்ந்தன.

''அவன் இதற்குள் இருப்பதாகத் தெரியவில்லை'' என்றான் கோஸ்த்யா. ''தலைகீழாய் எப்படி உட்கார்ந்திருப்பான் அவன்?''

''ஒருவேளை சமையலறையில் அடுப்பு மேடைக்கு அடியில் ஒளிந்து கொண்டிருப்பான்.''

இருவரும் சமையலறைக்குள் ஓடினர். அடுப்படி மேடைக்கு அடியில் இருவரும் கையை விட்டுத் துழாவிக் கூச்சலிட்டனர்:

''வா வெளியே!''

சிரமப்பட்டு நான் சிரிப்பை அடக்கிக் கொண்டு படுத்துக் கிடந்தேன்.

''இதோ!'' என்று கத்தினான் வோவா.

''இழு, இழு!''

''கையில் அகப்படவில்லை. ஆகா! இதோ அகப்பட்டுக் கொண்டு விட்டான். சீச்சீ... பழைய கம்பளி பூட்சுகளை அல்லவா பிடித்து இழுத்திருக்கிறோம்! எங்கே போனான் இவன்?''


''தெரியவில்லையே. இனி நான் விளையாடப் போவதில்லை, நீ வெளியே வந்துவிடு!'' என்று கோஸ்த்யா கூச்சலிட்டான். ''நாங்கள் விளையாடப் போவதில்லை! நீ வேண்டுமானால் ஒளிந்து கொண்டு இரு.''

பிறகு இருவரும் படுக்கை அறைக்குத் திரும்பிச் சென்றார்கள்.

''இழுப்பறைக்குள் இருப்பானோ?'' என்று வோவா கேட்டான். இழுப்பறை இழுக்கப்படும் கிறீச்சொலி கேட்டது.

''இங்கு இருக்க மாட்டான் அவன். இழுப்பறைக்குள் யாராலும் ஒளிந்து கொள்ள முடியாது'' என்று கோஸ்த்யா கூறியது என் காதில் விழுந்தது. கோஸ்த்யா அங்கிருந்து முன்னறைக்கு வந்தான்.

''இழுப்பறையில் ஒளிந்து கொள்ள முடியுமே'' என்றான் வோவா. அவன் ஏனைய இழுப்பறைகளையும் இழுக்கும் சப்தம் கேட்டது.



பிறகு திடுமென வோவா கூச்சலிட்டான்:

''கோஸ்த்யா, இங்கே வாயேன்!''

''அவனைப் பிடித்துவிட்டாயா?''

''இல்லை, என்னால் வெளியே வர முடியவில்லை.''

''எங்கிருந்து வெளியே வர முடியவில்லை?''

''இழுப்பறையிலிருந்து. உள்ளே மாட்டிக் கொண்டு விட்டேன்.''

''நீ ஏன் அதனுள் போனாய்?''

''இழுப்பறைக்குள் அவனால் பதுங்கிக் கொள்ள முடியுமா என்று பார்ப்பதற்காக உள்ளே போனேன்.''

நான் அடக்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்துவிட்டேன். இதைக் கேட்டதும் கோஸ்த்யா உக்கிராண அறைக்குள் ஓடி வந்தான்.

''முதலில் என்னை இங்கிருந்து வெளியே தூக்கு!'' என்று வோவா கூக்குரலிட்டான்.

''கத்தாதே நீ! இங்கிருந்துதானே சிரித்தான், ஆனால் ஆளைக் காணுமே.''

''என்னை வெளியே தூக்கு! எனக்குப் பயமாய் இருக்கிறது!''

கோஸ்த்யா ஓடிச் சென்று அவனை இழுப்பறையிலிருந்து தூக்கினான். உடனே இருவருமாய் உக்கிராண அறைக்கு ஓடி வந்தார்கள். கோஸ்த்யா என் மீது இடறிக் கொண்டு கீழே விழுந்தான்.

''ஓட்டை உடைசல்களை ஏன்தான் இங்கே போட்டு வைத்திருக்கிறார்களோ?'' என்று முணுமுணுத்தவாறு காலால் ஓங்கி உதைத்தான்.

''ஏய், என்னை ஏன் உதைக்கிறாய்?'' என்று கூவி நான் கித்தானுக்குள்ளிருந்து வெளியே வந்தேன்.

''ஓகோ! இங்குதானா ஒளிந்திருந்தாய்? உன்னைப் பிடித்துவிட்டேன்'' என்று வெற்றி முழக்கமிட்டு முன்னறைக்கு ஓடினான் கோஸ்த்யா.

''டக்கு-டக்கு, கோல்யா! உக்கிராண அறையிலே கோல்யா!'' என்று அவன் தட்டினான்.

''தட்டியது போதும், நிறுத்து! உன்னுடன் நான் விளையாடவில்லை. காலால் உதைப்பது விளையாட்டு அல்ல'' என்று சொல்லிவிட்டு நான் படுக்கை அறைக்குச் சென்றேன்.

அங்கே நான் கண்ட காட்சி என்னைத் திடுக்குறச் செய்துவிட்டது. யாவும் மூலைக்கு ஒன்றாக எறியப்பட்டு அறை அலங்கோலமாக இருந்தது. ஆடை அலமாரி திறந்து கிடந்தது, இழுப்பறைகள் வெளியே இழுத்து விடப்பட்டுக் கீழே விழும் நிலையில் தொங்கின. துணிமணிகள் தரையிலே சிதறிக் கிடந்தன. நிலைப்பெட்டி குப்புற கவிழ்க்கப் பட்டிருந்தது.

எஞ்சிய பிற்பகல் முழுதும் நாங்கள் வேலை செய்து படுக்கை அறையை ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது.

பனிச்சறுக்குக் களம்

இலையுதிர் காலத்தில் முதன்முதல் தரையிலே பனி இறுகிக் கெட்டியான போது குளிர் காலம் மெய்யாக ஆரம்பமாகிவிட்டதென யாரும் நம்பவில்லை. கெட்டிப் பனி விரைவில் மீண்டும் உருகியோடிவிடும் என்றே எல்லாரும் நினைத்தனர். ஆனால் மீஷாவும் கோஸ்த்யாவும் நானும் எங்களது பனிச்சறுக்குக் களத்தை அமைத்திட இதுவே தக்கத் தருணமென முடிவு செய்தோம். எங்களது வெளிமுற்றத்தில் ஒரு சிறு தோட்டம் இருந்தது. உண்மையில் அதைத் தோட்டம் என்பதற்கில்லை, மலர் பாத்திகள் இரண்டும் அவற்றைச் சுற்றிலும் புல் தரையுமாகிய ஒரு பரப்பு தோட்டமென அழைக்கப்பட்டுச் சுற்றிலும் குட்டைப் படல் வேலியால் அடைக்கப்பட்டிருந்தது. குளிர் காலத்தில் எப்படியும் மலர்ப் பாத்திகள் வெண்பனியால் மூடப்பட்டு விடுமாதலால், இந்தத் தோட்டத்தில் எங்களது பனிச் சறுக்குக் களத்தை அமைப்பதென்று நாங்கள் தீர்மானித்தோம்.

''முதலில் நாம் வீட்டு நிர்வாக மேலாளர் திமீத்ரி சவேலிவிச் இடம் அனுமதி பெறவேண்டும்'' என்றான் கோஸ்த்யா. ''அவருடைய அனுமதியின்றி நாம் வேலை தொடங்கக் கூடாது, துப்புரவாளர் நம்மைத் துரத்தியடித்து விடுவார்.''

''அவர் அனுமதிக்காவிடில் என்ன செய்வது?'' என்று கேட்டான் மீஷா. ''பார்ப்பதற்கு அவர் ஒரு மாதிரியான ஆளாக அல்லவா இருக்கிறார்?''

''அவர் அனுமதிப்பாரென்றே நான் நினைக்கிறேன்'' என்றான் கோஸ்த்யா. ''திமீத்ரி சவேலிவிச் நல்லவர்தான், நாம் மட்டும் அவரிடம் சாமர்த்தியமாக நடந்து கொண்டால் நிச்சயம் அனுமதித்து விடுவார்.''

''அது எப்படி சாமர்த்தியமாக நடந்து கொள்வது?''

''பணிவாகவும் இதமாகவும் பேச வேண்டும். அப்போது இவர்கள் எல்லாருமே வழிக்கு வந்துவிடுதவார்கள். பல சந்தர்ப்பங்களில் நாம் பணிவு நயமின்றி ஏதாவது சொல்லிவிடுகிறோம், காரியம் கெட்டுவிடுகிறது.''

''பணிவு நயமின்றி எதுவும் சொல்ல மாட்டேன், எப்படியும் அவர் முன்னால் சொல்லமாட்டேனென உறுதி மொழி கூறுகிறேன்'' என்றான் மீஷா.

''சரி, வீட்டு நிர்வாக அலுவலகத்துக்குப் போவோம், வா. நீங்கள் எல்லாரும் மௌனமாக இருங்கள், நான் பேசுகிறேன்.''

மீஷா சரியென்று தலையை ஆட்டினான். நாங்கள் புறப்பட்டுச் சென்றோம். எங்கள் அதிர்ஷ்டம் மேலாளர் அவரது அறையில் இருந்தார். காகிதங்கள்



குவிந்திருந்த மேசைக்கு முன்னல் அமர்ந்து வேலே செய்து கொண்டிருந் தார். இந்தக் காகிதங்களுக்கிடையே இருந்த ஒரு நோட்டுப் புத்தகத்தைத் திறந்து பார்த்து அதிலிருந்த எண்களே ஒரு காகிதத்தில் குறித்துக் கொண் டிருந்தார்.

''வணக்கம், திமீத்ரி சவேலிவிச்!'' என்ருன் கோஸ்த்யா பணிவுடன்.

''வணக்கம், தம்பிகளே, வணக்கம்!'' என்று அவர் தலேயை உயர்த்தாமலே கூறிவிட்டு, நோட்டுப் புத்தகத்தில் வரிசையாய் இருந்த எண்கள் மீது விரலே நகர்த்திச் சென்ருர்.

''திமீத்ரி சவேலிவிச், உங்களேப் பார்ப்பதற்காக வந்திருக்கிருேம்.''

''அதுதான் தெரிகிறதே. தம்பி களே, எதற்காகப் பார்க்க வந்திருக் கிறீர்கள்?''

''உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்.''

''என்ன விஷயம்?''

''திமீத்ரி சவேலிவிச், நாங்கள் உங் களிடம் ஒன்று கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிருேம்: எங்கள் வெளிமுற்றத்தில் நீங்கள்தானே விளே யாட்டு வசதிகளுக்கு ஏற்பாடு செய் கிறீர்கள்?''

''எந்த மாதிரியான விளேயாட்டு வசதிகள்?'' என்று அவர் நோட்டுப் புத்தகத்தின் எண்களில் ஒன்றின் மீது விரலே வைத்து அழுத்தியபடி மூக்குக் கண்ணுடிக்கு மேல் எங்களே உற்று நோக்கினர்.

''இல்லே, வீட்டு நிர்வாக அலுவலக மேலாளர் என்ற முறையில் இங்கு



விளையாட்டு வசதிகளுக்கு நீங்கள் ஏற்பாடு செய்ய முடியும் என்பதால் உங்களிடம் வந்திருக்கிறோம்.''

மேலாளர் விரலை வைத்து அழுத்தியிருந்த எண்ணுக்கு எதிரே பென்சிலால் கோடிட்டுக் குறித்துவிட்டுக் கையை உயர்த்தித் தலை முடிகளைக் கோதிவிட்டுக் கொண்டு கூறினார்:

''எனக்குத் தெரிந்தவரை இந்த வசதிகளுக்கு நீங்களேதான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.''

''அது சரிதான், நாங்களேதான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஆனால் உங்களுடைய உதவி எங்களுக்கு வேண்டியிருக்கிறதே.''

மேலாளர் தலையை உயர்த்தி எங்களைப் பார்த்துவிட்டுக் கேட்டார்:

''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''குளிர் காலத்தில் விளையாடுவதற்காக நாங்கள் பனிச்சறுக்குக் களம் அமைத்துக் கொள்ள விரும்புகிறோம்.''

''ஓ! நன்றாய் இருக்குமே! அமைத்துக் கொள்ளுங்கள். எங்கே அமைக்க விரும்புகிறீர்கள்?''

மலர்ப் பாத்திகள் இருக்கும் பரப்பைச் சமதளமாக்கி நீரை நிரப்பி உறைய வைக்க விரும்புவதாகவும், அந்திப் பொழுதில் வெளிச்சமாய் இருக்கும் பொருட்டு மின்விளக்கு அமைத்துக் கொள்ளப் போவதாகவும் கோஸ்த்யா அவரிடம் சொன்னான்.

மேலாளர் எங்கள் திட்டத்துக்கு முழு ஆதரவு தெரிவித்தார். தம்மையும் வந்து வேலை செய்யக் கூப்பிடுவோமோ என்று முதலில் அவர் கொஞ்சம் அச்சத்துடன் எங்களை உற்று நோக்கினார். அப்படி ஒன்றும் இல்லை என்று தெரிந்ததும் அவர் ஆர்வமுடன் கூறினார்:

''தம்பிகளா, போய் வேலையை ஆரம்பியுங்கள். உங்களுக்கு ஏதாவது தேவைப்படுமானால் என்னிடம் வந்து சொல்லுங்கள்.''

''நயமாய் பேசிக் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டாயே நீ'' என்று நாங்கள் அங்கிருந்து வெளியே வந்ததும் கோஸ்த்யாவைப் பாராட்டினான் மீஷா. ''இனிமேல் நானும் இதே முறையில் எல்லாருடனும் பேசப் போகிறேன்'' என்றான் அவன்.

உடனே நாங்கள் எல்லாச் சிறுவர் சிறுமிகளையும் கூப்பிட்டு, இந்த வேலையில் பங்கு கொள்ளாதவர் எவரையும் பிற்பாடு சறுக்குக் களத்தில் விளையாட நாங்கள் அனுமதிக்க மாட்டோமென்று அறிவித்தோம். யாவரும் உடனே வேலையில் இறங்கத் தயாராகிவிட்டனர். வேலியடைப்பை ஐந்து கஜம் நகர்த்தி வைத்துக் களத்தைப் பெரிதாக்க வேண்டும் என்றான் ஒருவன். வேலைகள் யாவும் நல்லபடியாகவே நடந்தேறி வந்தன. அப்போது லியாவின் அம்மா நாங்கள் செய்யும் வேலைகளைப் பார்த்துவிட்டு எங்களிடம் வந்தார்

''என்ன நடக்கிறது இங்கே? மலர்ப் பாத்திகளை ஏன் வீணுக்குகிறீர்கள்?'' என்று கேட்டார் அவர்.

''பனிச்சறுக்குக் களம் அமைக்கின்றோம்'' என்று கோஸ்த்யாவும் நானும் அவரிடம் சொன்னோம்.

''நல்லது. அதற்காக மலர்ப் பாத்திகளைப் பாழாக்குகிறீர்களே, ஏன்? பாத்திகளைச் சுற்றிலும் உங்கள் களத்தை அமைத்துக் கொண்டால் என்னவாம்?''

அப்படிச் செய்தால் சறுக்கி விளையாட முடியாது என்று பணிவாகவும் நயமாகவும் அவரிடம் நாங்கள் விளக்கிக் கொண்டிருந்தோம். அப்போது திடுமென மீஷா எங்களது உரையாடலில் தலையிட்டான்:

''எப்படி நாங்கள் சறுக்கிச் சென்று, இந்த மலர்ப் பாத்திகளைச் சுற்றி வர முடியும்? பாத்திகள் சதுரமாக இருப்பது தெரியவில்லையா உங்களுக்கு? இதுகூட புரியவில்லை என்றால் உங்களுக்கு என்னதான் புரியப் போகிறதாம்?'' என்று நேருக்கு நேர் அவரைப் பார்த்துக் கேட்டான் அவன்.

''எனக்கு எல்லாம் புரிகிறது. பையா, உனக்குத்தான் ஒன்றும் புரியவில்லை'' என்று இரைந்தார் லிலியாவின் அம்மா. ''இதோ நான் மேலாளரிடம் போய்ச் சொல்கிறேன், அதன் பிறகு உனக்குப் புரியும்.''

''ஹ-ஹா! போய்ச் சொல்லிப் பாருங்கள்'' என்று கூறினான் மீஷா. ''அவர் என்ன சொல்கிறார், கேட்டுப் பாருங்கள்.''

மேலாளருடன் பேசிவிட்டுக் கடுங் கோபங் கொண்டவராகத் திரும்பினார் லிலியாவின் அம்மா. பனிச்சறுக்குக் களம் அமைக்க ஏற்கெனவே எங்களுக்கு அனுமதியளித்துவிட்டதாக மேலாளர் அவரிடம் கூறியிருக்க வேண்டும். அவ்வன்னை எங்களுடன் பேசவில்லை, நேரே குடித்தனக்காரர்களிடம் சென்று அவர்கள் தமது குழந்தைகளை வெளியே அழைத்து வந்து விளையாட விடுவதற்கு இடம் இல்லை என்று அறிவித்தார். பிறகு ஐந்தாம் எண் வீட்டில் இருந்தவரிடம் சென்று வேலியடைப்பை நாங்கள் நகர்த்தி வைத்துவிட்டோம், இனி அவர் கார்க் கொட்டிலிலிருந்து காரை வெளியே கொண்டுவர முடியாதெனச் சொன்னார். காரின் உடைமையாளர் உடனே எங்களிடம் ஓடி வந்து, வேலியடைப்பை முன்பிருந்த இடத்துக்கு நகர்த்திவிட வேண்டுமென்றார். கொட்டிலிலிருந்து காரை அவர் வெளியே எடுக்க இடம் விட்டு வைத்திருக்கிறோம் என்று கோஸ்த்யாவும் நானும் அவரிடம் பணிவாகவும் நயமாகவும் எடுத்துரைத்துக் கொண்டிருக்கையில் மீஷா நடுவில் புகுந்து பேசமுற்பட்டான்.

''காரை வெளியே கொண்டுவர எவ்வளவு இடம் வேண்டுமென்கிறீர்கள்?'' என்று அவன் பலத்த குரலில் கேட்டான். ''போதுமான இடம் இருப்பது தெரியவில்லையா? அப்படியா உங்களுக்குக் கண் அவிந்துவிட்டது?''

இதைக் கேட்டதும் அவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. மேலாளரிடம் சென்று அவரை வெளியே அழைத்து வந்தார். முதலில் வேலியடைப்பு

இருந்த இடத்தை அவரிடம் காட்டி, அவ்விடத்துக்கு அது நகர்த்தப்பட வேண்டுமெனக் கோரினர். ஆனால் மேலாளர் ஒன்றும் கெட்டுவிடவில்லை, வேலியடைப்பு புதிய இடத்திலேயே இருக்கலாம் என்று கூறிவிட்டார். அவர்கள் இருவரும் சற்று நேரம் வாதம் புரிந்து கொண்டு நின்றனர். பிறகு கார் உடைமையாளர், மேலாளரைப் பற்றிப் புகார் மனு எழுதப் போவதாகச் சொல்லிவிட்டுப் போய்ச் சேர்ந்தார். மேலாளர் எங்களைப் பார்த்துக் கடிந்து கொண்டார்: ''உங்களுடைய இந்தப் பனிச்சறுக்குக் களம் என் உயிரை அல்லவா வாங்குகிறது? இனிமேல் இதைப் பற்றி எவரேனும் என்னிடம் வந்து புகார் செய்வாராயின், களமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்றுதான் சொல்லப் போகிறேன்.''

''யாவற்றுக்கும் நீதான் காரணம். ஏன்தான் இப்படி முரட்டுத்தனமாகப் பேசுகிறாயோ, தெரியவில்லை! உன்னால் நயமாகப் பேசமுடியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு இரேன்!'' என்று மீஷாவை நாங்கள் கண்டித்தோம்.

''நான் நயமாகத்தான் பேசினேன்'' என்று பதிலளித்தான் மீஷா.

அனேகமாய் எல்லாக் குடித்தனக்காரர்களோடும் நாங்கள் சண்டைக்கு நிற்க வேண்டியதாயிற்று, யாவற்றுக்கும் மீஷாதான் காரணம்.

சில நாட்களுக்குப் பிறகு பனி உருகி ஓடிற்று. எங்கள் வேலைகள் முன்னிலும் விரைவாக நடந்தேறின. தரையை நாங்கள் சமதளமாக்கிக் களத்தைச் சுற்றிலும் வரப்பு அமைத்து, வேலியடைப்புக்கு வர்ணம் பூசினோம். மின்விளக்குக்கு ஏற்பாடு செய்வது ஒன்றுதான் எஞ்சியிருந்த வேலை. எல்லாரிடமிருந்தும் வசூலித்துப் போதிய தொகையைச் சேகரித்து மின் கம்பியும் பல்பும் பல்புக்கொளுவியும் வாங்கி வந்தோம். விளக்குத் தூணுக்கு வேண்டிய உயரமான கம்பம் ஒன்று எங்கள் வெளிமுற்றத்தில் கேட்பாரற்றுக் கிடந்தது. வெள்ளையடித்த தொழிலாளர்கள் மறந்து போய் அதை அங்கே விட்டுச் சென்றிருந்தார்கள். தக்க இடத்தில் குழி தோண்டி அந்தக் கம்பத்தைக் கொண்டு வந்து நட்டோம். ஒன்பதாம் எண் வீட்டுக்காரர் மின் கம்பியை இணைத்துக் கம்பத்துக்குக் கொண்டு வந்து மின்விளக்கை அமைப்பதற்கு எங்களுக்கு உதவினர். அவர் அருமையான மனிதர். அவரைப் பற்றிச் செய்தியேட்டில் எழுத வேண்டுமென விரும்பினோம். ஆனால் வேலை நிறைய இருந்ததால் முதலில் எங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. பிற்பாடு நாங்கள் இதைப் பற்றி மறந்து விட்டோம்.

வேலைகள் முடிவுற்று நாங்கள் விளக்கை எறியவிடப் போன நேரத்தில் எங்கள் முற்றத் துப்புரவாளரான தாஷா அத்தை இடைமறித்தார்.

''பிள்ளைகளே, என்ன வேலை இது? கம்பத்தை நீங்கள் திருப்பிக் கொண்டு போய் வைத்துவிட வேண்டும்'' என்றார் அவர். ''அடுத்த கோடையில் வீட்டுக்கு வெள்ளையடிக்க வருவோருக்கு வேண்டிய கம்பம் இது.''

கம்பத்தை நாங்கள் எவ்விதத்திலும் வீணுக்கிவிட மாட்டோமென கோஸ்த்யா அவரிடம் விளக்கிக் கூறினுன். அவன் நயமாகப் பேசி அவரை உடன் பட வைத்திருப்பான். ஆனுல் வழக்கம் போல் மீஷா நடுவில் புகுந்து காரியத்தைக் கெடுத்து விட்டான்.

''இதோ, நான் அவரிடம் சாமர்த்தியமாகப் பேசிப் பிரச்சினையைச் சமாளிக்கிறேன்'' என்று சொல்லி முண்டிக் கொண்டு அவரிடம் சென்ருன். கோஸ்த்யாவை விலக்கித் தள்ளிவிட்டு அவரிடம் பேச ஆரம்பித்தவன், சில விஞடிகளுக்கெல்லாம் கூச்சலிட முற்பட்டான்: ''கம்பத்தை இங்கே நட்டு வைத்திருக்கிருேம். இதனுல் கம்பத்துக்கு என்ன கேடு வந்துவிடுமென நினைக்கிறீர்கள்? கோடை வரை இது அங்கே மூலையிலே பனிக்கு அடியில் கிடந்து அழிய வேண்டுமென்ரு நினைக்கிறீர்கள்? உங்கள் தலையில் இருப்பது என்ன? களிமண்ணு?''

உடனே தாஷா அத்தை சீற்றமடைந்து மேலாளரிடம் ஓடினுர்.

''உன்னை யார் பேசச் சொன்னது? பேசி யாவற்றையும் கெடுத்து விட்டாயே'' என்று கோஸ்த்யா அவனைக் கடிந்து கொண்டான். ''போன தடவை மேலாளர் அதுவே கடைசி தரமென்று நம்மை எச்சரித்தது உனக்குத் தெரியுமா, இல்லையா?''

நாங்கள் எல்லாரும் மீஷாவின் மீது பாய்ந்தோம்.

''யாவற்றையும் நீ பாழாக்கிவிட்டாய்! நமது வேலைகள் யாவும் வீண் தான்!'' என்று அவனைத் தாக்கிஞேம்.

மீஷா தன்னைத் தானே சபித்துக் கொண்டான்.

''நான்தான் காரணம். நயமாகப் பேச வேண்டுமென்றுதான் விரும்பினேன், என்னையும் அறியாமல் முரட்டுத்தனமாகப் பேசிவிட்டேன்'' என்று அவன் வருந்தினுன்.

எங்கள் துப்புரவாளர் தம்முடன் மேலாளரையும் அழைத்துக் கொண்டு, எங்களை நோக்கி வந்தார். இருவரும் வருவதைப் பார்த்ததும் கம்பத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு பரிதாபமான குரலில் மீஷா புலம்பினுன்:

''எங்கள் கம்பத்தை யாரும் இங்கிருந்து எடுத்துச் செல்ல விடமாட்டேன்! எனக்குக் கிடைக்கும் காசை எல்லாம் சேர்த்து இதற்கான விலையை நான் தந்துவிடுகிறேன்! மதிய உணவுக்காகக் கிடைக்கும் காசைச் செலவு செய்யாமல் சேர்த்துப் பணத்தைக் கட்டிவிடுகிறேன்!''

மேலாளர் பெருமூச்செறிந்து கொண்டு, ''சரி, கம்பத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்ருர்.

தாஷா அத்தை இனி ஒன்றும் செய்வதற்கில்லை. ''இதோடு முடிந்து விட்டதாக நினைக்க வேண்டாம்! உங்களை நான் சும்மா விடப் போவதில்லை!'' என்று கூறிவிட்டுப் போய்ச் சேர்ந்தார் அவர்.

மந்தார நாட்கள் ஆரம்பமாயின. தொடர்ந்து இரு வாரங்களுக்கு யாவும் உருகி எங்கும் சேறும் சகதியுமாக இருந்தன. உறைபனிக் காலத்துக்கான அறிகுறி ஏதுமின்றி நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. எப்போதாவது வெண்பனி பெய்யும், அது தரையில் பட்டதுமே உருகி மறைந்துவிடும். குளிர் பருவம் இல்லாத ஒன்ருக அவ்வாண்டு கழிந்து விடுமோ என்று மீஷாவுக்கும் எனக்கும் பயமாயிருந்தது.

நாங்கள் அறவே நம்பிக்கை இழந்த பிறகுதான் கடுங் குளிர் ஆரம்பமாகியது. வெண்பனி பொழியத் தொடங்கியதும் நாங்கள் புதிய தீரச் செயல்கள் புரிய வேண்டியிருந்தது. பனிச்சறுக்குக் களத்தில் நாங்கள் நீர் கட்ட வேண்டியிருந்தது. ஆனுல் யாரும் இதற்கு நீர் தரவில்லே. முதலில் நாங்கள் துப்புரவாளரான தாஷா அத்தையிடம் சென்று, அவரிடமிருந்த குழாய்ச் சுருளேத் தரும்படிக் கேட்டோம்.

''நமது வெளிமுற்றத்தில் பனிச்சறுக்குக் களம் இருக்க வேண்டுமென நான் நினைக்கவில்லே'' என்ருர் அவர். ''வசந்தம் பிறந்ததும் உங்கள் களத்துப் பனிக்கட்டி உருகியோடும்போது நான்தான் யாவற்றையும் சுத்தம் செய்ய வேண்டியிருக்கும். குடித்தனக்காரர்களுங்கூட உங்கள் வேலேகளே எதிர்க்கிருர்கள். எல்லாருமாகச் சேர்ந்து கையெழுத்திட்டு மேலாளரிடம் நாங்கள் ஒரு புகார் மனு தரப்போகிறேம். அதோடு உங்கள் பனிச்சறுக்குக் களத்தின் கதை முடிவுற்றுவிடும்.''

''சரி, குழாய்ச் சுருளே நீங்கள் தர வேண்டாம், ஆனுல் எப்படியும் நாங்கள் நீர் பாய்ச்சி எங்கள் களத்தைத் தயாரிக்கவே போகிறேம்'' என்று நாங்கள் அவரிடம் சொன்னேம். ''நீர் உறைந்து கெட்டியானதும் உங்களால் அதில் சறுக்கி ஆடமுடியாது, வருத்தப்படுவீர்கள்.''

''நான் ஒன்றும் வருத்தப்பட மாட்டேன்'' என்ருர் தாஷா அத்தை.

ஆரும் எண் வீட்டிலிருந்த அன்னே அவரது சமையலறைக் குழாயிலிருந்து வாளியில் நீர் பிடித்துச் சென்று எங்கள் களத்தில் ஊற்றி நிரப்பும்படி எங்களிடம் சொன்னுர். நாங்களும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தோம். ஆனுல் சற்று நேரத்துக்குள் அவர் எங்களேத் தடுத்து நிறுத்தினுர், அவர் வீட்டை நாங்கள் சேருக்கி விட்டோமென்று சொல்லிக் கதவை மூடிக் கொண்டு விட்டார். வெளிமுற்றத்திலே சேறின்றி யாவும் உறைந்திருக்கையில் அவர் வீட்டை எப்படி எங்களால் சேருக்க முடிந்திருக்கும்? பிறகு ஒன்ரும் எண் வீட்டிலிருந்து நாங்கள் நீர் எடுத்துச் செல்ல அங்கிருந்தவர்கள் அனுமதித்தார்கள். ஆனுல் சற்று நேரத்துக்குள் அவர்களும் எங்களே உள்ளே விட மறுத்து விட்டார்கள். நான்காம் எண் வீட்டிலும் இவ்வாறே ஆயிற்று.

இருபதாம் எண் வீட்டிலிருந்தவரிடம் குழாய்ச் சுருள் ஒன்று இருந்தது பற்றி மீஷாவுக்குத் திடுமென நினேவு வந்தது. கடந்த கோடையின் போது

அவர் இந்தக் குழாயை உபயோகித்துத் தமது மோட்டார் சைக்கிளைக் கழுவிச் சுத்தம் செய்ததை நாங்கள் பார்த்திருந்தோம்.இந்தக்குழாய்ச் சுருளை சற்று நேரத்துக்கு எங்களுக்குக் கொடுத்து உதவுமாறு அவரிடம் கேட்டோம். உடனே அவர் அதை எடுத்து வந்து எங்களிடம் தந்ததுடன், வசந்தம் வரும் வரை அதை நாங்களே வைத்துக் கொள்ளலாமென்று சொன்னார். அருமை யிலும் அருமையானவர்! அவரைப் பற்றியும் செய்தியேட்டில் எழுத வேண்டு மென்று நினைத்தோம். ஆனால் நேரம் இல்லாமல் ஒத்திப் போட்டுச் சென்று முடிவில் மறந்தே போனோம்.

அந்தக் குழாய்ச் சுருளை நிலவறைக்கு அருகில் இருந்த தண்ணீர்க் குழா யுடன் இணைத்தோம். எங்கள் பனிச்சறுக்குக் களத்தின் எதிர் முனையை எட்டும்படிக் குழாய்ச் சுருளிலிருந்து நீர் வேகமாகப் பீறிட்டது. மீஷா இரு கைகளாலும் குழாயைப் பிடித்துக் கொண்டு இளித்தவாறு நின்றிருந்தான். குழாய் முனையிலிருந்து நீர் பீறிட்டுப் பாய்ந்து சடசடத்தது. எங்கள் உள் ளத்தில் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தது. அந்தியில் நெடுநேரம் வேலை செய்து களத்தில் நாங்கள் நீரை நிரப்பினோம்.

இரவில் இந்த நீர் கெட்டியாக உறைந்துவிட்டது. மறுநாள் திறப்பு விழா கொண்டாடினோம், சிறுவர் சிறுமிகள் எல்லாரும் வந்து கூடினர். பனிக்கட்டிப் பரப்பு கண்ணாடியைப் போல் பளிச்சிட்டது. யாவருக்கும் முதலாய் மீஷா தான் களத்தின் மையத்துக்குச் சறுக்கிச் சென்றான். ''இதோ நான் நமது பனிச் சறுக்குக் களத்தைத் திறந்து வைத்து, உங்கள் எல்லாரையும் உள்ளே வந்து சறுக்கி விளையாடும்படி அழைக்கிறேன்'' என்று அவன் மகிழ்ச்சி பொங்கக் கூறினான். இதைக் கூறி முடித்த அதே கணத்தில் வழுக்கிக் கொண்டு குப்புற விழுந்தான்.

எல்லாச் சிறுவர்களும் சிறுமிகளும் குதூகலக் கூச்சலிட்டுக் கொண்டு களத்துள் புகுந்தார்கள். சறுக்கு மிதிகள் அணிந்தவர்கள், அணியாதவர்கள் ஆகிய எல்லாரும் சறுக்கிச் சென்று சுற்றி வந்தனர். வழுக்கி விழுந்து எழுந் தனர், ஒருவரோடொருவர் மோதிக் கொண்டு விழுந்து புரண்டனர். சிரிப் பும் கூச்சலும் காதை அடைத்தன. மிதிகளின் கருக்கு அடிகள் பனிக்கட்டிப் பரப்பில் கீறிக் கூரொலி எழுப்பிச் சென்றன. களத்தை அமைத்திடும் வேலை களில் பங்கெடுத்துக் கொள்ளாதவர்களுங்கூட சறுக்கிச் சென்று விளை யாடினர். நாங்கள் அவர்களைத் தடுக்கவில்லை. கோலாகலத் திறப்பு விழா நாளன்று எல்லாரும் ஆடி மகிழ வேண்டுமென விரும்பினோம். பெரியவர்கள் பலரும் சுற்றிலும் வந்து நின்று வேடிக்கை பார்த்தார்கள். வீட்டு நிர்வாக மேலாளரும் வந்து நிற்கக் கண்டோம்.


''நானும் சறுக்கு மிதிகள் வாங்கிக் கொண்டு மாலைப் பொழுதில் இங்கே வந்து சறுக்கி விளையாடப் போகிறேன்'' என்றார் அவர். ''எனது இளமைப் பருவம் நினைவுக்கு வருகிறது!''

இதே போல் அவர் தமக்கு சறுக்கு மிதிகள் வாங்கிக்கொண்டார். அந்திப் பொழுதில் எங்களில் பெரும் பகுதியோர் படுத்து உறங்கச் சென்றபின் அவர் சறுக்குக் களத்துக்கு வந்து விளையாடுவது வழக்கம். எங்கள் வீட்டு நிர்வாக மேலாளர் உண்மையில் அருமையான மனிதர்தான் என்பது எங்களுக்குத் தெரியலாயிற்று. அவரைப் பற்றியும் செய்தியேட்டில் எழுத வேண்டுமென நாங்கள் விரும்பினோம்!

எங்கள் பனிச்சறுக்குக் களம் சிறப்பானதாகவே அமைந்துவிட்டது. குறை சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் மேலும் மேலும் அதிகமானோர் அதில் சறுக்கி விளையாட முற்பட்டதால் இடம் போதவில்லை, ஒரே நெரிசலாகிவிட்டது. இதைத் தவிர்ப்பதற்கு மீஷா ஒரு சிறந்த விதி வகுத்திட்டான். பள்ளிக்கூட மதிப்பெண் குறிப்புப் புத்தகத்தை எல்லாரும் நாள்தோறும் எடுத்து வந்து காட்ட வேண்டும், மோசமான மதிப்பெண் பெற்றவர்கள் அன்றைய பொழுதுக்குச் சறுக்கி விளையாடக் கூடாது என்று ஏற்பாடாயிற்று. இதன் விளைவாய், மோசமான மதிப்பெண்கள் குறைந்து, பலரும் படிப்பில் மேம்பாடு அடையலாயினர்.

ஆனால் ஒரு நாள் மீஷா ருஷ்ய இலக்கணத்தில் மோசமான மதிப்பெண் வாங்கிவிட்டான். வெட்கப்பட்டுக் கொண்டு அன்று மாலை அவன் எங்கள் களத்தின் பக்கம் தலைகாட்டவில்லை.

அன்றுதான் எங்களது முதலாவது பனி ஹாக்கி ஆட்டப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஆட்டப் போட்டியைப் பார்ப்பதற்காகப்





பெற்ருேர்களும் வந்திருந்தார்கள். எல்லாருக்கும் கொண்டாட்டமாக இருந்தது. தாஷா அத்தையுங்கூட எங்களைப் பார்த்து சிரித்து மகிழ்ந்து கொண்டார். அவருடைய சிறுவனும் பெரிய பையன்களுடன் சேர்ந்து அந்தப் போட்டி ஆட்டத்தில் பங்கு கொண்டதால் அவருக்கு மிகவும் உற்சாகமாய் இருந்தது. ஆட்டச் சில்லு களத்துக்கு வெளியே சென்று விழுந்த போது அவர் உடனே அதை எடுத்து எங்களிடம் விட்டெறிந்தார்.

ஆட்டக்காரர்களிடையே மீஷா இல்லாததைக் கிலேபின் தாய் கவனித்ததும், சுற்றிலும் இருந்தோரிடம் அவர் விசாரித்தார்:

''மீஷாவைக் காணுமே, எங்கே அவன்? சறுக்குக் களத்தைத் தயாரிப்பதற்காக முன்னின்று அப்படி வேலை செய்தான். ஏன் அவன் விளையாடவில்லை? உடம்பு சரியாக இல்லையா?''

''அவன் வீட்டுக்குச் சென்று விசாரித்துப் பார்க்க வேண்டும்'' என்ருர் லிலியாவின் அம்மா.

இருவரும் அவன் வீட்டுக்குச் சென்று வர விரும்பினர். அவர்களுக்கு அவன் வீட்டைக் காட்டுவதற்காக நானும் கூடச் சென்றேன். வீட்டிலே மீஷா அவன் பாடங்களை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருக்கக் கண்டோம்.

''நீ ஏன் ஆட்டப் போட்டியில் பங்கு கொள்ளவில்லை?'' என்று கிலேபின் தாய் அவனைக் கேட்டார்.

மீஷா தனக்கு வீட்டுப் பாடங்கள் நிறைய இருந்ததால் விளையாடச் செல்லவில்லை என்ருன்.

''நீ நல்ல பையன். நமது வெளிமுற்றத்தில் பனிச்சறுக்குக் களம் அமைக்கப்பட்டது போற்றத்தக்கதாகும்'' என்ருர் அவர்.

''ஆமாம், இதனுல் எனக்கு ஒரு பெரிய கவலை தீர்ந்தது'' என்ருர் லிலியாவின் தாய். ''சென்ற ஆண்டில் சிறுமி லிலியா பல தெருக்களைத் தாண்டி பெரிய பனிச்சறுக்குக் களத்துக்குப் போய் விளையாடினுள். ஒவ்வொரு நாளும் அவள் திரும்பி வந்து சேரும் வரை எனக்குக் கவலையாக இருக்கும். இந்த ஆண்டில் நமது கட்டிடத்தைச் சேர்ந்த குழந்தைகள் யாரும் அவ்வளவு தூரம் போய் வரத் தேவையில்லை, இங்கேயே நமக்கென ஒரு சறுக்குக் களம் அமைத்துவிட்டனர் நமது சிறுவர்கள்.''

இரு அன்னைகளும் இரண்டொரு நிமிடம் இவ்வாறு பாராட்டிப் பேசிவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

''பார்த்தாயா?'' என்று மீஷா என்னிடம் சொன்ஞன். ''அப்போது எல்லாரும் நம்மை விரட்டியடித்தார்கள். சமையலறையிலிருந்து நீர் எடுத்துச் செல்லக் கூடாதென்று சொல்லிக் கதவை மூடிக் கொண்டார்கள். குழாய்ச் சுருளைத் தர மறுத்தார்கள். இப்போது எல்லாரும் நமக்கென சறுக்குக் களம் கிடைத்து விட்டதென்று மகிழ்ந்து கொள்கிருர்கள். என்னென்பது இதை!''

மீஷாவால் விளையாட வர முடியவில்லையே என்று நான் வருத்தப்பட்டுக் கொண்டேன். பிறகு நானும் வீட்டுக்குப் போய் வீட்டுப் பாடங்களைச் செய்து முடிக்கலாமெனத் தீர்மானித்தேன். அண்மையில் எனக்கும் மதிப் பெண்கள் குறைந்து வந்தன. எல்லாப் பாடங்களையும் முடித்துவிட்டு அந்திப் பொழுதில் நான் எனது சறுக்கு மிதிகளை எடுத்துக் கொண்டு எங்களது சறுக்குக் களத்துக்குச் சென்றேன்.

கம்பத்தில் எரிந்த மின்விளக்கின் ஒளியில் எங்கள் களம் பிரகாசமாக இருந்தது. களத்தைச் சுற்றிலுமிருந்த மரங்களின் மொட்டைக் கிளைகளில் சர்க்கரைத் தூள் தூவப்பட்டது போல் வெண்பனிச் செதிள்கள் படிந்திருந் தன. பெரும் பெரும் செதிள்களாக வெண்பனி மெல்ல மிதந்து வந்து எங்கள் சறுக்குக் களத்தில் விழுந்தது. களத்திலே ஒரு சிறு உருவம் சறுக்கிச் சுற்றி வரக் கண்டேன். அருகே சென்றதும் அது வேறு யாருமல்ல, மீஷாதான் என்பது தெரிந்தது. அவனும் என்னைப் போன்றவன்தான்; ஒரு நாள் கூட எங்களது களத்தில் சறுக்கிச் செல்லாவிட்டால் எங்களுக்குத் தூக்கம் வராது.

டைனமோ பனிச்சறுக்குக் களம் கோலாகலமாகத் திறக்கப்பட்டது பற்றி சில நாட்களுக்கு முன்பு செய்தியேடுகளில் செய்தி வெளிவந்திருந்தது. இவ்வாண்டு குளிர் காலத்தில் அதுவே முதன்முதல் திறக்கப்பட்டக் களம் என்பதாக அந்தச் செய்தி கூறியது. உண்மையல்ல அது! எங்களது களம்தான் யாவற்றுக்கும் முதலில் திறக்கப்பட்ட களமாகும். டைனமோ களத்துக்குப் பத்து நாட்கள் முன்னதாகவே எங்கள் களம் திறக்கப்பட்டுவிட்டது. ஆனால் இதைப் பற்றி செய்தியேடுகளில் செய்தி வெளிவரவில்லை.

மந்திரம்

கோடையில் ஷௌரிக்கும் நானும் தாத்தா வீட்டுக்குச் சென்றிருந்தோம். ஷௌரிக்கு என் தம்பி. எனக்கு வயது ஏழு, முதற் படிவத்தில் சேர்ந்திருந்தேன். ஷௌரிக்குக்கு இன்னும் பள்ளி செல்லும் வயது வந்தாகவில்லை. ஆயினும் அவன் நான் சொல்வதைக் கேட்பதில்லை. கேட்காவிட்டால் போ, எனக்கு என்ன என்று நான் அவனைப் பொருட்படுத்தாமல் இருந்தேன். தாத்தா வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாய் நாங்கள் வெளிமுற்றம், கொட்டில்கள், பரணி அறை ஆகிய எல்லா இடங்களையும் ஆராய்ந்தோம். காலிக் கண்ணாடி ஜாடியையும் ஒரு சிறு தகர டப்பாவையும் நான் எடுத்துக் கொண்டேன். ஷௌரிக்கு உதிரியாகக் கிடந்த கதவு கைப்பிடியையும் ஒரு பெரிய ரப்பர் புதைமிதியையும் எடுத்துக் கொண்டான்.

பரணி அறையில் மீன் பிடிக்கும் தூண்டில் ஒன்று இருந்தது. அது யாருக்கு என்று எங்களுக்குள் சண்டை மூண்டு விட்டது. நான்தான் அதை முதலில் பார்த்தவன். பார்த்ததும் ''இது என்னுடையது!'' என்று கூவினேன். பிறகுதான் ஷௌரிக்கு அதைப் பார்த்தான், உடனே ''என்னுடையது, என்னுடையது!'' என்று கத்தினான்.

தூண்டிலின் ஒரு முனையை நான் பிடித்துக் கொண்டேன், இன்னொரு முனையை அவன் பற்றிக் கொண்டான். இருவரும் இழுத்துப் பறித்துக்கொண்டு நின்றோம். எனக்கு வந்த கோபத்தில் தூண்டில் கம்பை வெடுக்கென ஆட்டி இழுத்தேன். எதிர்முனை அவன் பிடியிலிருந்து நழுவி விட்டது, அவன் மல்லாந்து விழுந்தான்.

''இந்த உதவாக்கரை கம்பு யாருக்கு வேண்டும்? என்னிடம் ரப்பர் புதைமிதி இருக்கிறது'' என்றான் அவன்.

''நீ உன்னுடைய புதைமிதியைக் கட்டிக் கொண்டு அழு! ஆனால் என்னுடைய தூண்டிலைத் தொடாதே!'' என்றேன் நான்.

கொட்டிலுக்குள் ஒரு மண்வெட்டி இருந்தது, அதை எடுத்துக் கொண்டு நான் மண்ணைத் தோண்டிப் புழுக்கள் சேகரிப்பதற்காகப் புறப்பட்டேன். தகர டப்பாவில் புழுக்களை நிரப்பிக் கொண்டு மீன் பிடிக்கச் செல்வதென ஏற்கெனவே நான் முடிவு செய்திருந்தேன். ஷௌரிக்கு பாட்டியிடம் சென்று தீப்பெட்டி வேண்டுமென்று கேட்டான்.

''எதற்காக உனக்குத் தீப்பெட்டி?'' என்று அவர் விசாரித்தார்.

''வெளிமுற்றத்தில் நான் சொக்கப்பனை கொளுத்தப் போகிறேன். புதைமிதியை அந்தத் தீயில் காட்டி உருக்கி ரப்பர் ஆக்கப் போகிறேன்.''

''நல்லாயிருக்கிறதே இது!'' என்று கைகளை வீசி வியந்து கொண்டார் பாட்டி. ''கொஞ்சம் கவனமின்றி இருந்தால் வீட்டையே நீ தீ பிடித்து எரியச் செய்து விடுவாய் போல் இருக்கிறதே! சிறு பிள்ளைகள் தீப்பெட்டியை வைத்துக் கொண்டு விளையாடக் கூடாது, தீப்பெட்டியைத் தரமாட்டேன். போய் நல்ல மாதிரி விளையாடு நீ.''

ஆகவே ஷூரிக்கு நூல் கயிற்றின் ஒரு முனையைத் தன்னிடமிருந்த கதவுக் கைப்பிடியிலும் இன்னொரு முனையைப் புதைமிதியிலும் கட்டினான். பிறகு புதைமிதியை இழுத்துக் கொண்டு வெளிமுற்றத்தில் அங்கும் இங்கும் ஓடினான். நான் மண்ணைத் தோண்டிப் புழுக்கள் எடுப்பதைப் பார்த்துவிட்டு என்னிடம் சொன்னான்:

''இது வீண் வேலைதான், உன்னால் மீன் பிடிக்க முடியப் போவதில்லை.''

''ஏனாம்?''

''நான் மந்திரம் போட்டு மீனை உன் தூண்டிலுக்கு அருகே வராதபடிச் செய்து விடுவேன்.''

''ஆளைப் பார்! நீயும் உன் மந்திரமும்!'' என்று அவனைக் கேலி செய்தேன்.

டப்பாவில் புழுக்களை நிரப்பிக் கொண்டு நான் குட்டைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

வீட்டுக்குப் பின்னால் கூட்டுப் பண்ணையின் காய்கறித் தோட்டம் ஆரம்பமான இடத்தில் இருந்தது அந்தக் குட்டை. தூண்டில் முள்ளில் ஒரு புழுவை வைத்து நீருக்குள் எறிந்துவிட்டு நான் கரையில் உட்கார்ந்து கொண்டேன். தூண்டில் முள்ளை மீன் கடிப்பதற்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்.

அப்போது ஷூரிக்கு ஓசையின்றி என் முதுகுக்குப் பின்னால் வந்து நின்று கொண்டு பலக்கக் கத்தினான்:

சூ மந்திரக் காளி, சூ மந்திரக் காளி!
மீன் எல்லாம் ஓடி மறையட்டும்!

நான் ஒன்றும் சொல்லாமல் மௌனமாய் இருப்பதென முடிவு செய்து கொண்டேன். ஏனெனில் நான் ஏதாவது சொன்னால் அவன் மேலும் பலத்த குரலில் கத்தவே செய்வான் என்று எனக்குத் தெரியும். இரண்டு மூன்று தரம் கத்திச் சலிப்படைந்ததும் புதைமிதியை அவன் குட்டைக்குள் எறிந்தான். கயிற்றால் அதைக் கரைக்கு இழுத்துத் திரும்பவும் குட்டைக்குள் தூக்கியெறிந்தான். பிறகு கற்களால் அடித்து அதை நீருக்குள் மூழ்க வைக்கமுயன்றான்.

ஓரிரண்டு நிமிடங்கள் நான் வாயை மூடிக் கொண்டு இருந்து பார்த்தேன். பிறகு பொறுமையிழந்து போய் அவனைப் பார்த்துக் கூச்சலிட்டேன்:

''இங்கே நிற்காதே! மீன்களை மிரண்டு ஓடச் செய்கிறாய். இங்கிருந்து ஓடுகிறாயா, எழுந்து வரட்டுமா?''

''எப்படியும் உன்னால் மீன் பிடிக்க முடியாது, நான் மந்திரம் போட்டு விட்டேன்'' என்று சொல்லி மீண்டும் அவன் குட்டையின் மையத்துக்குப் புதைமிதியை விட்டெறிந்தான்!

உடனே நான் குதித்தெழுந்து தரையிலே கிடந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டேன். ஷூரிக்கு ஓட்டமாய் ஓடினான், புதைமிதியும் அவனுக்குப் பின்னால் துள்ளித் துடித்துக் கொண்டு போய்ச் சேர்ந்தது. நல்லவேளை என் கையில் அகப்படாமல் அவன் தப்பி ஓடினான்.

திரும்பவும் நான் குட்டைக்குச் சென்று மீன் பிடிக்க உட்கார்ந்தேன். சூரியன் தலைக்குமேல் உச்சிக்கு வந்துவிட்டது. இன்னும் எனக்கு ஒரு மீன் கூட கிடைக்கவில்லை. ஒரு மீனும் என் தூண்டில் அருகே வரக் காணோம். ஷூரிக்கின்மீது எனக்குப் பொல்லாத கோபம் வந்தது, சரியானபடி அவனை உதைக்க வேண்டுமென நினைத்தேன். அவனுடைய மந்திரத்தில் எனக்கு நம்பிக்கை இல்லையென்றாலும், வெறுங்கையுடன் வீட்டுக்குத் திரும்பினால் என்னை அவன் கேலி செய்வானே என்று பயந்தேன். எப்படியாவது ஓரிரு மீனாவது பிடித்துச் செல்ல வேண்டுமென பல வழிகளிலும் முயன்று பார்த்தேன். குட்டையின் மையத்திலே தூண்டில் முள்ளைப் போட்டேன், பிறகு கரைக்கு அருகே பல இடங்களில் போட்டேன், நீருக்குள் ஆழ் மட்டத்தில் முள்ளை வைத்திருந்தேன்—ஒன்றும் பலிக்கவில்லை. முடிவில் வேறு வழியின்றி வீட்டுக்குத் திரும்புவதெனத் தீர்மானித்தேன். அதோடு எனக்கு வயிறு வேறு பசிக்க ஆரம்பித்துவிட்டது.

எங்கள் வீட்டு வேலிக் கதவுக்கு அருகே சுத்தியலால் அடித்து யாரோ வேலை செய்யும் சத்தம் கேட்டது.

அருகில் சென்றதும் ஷூரிக்குதான் என்பதைக் கண்டேன். வேலிக் கதவில் அவன் தனது கதவுக் கைப்பிடியை வைத்து ஆணி அடித்துக் கொண்டிருந்தான். சுத்தியலும் ஆணியும் அவனுக்கு எங்கிருந்து கிடைத்ததோ தெரியவில்லை.

''இதை ஏன் நீ வேலிக் கதவில் வைத்து அடிக்கிறாய்?'' என்று நான் கேட்டேன்.

என்னைப் பார்த்ததும் அவன் கேலியாகச் சிரித்துக் கொண்டான்.

''ஹ-ஹ-ஹா! மீன் பிடித்து விட்டுத் திரும்பி வருகிறார், வீரர்! நீ பிடித்த மீன் எங்கே?'' என்று அவன் கிளுகிளுத்துக் கொண்டான்.

''வேலிக் கதவில் இதை ஏன் அடிக்கிறாய்? ஏற்கெனவேதான் கதவில் ஒரு கைப்பிடி இருக்கிறதே.''

''இருந்தால் என்ன? இரண்டு பிடிகள் இருப்பது நல்லதுதானே. ஒன்று போனால் இன்னொன்று இருக்கும் அல்லவா?''

கைப்பிடியை அடித்து முடித்ததும் அவனிடம் ஓர் ஆணி எஞ்சியது. அதை



என்ன செய்வதென்று தெரியாமல் அங்கும் இங்கும் பார்த்தான். முதலில் அதை வேலியில் எங்காவது அடிக்கலாமென நினைத்தான். பிறகு இதனிலும் சிறந்த எண்ணம் ஒன்று தோன்றவே, புதைமிதியின் அடிப்பகுதியை வேலிக் கதவில் வைத்து அழுத்தி ஆணியை அதில் அடித்தான்.

''இது எதற்காக?''

''எதற்காகவும் இல்லை.''

''புத்தி கெட்ட வேலை இது.''

அப்போது தாத்தா மதிய உணவுக்காக வீட்டுக்குத் திரும்பி வரக் கண்டோம். ஷூரிக்கு மிரண்டு போய்விட்டான். அவசரமாகப் புதைமிதியைக் கதவிலிருந்து பிய்த்தெடுக்க முயன்றான், ஆனால் கெட்டியாக ஆணி அடிக்கப் பட்டிருந்ததால் அதை எடுக்க முடியவில்லை. தாத்தாவின் கண்ணில் படாம லிருக்கட்டும் என்று அதை மறைத்துக் கொண்டு நின்றான். எங்களிடம் வந்து சேர்ந்ததும் தாத்தா கூறினார்:

''பையன்களே, சபாஷ்! வந்த முதல் நாளன்றே வேலையிலே இறங்கி விட்டீர்களே! கதவில் இன்னொரு பிடியை வைத்து அடித்தீர்களா? யாருடைய யோசனை இது?''

''ஷூரிக்கினுடையது'' என்றேன் நான்.

தாத்தா தொண்டையைக் கனைத்துச் சரி செய்து கொண்டார்.

''கதவிலே இப்போது ஒன்று மேலும் ஒன்று கீழுமாய் இரண்டு பிடிகள் இருக்கின்றன. குட்டையானவர்கள் கீழே இருப்பதை உபயோகித்துக் கொள்ளலாம், நல்லதுதான்'' என்றார். பிறகு புதைமிதியைப் பார்த்துவிட்டு, ''இது என்ன?'' என்று கேட்டார்.

சிக்கிக் கொண்டு விட்டான் பையன் என்று நினைத்து நான் வாய்க்குள் சிரித்துக் கொண்டேன். ஷூரிக்குக்கு முகம் சிவந்துவிட்டது, என்ன சொல்வ தென்று தெரியாமல் விழித்தான் அவன்.

''தபால் பெட்டியா?'' என்று கேட்டார் தாத்தா. ''தபால்காரர் வருகிறார், வீட்டில் யாரும் இல்லை, அப்போது கடிதங்களை அவர் இந்தப் புதைமிதிக் குள் போட்டுவிட்டுப் போகலாம். கெட்டிக்கார வேலை! யார் செய்தது இது?''

''நான்தான் செய்தேன்'' என்றான் ஷூரிக்கு.

''மெய்யாகவா?''

''ஆமாம், மெய்யாகவே நான்தான்.''

''பலே கெட்டிக்காரன் நீ!''

சாப்பிடும் போது அவர், ஷூரிக்கு சமர்த்துப் பையனாக இருக்கிறான் என்று பாட்டியிடம் சொன்னார். ''மெய்தான், இப்படிச் செய்யலாமென்று நமக்குத் தோன்றவே இல்லை. ஆனால் இவன் இங்கு வந்த முதல் நாளன்றே

வேலிக் கதவில் புதைமிதியை வைத்து அடித்துவிட்டான். தபால் பெட்டி வாங்கி வந்து மாட்ட வேண்டுமென்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''நல்லது, புரிகிறது எனக்கு'' என்று பாட்டி சிரித்துக் கொண்டார். ''நான் போய் தபால் பெட்டி வாங்கி வருகிறேன். அதுவரை புதைமிதியைத் தபால் பெட்டியாக பயன் படுத்திக் கொள்வோம்.''

சாப்பிட்டு முடிந்ததும் ஷூரிக்கு தோட்டத்துக்கு ஓடினான். தாத்தா என்னிடம் சொன்னார்:

''ஷூரிக்கு மும்முரமாகவே வேலை செய்திருக்கிறான். கோல்யா, நீயும் ஏதாவது செய்திருப்பாயே. என்ன செய்தாய், சொல்லு. தாத்தாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.''

''மீன் பிடிக்கச் சென்றேன், ஆனால் மீனே கிடைக்கவில்லை.''

''மீன் பிடிக்க எங்கே போனாய்?''

''குட்டைக்கு.''

''அங்கே உனக்கு எப்படி மீன் கிடைக்கும்?'' என்றார் தாத்தா. ''அது புதிதாக இப்போதுதான் வெட்டப்பட்ட குட்டை. அங்கே இன்னும் தவளைகூட வந்திருக்காது. நீ என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேன் கேள். நேரே நீ ஆற்றுக்குப் போகவேண்டும். அங்கே மரப் பாலத்துக்கு அருகே நீர் வேகமாக ஓடுகிறது. மீன் பிடிப்பதற்கு அதுதான் சிறந்த இடம்.''

பிறகு தாத்தா மீண்டும் அவரது வேலை இடத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். நான் எனது தூண்டிலை எடுத்துக் கொண்டு ஷூரிக்கிடம் சொன்னேன்:

''ஆற்றுக்குப் போய் மீன் பிடிக்கலாம், வா.''

''ஓகோ, என்னுடன் இராசியாகிவிட வேண்டுமென்று பார்க்கிறாயா?''

''எதற்காகவாம்?''

''திரும்பவும் நான் மந்திரம் போடாமல் இருப்பதற்காக.''

''எவ்வளவு வேண்டுமானாலும் மந்திரம் போட்டுப் பாரேன், நான் ஒன்றும் பயப்படவில்லை.''

புழு டப்பாவையும் கண்ணாடி ஜாடியையும் எடுத்துக் கொண்டு நான் புறப்பட்டேன். ஷூரிக்கு எனக்குப் பின்னால் மெதுவாய் வந்து கொண்டிருந்தான். ஆற்றை அடைந்ததும் பாலத்துக்கு அருகில் நல்ல இடமாகப் பார்த்துத் தூண்டில் முள்ளை வீசியெறிந்தேன்.

ஷூரிக்கு என் அருகே வந்து நின்று கொண்டு முணுமுணுத்தான்:

சூ மந்திரக் காளி, சூ மந்திரக் காளி!
மீன் எல்லாம் ஓடி மறையட்டும்!

பிறகு சற்று நேரம் சும்மாயிருந்து விட்டு மறுபடியும் மந்திரத்தை முணுமுணுத்தான்:

சூ மந்திரக் காளி, சூ மந்திரக் காளி!
மீன் எல்லாம் ஓடி மறையட்டும்!''

திடுமென தூண்டில் முள்ளை ஒரு மீன் கடித்து இழுத்தது. உடனே நான் சொடுக்கிட்டு இழுத்தேன். நீரை விட்டு உயர்ந்தெழுந்து பளபளத்த மீன் ஒன்று தூண்டில் முள்ளிலிருந்து பிய்த்துக் கொண்டு கரை ஓரத்தில் புல்லில் விழுந்து துடித்தது.

''பிடி அதை!'' என்று கூச்சலிட்டுக் கொண்டு ஷூரிக்கு ஒரு தாவு தாவி அதன் மேல் பாய்ந்தான். ஆனால் மீன் அவன் பிடியிலிருந்து வழுக்கிக் கொண்டு நீருக்கு அருகே துள்ளி விழுந்தது. முடிவில் ஷூரிக்கு அதைப் பிடித்து எடுத்து வந்தான். அதற்குள் நான் கண்ணாடி ஜாடியில் நீரை நிரப்பினேன். அவன் அந்த மீனை அதற்குள் போட்டான்.

பிறகு அந்த மீனை அவன் பரிசீலனை செய்தான்.

''பெர்ச் மீன்'' என்றான்; ''ஆம், மெய்தான்! அதன் மீதுள்ள கோடுகளைப் பார்! இதை நான் எடுத்துக் கொள்ளட்டுமா?''

''சரி, எடுத்துக் கொள். நாம்தான் நிறைய மீன் பிடிக்கப் போகிறோமே.''

அன்று நெடு நேரம் நாங்கள் மீன் பிடித்தோம். ஆறு சிறிய பெர்ச்சுகளும் நான்கு கெண்டைகளும் ஒரு சிறு காரையும் கிடைத்தன. வீட்டுக்குத் திரும்புகையில் ஷூரிக்குதான் மீன் ஜாடியை எடுத்துச்சென்றான். அதை என்னிடம் தர மறுத்துவிட்டு மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டவனாய்க் கம்பீரமாக நடந்தான். எங்கள் வேலிக் கதவிலிருந்து அவனுடைய புதைமிதி மறைந்து விட்டதைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை. அதனிடத்தில் பளபளப்பான நீல நிறத்தில் தபால் பெட்டி ஒன்று காணப்பட்டது.

''போனால் போகட்டும் போ!'' என்றான் அவன். ''புதைமிதியை விட இந்தத் தபால் பெட்டி இன்னும் நன்றாகத்தானே இருக்கிறது.''

பிறகு மீன் ஜாடியைப் பாட்டியிடம் கொண்டு போய்க் காட்டினான். பாட்டி ஆனந்தமடைந்து எங்களைப் பாராட்டினார்.

பிறகு நான் ஷூரிக்கிடம் கூறினேன்:

''பார்த்தாயா, உன் மந்திரம் பலிக்கவில்லை. எனக்கு மந்திரத்தில் நம்பிக்கை இல்லை.''

''எனக்கும்தான் நம்பிக்கை இல்லை!'' என்றான் ஷூரிக்கு. ''மந்திரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் நாட்டுப்புறத்து ஆட்களாகவே இருப்பார்கள், இல்லையேல் வயது முதிர்ந்த கிழங்களாக இருப்பார்கள்.''

இதைக் கேட்டதும் பாட்டிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஏனெனில் பாட்டி வயது முதிர்ந்தவரே என்றாலும், அவருக்கும் மந்திரத்தில் நம்பிக்கை இல்லை.

மூன்று வேட்டைக்காரர்கள்

முன்னொரு காலத்தில் குதூகலமான வேட்டைக்காரர்கள் மூவர் இருந்தனர்: வான்யா மாமா, ஃபேத்யா மாமா, குஸ்மா மாமா. மூவரும் ஒரு நாள் வேட்டையாடச் சென்றனர். வேட்டையாட விதம் விதமான விலங்குகள் பலவும் இருக்கக் கண்டனர், ஆனால் அவர்கள் எதையும் சுடவில்லை. சற்று நேரத்துக்கு எல்லாம் வேட்டையை நிறுத்திக் கொள்வதென முடிவு செய்து, மூவரும் புல் தரையில் தமது உணவுப் பொட்டலங்களை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தனர். ஒவ்வொருவரும் தத்தமது வேட்டை அனுபவங்களில் மிகவும் சுவையான ஒன்றை ஏனையோருக்குச் சொல்வதென்று முடிவு செய்தார்கள்.

முதலாவது கதையைக் கூறியவர் வான்யா மாமா.

''இது நடந்தது நெடுங் காலத்துக்கு முன்பு'' என்று ஆரம்பித்தார் அவர். ''குளிர் காலத்தில் ஒரு நாள் நான் காட்டுக்குச் சென்றிருந்தேன். என்னிடம் துப்பாக்கி இல்லை. அப்போது நான் துப்பாக்கி எடுத்துச் செல்வதற்குரிய வயது வராத சிறுவன். திடுமென ஓநாய் என் முன்னால் வரக் கண்டேன். மிகப் பெரிய ஓநாய். உடனே எதிர்த் திசையில் திரும்பி ஓட்டமாய் ஓடினேன். என்னிடம் துப்பாக்கி இல்லை என்பதை ஓநாய் கண்டு கொண்டு விட்டது போலும். விடாமல் அது என்னைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தது. ''அவ்வளவுதான், முடிவுக் காலம் வந்துவிட்டது எனக்கு'' என்று என்னுள் கூறிக் கொண்டேன். ஆனால் என் எதிரே ஒரு பெரிய மரம் இருந்தது. ஓடி வேகமாய் அதன் மேல் ஏறினேன். ஓநாயின் வாயிலிருந்து ஒரு மயிரிழையில்தான் தப்பினேன், என் கால் சட்டையின் பிட்டம் மட்டும் ஓநாயின் பல்லில் மாட்டிக் கிழிந்து போயிற்று. மேலே ஏறி வெலவெலத்துப் போய்க் கிளையிலே நான் உட்கார்ந்திருக்கிறேன், மரத்துக்கு அடியில் ஓநாய் உட்கார்ந்து கொண்டு நாக்கால் வாயைத் தடவியபடி மேலே என்னை உற்றுப் பார்க்கிறது.

''இருட்டுகிற வரை மேலே மரத்திலேயே உட்கார்ந்திருப்போம், பிறகு ஓநாய் தூங்க ஆரம்பித்து விடும், கீழே இறங்கி தப்பி ஓடுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்'' என்று நான் முடிவு செய்து கொண்டேன்.

''ஆனால் அந்தி ஆனதும் இன்னொரு ஓநாய் வந்து சேர்ந்தது. இப்போது இரண்டு ஓநாய்கள் என்னை வெறிக்கப் பார்த்தவாறு கீழே தரையில் உட்கார்ந்திருந்தன. ஒன்று தூங்குகையில் மற்றொன்று நான் தப்பியோடிவிடாதபடி பார்த்துக் கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரமானதும் மூன்றாவது

ஓநாய் ஒன்றும் இவற்றுடன் சேர்ந்து கொண்டது. பிறகு மேலும் பல வந்து சேர்ந்தன. மரத்தைச் சுற்றி இப்போது ஓநாய்கள் கூட்டமாய் உட்கார்ந்து, எப்போது நான் கிளையிலிருந்து கீழே விழுவேன் என்று பற்களைக் கடித்துக் கொண்டு காத்திருந்தன.

''பொழுது விடியும் நேரத்தில் எனக்குக் கைகளும் கால்களும் குளிரால் விறைத்து விட்டன. கிளையில் தொத்திக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை என்னுல். சரிந்து சரிந்து முடிவில் தடாரெனக் கீழே விழுந்தேன். அதே கணத்தில் அத்தனை ஓநாய்களும் என்மீது பாய்ந்தன! பிறகு நரநரத்து நொறுங்கும் சப்தம் கேட்டது. என் எலும்புகளாகத்தான் இருக்குமென நினைத்தேன்.

''உண்மையில் நடந்தது என்னவெனில், என் கனம் தாங்காமல் எனக்கு அடியில் உறை பனிப் படலம்தான் அப்படி நொறுங்கியது. உடனே நான் கீழே விழுவது போல் இருந்தது. பிறகு நான் சுற்றிலும் பார்த்த போது கரடியின் உறைவிடமான குழிக்குள் விழுந்து கிடக்கிறேம் என்பது தெரிந்தது. மரத்துக்கு அடியில் இருந்த அந்தக் கரடிக் குழி உறைபனியால் மூடப்பட்டு மறைந்திருந்தது. நான் குழிக்குள் விழுந்த அதிர்ச்சியில் விழித்துக் கொண்ட கரடி, மிரண்டு போய் வெளியே ஓடிற்று. வெளியே ஓநாய்களைக் கண்டதும் உறுமிக்கொண்டு சண்டை போட ஆரம்பித்தது. ஓநாய்கள் இருந்த இடம் தெரியாமல் சிதறி ஓடி மறைந்தன.

''மூச்சைப் பிடித்துக் கொண்டு குழியிலிருந்து ஏறி வெளியே எட்டிப் பார்த்தேன். ஓநாய்கள் மறைந்துவிட்டதைக் கண்டதும், உடனே அங்கிருந்து நழுவி ஓட்டமாய் ஓடினேன். வீட்டுக்கு வந்து சேரும் வரை நிற்கவே இல்லை. கிழிந்து போன என் கால் சட்டையை என் அம்மா தைத்துக் கொடுத்தார். நடந்ததை என் அப்பாவிடம் சொன்னேன். அவர் அதைக் கேட்டதும் உடனே புறப்பட்டுச் சென்று ஒரு துப்பாக்கி வாங்கி வந்தார். இனி துப்பாக்கி இல்லாமல் காட்டுக்குப் போகாதே என்று சொல்லி அதை என்னிடம் தந்தார். இவ்வாறுதான் நான் வேட்டைக்காரன் ஆனேன்.''

வான்யா மாமா ஓநாய்களிடமிருந்து தப்பி ஓடி வந்த கதையைக் கேட்டு, ஃபேத்யா மாமாவும் குஸ்மா மாமாவும் வாய் விட்டுச் சிரித்தனர். பிறகு ஃபேத்யா மாமா தமது கதையைச் சொன்ஞர்.

''நானும் ஒரு தரம் காட்டிலே கரடியிடம் சிக்கிக் கொண்டேன். ஆனுல் நல்ல வேளை அப்போது கோடைக் காலம். துப்பாக்கியை வீட்டில் வைத்து விட்டு ஒரு நாள் நான் காட்டுக்குச் சென்றிருந்தேன். திடுமென என் எதிரே ஒரு கரடி வரக் கண்டேன். வெடுக்கெனத் திரும்பி வேகமாய் ஓடினேன். அது என்னை விடவில்லை. அதிவேகமாகவே ஓடினேன் நான், ஆனுல் அது என்னையும் விட வேகமாய் ஓடிவந்தது. கரடியின் மூச்சு என் கழுத்தில் வீசுவதை



உணர்ந்தேன். ஓடிக் கொண்டிருந்த நான் என் குல்லாயைக் கழற்றினேன். சட்டெனத் திரும்பி அதைக் கரடி மீது வீசினேன். கரடி தனது ஓட்டத்தை நிறுத்தி விட்டுக் கணப்பொழுதுக்கு அந்தக் குல்லாயை முகர்ந்து பார்த்தது. பிறகு மறுபடியும் என்னை விரட்டிக் கொண்டு ஓடி வந்தது. வீட்டை வந் தடைய இன்னும் நான் நெடுந் தூரம் ஓடியாக வேண்டும். என்னை நெருங்கி வந்துவிட்ட கரடியை எப்படியாவது திரும்பவும் சில கணங்களுக்கு நிற்கச் செய்ய வேண்டுமென்று நான் எனது மேல்சட்டையைக் கழற்றி அதனிடம் வீசியெறிந்தேன்.

''கரடி என் சட்டையைக் கடித்து கிழித்தது. ஆனால் அதைத் தின்ன முடி யாமற் போகவே மீண்டும் கரடி என்னைத் துரத்த ஆரம்பித்தது. இப்போது நான் என் கால்சட்டையையும் பூட்சுகளையும் கழற்றி அதனிடம் எறிய வேண் டியதாயிற்று. அவற்றைக் களைந்தெறிவது, இல்லையேல் கரடிக்கு இரை யாவது—இவ்விரண்டில் ஒன்றேயன்றி வேறு வழி ஏதும் இல்லை எனக்கு!

''விரைவில் நான் காட்டிலிருந்து வெளியே வந்துவிட்டேன். உள்ளுடுப் பைத் தவிர உடம்பில் வேறு ஆடை எதுவுமின்றி ஓடிக் கொண்டிருந்தேன். ஓர் ஆறும் லொடலொடத்துப் போன அதன் பாலமும் என் முன்னால் இருந்தன. வேகமாக இந்தப் பாலத்தில் ஓடி எதிர் கரையை அடைந்ததும் எனக்குப் பின்னாலிருந்து பலத்த தடதடப்பு கேட்டது. நான் திரும்பிப் பார்த்த போது கரடியின் கனம் தாங்காமல் பாலம் நொறுங்கிக் கரடியும் பாலமுமாய் ஆற்றுக்குள் விழக் கண்டேன்.

'' 'நல்லா வேண்டும் உனக்கு!' என்று கரடியைப் பார்த்துச் சொன்னேன். 'நேர்மையான ஆட்களை விரட்டிக் கொண்டு ஓடிவரும் உனக்கு நல்லா வேண் டும்!'

''ஆனால் அது ஆழமில்லாத ஆறு. கரடி எழுந்து எதிர் கரைக்குத் திரும்பிச் சென்று மேலே ஏறி நீரை உடலிலிருந்து உலுக்கி விட்டுக் கொண்டது. பிறகு காட்டை நோக்கிப் போய்ச் சேர்ந்தது. இனி பயமில்லை என்றதும் நான் வீர நடை போட்டேன்.

''ஆனால் எப்படி நான் வீட்டுக்குப் போய்ச் சேர்வது? தெருக்களில் ஆள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். வெறும் உள்ளுடுப்பில் போனால் ஊரே கை கொட்டிச் சிரிக்குமே.

''இருட்டும் வரை புதர்களுக்கு இடையே காத்திருப்பதெனத் தீர் மானித்தேன். இருட்டியதும் ஆங்காங்கே பதுங்கி நின்று யார் கண்ணிலும் படாமல் மெல்ல நடந்தேன்.

''முடிவில் ஒருவாறு வீட்டை வந்தடைந்தேன். கதவருகே சென்ற பிறகு தான் என்னிடம் சாவி இல்லை என்பது நினைவுக்கு வந்தது. சாவி என் மேல் சட்டையின் பையில் இருந்தது, அந்தச் சட்டையை நான் கரடியிடம் எறிந்து

விட்டு வந்திருந்தேன். சாவியை கையில் எடுத்துக் கொண்டு சட்டையை மட்டும் எறிந்திருக்க வேண்டும். ஆனால் அப்போது சிந்திக்கும் நிலையில் இல்லை நான்..

''சரி, இனி என்ன செய்யலாம்? முழு பலத்தையும் கொண்டு கதவைத் தள்ளிப் பார்த்தேன். கதவு அசையவில்லை. தெருவிலே உள்ளுடுப்பிலே எவ்வளவு நேரம்தான் நிற்பது? சன்னல் கதவிலிருந்து கண்ணாடியைப் பெயர்த்தெடுத்துவிட்டு ஒரு காலை உள்ளே வீட்டுக்குள் வைத்து மற்றொன்றையும் உள்ளே இழுத்துக்கொள்ளப் போனேன். அப்போது வெளியே இருந்த காலை யாரோ ஒருவர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டார்.

'' 'திருடன், திருடன்! பிடியுங்கள்!' என்று அவர் கூச்சலிட்டார்.

உடனே கூட்டம் கூடிவிட்டது.

'' 'விடாதீர்கள், வீடு புகுந்து திருடும் கொள்ளைக்காரன்!' என்றார் ஒருவர்.

'' 'காவல் நிலையத்துக்கு இழுத்துச் செல்லுங்கள்!' என்றார் இன்னொருவர்.

'' 'இல்லை, நான் திருடன் அல்ல' என்று நான் மன்றாடினேன். 'இது என் வீடு. என் வீட்டுக்குள்ளேதான் நான் புகுகின்றேன்!'

'' 'இவன் சொல்வதை நம்பாதீர்கள்' என்றார் என் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றவர். 'இவனைச் சிறிது நேரமாக நான் கவனித்துக் கொண்டிருந்தேன். தெருவிலே பதுங்கிப் பதுங்கி நடந்து வந்தான். பிறகு தெருக் கதவைத் திறக்க முயன்று பார்த்தான். இப்போது சன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே புக முயலுகிறான்.'

''அதற்குள் போலீஸ்காரர் ஒருவர் எங்களிடல் வந்து சேர்ந்தார். எல்லாரும் ஒரே நேரத்தில் அவரிடம் விவரங்களைச் சொல்ல முயன்றார்கள்.

'' 'உன்னுடைய அடையாளச் சீட்டைக் காட்டு' என்றார் போலீஸ்காரர்.

'' 'அடையாளச் சீட்டு இங்கே என்னிடம் இல்லை. சட்டைப் பையில் வைத்திருந்தேன், யாவற்றையும் கரடி தின்றுவிட்டது.''

'' 'வேடிக்கைப் பேச்சு பேசாதே. எந்தக் கரடி தின்றது?'

''நடந்ததை அவர்களிடம் சொல்லிப் பார்த்தேன். ஆனால் யாரும் என் பேச்சை நம்பவில்லை. நல்ல வேளையாக பக்கத்து வீட்டுக்கார அம்மாள் இந்தச் சப்தத்தைக் கேட்டுவிட்டு வெளியே வந்தார். அவர் என்னைப் பார்த்ததும் அங்கே இருந்தோரிடம் கூறினர்:

'' 'இவரை விட்டுவிடுங்கள்! இவர்தான் இந்த வீட்டுக்காரர், எனக்குத் தெரியும்.'

''அதன் பிறகுதான் போலீஸ்காரர் என்னை என் வீட்டுக்குள் போக விட்டார். மறுநாள் எனக்கு நான் புதிய உடுப்புகளும் குல்லாயும் பூட்சும் வாங்கிக் கொண்டேன். எனக்கு அது மகிழ்ச்சிக்குரிய நாளாகும் என்பதைக் கூறத் தேவையில்லை.''



ஃபேத்யா மாமா கூறிய கதையைக் கேட்டு வான்யா மாமாவும், குஸ்மா மாமாவும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். பிறகு குஸ்மா மாமா தமது கதையைக் கூறினர்.

''நானும் ஒரு நாள் என் எதிரே கரடி வரக் கண்டேன். அப்போது குளிர் காலம். நான் காட்டுக்குச் சென்றிருந்தேன். நேரே என் முன்னல் கரடி உறுமிக் கொண்டு வந்தது. உடனே துப்பாக்கியை உயர்த்திச் சுட்டேன். டுமீல்! கரடி சுருண்டு தரையிலே வீழ்ந்தது. அதை எனது சறுக்கு ஊர்தியில் இழுத்துப் போட்டுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினேன். அதை இழுத்து வருவதற்குள் எனக்கு உயிரே போய்விட்டது. கிராமத்தை வந்தடைந்து பிறகுதான் சிறுவர்கள் சிலர் எனக்கு உதவினார்கள். அவர்களுக்கு நான் மனம் நிறைந்த நன்றி தெரிவித்தேன்.

''கரடியுடன் சறுக்கு ஊர்தியை என் வீட்டின் வெளிமுற்றத்துக்கு இழுத்துச் சென்றேன். எனது சிறுவன் அந்தக் கரடியைப் பார்த்ததும் மலைத்து விட்டான். அந்தக் கரடித் தோலில் நான் கோட்டு தயாரித்துப் போட்டுக் கொண்டால் பிரமாதமாக இருப்பேன் என்றாள் என் மனைவி. பிறகு இவர்கள் இருவரும் வீட்டுக்குள் சென்றார்கள்.இனி என்ன செய்யலாமென்று ஆலோசித்தபடி நான் கரடியைப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் நின்றேன். அப்போது எங்களுடைய நாய் அந்தக் கரடியிடம் ஓடி அதன் காதைக் கடித்து விட்டது.உடனே கரடி துள்ளி எழுந்து நின்று பயங்கரமாய் உறுமிற்று.கரடியை நான் சுட்டுக் கொன்றுவிட்டதாக நினைத்திருந்தது சரியல்ல.நான் சுட்டதும் அது கதிகலங்கிப் போய் மூர்ச்சித்து விழுந்ததே அன்றி செத்துவிடவில்லை.

''கரடி உறுமியதும் நாய் ஓட்டமாய் ஓடிவிட்டது. உடனே கரடி என்மீது



பாய்ந்தது. விலகி ஓடிய நான் எங்கே போய்ப் பதுங்கலாமென்று சுற்றிலும் பார்த்தேன். கோழிக் கூண்டினுள் ஒளிந்து கொள்ளலாமென்று வேகமாக ஏணியில் ஏறி கூண்டின் கூரை உச்சிக்குச் சென்று திரும்பிப் பார்த்தேன். என்னைப் பின்தொடர்ந்து கரடியும் மேலே ஏறி வரக் கண்டேன். கரடி உச்சிக்கு என் அருகே வந்ததும் கூண்டின் கூரை முறிந்து விழுந்தது. கரடியும் நானும் கூண்டுக்குள் விழுந்தோம். கோழிகள் கீச்சிட்டுக் கத்திக் கொண்டு சிறகடித்து நாற்றிசையிலும் தாவிப் பறந்தோடின.

''நான் கூண்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டுக் கீழே குதித்து வீட்டுக்குள் ஓடினேன். கரடியும் என் பின்னால் ஓடி வந்தது. நான் மேசையிலே மோதிக் கிண்ணங்களையும் வட்டில்களையும் தரையிலே விழுந்து நொறுங்கச் செய்தேன். எனது சிறுவன் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டான்.

''இனி நான் தப்ப வழியில்லை என்பது தெரிந்தது. பேசாமல் என் படுக்கையிலே படுத்துக் கண்களை இறுக மூடிக் கொண்டேன். கரடி ஓடி வந்து தனது கனத்த பாதத்தை என்மேல் வைத்தது.

'' 'எழுந்திரு! தூங்கியதுபோதும், விழித்துக்கொள்!' என்று அது உறுமியது.

''கண்ணைத் திறந்து பார்த்தேன். என் மனைவி என்னைப் பிடித்துஉலுக்கினாள்.

'' 'எழுந்திரு! நேரமாகிவிட்டது. அதிகாலையிலே வேட்டையாடப் புறப் படப் போவதாக சொன்னாயே, எழுந்திரு!' என்றாள் அவள்.

''உடனே எழுந்து காட்டுக்குச் சென்றேன். ஆனால் அன்று நான் எந்தக் கரடியையும் பார்க்கவில்லை. எனது மகனுடனும் மனைவியுடனும் நான் இன்பமாய் வாழ்ந்து வருகிறேன்.''

அவருடைய கதையைக் கேட்டு வான்யா மாமாவும் ஃபேத்யா மாமாவும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். குஸ்மா மாமாவும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தார்.

பிறகு மூவருமாக வீட்டுக்குப் புறப்பட்டனர்.

''இன்று நமது வேட்டை சிறப்பாகவே இருந்தது, இல்லையா?'' என்று கேட்டார் வான்யா மாமா. ஒரு தரங்கூட நாம் சுடவில்லை, ஆயினும் மிகவும் இனிய முறையில் நேரம் கழிந்தது.''

''சுடுவதற்கு எனக்கு மனம் வருவதில்லை'' என்றார் ஃபேத்யா மாமா. ''முயல்களும் மென்முடிக் கீறிகளும் நரிகளும் நல்லபடி வாழ வேண்டுமென விரும்புகிறேன்.''

''பறவைகளும்தான்'' என்றார் குஸ்மா மாமா. ''காடுகளில் பறவைகளும், விலங்குகளும் நிறைய இருந்து நம்மை மகிழ்விக்க வேண்டும். இல்லை யேல் வாழ்க்கை நமக்குச் சுவைக்காது. வனங்களில் வாழும் உயிர்களை நாம் காப்பாற்ற வேண்டும்.''

குதூகல வேட்டைக்காரர்கள் மூவரும் இவ்வாறுதான் வாழ்ந்து வந்தனர்.

வீட்டிலும் பள்ளியிலும்

(புத்தகத்திலிருந்து சில பக்கங்கள்)

எங்கள் முன்னணி இளைஞர் குழுத் தலைவன் வலோதியா எங்கள் பள்ளியில் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வதெனத் தீர்மானித்தான். சிறுரில் சிலர் கவிதை ஓதுவதற்கும் மற்றும் சிலர் கழைக்கூத்துகள் ஆடிக் காட்டுவதற்கும் ஏற்பாடாயிற்று. கிரிஷா தான் பலாலைக்கா வாத்தியம் வாசிக்கப் போவதாகச் சொன்னன். உக்ரேனிய நாட்டியம் ஆடுவதாகப் பாவ்லிக் கூறினன். வான்யாவும் ஈகாரும்தான் யாவற்றிலும் சிறப்பான நிகழ்ச்சியை அளிக்க முன் வந்தனர். பூஷ்கினது காவியமான ருஸ்லான்-லுத்மீலாவிலிருந்து ஒரு காட்சியைத் தாம் நடித்துக் காட்டுவோம் என்றனர். தரையில் வீற்றிருந்த அரக்கனது தலையை எதிர்த்து ருஸ்லான் போர் புரியும் காட்சியை மேடையிலே காட்ட இருவரும் திட்டமிட்டனர். அரக்கன் தலையை ஒட்டுப் பலகையில் வரைந்து அறுத்தெடுத்து, பார்க்கப் பயங்கரமானதாக இருக்கும்படி வர்ணம் பூசித் தயார் செய்யப் போவதாக ஈகார் கூறினன். இந்த தலையின் பின்னல் மறைந்து கொண்டு தான் அரக்கனது குரலாக இருந்து பேசுவேன் என்ருன். வான்யா நீளமான ஒரு கம்பை ஈட்டியாகக் கையில் ஏந்தி எங்களது நான்காம் வகுப்புப் பாடப் புத்தகத்திலுள்ள படத்தில் காட்டப்படுவது போல் வீரன் ருஸ்லானுக வந்து நின்று அரக்கத் தலையை எதிர்த்துப் போராடுவான். கோஸ்த்யாவும் நானும் இந்த கலை நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விரும்பினேம். ஆனல் எங்கள் ஆசிரியை நாங்கள் நன்ருகப் படிக்கவில்லை என்று சொல்லி எங்களுக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார். ''படிப்பில் நீங்கள் முன்னேற்றம் காட்டுங்கள், அதன் பிறகு உங்களையும் சேர்த்துக் கொள்கிறேம்'' என்ருர்.

அன்றிலிருந்து சிறுவர்களும் சிறுமிகளும் தங்களுக்குரிய நாடக வசனங்களை வீட்டில் படிக்க ஆரம்பித்தனர். பிறகு பள்ளியின் கூட்ட மண்டபத்தில் ஒத்திகைகள் நடத்த முற்பட்டனர். கோஸ்த்யாவும் நானும் மட்டும் எதிலும் பங்கின்றி, ஏனையோர் செய்வதை ஒதுங்கி நின்று ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தோம். ஈகார் ஒரு பெரிய ஒட்டுப் பலகையில் அரக்கனது தலையைத் தயார் செய்து எடுத்து வந்திருந்தான். அரக்கனின் மேவாயை அவன் ஒரு துண்டுப் பலகையில் செய்து ஆணிகளைக் கொண்டு தக்கபடி அதை முகத்துடன் இணைத்திருந்தான். அரக்கனின் தலைக்குப் பின்னலிருந்து இந்த வாயைத் திறக்கவும் மூடவும் முடிந்தது. அரக்கனது விழிகளைப் பிதுங்கிக் கொண்டு பெரிதாகத் தெரியும்படி அவன் வரைந்திருந்தான். ஈகார் இந்தத்

தலைக்குப் பின்னால் மறைந்துகொண்டு அரக்கனது வாயை ஆட்டியசைத்த படி அடித் தொண்டையால் கத்தியபோது, மெய்யாகவே அரக்கனது அந்தத் தலை வாயைத் திறந்து கர்ஜிப்பது போல் தோன்றியது. ருஸ்லான்—அதாவது வான்யா, ஈட்டியை நீட்டிப் பிடித்துக் கொண்டு இந்தத் தலை மீது பாய்ந்து அதைக் குத்த முயன்றதையும், அரக்கனது தலை அவன் மீது வாயால் ஊதி அவனை வீழ்த்த முயன்றதையும் பார்ப்பதற்கு வேடிக்கையாகவே இருந்தது. கதையில் அரக்கன் ஊதிய வேகம் தாளமாட்டாமல் ருஸ்லான் முதலில் பின்னோக்கித் தள்ளப்பட்டு விடுகிறான்.

ஒத்திகைகள் நடைபெற்று வந்தபோது ஒரு நாள் கோஸ்த்யா என்னிடம் சொன்னான்:

''ருஸ்லான்-லுத்மீலா காவியத்தைப் படித்துப் பார்த்தேன். வீரன் ருஸ் லான் குதிரையில் ஏறி வருவதாய் அதில் இருக்கிறது. ஆனால் வான்யா மேடை யிலே அங்குமிங்கும் நடந்து கொண்டு இருக்கிறானே, நன்றாகவா இருக்கிறது இது?''

''குதிரைக்கு எங்கே போவது? அப்படியே ஒன்று கிடைத்தாலும் அதைப் படிகளில் ஏறச் செய்து மேடைக்குக் கொண்டு வருவது எப்படி?''

''நான் சொல்கிறேன், கேள்! நீயும் நானும் குதிரையாக நடிக்கலாம்.''

''அதெப்படி நீயும் நானும் குதிரையாக நடிப்பதாம்?''

''என்னுடைய 'விளையாட்டு வேடிக்கை' புத்தகத்திலுள்ள படத்தைக் காட்டுகிறேன், அதைப் பார்த்தால் தெரியும். சிறுவர்கள் இருவர் சேர்ந்து ஒரு குதிரையாகிவிட முடியும். முதலில் துணியில் பொம்மைக் குதிரை செய்து கொள்ளவேண்டும்.முன்னால் தலையும் பின்னால் வாலும் கீழே நான்கு கால்களும் வைத்து, முன் பகுதியில் நான் புகுந்து கொண்டு என் தலையைக் குதி ரையின் தலைக்குள் புகுத்திக் கொள்வேன். பின் பகுதியில் நீ புகுந்து கொண்டு கைகளால் என் இடுப்பைப் பிடித்துக் கொள். உனது குனிந்த முதுகு குதிரை யின் முதுகாகிவிடும். குதிரைக்கு நான்கு கால்கள், அதேபோல் நம் இருவருக் கும் சேர்ந்து நான்கு கால்கள். வெளியிலிருந்து பார்ப்பதற்குக் குதிரை மாதிரியே இருக்கும். என் பின்னால் எனக்கு இசைவாய் நடந்து வா.''

''துணியில் குதிரைப் பொம்மை தயாரிக்க முடியாதே நம்மால். நாம் பெண்களாய் இருந்தால் தைக்கத் தெரிந்திருக்கும், தயாரிக்கலாம்.''

''உன் தங்கை லீக்காவிடம் சொன்னால் தைத்துத் தருகிறாள்.''

அவளிடம் நாங்கள் எங்கள் திட்டத்தைச் சொன்னோம்.

''சரி, நான் தைத்துத் தருகிறேன்'' என்றாள் அவள். ''ஆனால் நிறைய துணி வேண்டுமே.''

துணிக்கு என்ன செய்வது என்று தெரியாமல் நாங்கள் திண்டாடினோம். பிறகு கோஸ்த்யா அவன் வீட்டில் உக்கிராண அறையில் பழைய மெத்தை

ஒன்று இருக்கக் கண்டான். அதை எடுத்து வந்து அதனுள் இருந்த பஞ்சை நாங்கள் வெளியே எடுத்தோம். இந்தத் துணி போதும் என்ருள் லீக்கா. நான்கு ஓரங்களிலும் கிழித்துச் சென்று அதை அவள் இரண்டு துண்டுகளாக் கிஞள். பிறகு அவற்றில் ஒரு துண்டில் ஒரு பெரிய குதிரையின் உருவத்தை வரையும்படி எங்களிடம் சொன்ஞள்.

தலே கால்களுடன் அசல் குதிரை ஒன்றை நாங்கள் வரைந்து கொடுத் தோம். இந்தத் துண்டை லீக்கா இன்ஞென்றின் மீது வைத்து இரு துண்டு களேயும் அவள் கத்தரித்தாள். இரு குதிரை வடிவங்கள் கிடைத்தன. இரண் டையும் சேர்த்துக் குதிரையின் முதுகுப்புறத்திலும், பிறகு தலேயைச் சுற்றி லும் தைத்தாள். கோஸ்த்யாவும் நானும் அவளுக்கு உதவி செய்தோம். கால் களேத் தைப்பதுதான் மிகவும் கடினமாக இருந்தது, ஏனெனில் ஒவ்வொரு காலேயும் ஒரு குழாய் மாதிரி தைக்க வேண்டியிருந்தது. கால்களேத் தைத்து முடிப்பதற்குள் எங்கள் விரல்களில் ஊசி பல தடவை குத்தி இரத்தமுங்கூட வந்துவிட்டது.

இதற்கு அடுத்த நாள் நாங்கள் வைக்கோலும் நாரும் எடுத்து வந்து தொடர்ந்து வேலே செய்தோம். வைக்கோலேக் குதிரையின் தலேக்குள் ஒரு பகுதியில் அடைத்து விறைப்பாக நிற்கும்படிச் செய்தோம். நாரில் குதிரை வால் தயார் செய்தோம்.

வேலேகள் யாவும் முடிந்ததும் குதிரையின் வயிற்றில் தைக்காமல் விடப் பட்டிருந்த இடுக்கு வழியே கோஸ்த்யாவும் நானும் உள்ளே புகுந்து கொண்டு, இருவருமாகச் சேர்ந்து நடந்து பார்த்தோம். லீக்காவுக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லே; குதிரை நன்ருய் இருப்பதாகச் சொல்லி மகிழ்ந்து கொண்டாள். குதிரையின் விலாப்புறங்கள் தொய்வுருமல் நன்ருக இருப்பதற் காக உள்ளே பஞ்சை வைத்துத் தைக்க வேண்டும் என்ருள். மேலெங்கும் தக்கபடி வர்ணம் பூச வேண்டும், அப்போதுதான் எல்லாம் துணி என்பது தெரியாமல் இருக்கும் என்ருள்.

நாங்கள் துணிக்குள்ளிலிருந்து வெளியே வந்ததும், குதிரைக்குள் விலாப் புறங்களில் லீக்கா பஞ்சை வைத்துத் தைத்தாள். கோஸ்த்யா தன் வீட் டிற்குச் சென்று தரையை மெருகிடுவதற்காக அவன் அம்மா உபயோகித்த பழுப்பு நிறப் பசையில் கொஞ்சம் எடுத்து வந்தான். அதைத் தடவியதும் எங்கள் குதிரை உயிருள்ள குதிரையைப் போல் பழுப்பு மேனியுடையதாகி விட்டது. பிறகு நாங்கள் வண்ணங்களே எடுத்துவந்து கண்கள், வாய், நாசி கள் ஆகியவற்றுக்குத் தக்கபடி வண்ணம் பூசிஞேம். குளம்புகளுக்கும் வண் ணம் தடவிஞேம். காதுகள் இல்லாமல் எங்கள் குதிரை ஒரு மாதிரியாக இருப் பதாகச் சொல்லி லீக்கா காதுகளேயும் வைத்துத் தைத்துச் சரி செய்தாள். பிறகு நாங்கள் இருவரும் திரும்பவும் உள்ளே புகுந்து கொண்டோம்.

''இம்-கும்-ம்!'' என்று கோஸ்த்யா கனைத்தான்.

''அசல் குதிரையேதான்'' என்று லீக்கா வியந்து கூச்சலிட்டுச் சிரித்தாள்.

சற்று நேரம் நாங்கள் அறைக்குள் சுற்றிச்சுற்றி நடந்தோம், துள்ளியோடியும் உதைத்தும் பார்த்தோம். எங்களைப் பார்ப்பதற்கு வேடிக்கையாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் லீக்கா ஓயாமல் சிரித்துக் கொண்டே இருந்தாள். வீட்டுக்குத் திரும்பிய அம்மா எங்களைப் பார்த்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார். அப்பா வந்து சேர்ந்ததும் அவரும் வயிறு குலுங்க சிரித்தார்.

''எதற்காக இந்தக் குதிரை?'' என்று சிரித்து ஓய்ந்ததும் அவர் கேட்டார்.

எங்கள் பள்ளியில் நடைபெறும் கலை நிகழ்ச்சியும் அதில் நாங்கள் ருஸ்லானின் குதிரையாக மேடையிலே வரப்போவதையும் பற்றி அவரிடம் சொன்னோம்.

''பள்ளிக்கூடக் கலை நிகழ்ச்சி எப்போதுமே வரவேற்கத்தக்கதாகும். பயனுள்ள பலவும் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். அது எப்போது நடைபெறப் போகிறதென்று சொல்லுங்கள். நானும் வந்து அதைப் பார்க்க விரும்புகிறேன்.''

எங்கள் குதிரையை கோஸ்த்யாவின் வீட்டில் எல்லார்க்கும் காட்டுவதற்காக நாங்கள் அவன் வீட்டுக்குக் கிளம்பினோம்.

''அப்பாவும் இந்தக் கலை நிகழ்ச்சிக்கு வரப் போவதாக சொல்கிறார், ஆனால் நம்மை நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்காவிடில் என்ன செய்வது?'' என்று போகிற வழியில் நான் கோஸ்த்யாவைக் கேட்டேன்.

''நாம் யாரிடமும் சொல்லப் போவதில்லை, நம்முடைய குதிரை உடுப்புகளுடன் பள்ளிக்கூடத்திற்குச் சென்று நிகழ்ச்சி மேடையின் புடைவாரத்தில் பதுங்கிக் கொண்டிருப்போம். மேடைக்குள் வான்யா செல்வதற்குச் சற்று முன்னால் அவனிடம் சொல்வோம், குதிரையில் ஏறி அவன் எல்லார் முன்னாலும் சென்று நடிக்க வேண்டுமென்போம்.''

''ஆம், அதுதான் சரி. அப்படித்தான் செய்ய வேண்டும்.''

கலை நிகழ்ச்சிக்குரிய நாள் எப்போது வருமென்று நாங்கள் ஆவலுடன் காத்திருந்தோம். எங்களுக்கு உண்டான பரப்பரப்பில் முன்னிலும் இப்போது மோசமான மதிப்பெண்கள் பெற்று வந்தோம். நாள்தோறும் எங்கள் குதிரையினுள் புகுந்து கொண்டு நடை பழகினோம். நாள்தோறும் லீக்கா எங்கள் குதிரையில் இன்னொரு இடத்தில் கொஞ்சம் சரி செய்ய வேண்டுமென்று உள்ளே பஞ்சை வைத்துத் தைத்தாள். முடிவில் குதிரை எந்த குறையுமற்றதாகியது. தொங்கி விழுந்தக் குதிரைக் காதுகளை நிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டுமென்று கோஸ்த்யா ஒவ்வொரு காதிலும் சுருள்வில்லைச் செருகி வைத்தான். பிறகு காதுகளுடன் நூலைக் கட்டி உள்ளே இருந்தபடி நூலை இழுத்துக் குதிரை காதுகளைத் துடித்தாடும்படிச் செய்தான்.

முடிவில் கலைநிகழ்ச்சிக்குரிய நாள் வந்து சேர்ந்தது.

நாங்கள் எங்கள் குதிரை உடுப்பை யாருக்கும் தெரியாமல் கூட்ட மண்டபத்துக்குள் எடுத்துச் சென்று அங்கே மேடையின் புடைவாரத்தில் ஒளித்து வைத்தோம். பிறகு வான்யா எப்போது அந்த பக்கம் வருவானென்று காத்திருந்தோம். அவன் வந்ததும் கோஸ்த்யா அவனைத் தனியே அழைத்துச் சென்றான்.

''வான்யா நான் சொல்வதைக் கேள். அரக்கன் தலையை எதிர்த்துப் போர் புரிய நீ மேடைக்குள் செல்லுமுன் இந்த புடைவாரத்துக்கு வந்து பார்'' என்று கோஸ்த்யா அவனிடம் சொன்னான். ''உனக்காக இங்கு ஒரு குதிரை காத்திருக்கும், மேடைக்குள் நடந்து செல்வதற்கு பதில் அந்தக் குதிரை மீதேறிச் செல், நன்றாயிருக்கும்.''

''மெய்யான குதிரையா?''

''நல்ல குதிரை, நீ ஒன்றும் கவலைப்படாதே; பேசாமல் அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொள். அது உன்னை மேடைக்குள் கொண்டு போகும், நீ சொல்கிறபடி எல்லாம் செய்யும்.''

''நல்லதுதான்... ஆனால் ஒத்திகைகளின்போது குதிரை ஒன்றும் இருக்கவில்லையே.''

''அதனால் என்ன? நீ குதிரை மீது சென்று போர் புரிந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென்று சிந்தித்துப் பார். பூஷ்கினது காவியத்தில் ருஸ்லான் குதிரை மீதுதான் செல்கிறான். நம்முடைய பாடப் புத்தகத்தில் உள்ள படத்தைப் பார். ருஸ்லான் குதிரை மீதேறிச் சென்றுதான் போராடுகிறான்.''

''ஆமாம், குதிரைவீரன் குதிரையின்றி சும்மா மேடையிலே வந்து நின்று போராடுவது நன்றாகத்தான் இல்லை. நீ சொல்கிறபடி குதிரை மீதேறிச் செல்கிறேன்.''

''ஆனால் யாரிடத்தும் இதைப் பற்றிச் சொல்லாதே. எல்லாரையும் நாம் வியப்புறச் செய்ய வேண்டும்.''

''சரி'' என்றான் வான்யா.

மண்டபத்துள் எல்லாரும் வந்து உட்கார்ந்தனர். நாங்கள் மேடைக்குப் பின்னால் சென்றோம். கலைநிகழ்ச்சி ஆரம்பமாவதற்காக அங்கே காத்திருந்தோம். நிகழ்ச்சியில் பங்கு கொள்வோர் அவசரமாய் வேலை செய்தனர், ஜோடனைகளும் பிறவும் ஒழுங்காய் இருக்கின்றனவா என்று அங்குமிங்கும் ஓடிச் சென்று பார்வையிட்டனர். மணி அடித்து, கலை நிகழ்ச்சி தொடங்கியது. புடைவாரத்தில் நின்று மேடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நாங்கள் கண்டு களித்தோம். பாக்கள் ஓதப்பட்டதையும் பிறகு கழைக்கூத்துகள் நடைபெற்றதையும் பார்த்துக் கொண்டு நின்றோம். கழைக்கூத்தும் உடற்பயிற்சி வித்தைகளும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. பின்னணி இசைக்கு இசைவாய் இவை



யாவும் நடைபெற்றன. சிறுவர்கள் மிகவும் சிறப்பாகவே இவற்றைச் செய்து காட்டினர். இரண்டு வாரங்களாக அவர்கள் ஒத்திகைகள் நடத்தியது தக்க பலனை அளித்தது. யாவும் குற்றங் குறையின்றிச் செய்து காட்டப்பட்டன. பிறகு திரை விடப்பட்டது. மேடைக்குள் பலரும் ஓடியாடி வேலை செய்து அரக்கன் தலையை வைத்தமைத்தனர். ஈகார் அதன் பின்னல் மறைந்து கொண்டான். பிறகு நாங்கள் வான்யாவைக் கண்டோம். பளபளப்பான தலைக் கவசம் வைத்திருந்தான். நீளமான கம்பில் அலுமினிய வண்ணப் பூச்சிடப்பட்டிருந்த ஈட்டியைக் கையில் ஏந்தியிருந்தான். அவன் எங்களிடம் கேட்டான்:

''குதிரையைக் காணுமே, எங்கே அது?''

''ஒரேயொரு கணம், காத்திரு'' என்றான் கோஸ்த்யா.

அவசரமாய் நாங்கள் எங்கள் உடுப்புக்குள் புகுந்து கொண்டோம்.

''நீ ஏறி உட்கார்ந்து கொள்'' என்று நான் குதிரைக்குள்ளிருந்து அவனிடம் சொன்னேன்.

வான்யா என் முதுகில் ஏறி உட்கார்ந்தான். குதிரையின் வாழ்க்கை மெத்தக் கடினமானது என்பதை அப்போதுதான் நான் தெரிந்து கொண்டேன். வான்யா என்னைத் தரையோடு வைத்து அழுத்தி விடுவானென நான் நினைக்கும்படி அப்படிக் கனமாக இருந்தான். நான் கீழே அழுத்தப் பட்டு விடாதிருக்கும் பொருட்டு கோஸ்த்யாவின் இடுப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். அதே கணத்தில் திரை தூக்கப்பட்டது.

''ஏ-கேய்!'' என்றான் வான்யா, அதாவது ருஸ்லான்.

கோஸ்த்யாவும் நானும் பாதங்கள் தடதடக்க மேடையினுள் சென்றோம். மண்டபத்தில் சிறுவர் சிறுமிகள் எல்லாரும் வியந்து மகிழ்ந்து ஆரவாரமிட்டுச் சிரித்தார்கள். மேடையிலே குதிரையைக் கண்டு அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். நேரே அரக்கன் தலைக்கு அருகே நாங்கள் சென்றோம்.

''ஓய், ஓய்!'' என்று ருஸ்லான் கிசுகிசுத்தான். ''எங்கே போகிறீர்கள்?'' பின்னல் நகருங்கள்! தலையிலே மோதிக் கீழே தள்ளிவிடுவீர்கள் போலிருக்கிறதே.''

நாங்கள் பின்னல் நகர்ந்து நடந்தோம். மண்டபத்தில் குழுமியிருந்தோர் மீண்டுமொரு தரம் வாய்விட்டுச் சிரித்தனர்.

''பின்னல் சென்றது போதும்!'' என்று முணுமுணுக்கும் குரலில் வான்யா எங்களிடம் சொன்னான். ''மேடையின் மையத்துக்குச் செல்லுங்கள், நான் எனது தனியுரையை நிகழ்த்தியாக வேண்டும்.''

அவன் சொற்படி நாங்கள் அங்கிருந்து திரும்பி மேடையின் மையத்தில் வந்து நின்றோம். வீறார்ந்த குரலில் வான்யா உருக்கமாய் ஓதினான்:

இங்கு வந்தவன் யாரெனச்
சொல்லு நீ, பெருவெளியே!

எங்கும் எலும்பை இறைத்துளான்,
கொடு மனங் கொண்ட பாவி!

அடியடியாய் அவன் கூறிச் சென்றான். ஒவ்வொரு அடிக்கும் ஒரு தரம் சிம்ம கர்ஜனை புரிந்தான். இதற்கிடையில் குதிரையின் காதுகளுடன் இணைக் கப்பட்ட நூலைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான் கோஸ்த்யா. குதிரை யின் காதுகள் ஆடித் துடித்ததைக் கண்டு சபையோர் கிளுகிளுத்துச் சிரித்த னர்.

வான்யா தனது தனியுரையை நிகழ்த்தி முடித்ததும், இரகசியமாய் எங்களிடம் சொன்னான்:

''இனி அரக்கன் தலையிடம் செல்லுங்கள்.''

அவ்வாறே நாங்களும் சென்றோம். அரக்கன் தலையிலிருந்து ஐந்து தப்படி தூரத்துக்கு வந்ததும் கோஸ்த்யா கனைத்துக் கொண்டு துள்ளிக் குதித்தான். குதிரை மிரண்டு விட்டதைக் காட்டும் பொருட்டுப் பின்னாலிருந்து நானும் குதித்துக் கால்களை உயர்த்தி உதைத்துக் கொண்டேன். பிறகு ருஸ்லான் தனது குதிரையை முன்னே செல்லும்படிக் குதிமுள்ளால் குதிரையின் விலா வில் தட்டி ஊக்குவித்தான், அதாவது குதிகாலால் என்னை உதைத்தான். நாங்கள் அரக்கன் தலைக்கு அருகே சென்றோம். ருஸ்லான் தனது ஈட்டியின் முனையால் அரக்கனது நாசியைத் தட்டினான். திடீரென அந்தத் தலை தனது வாயைத் திறந்து ஒரு தும்மல் தும்மி ஊதிற்று. கோஸ்த்யாவும் நானும் திடுக் கிட்டுப் பின்னால் பாய்ந்தோம். அரக்கன் ஊதிய காற்றால் தள்ளப் பட்டது போல் நாங்கள் தாவித் துடித்துக் கொண்டு சுற்றிப் பாய்ந்தோடினோம். ருஸ் லான் என் முதுகிலிருந்து கீழே விழுந்துவிடும் நிலைக்குச் சரிந்து விட்டான். அப்போது கோஸ்த்யா என் காலை மிதித்து விடவே வலி பொறுக்கமாட் டாமல் நொண்டிக் கொண்டு நான் துள்ளிக் குதித்தேன். வான்யா என் விலாவில் உதைத்தான். திரும்பவும் நாங்கள் அரக்கன் தலைக்கருகே பாய்ந் தோடினோம். அரக்கன் தலை எங்கள் மீது காற்றை ஊதியதும் மீண்டும் நாங் கள் குதித்துக் கொண்டு பக்கவாட்டில் விலகிச் சென்றோம். இப்படி நாங்கள் பல தரம் அரக்கனின் தலையை நோக்கிப் பாய்ந்துத் திருப்பியடிக்கப்பட்டு பின்னால் ஓடினோம்.

''போதும் இது! சீக்கிரமாய் உன் வேலையைச் செய்து முடி! எனக்குக் கால் வலிக்கிறது, உன்னை இனி தூக்கச் செல்ல முடியாது என்னால்!'' என்று நான் அழாக் குரலில் வான்யாவிடம் சொன்னேன்.

கடைசி முறையாக நாங்கள் அரக்கன் தலையிடம் பாய்ந்து சென்றோம். வான்யா அதன் மீது தனது ஈட்டியால் பலமாகக் குத்தினான், அதில் பூசப் பட்டிருந்த வர்ணத்தில் ஒரு பகுதி கலைந்து போயிற்று. தலை தடாரெனப் பெயர்ந்து உருண்டு விழுந்தது. காட்சி முடிவுற்று, நாங்கள் நொண்டிக்



குதித்துக்கொண்டு புடைவாரத்துக்குள் போய்ச் சேர்ந்தோம். கூடியிருந்தோர் ஆர்ப்பரித்துச் கூச்சலிட்டபடிக் கையொலி முழக்கம் செய்தனர். வான்யா குதிரையிலிருந்து கீழே குதித்து மேடைக்குள் சென்று மெய்யான நடிகனைப் போலவே தலை குனிந்து சபையோருக்கு வணக்கம் தெரிவித்தான்.

''நாமும் காட்சியில் பங்கெடுத்துக் கொண்டதால், மேடைக்குச் சென்று நாமும் வணக்கம் கூறியாக வேண்டும்'' என்றான் கோஸ்த்யா.

ஆகவே புடைவாரத்திலிருந்து குதிரையும் மேடையிலே பாய்ந்து வந்து நின்று தலையை ஆட்டியாட்டிக் குனிந்து வணக்கம் தெரிவித்தது. யாவரும் பரபரப்படைந்து விட்டனர். காது செவிடுபட மகிழ்ச்சிக் கூச்சல்களும் வாழ்த்தொலியும் கிளர்ந்தெழுந்தன. நாங்கள் புடைவாரத்துக்குத் திரும்பிச் சென்ற பிறகும் ஆரவார முழக்கம் ஓயவில்லை. ஆகவே நாங்கள் மீண்டும் ஒரு தரம் மேடைக்குள் பாய்ந்தோடி வணக்கம் தெரிவித்தோம்.

சில நாட்களுக்குப் பிறகு எங்கள் உடற்பயிற்சி ஆசிரியர் கூடைப் பந்து ஆட்டம் பயில விரும்புவோர் ஆட்டக் குழுவில் சேர்வதற்குப் பெயர் கொடுக்கலாமென அறிவித்தார். எல்லாச் சிறுவர்களும் சேர விரும்பினார்கள். கோஸ்த்யாவும் நானும் கூடத்தான் பெயர் கொடுக்கச் சென்றோம். ஆனால் எங்கள் ஆசிரியர் படிப்பில் பின்தங்கியவர்கள் சேர்க்கப்படலாகாது என்று சொல்லி எங்களைத் தடுத்துவிட்டார்.

இதனால் என்னையும்விட அதிகமாக கோஸ்த்யாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆட்டக் குழுவில் சேர வேண்டுமென பல நாட்களாய் அவன் ஆவலுடன் காத்திருந்தான். ஏனைய எல்லாரும் ஆட்டக் களத்தில் விளையாட நாங்கள் இருவர் மட்டும் விலகி நின்று வேடிக்கை பார்க்க வேண்டியதாயிற்று. இதை நான் அவ்வளவாய் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் படிப்பில் விரைவில் முன்னேற்றம் காட்டி ஆட்டக் குழுவில் சேர அனுமதி பெறுவதென்று நான் தீர்மானித்திருந்தேன்.

மோசமான மதிப்பெண் பெறும் வகுப்பென எங்கள் வகுப்பு அனைத்துமே பெயர் பெற்றுக் கண்டிக்கப் பட்டு வந்தது. உண்மையில் கோஸ்த்யாவும் நானும் மட்டும் தான் மோசமான மதிப்பெண்கள் பெற்று வகுப்பு அனைத்துக்குமே கெட்டப் பெயர் கிடைக்கச் செய்திருந்தோம்.

''உங்கள் இருவராலும் வகுப்புக்கு அவமானம் ஏற்பட்டு வருகிறது'' என்று யூரா எங்களிடம் வந்து முறையிட்டான். ''உங்கள் இருவரையும் ஆட்டக் குழுவில்கூட சேர்த்துக் கொள்ள முடியாதென்று சொல்லி விட்டார்கள். வீத்யா, நீ ஏன் முயற்சி எடுத்துப் படிக்கக் மாட்டேன்கிறாய்?'' என்று அவன் என்னைப் பார்த்துக் கத்தினான்.

''ஏன்தான் நீங்கள் இப்படி முட்டாள் பட்டம் பெறுகிறீர்களோ, தெரிய வில்லை'' என்று ஏனையோரும் சேர்ந்து கொண்டு எங்களைக் கண்டித்தனர்.

''நீங்கள் ஒன்றும் கூச்சலிட வேண்டாம்'' என்று நான் பதிலளித்தேன். ''படிப்பிலே இனி நான் பின்தங்கப் போவதில்லை என்று முடிவெடுத்திருக் கிறேன். ஆகவே ஓயாமல் நீங்கள் சொல்லிக் காட்டி எங்களைத் தொல்லை செய்ய வேண்டாம்.''

''பின்தங்கப் போவதில்லையென முடிவெடுத்திருக்கும் நீ ஏன் மோசமான மதிப்பெண்களை இவ்வளவு அதிகமாக வாங்கியிருக்கிறுயாம்?''

''இவை யாவும் எனது பழைய மதிப்பெண்கள். நன்ருகப் படித்து உயர்ந்த மதிப்பெண் பெறுவதென்று நேற்றுதான் நான் முடிவெடுத்தேன்.''

''முன்னதாகவே இப்படி முடிவெடுக்காமல் ஏன் நேற்று வரை காத் திருந்தாய்?''

''போதும், நிறுத்துங்கள்'' என்ருர் எங்களது ஆசிரியை. ''கோஸ்த்யாவுக் கும் வீத்யாவுக்கும் உதவுவதற்கு உங்களில் யாராவது ஒருவன் முன்வர வேண்டும்.''

''வீத்யாவுக்கு நான் உதவுகிறேன்'' என்ருன் வான்யா.

''கோஸ்த்யாவுக்கு நான் உதவுகிறேன்'' என்ருன் ஆலிக்.

''மெய்யான தோழமை என்பது இதுதான்'' என்ருர் எங்கள் ஆசிரியை. ''ஆனுல் இவர்கள் இருவரும் செய்ய வேண்டிய வீட்டுப் பாடங்களை இவர் களுக்குப் பதிலாய் நீங்கள் செய்வதில் பயன் ஏதும் இல்லை. நான் அதை விரும்பவில்லை. வீத்யா, என்னிடம் நீ உண்மையைச் சொல்லு. கணக்கு வர வில்லை என்று நீ உன் பெற்ருேர்களிடம் ஓடிச் சென்று போட்டுத் தரச் சொல்கிருயா?''

''இல்லை, இப்போது நான் அவர்களிடம் செல்வதில்லை, என் நண்பன் வீட்டுக்குச் சென்று அவனிடம் கேட்கிறேன்.''

''இரண்டும் ஒன்றுதானே. பொறுமை இழக்காமல் நீயேதான் முயற்சி எடுக்க வேண்டும். முயற்சி செய்தால் எப்படியும் வழி உனக்கே தெரியவரும். உன் வேலையை வேறொருவன் செய்து தரும் வரை உன்னுல் எதையும் கற்றுக் கொள்ள முடியாது. சிந்திப்பதற்குக் கற்றுத் தரும் பாடமாகும் கணிதம். நீயே முயற்சி செய்து வழி காண முயல வேண்டும்.''

''இனி நான் இவ்வாறுதான் செய்யப் போகிறேன்'' என்றேன்.

''முயற்சி செய்தும் வழிகாண முடியாவிட்டால்தான் வான்யாவிடமோ, என்னிடமோ வந்து உதவும்படிக் கேட்க வேண்டும்.''

''நானே எல்லாக் கணக்குகளையும் போட முயற்சி செய்கிறேன். சரியாக வராததை மட்டும் வான்யாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.''

வீட்டுக்கு வந்ததும் நான் உடனே உட்கார்ந்து வீட்டுப் பாடங்களைச் செய்ய ஆரம்பித்தேன். என்னுடைய வைராக்கியத்தைக் கண்டு எனக்கே வியப் பாய் இருந்தது. யாவற்றிலும் கடினமான கணக்கை முதலில் போட்டுவிட்டு அதன்பிறகு எளிய கணக்குகளைப் போடுவதென்று முடிவு செய்து கொண்டேன். எங்கள் ஆசிரியை இப்படித்தான் செய்யவேண்டுமென்று அடிக்கடி கூறிவந்தார்.

எண் கணிதத்தில் நான் ஒரு கணக்குப் போட வேண்டியிருந்தது. கணிதப் பாடப் புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டேன், கணக்கைப் படித்தேன்:

''இரும்புக் கடையில் 8 இரம்பங்களும் அதைப் போல் மூன்று மடங்கான சுத்தியல்களும் இருந்தன. தச்சர்களின் ஒரு குழு 84 ரூபிள் கொடுத்து 3 இரம்பங்களையும் இருந்த சுத்தியல்களில் சரி பாதியையும் வாங்கிக் கொண் டது. எஞ்சிய இரம்பங்களும் சுத்தியல்களும் தச்சர்களின் இரண்டாவது குழு ஒன்றிடம் 100 ரூபிளுக்கு விற்கப் பட்டன. ஒரு சுத்தியலின் விலை என்ன? ஒரு இரம்பத்தின் விலை என்ன?''

யாவும் ஒரே குழப்பமாய் இருந்ததால் கணக்கை நான் திரும்பவும் படித்துப் பார்த்தேன். பிறகு மூன்றுவது முறையும் படித்தேன்... திடுமென எனக்கு ஒரு விஷயம் புலப்பட்டது. கணக்குப் பாடப் புத்தகம் எழுதுகிறவர்கள் யாவற்றை யும் குழப்படி செய்து மாணவனுக்குப் புரியாத புதிராக்கித் தருவதற்காக வேண்டுமென்றே முயற்சி செய்வதாகப் பட்டது எனக்கு. இந்தக் கணக்கைப் பாருங்களேன்: ''8 இரம்பங்களும் அதைப் போல் மூன்று மடங்கான சுத்தியல்களும் இருந்தனவாம்.'' 24 சுத்தியல்கள் என்று அவர்களே சொல்லி விட்டால் என்னவாம்? எதற்காக ஒவ்வொன்றையும் இப்படி சிக்கலாகக் வேண்டும்? மூன்று எட்டு 24 என்பது தெரியாதா, என்ன? ஏன்தான் இப்படிக் குழப்படி செய்கிறுர்களோ, தெரியவில்லை. கணக்கு மேலும் சொல்வதாவது: ''தச்சர்களின் குழு ஒன்று 84 ரூபிள் கொடுத்து 3 இரம்பங்களும் இருந்த சுத் தியல்களில் சரிபாதியையும் வாங்கிக் கொண்டது. 12 சுத்தியல்களென அவர் களே சொல்லி விட்டால் கணக்கு சுலபமாகிவிடுமென்று இப்படிச் சொல்கி றுர்கள். 24ல் சரிபாதி 12 என்று யாருக்குத்தான் தெரியாது? இவ்வளவுக்கும் விலை 84 ரூபிள். எஞ்சியவை யாவும் தச்சர்களின் இரண்டாவது குழு ஒன் றிடம் 100 ரூபிளுக்கு விற்கப்பட்டனவாம். எஞ்சியவை யாவை? 24 சுத்தியல் களில் 12 விற்கப்பட்ட பிறகு எஞ்சுகிறவை 12 சுத்தியல்கள். இதை அவர் களே குறிப்பிட்டிருக்கலாம்.

முதலில் 8 இரம்பங்களே இருந்தன, இவற்றில் முதலாவது குழுவுக்கு 3 விற்கப் பட்டதால் இரண்டாவது குழு 5 இரம்பங்களை வாங்கியிருக்க வேண் டும். இதையும் அவர்களே குறிப்பிட்டிருக்கலாம். அவர்களுக்கே தெரிய வில்லை அவர்கள் செய்யும் காரியம், இந்த நிலையில் எங்களுக்குக் கணக்குப் போடத் தெரியவில்லை என்கிறுர்கள்!

குழப்படியைக் குறைப்பதற்காகக் கணக்கை நான் எளிதாக்கி எழுதினேன்: ''கடையில் 8 இரம்பங்களும் 24 சுத்தியல்களும் இருந்தன. முதலாவது தச்சர் குழு 84 ரூபிள் கொடுத்து 12 சுத்தியல்களும் 3 இரம்பங்களும் வாங்கியது. இரண்டாவது தச்சர் குழு 100 ரூபிள் கொடுத்து 12 சுத்தியல்களும் 5 இரம்பங்களும் வாங்கியது. ஒரு இரம்பத்தின் விலை என்ன? ஒரு சுத்தியலின் விலை என்ன?''

நான் எழுதியதைத் திரும்பப் படித்துப் பார்த்தேன், கணக்கு இப்போது கொஞ்சம் சிறியதாகி விட்டது தெரிந்தது. ஆயினும் என்னால் இதற்கு விடை காண இயலவில்லை. ஏனெனில் குழப்படி செய்யும் எண்கள் பலவும் இருந்தன. மேலும் சிலவற்றை விலக்கிக் கணக்கை இன்னும் எளிதாக்க வேண்டுமென்று என்னுள் கூறிக் கொண்டேன். கடையில் இருந்த எல்லாச் சுத்தியல்களும் இரம்பங்களும் விற்கப்பட்டு விட்டதால், முதலில் கடையில் சுத்தியல்களோ, இரம்பங்களோ எத்தனை இருந்தால் நமக்கு என்ன? இதைக் குறிப்பிட வேண்டியதில்லை அல்லவா?

கணக்கை மேலும் குறுக்கி எழுதினேன்: ''ஒரு குழு 84 ரூபிள் கொடுத்து 12 சுத்தியல்களும், 3 இரம்பங்களும் வாங்கியது. இன்னொரு குழு 100 ரூபிள் கொடுத்து 12 சுத்தியல்களும் 5 இரம்பங்களும் வாங்கியது. ஒரு சுத்தியலின் விலை என்ன? ஒரு இரம்பத்தின் விலை என்ன?''

கணக்கு முன்னிலும் சிறியதாகியது. இன்னுங்கூட இதைக் குறுக்கி எழுதலாமென நினைத்தேன். வாங்கியது யாராய் இருந்தால் நமக்கு என்ன? நமக்கு வேண்டியது சாமானின் விலைதானே.

ஆகவே கணக்கை நான் இவ்வாறு எழுதினேன். ''12 சுத்தியல்களுக்கும் 3 இரம்பங்களுக்கும் விலை 84 ரூபிள். 12 சுத்தியல்களுக்கும் 5 இரம்பங்களுக்கும் விலை 100 ரூபிள். சுத்தியலின் விலை என்ன? இரம்பத்தின் விலை என்ன?''

வேண்டாத விவரங்களை நீக்கிக் கணக்கைக் கூடுமான அளவுக்குக் குறுக்கி விட்டேன். இனி விடை காண வேண்டியதுதான் பாக்கி. ஆழ்ந்த முறையில் சிந்தனை செய்தேன். 12 சுத்தியல்களுக்கும் 3 இரம்பங்களுக்கும் விலை 84 ரூபிள் என்பதால் சுத்தியல்களையும் இரம்பங்களையும் கூட்டி, இந்த கூட்டல் தொகையான 15 ஆல் 84 ரூபிளை வகுக்க வேண்டுமென முடிவு செய்தேன். அப்போது 15 ஆல் 84ஐ மீதமின்றி வகுக்க முடியாதென்பது தெரிந்தது. ஆகவே எங்கோ இதில் தவறு இருந்தது. வேறு வழியை ஆலோசித்தாக வேண்டுமென்று கூறிக் கொண்டேன். 12 சுத்தியல்களையும் 5 இரம்பங்களையும் கூட்டி, கூட்டல் தொகையான 17 ஆல் 100 ரூபிளை வகுக்க முயன்று பார்த்தேன். ஆனால் 17 ஆல் 100ஐ மீதமின்றி வகுக்க முடியாதெனக் கண்டேன். பிறகு 24 சுத்தியல்களையும் 8 இரம்பங்களையும் கூட்டினேன்; கூட்டல் தொகை 32. 100 ரூபிளையும் 84 ரூபிளையும் கூட்டினேன்; கூட்டல் தொகை 184 ரூபிள். 32 ஆல் 184ஐ

வகுக்க முயன்றேன், இப்போதும் மீதமின்றி வகுக்க இயலவில்லை. இந்த வழியும் சரியல்ல என்பது தெரிந்தது. பிறகு சுத்தியல்களிலிருந்து இரம்பங்களைக் கழித்து வந்த மீதி எண்ணால் ரூபிளை வகுத்துப் பார்த்தேன், இதுவும் சரியான வழியல்ல என்பது தெரிந்தது. சுத்தியல்களையும் இரம்பங்களையும் கூட்டி வந்த எண்ணால் மொத்த ரூபிளை வகுத்துப் பார்த்தேன், சரிப்பட்டு வரவில்லை. முடிவில் காகிதத்தை எடுத்துக் கொண்டு வான்யாவின் வீட்டிற்குச் சென்றேன்.

''வான்யா, இதைக் கேள்: 12 சுத்தியலும் 3 இரம்பமும் சேர்ந்து 84 ரூபிள். 12 சுத்தியலும் 5 இரம்பமும் சேர்ந்து 100 ரூபிள். இரம்பத்தின் விலை என்ன? சுத்தியலின் விலை என்ன? இந்தக் கணக்கைப் போடுவது எப்படி?''

''நீ எப்படிப் போடலாம் என்கிறாய்?''—என்னை அவன் கேட்டான்.

''12 சுத்தியல்களையும் 3 இரம்பங்களையும் கூட்டி வரும் 15 ஆல் 84ஐ வகுக்க வேண்டுமென நினைக்கிறேன்.''

''சுத்தியல்களை இரம்பத்துடன் எதற்காகக் கூட்ட வேண்டும்?''

''மொத்தம் இருப்பவை எத்தனை என்று தெரிவதற்காக. இந்தக் கூட்டுத் தொகையால் 84 ரூபிளை வகுத்தால் ஒன்றின் விலை எவ்வளவு என்று தெரியும்.''

''ஒன்று என்பது சுத்தியலா? இரம்பமா?''

''ஏதேனும் ஒன்று.''

''அப்படியானால் சுத்தியலின் விலையேதான் இரம்பத்தின் விலை என்றல்லவா ஆகிவிடும்?''

''இரு விலையும் ஒன்று இல்லையா?''

''இல்லை. ஒரே விலையென்று கணக்கில் கூறப்படவில்லை; தனித் தனியே ஒவ்வொன்றின் விலையும் என்ன என்று கேட்கிறார்கள், ஆகவே சுத்தியலை நாம் இரம்பத்துடன் கூட்டக் கூடாது.''

''கூட்டிப் பயனில்லை. கழித்தும் பார்த்தேன், விடை காண முடியவில்லை.''

''இப்படிக் கூட்டவுங் கூடாது, கழிக்கவுங் கூடாது.''

''மணிக்கணக்காய் நான் முயற்சி செய்து பார்த்தேன், பயனில்லை.''

''மறுபடியும் கணக்கைப் படித்து, என்ன சொல்லப் படுகிறதென்று கவனிப்போம்.''

''12 சுத்தியல்களும் 3 இரம்பங்களும் சேர்ந்து 84 ரூபிள். 12 சுத்தியல்களும் 5 இரம்பங்களும் சேர்ந்து 100 ரூபிள்.''

''இரண்டு குழுக்களும் சம எண்ணிக்கையில் சுத்தியல்கள் வாங்கியதையும், இரண்டாவது குழு கூடுதலாக 2 இரம்பங்கள் வாங்கியதையும் கவனித்தாயா நீ?''

''ஆமாம்.''

''இரண்டாவது குழு கூடுதலாக 16 ரூபிள் கொடுத்ததைக் கவனித்தாயா?''

''ஆமாம். 100இல் 84 போனால் மீதி 16 தான்.''

''சரி, கூடுதலாக அது 16 ரூபிள் கொடுத்ததே, ஏன்?''

''ஏனென்றால் அது கூடுதலாக 2 இரம்பங்கள் வாங்கிக் கொண்டது.''

''அப்படியானால் 2 இரம்பங்களின் விலை 16 ரூபிள் என்றாகிறது, இல்லையா?''

''ஆமாம்.''

''ஒரு இரம்பத்தின் விலை என்ன?''

''இரண்டின் விலை 16 ரூபிள். ஆகவே ஒன்றின் விலை 8 ரூபிள்.''

''பார்த்தாயா, இரம்பத்தின் விலை தெரிந்து விட்டது.''

''எளிதாக தெரிந்து விட்டது. இதை என்னால் கண்டு கொள்ள முடியாமற் போய்விட்டதே.''

''இரு, இன்னும் ஒரு விடை பாக்கி இருக்கிறது. சுத்தியலின் விலையைக் கணக்கிட்டாக வேண்டும்.''

''அதை நானே கணக்கிட்டு விடுவேன். 12 சுத்தியல்களும் 3 இரம்பங்களும் சேர்ந்து 84 ரூபிள். 12 சுத்தியல்களின் விலை தெரிய 84இல் 24ஐக் கழிக்க வேண்டும். அதாவது 60 ரூபிள். 60 ரூபிளை 12ஆல் வகுத்தால் 5 ரூபிள் வருகிறது. ஆகவே சுத்தியலின் விலை 5 ரூபிள்.''

இவ்வளவு எளிய கணக்கைப் போடத் தவறி விட்டோமே என்று என்னையே நான் கடிந்து கொண்டேன். அடுத்த கணக்கை யார் உதவியும் இல்லாமல் நானே போட வேண்டும், இரவெல்லாம் உட்கார வேண்டி வந்தாலும் போடாமல் விடுவதில்லை என்று உறுதி பூண்டு அவ்வாறே செய்து முடித்தேன்.

மறுநாளன்று எனக்குக் கணிதத்தில் வீட்டுப் பாடம் இல்லை. ஒரு நாளைக்கு இந்த அவஸ்தையிலிருந்து விடுபட்டு நிம்மதியாக இருக்க முடியுமென்று மகிழ்ந்து கொண்டேன். ஆனால் நான் நினைத்தது ஒன்று, நடந்தது வேறொன்று. என் தங்கை லீக்கா என் உதவியை நாடினாள்.

''எனது வீட்டுக் கணக்குகளில் ஒன்றை என்னால் போட முடியவில்லை. நீ இதற்கு உதவ வேண்டும்'' என்றாள் அவள்.

அவளது கணக்குப் புத்தகத்தைப் பார்த்து விட்டு என்னுள் கூறிக் கொண்டேன்: ''இதற்கு என்னால் சரியானபடி விடை காண முடியாவிடில் என் நிலைமை கேவலமாகிவிடும். என்னை இவள் மதிக்கமாட்டாள்.'' பிறகு நான் பலக்க அவளிடம் சொன்னேன்: ''இப்போது இதற்கு எனக்கு நேரமில்லை. நீ போய் இரண்டொரு மணி நேரம் விளையாடிவிட்டு வா, அதற்குள் எனது வீட்டுப் பாடங்களை நான் செய்து முடித்து விடுவேன், பிறகு உனக்கு உதவி செய்வேன்.'' அவள் வெளியே சென்று விளையாடும் நேரத்தில் அவள் கணக்குக்கு விடை காணும் வழியை நான் ஆலோசித்து வைத்து விடலாமென்று நம்பினேன்.

''சரி, நான் போய் தான்யாவை அழைத்துச் சென்று விளையாடிவிட்டு வருகிறேன்'' என்றாள் அவள்.

''சரி, போய் விளையாடு, அவசரப்பட வேண்டாம். இரண்டு மூன்று மணி நேரம் வேண்டுமானாலும் ஆசை தீர விளையாடி விட்டு வா.''

அவள் போய்ச் சேர்ந்ததும் உடனே உட்கார்ந்து நான் அவளுடைய கணக்கைத் திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்தேன்:

''ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் காட்டில் கொட்டைக் காய்கள் பறித்தனர். இருவரும் சேர்ந்து மொத்தம் 120 காய்கள் பறித்தனர். சிறுவன் பறித்ததில் சரிபாதியைச் சிறுமி பறித்தாள். ஒவ்வொருவரும் எத்தனை காய்கள் பறித்தார்கள்?''

நான் நினைத்ததைவிட எளிய கணக்குதான்! முதலில் 120ஐ 2ஆல் வகுத்தேன். 60 வந்தது. சிறுமி 60 காய்கள் பறித்தாள். பிறகு 120லிருந்து 60ஐக் கழித்தால் சிறுவன் எத்தனைக் காய்கள் பறித்தான் என்று தெரிந்து விடுமெனக் கழித்துப் பார்த்தேன். சிறுவனும் 60 காய்தான் பறித்தான் என்பதாக விடை கிடைத்தது. ஒவ்வொருவரும் தலைக்கு 60 காய் வீதம் பறித்தார்கள் என்றாகிறது. ஆனால் சிறுவன் பறித்ததில் சரிபாதியே சிறுமி பறித்தாளெனப் புத்தகத்தில் கூறப்படுகிறது. ஓகோ, அப்படியா சேதி? சரி என்று 60ஐ 2ஆல் வகுத்தேன், 30 கிடைத்தது. ஆகவே சிறுமி 30 காயும் சிறுவன் 60 காயும் பறித்திருக்க வேண்டும். புத்தகத்தின் இறுதியில் குறிக்கப்பட்டிருந்த விடையைப் பார்த்தேன். சிறுவன் 80 காயும் சிறுமி 40 காயும் பறித்ததாகக் கூறியது அது. அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது இந்த விடை? மீண்டும் நான் கணக்கிட்டுப் பார்த்தேன். முன்போலவே 60உம் 30உம் கிடைத்தன. அவர்களுக்கு 80உம் 40உம் கிடைத்தது எப்படி? திரும்பத் திரும்ப சரிபார்த்தேன், சுற்றிச் சுற்றி அதே நிலைமைக்குத்தான் திரும்பி வந்தேன்.

கணக்கைப் பத்துப் பன்னிரண்டு தரம் படித்துப் பார்த்துவிட்டேன், தெளிவு ஏற்படவில்லை. இது என்ன விபரீதம்? மூன்றாவது படிவத்தில் படிப்பவர்கள் போடும் கணக்கை நான்காவது படிவ மாணவனாகிய என்னால் போட முடியவில்லையே! மறுபடியும் கணக்கைப் படித்துப் பார்த்தேன். பயனில்லை. 120 காய்கள் இருந்தன, இவற்றை இருவருக்குப் பிரித்துத் தர வேண்டும், ஒருவருக்குக் கிடைப்பதைப் போல் இரு மடங்கான காய் இன்னொருவருக்குக் கிடைக்கும்படிப் பிரித்துத் தர வேண்டும். எண்கள் வேறு மாதிரியாக இருந்தால் நான் வேறு எதாவது ஒரு வழியை ஆலோசிக்க முடிந்திருக்கும். 120ஐ 2ஆல் வகுத்தாலும் சரி, பெருக்கினாலும் சரி, அல்லது 120லிருந்து 2ஐக் கழித்துக் கணக்கிட்டாலும் சரி, ஒரு தரங்கூட எனக்கு 40உம் 80உம் கிடைப்பதாயில்லை. எனக்குத் தலை சுற்றியதே தவிர என்ன செய்வதென்று விளங்கவில்லை.

காகிதத்தில் கிறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த நான் ஒரு மரத்தை வரைய ஆரம்பித்தேன். மரத்தில் 120 காய்களைத் தொங்கவிட்டேன், மரத்துக்குக் கீழே ஒரு சிறுவனையும் சிறுமியையும் வரைந்தேன். என் சிந்தனை இந்தக் கணக்கை விட்டு விலகி ஓடிக் கொண்டிருந்தது. சிறுமியைப் போல் சிறுவன் எப்படி இரு மடங்கான காய்களைப் பறித்தான் என்று ஆலோசித்தேன். ஒரு வேளை அவன் மரத்தில் ஏறி காய்களைப் பறித்தெடுக்க, சிறுமி கீழே தரையில் நின்றபடித் தணிவான கிளைகளிலிருந்து காய்களைப் பறித்திருப்பாள் என்று நினைத்தேன். பிறகு மரத்திலிருந்து நான் காய்களைப் பறித்துச் சிறுவனுக்கும் சிறுமிக்கும் தர முற்பட்டேன். இதற்காக நான் கையாண்ட முறை வருமாறு: மரத்தில் தொங்கிய காய்களை ஒவ்வொன்றாக ரப்பரால் அழித்துவிட்டு, அந்தக் காய்களைச் சிறுவனுக்கோ சிறுமிக்கோ தருவதாகச் சொல்லி அவர்களைச் சுற்றிலும் ஒவ்வொரு தரமும் ஒரு காயை வரைந்து சென்றேன். காய்களைப் பறித்து இவர்கள் தமது பைக்குள் அல்லவா வைத்துக் கொண்டிருப்பார்கள்? சிறுவன் சட்டைப் போட்டிருந்தான், அந்தச் சட்டையில் இரண்டு பெரிய பைகளை வரைந்தேன். சிறுமி தாவணி அணிந்திருந்தாள், அந்த தாவணியில் ஒரு பையை வரைந்தேன். சிறுமிக்கு ஒரேயொரு பைதான் இருந்தது, அதனால்தான் அவள் சிறுவனைவிடக் குறைவாய்க் காய்களைப் பறித்தாள் என்று என்னுள் கூறிக் கொண்டேன். சிறுவனுடைய இரண்டு பைகளையும் சிறுமியினுடைய ஒரு பையையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த எனக்கு ஒரு புதிய எண்ணம் உதித்தது. அவர்களைச் சுற்றிலும் குவிந்திருந்த காய்களை ரப்பரால் அழித்துவிட்டு, அவை யாவும் அவர்களது பையினுள் சென்றுவிட்டதாக பாவித்துப் பைகளைப் பருத்து உப்பும்படிச் செய்தேன். இவர்களது மூன்று பைகளிலும் இப்போது மொத்தம் 120 காய்கள் இருந்தன. இரண்டு பைகள் சிறுவனுக்குச் சொந்தம், ஒரு பை சிறுமிக்குச் சொந்தம். மொத்தம் மூன்று பைகள். ஆகா, புரிந்துவிட்டதே! 120ஐ மூன்று சம பாகங்களாகப் பிரிக்க வேண்டும். சிறுவனுக்கு இரண்டு பங்கும், சிறுமிக்கு ஒரு பங்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்போது சிறுவனிடம் இருக்கும் காய்களில் சரிபாதி சிறுமியிடம் இருக்கும். உடனே நான் 120ஐ 3ஆல் வகுத்தேன். 40 கிடைத்தது. 40 காய்கள்தான் ஒரு பங்கு என்றாகிறது, சிறுமி பறித்தவை இவையே. 40ஐ 2ஆல் பெருக்கினல் 80 கிடைக்கிறது, சிறுவன் பறித்த காய்கள் இவையே. சரியான விடை கிடைத்து விட்டது!

எனக்கு உண்டான ஆனந்தப் பூரிப்பில் உடனே எழுந்து வான்யாவிடம் ஓடினேன், இதை அவனிடம் சொல்வதற்காக. வீட்டிற்கு வெளியே ஓடியதும் கோஸ்த்யா மீது மோதிக் கொண்டேன்.

''இதைக் கேள், கோஸ்த்யா'' என்று அவனிடம் சொன்னேன். ''ஒரு சிறுவனும் சிறுமியும் காட்டுக்குச் சென்று காய்கள் பறிக்கிறார்கள். இருவரும்

மொத்தம் 120 காய்கள் பறிக்கிறார்கள். சிறுமியைப் போல் சிறுவன் இரு மடங்கு பறிக்கிறான். இதற்கு நீ விடை சொல்லுவாயா?''

''சிறுவனை மொத்த வேண்டும், அடுத்த தரம் இருவருக்கும் சம பங்கு வரும்படி அவன் காய்கள் பறித்து வருவான்.''

''அதை நான் கேட்கவில்லை. சிறுவனுக்கு சிறுமியைப் போல் இரு மடங்கு கிடைக்கும்படி எப்படி நீ காய்களைப் பிரிப்பாய் என்று கேட்கிறேன்.''

''அவர்களே பிரித்துக் கொள்வார்கள், அந்த வேலையில் நான் தலையிட வேண்டியதில்லை. தலைக்கு ஒரு பாதி கிடைக்கும்படி பிரித்துக் கொள்ளட்டுமே.''

''அப்படிப் பிரிக்கக் கூடாது. கணக்கு சொல்கிறபடிதான் பிரிக்க வேண்டும்.''

''அது என்ன கணக்கு?''

''லீக்காவின் கணித புத்தகத்தில் இருக்கும் கணக்கு.''

''அவ்வளவுதானா? இரண்டு நாட்களுக்கு முன்பு நான் வாங்கி வந்த வெள்ளெலி இறந்துவிட்டது. நீ என்னமோ கணக்கையும் காயையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாய்.''

''இறந்து விட்டதா? எனக்குத் தெரியாதே!'' என்று அவனிடம் நான் மன்னிப்பு கேட்டுக் கொண்டு வான்யாவின் வீட்டுக்கு ஓடினேன்.

''வான்யா, வான்யா!'' என்று கூவிக் கொண்டு அவன் அறைக்குள் ஓடினேன். ''இதைக் கேள்: ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் 120 காய்கள் பறிக்கிறார்கள். சிறுமியிடம் இருப்பதைப் போல் சிறுவனிடம் இரு மடங்கான காய்கள் இருக்கின்றன. அப்படியானால் 120ஐ 3 ஆல்தானே வகுக்க வேண்டும்?''

''ஆமாம். அப்போதுதான் சிறுமியிடம் ஒரு பங்கும் சிறுவனிடம் இரு பங்கும் இருக்கும்.''

''எனக்குத் தெரியும். ஆனால் வேண்டுமென்றே அவர்கள் குழப்படி செய்து நம்மைத் திணற வைக்கிறார்கள். பலராலும் இந்தக் கணக்கைப் போட முடியாது. ஆனால் நான் போட்டுவிட்டேன். இனி கணிதத்தில் எனக்கு யாரும் உதவ வேண்டியதில்லை.''

''சபாஷ்! உன்னை மெச்சுகிறேன்!''

வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் நான் யூராவைச் சந்தித்தேன். ''இதைக் கேள்; ஒரு சிறுவனும் சிறுமியும் காய்கள் பறித்து வந்தனர்...'' என்று ஆரம்பித்து அவனிடம் கணக்கைச் சொன்னேன்.

''அது மூன்றும் வகுப்புக் கணக்கு!'' என்றான் அவன்.

''எனக்குத் தெரியும். சென்ற ஆண்டின் கணிதப் பாடங்களிலிருந்து நான் கணக்குகள் போட்டுப் பார்க்கிறேன். சென்ற ஆண்டில் கணிதத்தில் நான் சிறந்து விளங்கவில்லை'' என்று ஒரு போடு போட்டேன்.

''ஆ, அடியிலிருந்தே ஆரம்பித்து வேலே செய்கிருயா?'' என்று என்னே வியந்து போற்றும் முறையில் பார்த்தபடிக் கேட்டான் அவன்.

நான் வீட்டுக்குத் திரும்பிய சற்று நேரத்துக்கெல்லாம் லீக்காவும் வந்து சேர்ந்தாள். இருவரும் மேசையின் முன்ஞல் அமர்ந்து கொண்டோம். காய்களாகக் காய்த்துத் தொங்கும் மரத்தை நான் ஒரு காகிதத்தில் வரைந்தேன். மரத்துக்கு அடியில் ஒரு சிறுவனேயும் அவனது இரு பைகளேயும், ஒரு சிறுமியையும் அவளது ஒரு பையையும் வரைந்து காட்டினேன்.

''நீ விளக்கிச் சொன்னதும் கணக்கு மிகவும் எளிதாகி விட்டது'' என்ருள் லீக்கா. ''உன் உதவி இல்லாமல் தனியே இதைப் புரிந்து கொண்டிருக்க மாட்டேன்.''

''எளிய கணக்கு இது. உனக்குப் புரியாத கணக்கு எதுவாயினும் என்னிடம் வந்து கேள், நான் சொல்லித் தருகிறேன்.''

திடுமென நான் அடியோடு மாற்றமடைந்து விட்டேன். இனி யாரும் எனக்கு உதவ வேண்டியதில்லே, ஏனேயோருக்கு நான் சொல்லித் தர முடியும். இப்படிப்பட்ட நான் முன்பெல்லாம் கணிதத்தில் நாள் தவருமல் மோசமான மதிப்பெண் பெற்று வந்ததை நினேத்தபோது எனக்கு வேடிக்கையாகவே இருந்தது.

மறு நாள் என்னுடைய முள்ளெலிக்கு என்ன ஆகாரம் கொடுப்பதென்று கேட்பதற்காக நான் கோஸ்த்யாவைத் தேடிக் கொண்டு அவன் வீட்டுக்குச் சென்றேன். எனது முள்ளெலி அதன் குளிர்கால உறக்கம் போதுமென்று திடுமென விழித்தெழுந்து விட்டது. முந்திய நள்ளிரவில் அது எழுந்து அங்கும் இங்கும் சென்று எங்களேத் தூங்க முடியாதபடிச் செய்து விட்டது.

அறையின் நடுவில் கோஸ்த்யா கால்களே மேலே உயர்த்தித் தலேகீழே நின்று கொண்டிருக்கக் கண்டேன். கையிலே அவன் ஒரு தோல் பெட்டியை வைத்திருந்தான்.

''ஏன் தலேகீழே நிற்கிருய் நீ?''

''நான் கழைக் கூத்தன் ஆவதெனத் தீர்மானம் செய்திருக்கிறேன். இந்தத் தோல் பெட்டியை எனது பாதங்களால் சுற்றிச் சுழலச் செய்து காட்டுகிறேன் பார்!''

தோல் பெட்டியை உயர்த்தித் தனது பாதங்களின் மேல் வைத்துக் கொள்ள முயன்ருன் அவன், முடியவில்லே.

''ஆடாமல் நிற்க மாட்டேன்கிறதே'' என்று முறையிட்டான். ''சரி, நீ இதை என் பாதங்களின் மேல் வை.''

அவன் கூறியது போலவே செய்தேன். அவனுடைய பூட்சு பாதங்களின் மேல் அந்தப் பெட்டியைச் சில கணங்களுக்கு வைத்துச் சரி செய்து கொண்டு,

பிறகு மெல்ல அதைச் சுற்ற வைக்க முயன்றான். ஆனால் பெட்டி கவிழ்ந்து கீழே விழுந்துவிட்டது.

''பூட்சை கழற்றி விட வேண்டுமென நினைக்கிறேன். பூட்சுப் பாதம் வழ வழப்பாய் இருக்கிறது'' என்றான் அவன்.

பூட்சை கழற்றி விட்டுத் திரும்பவும் மல்லாந்து படுத்துக் கொண்டு கால்களை உயர்த்தினான். அவனது வெறும் பாதங்களின் மேல் நான் பெட்டியைத் தூக்கி வைத்தேன்.

''இப்போது தேவலை'' என்று சொல்லித் திரும்பவும் பெட்டியை மெல்லச் சுற்ற வைக்கப் பார்த்தான்.

ஆனால் இப்போது பெட்டி அவன் பாதங்களிலிருந்து நழுவியதும் நேரே அவன் வயிற்றின் மேல் விழுந்தது.

''ஐயோ!'' என்று அவன் கூச்சலிட்டான். ''பெட்டி இப்படி விழுந்தால் நான் சாக வேண்டியதுதான்.''

''கனமாய் இருக்கிறது, இலேசான வேறு எதையாவது நான் சுழலச் செய்து பழக வேண்டும்.''

இலேசானது ஏதாவது கிடைக்குமா என்று சுற்றிலும் பார்த்தோம், கண்ணில் எதுவும் படவில்லை. முடிவில் கோஸ்த்யா சோபாவிலிருந்த தலையணைகளில் ஒன்றை எடுத்து கெட்டியாகச் சுருட்டினான், பிறகு அது பிரியாதபடி அதன் மேல் கயிற்றைச் சுற்றிக் கட்டினான்.

''இது என் மேல் விழுந்தால் அடிபடாது'' என்று சொல்லி, அதைப் பாதங்களின் மேல் வைத்துச் சுழலச் செய்து பார்த்தான். ஆனால் ஒரு சுற்று சுற்றி வருவதற்கு முன்பே அது நழுவி விழுந்து கொண்டிருந்தது.

''இப்படிச் செய்யக் கூடாது, முதலில் இதை நான் சர்க்கஸ் கூத்தர் செய்தது போல் காலால் பிடித்துப் பாதங்களில் இருத்திக் கொள்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்'' என்றான் அவன்.

''நீ அந்த மூலைக்குச் சென்று தலையணையை விட்டெறி, நான் காலால் அதைப் பிடித்து இருத்திக் கொள்ளப் பார்க்கிறேன்.''

அதே போல நான் அறையின் மூலைக்குச் சென்று தலையணையை அவனிடம் எறிந்தேன். அது அவன் கால் பக்கம் செல்வதற்குப் பதில் நேரே அவன் தலையில் போய் மோதியது.

''என்ன வேலை இது? என் பாதங்கள் எந்தப் பக்கத்தில் இருக்கின்றன என்று கூடவா தெரியவில்லை?''

அடுத்த தரம் நான் குறி தவறாமல் எறிந்தேன். ஆனால் கால்களை அவன் வெடுக்கென ஆட்டி உதறினானே ஒழிய தலையணையைப் பிடிக்கவில்லை. இருபது தரத்துக்குக் குறையாமல் நான் தலையணையை எறிந்திருப்பேன், ஒரே

யொரு தரம்தான் பாதங்களால் அவனால் அதைப் பிடித்து இருத்திக் கொள்ள முடிந்தது.

''பார்த்தாயா!'' என்று அப்போது அவன் கத்தினன். ''சர்க்கஸில் செய்வது போலவே இருக்கிறது, பார்!''

பிறகு நான் மல்லாந்து படுத்துக் கால்களை உயரத் தூக்கினேன். தலையணையை அவன் விட்டெறிந்தான். பாதங்களால் நான் அதைப் பிடிக்க முயன்றேன். என்னாலும் பிடிக்க முடியவில்லை. சற்று நேரத்துக்குள் எனக்கு முதுகு முறிந்து விட்டதென்றே நினைக்கும்படி அப்படி வலித்தது. நான் களைத்துப் போய் முனகினேன்.

''சரி, போதும் எழுந்திரு,'' என்றான் கோஸ்த்யா. ''தலையணைப் பயிற்சி இன்றைக்கு இவ்வளவு போதும். இனி நாற்காலியில் பயிற்சி செய்யலாம்.''

அவன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அதைப் பின்னால் சாய்த்தான். பின்னங்கால்கள் இரண்டிலும் நிற்கும்படி நாற்காலியைச் சாய்த்துச் சென்றான். பின்பக்கமாய் மேலும் மேலும் சாய்த்துச் சென்றான். முடிவில் நாற்காலியுடன் சேர்ந்து தடாரெனப் பின்னால் விழுந்தான். பிறகு என்னால் செய்ய முடிகிறதா என்று நானும் முயன்று பார்த்தேன். நானும் சாய்ந்து விழுந்து தரையிலே மண்டையை மோதிக் கொண்டேன்.

''இதைச் செய்வதற்கு நமக்குப் பயிற்சி போதாது'' என்றான் கோஸ்த்யா.

''சுழல் வீச்சு வித்தை செய்து பார்க்கலாம்.''

''எதை சுழற்றி வீசுவது?''

''தட்டுகளை சர்க்கஸில் செய்கிறார்களே, அதே போல'' என்று சொல்லி அலமாரியைத் திறந்து இரண்டு பீங்கான் தட்டுகளை அவன் வெளியே எடுத்தான். ''இந்தா, நீ இதை என்னிடம் சுழற்றி வீசு, நான் இதை உன்னிடம் சுழற்றி வீசுகிறேன். இருவரும் ஒரே நேரத்தில் செய்தாக வேண்டும். எனது தட்டை நான் வீசும் அதே கணத்தில் நீயும் உன் தட்டை வீசு. உன்னுடையதை நான் பிடிக்கிறேன். என்னுடையதை நீ பிடி.''

''வேண்டாம் இந்த வித்தை'' என்றேன் நான். ''இரண்டு தட்டுகளும் நொறுங்குவதில்தான் இது முடிவுறும்.''

''சரி, முதலில் ஒரு தட்டை மட்டும் சுழற்றி வீசிப் பிடிப்போம். இதில் தேர்ச்சி ஏற்பட்டபின் இரண்டு, மூன்று, நான்கு தட்டுகளை வைத்துக் கொண்டு வித்தை செய்து காட்டலாம். பார்ப்பவர் பிரமிக்கும்படிச் செய்வதற்கு நாம் பழகிக் கொண்டு விடலாம்.''

அந்தத் தட்டை நாங்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் சுழற்றி வீசிப் பிடித்தோம். நன்றாகவே பிடிக்க முடிகிறது என்று நாங்கள் நினைத்தபோது தட்டு பிடிபடாமல் நழுவிக் கீழே விழுந்து நொறுங்கியது. பிறகு இரண்டாவது

தட்டை நாங்கள் சுழற்றி வீசி வித்தை புரிந்தோம், அதுவும் நொறுங்கிப் போயிற்று.


''இது சரியல்ல'' என்றுன் கோஸ்த்யா. ''எல்லாத் தட்டுகளையும் நொறுக்குவோமே அன்றி வித்தையைக் கற்றுக் கொள்ள முடியாது. உடைக்க முடியாத தட்டை உபயோகித்து நாம் பயிற்சி செய்தாக வேண்டும்.''

சமையலறையிலிருந்து அவன் ஒரு சிறிய எனுமல் தட்டை எடுத்து வந்தான். அதை வைத்துக் கொண்டு நாங்கள் எங்கள் பயிற்சியைத் தொடர்ந்தோம். சற்று நேரத்துக்குப் பிறகு அந்தத் தட்டு சன்னல் கண்ணுடியிலே போய் மோதியது. நல்லவேளை கண்ணுடி நொறுங்கி விழவில்லை, வீறல் விட்டு ஒட்டிக் கொண்டிருந்தது.

''இதை நாம் சரி செய்தாக வேண்டும்'' என்றுன் கோஸ்த்யா.

''வீறலின் மேல் காகிதத்தை ஒட்டுவோம்.''

''அது நன்ருய் இராது. முன்னறையின் கதவில் இதே அளவுள்ள கண்ணுடி இருக்கிறது. அதை எடுத்து வந்து இங்கே பொருத்துவோம். வீறல் விட்ட இந்தக் கண்ணுடியை அந்தக் கதவில்






வைத்துவிடுவோம், அங்கே இந்த வீறல் யார் கண்ணிலும் படாது.''

சன்னல் கண்ணாடியைச் சுற்றிலும் இருந்த சுண்ணத்தைப் பெயர்த்தெடுத்தோம். பிறகு கண்ணாடியைத் தனியே எடுக்கையில் வீறல் பெரிதாகிச் சென்றது. கண்ணாடி இரு துண்டுகளாக இற்றுப் போய் விட்டது.

''போனால் போகட்டும் போ. முன்னறைக் கதவின் கண்ணாடி இரு துண்டுகளாக இருக்கட்டும், பாதகமில்லை.''

பிறகு முன்னறைக் கதவிலிருந்து கண்ணாடியைக் கழற்றியெடுத்தோம். ஆனால் அது சன்னல் கண்ணாடியை விடக் கொஞ்சம் பெரிதாக இருந்ததால் சன்னல் கதவுச் சட்டத்தில் அதைப் பொருத்த முடியவில்லை.

''கண்ணாடியை வெட்டிக் குறுக்கிச் சரி செய்தாக வேண்



டும்'' என்றான் கோஸ்த்யா. ''கண்ணாடி வெட்டும் வைரமுனைக் கத்தி இருக்கிறதா? யாரிடம் இருக்கிறது, தெரியுமா உனக்கு?''

''வாஸ்யாவிடம் இருக்கிறது'' என்றேன் நான்.

வாஸ்யாவின் வீட்டிற்குச் சென்று அந்தக் கத்தியை நாங்கள் இரவல் வாங்கி வந்தோம். ஆனால் அதற்குள் அறைக் கதவின் கண்ணாடி எங்கோ மறைந்து விட்டது. எல்லா மூலைகளிலும் தேடினோம், கிடைக்கவில்லை.

''அது எப்படி மாயமாய் மறைய முடியும்?'' என்று முணுமுணுத்தான் கோஸ்த்யா. அதே கணத்தில் அதன் மீது பூட்சுக் காலை வைத்து ஊன்றினான். கண்ணாடியை நாங்கள் அப்படியே தரையில் வைத்துச் சென்று விட்டோம். கண்ணாடி நொறுங்கும் சப்தம் கேட்டது.

''எந்த முட்டாள் இதை இங்கே வைத்துச் சென்றான்?'' என்று கோஸ்த்யா எரிந்து விழுந்தான்.

''நீதான்.''

''நீயாகவும் இருக்கலாமே.''

''இல்லை, நான் இதைத் தொடவே இல்லை. நீதான் இதைச் செய்திருக்கிறாய். கண்ணாடியைத் தரையில் வைத்துச் செல்லலாமா? அது இருப்பது கண்ணில் படாமல் அதன் மேல் அடியெடுத்து வைத்து விடுவோம் என்பது தெரிய வேண்டாமா?''

''இதை நீ அப்போதே அல்லவா சொல்லியிருக்க வேண்டும்?''

''அப்போது இதைப் பற்றி நான் சிந்திக்கவில்லை.''

''எனக்குச் சரியானபடி கிடைக்கப் போகிறது. சிந்திக்காமல் செயல்படுவதன் விளைவு இது! சரி, என்ன செய்யலாம், சொல்லு. கண்ணாடி ஐந்து துண்டுகளாகிவிட்டன. யாவற்றையும் ஒட்டிச் சேர்த்து அறைக் கதவிலேயே திருப்பி வைத்துவிடுவோம். பிறகு சன்னல் கண்ணாடியைப் பழையபடி சன்னல் கதவிலே வைத்துப் பொருத்துவோம். சன்னல் கண்ணாடி இதைப் போல் ஐந்து துண்டுகளாக நொறுங்கிவிடவில்லை.''

ஐந்து துண்டுகளையும் ஒவ்வொன்றாய்க் கதவில் வைத்துப் பொருத்த முயன்றோம், முடியவில்லை. ஐந்தையும் சேர்த்து ஒட்டி வைத்துப் பார்த்தோம், அப்போதும் சரிப்பட்டு வரவில்லை. பிறகு சன்னல் கண்ணாடி இரண்டு துண்டுகளாகத்தானே உடைந்திருக்கின்றன, முதலில் இவற்றைச் சன்னல் கதவில் வைத்துப் பொருத்தலாமென்று இவ்வேலையில் முனைந்தோம். அப்போது கோஸ்த்யா ஒரு துண்டைத் தவறிப் போய் கீழே போட்டுவிட்டான். அது சுக்கு நூறாக உடைந்து போயிற்று. அந்த நேரத்தில் கோஸ்த்யாவின் அம்மா வேலை முடிந்து திரும்பி வந்தார். என்ன ஆயிற்று என்று கோஸ்த்யா அவரிடம் விளக்கினான். ''பச்சை குழந்தையா நீ? கணப் பொழுதுகூட வீட்டில் உன்னைத் தனியே விட்டுச் செல்ல முடியவில்லை, படுத்தி வைக்கிறாய்!'' என்று அவர் ஏசினார்.

''யாவற்றையும் சரிசெய்து விடுகிறேன். துண்டுகளைச் சேர்த்துப் பொருத்தி விடுகிறேன்'' என்றான் கோஸ்த்யா.

''ஆமாம், மகிழ்ந்து கொள்ள வேண்டியதுதான். இனி நான் பழுது பார்ப்பவரை அழைத்து வந்தாக வேண்டும். இது என்ன?'' என்று தரையில் இன்னொரு இடத்தில் இறைந்து கிடந்தவற்றைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

''தட்டை உடைத்துவிட்டேன்.''

''ஓய்'' என்று அவர் பெருமூச்செறிந்து கொண்டார். பிறகு திடுமெனத் தலைவலி வந்துவிட்டது போல் கண்களை மூடிக் கொண்டு நெற்றிப் பொட்டில் விரல்களை வைத்து அழுத்தினார்.

''இந்த உடைசல்களை உடனே அள்ளி வெளியே எறிந்துவிட்டு, உன் வீட்டுப் பாடங்களைச் செய்ய ஆரம்பி. பாடங்களைப் பற்றிய நினைவையே நீ இழந்திருப்பாய், தெரியும் எனக்கு!'' அவருடைய குரல் உச்சஸ்தாயிக்கு உயர்ந்துவிட்டது.

உடைசல்களை எல்லாம் நாங்கள் அள்ளி எடுத்துச் சென்று குப்பைத் தொட்டியில் கொட்டினோம்.

''உன் அம்மா நல்ல பொறுமைசாலியாக இருக்கிறார்'' என்று நான் கோஸ்த்யாவிடம் சொன்னேன். ''என் வீட்டில் நான் இத்தனை பொருள்களை உடைத்திருந்தால், பேச்சுக்குழ் வசவுக்கும் முடிவே இருந்திருக்காது.''

''அவசரப்படாதே நீ. ஸீனா அத்தை வந்து சேரும் வரை காத்திருந்து பார், தெரியும். அத்தையிடம் அகப்பட்டுக் கொண்டு என்ன பாடு படப் போகிறேன் என்று பார். உன்னையும் அவர் சும்மா விட மாட்டார்.''

ஸீனா அத்தை வரும் வரை காத்திருக்கக் கூடாதென நான் சீக்கிரமாகவே வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றேன். மறு நாள் காலையில் நான் பள்ளிக்கூடம் செல்லும் வழியில் கோஸ்த்யாவைச் சந்தித்தேன். தனக்கு உடம்பு சரியில்லை, மருத்துவக்கூடத்துக்குப் போகிறேன் என்று சொன்னான் அவன். அன்று வகுப்பில் கோஸ்த்யா ஏன் வரவில்லை என்று எங்கள் ஆசிரியை கேட்டதும், நான் எழுந்து கோஸ்த்யா என்னிடம் சொன்னதை அவரிடம் கூறினேன்.

''பள்ளிக்கூடம் விட்டதும் தவறாமல் அவன் வீட்டுக்குச் சென்று அவன் எப்படி இருக்கிறானெனப் பார்த்துவிட்டுப் போ'' என்று அவர் என்னிடம் சொன்னார்.

அன்று எங்களுக்கு டிக்டேஷன் பாடம் இருந்தது. பிற்பகலில் நான் கோஸ்த்யாவிடம் சென்றேன். அவன் அம்மா ஏற்கெனவே வேலை முடிந்து வீட்டுக்கு வந்திருந்தார். கோஸ்த்யா என்னைப் பார்த்துக் கண்களை உருட்டி, உதட்டில் விரலை வைத்து அழுத்திக் காட்டினான். ஒன்றும் சொல்லாதே என்று எனக்கு அவன் சாடை காட்டினான் என்பது தெரிந்தது. ஆகவே பேசாமல் நான் முன்னறைக்குச் சென்றேன்.

''இன்று நான் பள்ளிக் கூடத்துக்கு வரவில்லையென அம்மாவிடம் சொல்லாதே'' என்ருன் அவன்.

''மருத்துவக் கூடத்தில் என்ன சொன்ஞர்கள்?''

''ஒன்றும் சொல்ல வில்லை.''

''அது எப்படி?''

''அங்கிருந்த டாக்டர் மோசமானவர். உடம்பு நன்ருய் இல்லை என்றதும், அவர் என்னைச் சோதித்துப் பார்த்துவிட்டு நன்ருகவே இருக்கிறேன் என்பதாகச் சொல்லிவிட்டார். தும்மல் தாங்க முடியவில்லையெனச் சொல்லிப் பார்த்தேன், அவர் கேட்கவில்லை. எல்லாம் சரியாகிவிடும், வகுப்புக்குப் போ என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்.''

''அப்படியாஞல் உண்மையில் உனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை என்று சொல்லு.''

''ஒன்றும் இல்லைதான்.''

''பின் ஏன் மருத்துவக் கூடத்துக்கு நீ சென்ருய்?''

''எனக்கு உடம்பு சரியில்லையென்று அம்மாவிடம் சொல்லிப் பார்த்தேன். 'உடம்பு சரியாக இல்லாவிட்டால் மருத்துவக்கூடத்துக்குப் போய்ச் சீட்டெழுதித்





தரச் சொல். வேண்டியமட்டும் நீ வகுப்பு களுக்கு மட்டம் போட்டு விட்டாய், இனி நான் உன் ஆசிரியைக்குக் குறிப்பு எழுதித் தரப் போவதில்லை' என்று கூறி விட்டார்.''

''உடம்பு நன்ருயிருக்கும் போது நீ ஏன் நன்ருயில்லையென்று அம்மாவிடம் சொன்ஞய்?''

''என்ன கேள்வி இது? இன்று நமக்கு டிக்டேஷன் பாடம் இருக்கையில் எப்படி நான் வகுப்புக்கு வருவேன்? படுமோச மான மதிப்பெண்தான் கிடைக்குமென்பது நிச்சயமாகத் தெரிகையில் வந்து சிக்கிக் கொள்ளலாமா?''

''சரி, நாளைக்கு நீ பள்ளிக்கூடம் வந் தாக வேண்டும் அல்லவா? இன்று ஏன் வரவில்லை என்று ஆசிரியை கேட்பாரே, என்ன செய்வாய்?''

''நாளைக்கும் நான் வரப் போவதில்லை. ஆசிரியை கேட்டால் உடல் நலமின்றிப் படுத்திருக்கிறேன் என்று சொல்லு.''

''இந்த அசட்டுத்தனம் வேண்டாம் உனக்கு. உண்மையை மறைக்காமல் அம் மாவிடம் சொல்லி ஆசிரியைக்குக் குறிப்பு எழுதி வாங்கு.''

''அம்மா எழுதித் தருவாரென்று நான் நினைக்கவில்லை. பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போடுகிறேன் என்று அம்மாவுக்கு என் மேல் கோபம். இனி குறிப்பு எழுதித் தரப் போவதில்லையென்று அவர் முன்பே தீர்மானமாகச் சொல்லி யிருக்கிருர்.''

''இந்த ஒரு தரம் மட்டும் எழுதிக் கொடுக்கச் சொல்லு. நாளைக்கு நீ பள்ளிக் கூடம் வராவிடில் அதற்குப் பிற்பாடும் வர முடியாமல் அல்லவா போய்விடும்.

ஆகவே அம்மாவிடம் சொன்னுல் நிச்சயம் எழுதித் தருவார்.''

''சரி, ஆலோசித்துப் பார்க்கிறேன்'' என்றுன் அவன்.

ஆனுல் மறு நாளும் கோஸ்த்யா பள்ளிக்கூடத்துக்கு வரவில்லே. அம்மாவிடம் உண்மையைச் சொல்ல அவனுக்கு மனம் துணியவில்லே என்பது எனக்குப் புரிந்தது. அவனேப் பற்றி ஆசிரியை விசாரித்ததும், உடல் நலமின்றி படுத்திருக்கிறுன் என்றேன் நான். உடம்புக்கு என்ன என்று என்னே அவர் கேட்டார், காய்ச்சலாய்ப் படுத்திருக்கிறுன் என்றேன். உண்மையை மறைத்து நான் அவனுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென அவன் எதிர்பார்க்கையில், நான் வேறு என்ன சொல்ல முடியும்?

பள்ளி முடிந்ததும் நான் கோஸ்த்யாவிடம் சென்றேன். அவனுக்காக வேண்டி நான் ஆசிரியையிடம் பொய் சொல்ல நேர்ந்ததை அவனிடம் கூறினேன். அன்று காலேப் பொழுது முழுதும் அவன் தெருக்களில் சுற்றிக் கொண்டிருந்ததாகச் சொன்னுன். அம்மாவிடம் உண்மையைச் சொல்லப் பயமாய் இருந்ததாம், அவன் அவரிடம் குறிப்பெழுதித் தரும்படிக் கேட்கவில்லேயாம்.

''இனி என்ன செய்யப் போகிறுய்? இன்றைக்காவது அம்மாவிடம் உண்மையைச் சொல்லப் போகிறுயா, இல்லேயா?''

''என்ன செய்வதென்று தெரியவில்லே. சர்க்கஸில் சேர்ந்துவிடலாமென நினேக்கிறேன்.''

''என்ன?''

''சர்க்கஸ் கூத்தனுக விரும்புகிறேன் நான்.''

''உன்னுல் என்ன ஆட்டம் ஆட முடியும்?''

''உம்... மற்ற கூத்தர்கள் செய்வதைப் போல் நானும் செய்யக் கற்றுக் கொள்வேன். எனது நாய்க்கு நான் எண்ணவும் கூட்டவும் கற்றுக் கொடுப்பேன். அதை வைத்துக் கொண்டு வித்தைகள் செய்து காட்டுவேன்.''

''அவர்கள் உன்னே ஏற்றுக் கொள்ள வேண்டுமே.''

''ஏற்றுக் கொண்டுவிடுவார்கள்.''

''பள்ளிக்கூடம் என்னுவது?''

''பள்ளிக்கூடத்திலிருந்து விலகிக் கொள்வேன். ஆனுல் நீ இதைப் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம்.''

''உன் அம்மா தெரிந்து கொண்டு விடுவாரே.''

''உடனடியாக அம்மாவுக்கு இது தெரியாமல் இருந்தால் போதும். சர்க்கஸில் சேர்ந்து கொண்டதும் நானே அம்மாவிடம் சொல்வேன். யாவும் சரியாகிவிடும்.''

''மஃபிக்கு எண்ணிக் கணக்கிடக் கற்றுத் தர முடியாவிட்டால் என்ன செய்வாய்?''

''அதெப்படி முடியாமற் போகும்? நிச்சயம் கற்றுத் தரலாம். இப்போதே முயற்சி செய்து பார்க்கலாமே. மஃபி, வா இங்கே!''

வாலை ஆட்டிக் கொண்டு ஓடி வந்தது மஃபி. உடனே கோஸ்த்யா சர்க்கரைக் கிண்ணத்தை எடுத்து வைத்துக் கொண்டு மஃபியிடம் சொன்னான்:

''மஃபி, உனக்கு எண்ணிக் கணக்கிடுவதற்குக் கற்றுத் தரப் போகிறேன். நான் சொல்லித் தருகிறபடி நீ சரியாக எண்ணிச் சொல்ல வேண்டும். சரியாகச் சொன்னால் உனக்குச் சர்க்கரைக் கட்டிக் கிடைக்கும். இல்லாவிட்டால் ஒன்றும் கிடைக்காது.''

ஆவலுடன் மஃபி சர்க்கரைக் கிண்ணத்தைப் பார்த்தபடி உதட்டை நக்கிக் கொண்டது.

''போதும் நிறுத்து. பிற்பாடு நீ உதட்டை நக்கிக் கொள்ளலாம்'' என்றான் கோஸ்த்யா.

பிறகு கிண்ணத்திலிருந்து பத்து சர்க்கரைக் கட்டிகளை எடுத்து வைத்துக் கொண்டு மஃபியிடம் சொன்னான்:

''முதலில் நீ பத்து வரை எண்ணக் கற்றுக் கொண்டாக வேண்டும். அதன் பிறகு மேலும் கடினமான கணக்குகளுக்கு விடை கூறத் தெரிந்து கொள்ளலாம். இதோ பார், என்னிடம் பத்து சர்க்கரைக் கட்டிகள் இருக்கின்றன. நான் இவற்றை எண்ணப் போகிறேன், கவனமாகக் கேட்டு நினைவில் வைத்துக் கொள்.'' மஃபிக்கு முன்னால் ஒரு முக்காலி மீது ஒவ்வொரு சர்க்கரைக் கட்டியாய் வைத்து ''ஒன்று, இரண்டு, மூன்று...'' என்று பத்து வரை எண்ணினான். ''தெரிகிறதா? இங்கே பத்துக் கட்டிகள் இருக்கின்றன'' என்றான்.

மஃபி வாலைக் குழைத்துக் கொண்டு ஒரு கட்டியை எடுக்கப் பார்த்தது. ஆனால் கோஸ்த்யா அதன் தலையைப் பிடித்துத் தள்ளிவிட்டு ''முதலில் நீ எண்ணக் கற்றுக் கொள், பிறகு உனக்குச் சர்க்கரை கிடைக்கும்'' என்று அதனிடம் சொன்னான்.

''முதலாவது பயிற்சியிலேயே அது பத்து வரை எண்ணக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறாயே, முடியுமா அது? தோட்டப்பள்ளிக் குழந்தைகளுங்கூட அவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொண்டு விடுவதில்லையே.''

''அப்படியானால் முதலில் ஐந்து வரை எண்ணக் கற்றுத் தருகிறேன், இன்னுங்கூடக் குறைத்து மூன்று வரை மட்டும் கற்றுத் தருகிறேன்.''

''அதுதான் ஓரளவு சுலபமாக இருக்கும்.''

''இரண்டு வரை மட்டும் எண்ணக் கற்றுத் தருகிறேன். அது இன்னுங்கூட சுலபமாக இருக்கும்.''

சர்க்கரைக் கட்டிகளில் எட்டை எடுத்துக் கிண்ணத்தில் திருப்பி வைத்தான். முக்காலியில் இப்போது இரண்டு மட்டுமே எஞ்சியிருந்தன.

''இதோ பார், மஃபி! ஒன்று, இரண்டு. ஒன்றை எடுத்து விட்டால்

இருப்பது ஒன்றுதான். எடுத்ததைத் திருப்பி வைத்து விட்டால் திரும்பவும் இரண்டு வந்துவிடும். இப்பொழுது இருப்பது எத்தனை கட்டிகள், சொல்லு.''

மஃபி வாலை ஆட்டிக் கொண்டு உதட்டை நக்கியது, கீழே உட்கார்ந்து ஏக்கத்துடன் கோஸ்த்யாவைப் பார்த்தது.

''எப்படி அதனால் பதில் சொல்ல முடியும்? அதற்குப் பேசவா தெரியும்?'' என்று கேட்டேன் நான்.

''நம்மைப் போல் பேச வேண்டாம். சர்க்கஸ் நாயைப் போல் 'வள்-வள்' என்று குரைத்துப் பதில் சொல்லலாமே. மஃபி புரிந்ததா, உனக்கு? 'வள்-வள்' என்றால் இரண்டு என்று அர்த்தம்.''

மஃபி மாறி மாறி அவனையும் என்னையும் உற்றுப் பார்த்தது.

''உனக்கு சர்க்கரைக் கட்டி வேண்டாமா?'' என்று கோஸ்த்யா பொறுமையிழந்தவனாய் அதைக் கேட்டான்.

மஃபி சர்க்கரைக் கட்டிகள் பக்கம் திரும்பி மோப்பம் பிடித்தது.

''வேண்டியதில்லை அல்லவா?''

மஃபி பின்பக்கம் நகர்ந்தது.

'' 'வள்-வள்' என்று சொல்லு நீ!''—இருவருமாகச் சேர்ந்து அதனிடம் மன்றாடினோம்.

''அதற்குப் புரியவில்லை'' என்று கோஸ்த்யா ஏமாற்றத்துடன் என்னிடம் சொன்னான். ''உனக்கு நான் பயிற்சி அளிக்கிறேன், அதைப் பார்த்து அதுவும் கற்றுக் கொள்ளும்.''

''எனக்கு எப்படிப் பயிற்சி அளிப்பாயாம்?''

''அது எளிய காரியம்தானே. நீ மண்டியிட்டுக் கைகளைக் கீழே ஊன்றிக் கொண்டு குரைத்துக் காட்டிப் பதில் சொல்லு. உன்னைப் பார்த்து அதுவும் அதே போல பதிலளிக்கத் தெரிந்து கொள்ளும்.''

அவன் சொன்னது போல் செய்தேன் நான்.

''எத்தனைக் கட்டிகள் இருக்கின்றன?'' என்று கேட்டான் கோஸ்த்யா.

''வள்-வள்!'' என்று பலக்கக் குரைத்து நான் பதிலளித்தேன்.

''சபாஷ்!'' என்று என்னைப் பாராட்டி என் வாய்க்குள் ஒரு சர்க்கரைக் கட்டியைப் போட்டான் கோஸ்த்யா.

நான் தின்பதைப் பார்த்து மஃபி பொறாமைப்பட வேண்டுமென்று பலக்கச் சப்தம் கேட்கும்படி அந்தக் கட்டியைக் கடித்து நரநரவென மென்று தின்றேன். மெய்யாகவே மஃபிக்குப் பொறாமையாகவே இருந்தது. ஏக்கத்துடன் என்னை அது உற்று நோக்கிற்று.

''மஃபி, இதைப் பார்'' என்றான் கோஸ்த்யா. ''இங்கே ஒரேயொரு சர்க்கரைக் கட்டிதான் இருக்கிறது. 'வள்'ளென ஒரு தரம் குரைக்க வேண்டும்

நீ, அதற்கு ஒன்றெனு அர்த்தம். புரிகிறதா? இங்கே எத்தனைக் கட்டி இருக்கிறது, சொல்லு.''

மஃபி பரபரப்படைந்து ஒரு தும்மல் தும்மிற்று. வாலால் தரையில் தட்டிற்று.

''சொல்லு சீக்கிரம். எத்தனைக் கட்டிகள் இருக்கின்றன?''

என்ன செய்வதென்று மஃபிக்குப் புரியவில்லை.

''அசடா நீ?'' என்று அதைப் பார்த்துக் கடிந்து கொண்டு கோஸ்த்யா என் பக்கம் திரும்பினுன். ''நீ சொல், பார்க்கலாம்'' என்று என்னைக் கேட்டான்.

''வள்!'' என்று நான் கூச்சலிட்டுப் பதிலளித்தேன். உடனே திரும்பவும் என் வாய்க்குள் அவன் ஒரு சர்க்கரைக் கட்டியைப் போட்டான்.

மஃபி திரும்பவும் பொறுமை இழந்து தும்மியது.

''அதை நாம் புரிந்து கொள்ளச் செய்தாக வேண்டும்'' என்று சொல்லி முக்காலியின் மேல் கோஸ்த்யா மற்றொரு சர்க்கரைக் கட்டியை எடுத்து வைத்தான்.

''சரியான விடையைச் சொல்கிறவருக்கு இந்தச் சர்க்கரைக் கட்டி கிடைக்கும். எத்தனை கட்டி இருக்கிறது இங்கே?

''வள்!'' என்று கூவினேன்.

''சபாஷ்!'' என்று கோஸ்த்யா என்னைப் பாராட்டினுன். மஃபியைப் பார்த்து ''நீ முட்டாள்!'' என்றுன். முக்காலி மீதிருந்த சர்க்கரைக் கட்டியை எடுத்து மஃபியின் மூக்கருகே காட்டிவிட்டு அதை என் வாயில் போட்டான். சப்தமாகச் சப்புக் கொட்டி நான் அதைத் தின்றேன். மஃபிக்குப் பொறுக்க முடியவில்லை, தவியாகத் தவித்தது.

''ஓகோ, உனக்குமா வேண்டும்? குரைப்போருக்கே சர்க்கரைக் கட்டி, மௌனமாய் இருப்போர்க்கு ஒன்றும் இல்லை'' என்று சொல்லி, இன்னெரு சர்க்கரைக் கட்டியை எடுத்து முக்காலியின் மேல் வைத்தான் கோஸ்த்யா. பிறகு மஃபியைப் பார்த்து, ''எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லு'' என்றுன்.

மஃபி ஊளையிட்டது. கழுத்தை வளைத்துக் கொண்டு எழுந்தது, பிறகு வேதனையுடன் திரும்பவும் உட்கார்ந்தது.

''சொல்லு, சொல்லாவிட்டால் சர்க்கரைக் கட்டி உனக்குக் கிடைக்காது.''

மஃபி எழுந்து விறைப்பாக நின்றது, பிறகு பின்னுல் ஒரு தப்படி நகர்ந்து ஒரு தரம் குரைத்தது.

''அப்படிச் சொல்லு!'' என்று பாராட்டி, கோஸ்த்யா அதனிடம் அந்தச் சர்க்கரைக் கட்டியை எறிந்தான்.

அது தரையிலே விழும் முன்பே மஃபி ஒரு தாவு தாவி அதைக் கவ்விப் பிடித்துத் தின்றது.

''மறுபடியும் சொல்லு, பார்ப்போம்'' என்று கூவினன் கோஸ்த்யா.

''வள்!'' என்றது மஃபி. அதற்கு இன்னொரு சர்க்கரைக் கட்டி கிடைத்தது.

''சரி, இன்னொரு தரம்!''

''வள்!''

''புரிந்து கொண்டு விட்டது, இனி கடினமில்லை. வரிசையாகப் பிற எண்களையும் அதற்குக் கற்றுத் தரலாம்.''

அப்போது கோஸ்த்யாவின் அம்மா வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

''சர்க்கரைக் கிண்ணம் ஏன் இங்கே இருக்கிறது?'' என்று கேட்டார் அவர்.

''மஃபிக்கு எண்ணிக் கணக்கிடக் கற்றுக் கொடுப்பதற்காகச் சர்க்கரைக் கட்டிகள் வேண்டியிருந்தன.''

''விளையாட்டுப் பேச்சு பேசாதே.''

''நீயே பார் இதை'' என்ருன் கோஸ்த்யா. மஃபிக்கு முன்னுல் ஒரு சர்க்கரைக் கட்டியை வைத்துவிட்டு, ''மஃபி, எத்தனைக் கட்டி இருக்கிறதென்று அம்மாவுக்கு எண்ணிச் சொல்லு'' என்ருன்.

''வள்!'' என்றது அது.

''இவ்வளவுதானு?''

''ஆமாம்.''

''இதைத்தானு பெரிதாய் எண்ணிக் கணக்கிடுவதாகச் சொல்கிருய்?''

''மஃபி மனிதப் பிறவி அல்லவே. ஒன்று வரை அது எண்ணக் கற்றுக் கொண்டதே பெரிய காரியம்தான். இனி அதற்கு இரண்டு, மூன்று எல்லாம் கற்றுத் தருவோம். பிறகு விரைவில் அது நீ ஆச்சரியப்படும்படி வேகமாய் எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லும்.''

''நீ ஆச்சரியப்படும்படி நான் சர்க்கரைக் கிண்ணத்தை மறைத்து வைக்க வேண்டியிருக்கும்'' என்ருர் அவன் அம்மா.

''நான் தின்பதற்காகவா சர்க்கரை எடுக்கிறேன்? விஞ்ஞான ஆராய்ச்சி அல்லவா நடத்துகிறேன்.''

''ஆராய்ச்சிதான்! சரி, உன் வீட்டுப் பாடத்தைச் செய்துவிட்டாயா?''

''இதோ செய்யப் போகிறேன்.''

''நான் வீட்டுக்கு வருவதற்கு முன்பே நீ உன் வீட்டுப் பாடங்களைச் செய்து முடித்துவிடுவதாக வாக்களித்திருந்தாயே.''

''ஆனுல் இன்றைய பொழுதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்று நான் மஃபிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.''

''சரி, இனி நீ உன் வாக்கை நிறைவேற்ருவிடில் சர்க்கரைக் கிண்ணத்தை நான் ஒளித்து வைத்துவிடுவேன்.''

பிறகு நாங்கள் இருவருமாகச் சேர்ந்து வீட்டுப் பாடங்களைச் செய்வதற்காக உட்கார்ந்தோம். அன்றைய வீட்டுப் பாடங்கள் என்னவென்று கூட கோஸ்த்யாவுக்குத் தெரியாதே. தனியே எப்படி அவனால் இவற்றைச் செய்ய முடியும்? மறு நாளன்றும் நாங்கள் மஃபிக்குப் பயிற்சி அளித்தோம்.

''சர்க்கரைக் கட்டிகளை எண்ணுவதற்குக் கற்றுக் கொடுத்தால் மட்டும் போதாது, வெவ்வேறு எண்களையும் பார்த்துப் புரிந்து கொள்வதற்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்'' என்றான் கோஸ்த்யா.

ஆகவே அட்டையில் பெரிதாக '1'ஐ எழுதிக் கத்தரித்து எடுத்து, அதை மஃபியின் முன்னால் வைத்தோம்.

''மஃபி இதுதான் எண் '1'. ஒரு சர்க்கரைக் கட்டியைப் போன்றதே இது. சரி, நீ சொல்லு பார்ப்போம். இது எத்தனை?'' என்று கேட்டான் கோஸ்த்யா.

''வள்!''

''சபாஷ்! எடுத்தயெடுப்பிலேயே சரியாகச் சொல்லிவிட்டாயே!'' என்று அதைப் பாராட்டினான். ''அடுத்து நீ எண் '2'ஐக் கற்றுக் கொள்ள வேண்டும்.'' முக்காலியின் மேல் இரண்டு சர்க்கரைக் கட்டிகளை எடுத்து வைத்து, ''எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லு'' என்றான்.

''வள்!''

''தப்பு! இரண்டு கட்டிகள் இருக்கின்றன, ஒன்று என்கிறாய். சரியான பதிலைச் சொல்லு.''

''வள்!''

''அது எப்படி இது 'வள்' ஆகும்? 'வள்-வள்' என்றல்லவா சொல்ல வேண்டும். உன் தலையிலே இருப்பது மூளையா, களிமண்ணா?''

''வள்!'' என்று பதிலளித்தது மஃபி.

''புத்தி இல்லை உனக்கு! இதைப் போய் ஒன்றெனச் சொல்கிறாயே, மண்டு!'' என்று கோஸ்த்யா கத்தினான்.

மஃபி மிரண்டு போய்ப் பின்னால் நகர்ந்தது.

''அதைப் பார்த்துக் கத்தாதே'' என்று நான் அவனிடம் சொன்னேன். ''நாயுடன் இதமாகப் பேச வேண்டும், இல்லையேல் அது பயந்து போய் விடும், அதன் பிறகு அதனால் எதையும் புரிந்து கொள்ள முடியாது.''

ஒன்றுக்கும் இரண்டுக்குமுள்ள வேற்றுமையை கோஸ்த்யா அதற்கு எடுத்துரைத்தான்.


''இது எத்தனை, சொல்லு'' என்றான் அவன்.

''வள்!''

''மறுபடியும் சொல்லு'' என்று நான் அதைத் தூண்டினேன்.

மஃபி ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தது. ஆமாம் என்று நான் பலமாகத்





தலையை ஆட்டிக் காட்டிக் கண்களைச் சுளித்துக் கொண்டேன். தயங்கியபடி இன்னொரு தரம் குரைத்தது மஃபி.

''சபாஷ்! இரண்டைச் சொல்ல நீ இரண்டு தரம் குரைக்க வேண்டும், தெரிந்ததா?'' என்று மகிழ்ந்து கொண்டு கோஸ்த்யா அதனிடம் ஒரு சர்க் கரைக் கட்டியை எறிந்தான்.

''சரி, மறுபடியும் சொல்லு'' என்றான், அதைப் பார்த்து.

மஃபி ஒரு தரம் குரைத்தது.

''இன்னொரு தரம் குரைக்க வேண்டும்!'' என்று நான் அதன் காதுக்குள் சொன்னேன்.

''நீ அதற்குச் சொல்லித் தர வேண்டாம். அதற்குத் தெரியும், அதுவே சொல்லட்டும். மஃபி, சொல்லு நீ!''

மஃபி மறுபடியும் குரைத்தது.

''சமர்த்துப் பையன்! இரண்டு தரம் குரைக்க வேண்டும், தெரிந்து கொண்டாயா?'' என்று கோஸ்த்யா அதற்கு மீண்டும் ஒரு சர்க்கரைக் கட்டியைத் தந்தான். பிறகு அவன் மறுபடியும் மஃபியை எண்ணிச் சொல்லச் சொன்னான்.

மஃபி முன்பு போலவே ஒரு தரம் குரைத்தது. அதனிடமிருந்து மேலும் நாங்கள் எதிர்ப்பார்த்துக் காத்திருப்பது தெரிந்ததும், அது இன்னொரு தரம் குரைத்தது. இப்படித் தொடர்ந்து நாங்கள் முயற்சி செய்தபின் அது ஒரே மூச்சில் இரண்டு தரம் குரைக்க ஆரம்பித்தது. இனி மூன்று வரை எண்ணிக் கணக்கிட அதற்குக் கற்றுத் தர முற்பட்டோம். இப்படியே அன்று மாலை நாங்கள் ஐந்து வரை முன்னேறிச் சென்றோம்.

ஆனால் மறு நாளன்று நாங்கள் பயிற்சியைத் தொடங்கியதும், மஃபி அறவே குழம்பிப் போயிருக்கக் கண்டோம். ''3'' ஐக் காட்டியதும் அது இரண்டு தரம் குரைத்தது. சில சமயம் ஐந்து தரங்கூட குரைத்தது. ''5'' ஐக் காட்டியதும் மூன்று தரம் குரைத்தது. அதாவது ஒன்றும் புரியாமல் அது உளறிக் கொண்டிருந்தது.

கோஸ்த்யாவுக்குக் கோபம் கோபமாக வந்தது, மஃபியைப் பார்த்து அவன் ஆத்திரமாய்க் கத்தினான். ஏட்டிக்குப் போட்டியாய் வேண்டுமென்றே மஃபி இப்படித் தவறான பதிலை அளிக்கிறதென்று அவன் கூச்சலிட்டான். எப் போதாவது சில சந்தர்ப்பங்களில் மஃபி சரியாகவும் பதில் அளித்தது, இது தற்செயலாக நிகழ்ந்ததாகவே இருக்க வேண்டும். ஆனால் அது சரியான பதிலைத் தெரிவித்ததும் கோஸ்த்யா,''பார்த்தாயா?'' என்று கூவுவான்.''சரி யான பதில் அதற்குத் தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் திருப்பிச் சொல்லச் சொன்னால் அழிச்சாட்டியமாகத் தப்பாகச் சொல்லும். என் நண்பனாய் இருந்து கொண்டு இப்படிச் செய்கிறதே இது. அதற்குக் களைத்து விட்டது,

பயிற்சியை நிறுத்தும்படி நம்மிடம் சொல்ல விரும்பி, இவ்வாறு செய்கிறது.''

மஃபி வேண்டுமென்றேதான் தப்பான பதிலைச் சொல்லிற்ரு என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் ஒன்று மட்டும் தெளிவாகவே தெரிந்தது: எங்களுடைய முயற்சி தோல்வியுற்றுவிட்டது. அதற்குப் பயிற்சி அளிக்க எங் களுக்குத் தெரியவில்லை போலும், அல்லது கணிதத்தில் மஃபி சிறப்பு பெற முடியாமலும் இருந்திருக்கலாம்.

''நீ பள்ளிக்குச் செல்லாததை இனியும் உன் அம்மாவிடமிருந்து மறைக்காமல் உண்மையைச் சொல்லி, நாளை முதல் ஒழுங்காய்ப் பள்ளிக்குச் செல்ல ஆரம்பி'' என்று அவனிடம் நான் கூறினேன்.

''இல்லை, இனி அம்மாவிடம் நான் உண்மையைச் சொல்ல முடியாது. இத்தனை நாளாய் வகுப்புக்கு மட்டம் போட்டேன் என்று எப்படிச் சொல் வேன்? ஒரேயொரு நாள் என்ருல் ஏதோ சொல்லி சமாளிக்கலாம்.''

''அப்படியானுல், ஆசிரியையிடம் போய் விளக்கமாக யாவற்றையும் சொல்லு.''

''ஒருநாளும் முடியாது என்னுல்.''

''ஆசிரியையிடம் சொல்வதற்கு உனக்குச் சங்கடமாய் இருந்தால், நான் போய் அவரிடம் சொல்கிறேன்.''

''ஆசிரியையிடம் போய் கோள் சொல்லப் போவதாகவா கூறுகிருய்? அம் மாதிரியான நண்பன் அல்லவே நீ.''

''கோள் சொல்ல மாட்டேன்தான். ஆனுல் அவரிடம் நீ நேரில் பேச வேண்டிய சங்கடமான நிலைமையிலிருந்து விடுபட உனக்கு நான் உதவலாம் அல்லவா?''

''நீ போய் ஆசிரியையிடம் சொல்வதால் என் நிலைமை நூறு மடங்கு மேலும் மோசமாகிவிடும். எனக்கு உதவுவதற்கு வேறு வழி தெரியாவிட் டால், நீ சும்மாயிரு, போதும்!''

''நீ என்னதான் செய்யப் போகிருய்? மஃபிக்கு எண்கள் புரியவில்லை, ஆகவே உன்னுல் சர்க்கஸில் சேர முடியாது. மஃபிக்குக் கற்றுத் தர முடி யுமென்ரு நினைக்கிருய்?''

''இல்லை, நான் அப்படி நினைக்கவில்லை. வேருெரு நாய் கிடைத்தால் ஒழிய இது வீண் முயற்சிதான். கர்ணமடிக்கவும் தலைகீழே நிற்கவும் நான் கற்றுக் கொள்ள முடியாதா என்ன? ஏற்கெனவே நான் முயற்சி செய்து பார்த்திருக் கிறேன், என் கால்களை யாரேனும் பிடித்துக் கொண்டால் என்னுல் தலைகீழே நிற்க முடியும். தொடர்ந்து பயிற்சி செய்து யாருடைய உதவியுமின்றியே நானே நிற்கப் பழகிக் கொள்வேன். நீ என் கால்களைப் பிடித்துக் கொள், நான் செய்து காட்டுகிறேன்.''

அவன் மண்டியிட்டுக் கைகளைத் தரையிலே ஊன்றியதும் நான் அவன் கால்களைப் பிடித்து முடிந்த மட்டும் மேலே தூக்கினேன்.கைகளால் நடந்து

அறையை அவன் சுற்றி வர, நான் அவன் கால்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு பின்னால் நடந்தேன். இப்படிக் கொஞ்ச நேரம் கைகளால் நடந்ததும் கை சோர்ந்து போய் மடங்கிக் கொண்டு விடவே அவன் தலை படாரெனத் தரையில் மோதியது.

''முதலில் இப்படித்தான் நடைபெறும்'' என்று சொல்லி அவன் எழுந்து நின்று நெற்றியைத் தடவி விட்டுக் கொண்டான். ''தொடர்ந்து பயிற்சி செய்தால் கைகள் வலுவடைந்துவிடும், பிறகு நானே தனியே தலைகீழே நிற்கவும் நடக்கவும் கற்றுக் கொள்வேன்.''

''சர்க்கஸ் கூத்தனாவது எளிய காரியமல்ல, அதற்கு நெடுங்காலம் பயிற்சி செய்தாக வேண்டும்'' என்று அவனிடம் நான் சொல்லிப் பார்த்தேன்.

''குளிர் கால விடுமுறைக்கு இன்னும் அதிக நாட்கள் இல்லை. அது வரை நான் சமாளித்துவிட்டால் போதும்.''

''குளிர் கால விடுமுறை சில நாட்கள்தானே இருக்கும், அதன் பிறகு என்ன செய்வாயாம்?''

''அதன் பிறகு என்ன? கோடை விடுமுறை ஆரம்பமாகும் வரைச் சமாளித்தாக வேண்டும்.''

''எத்தனையோ மாதங்கள் அல்லவா சமாளித்தாக வேண்டியிருக்கும்?''

''அதனால் என்ன?''

கோஸ்த்யா மெய்யாகவே விபரீதமானவன்தான். எதைப் பற்றியும் அவன் அதிகம் கவலைப் படுவதில்லை. எந்நேரமும் ஏதாவது ஒரு திட்டம் அவனுக்கு உதித்துக் கொண்டிருக்கும். உடனே அதை நிறைவேற்றிவிட்டதாகவே நினைத்து உற்சாகமடைவான். அவனது திட்டம் முட்டாள்தனமானது, அதிக நாட்களுக்கு நீடிக்க முடியாது என்பது எனக்குக்கூட தெளிவாகவே விளங்கியது.

பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் அவன் மட்டம் போட்டு வந்தது அவன் அம்மாவுக்குத் தெரியாமலே இருந்தது. வீட்டுப் பாடங்களை அவன் செய்து விட்டானா என்று தினமும் அவர் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும் கவனிப்பது வழக்கம். யாவற்றையும் அவன் செய்து முடித்து வைத்திருப்பான். பள்ளிக்கூடம் விட்டதும் நான் நேரே அவனிடம் சென்று அன்று செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்வேன். உண்மையை அம்மா தெரிந்து கொண்டு விடுவாரே என்று பயந்து இதன்முன் எந்நாளையும் விட அதிக நேரம் உட்கார்ந்து வீட்டுப் பாடங்களைக் கவனமாகவே அவன் செய்து முடித்து வந்தான்.

தினமும் காலையில் புத்தகப் பையை எடுத்துக் கொண்டு தெருக்களில் சுற்றித் திரிந்தான். காலைப் பொழுது பூராவையும் தெருக்களில் கழிப்பதில்

அபாயங்கள் இருப்பது தெரிய வந்தது. ஒரு நாள் எங்கள் ஆங்கில ஆசிரியை எதிரே வரக் கண்டதும் அவன் ஒரு சந்துக்குள் திரும்பி அவர் கண்ணில் படாமல் தப்பி ஓடிஞன். இன்ெனொரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரைப் பார்த்துவிட்டு அருகாமையில் இருந்த ஒரு கட்டிடத்துக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். தன் வீட்டிலிருந்து நெடுந் தொலைவு சென்று சுற்றிஞல் அபாயம் குறைந்துவிடுமென்று நினைத்தான். ஆஞல் அப்போதும் தான் பள்ளிக்கூடத் துக்குப் போகாமல் ஊர் சுற்றுவதைப் புரிந்து கொண்டு பலரும் தன்னையே உற்று நோக்குவதாக அவனுக்குத் தோன்றியது.

டிசம்பர் மாதம் ஆதலால் தெருக்களில் கடுங்குளிராய் இருந்தது. கதகதப்புக்காக வேண்டி அவன் பல கடைகளினுள் சென்று பொழுதைக் கழித்தான். அவன் இப்படி வீண் பொழுது போக்குவது சரியல்ல என்பது எனக்குத் தெரிந்தது, இதஞல் நான் அமைதியிழந்து வேதனைப்பட்டேன். எந்நேரமும் நான் கோஸ்த்யாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். வகுப்பில் எனக்குப் பக்கத்தில் காலியாக இருந்த இருக்கை ஓயாமல் அவனை எனக்கு நினைவுபடுத்தி வந்தது. வகுப்பறைக்குள் கதகதப்பில் நாங்கள் சுகமாய் அமர்ந்திருக்க இவன் திருடனைப் போல் பதுங்கித் திரிவதையும், யார் கண்ணிலும் படாமல் இருக்கும் பொருட்டு தெரியாத கட்டிடங்களினுள் ஓடி ஒளிந்து கொள்வதையும், குளிர் தாங்காமல் கடைகளில் தங்கிப் பொழுதைப் போக்குவதையும் நினைத்து நான் வருந்தினேன்.

கோஸ்த்யாவைப் பற்றி இப்படி நான் கவலைப்பட்டு வந்ததால் வகுப்பில் பாதி நேரத்துக்கு நான் எதையும் கவனிக்க முடியவில்லை, ஆசிரியைகள் கூறியது என் காதில் விழவில்லை. வீட்டிலுங்கூட என் சிந்தனை எல்லாம் அவனைச் சுற்றியே வட்டமிட்டன. அவனை நேர் வழிக்கு வரச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசித்தபடி இரவில் நான் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்திருந்தேன். ஆசிரியையிடம் சொன்ஞேமாஞல் திரும்பவும் அவன் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர எப்படியும் அவர் ஏற்பாடு செய்வார். ஆஞல் வகுப்பில் எல்லாரும் என்னைக் கோள் சொல்கிறவன் என்பதாக நினைத்துக் கொள்வார்களே. இதைப் பற்றி நான் யாராவது ஒருவரிடம் பேசி தெளிவு பெற்ருக வேண்டும். முடிவில் என் தங்கை லீக்காவிடம் பேசுவதெனத் தீர்மானித்தேன்.

''உன் வகுப்பில் சிறுமிகள் ஒருவரையொருவர் காட்டிக் கொடுப்பதுண்டா?'' என்று நான் அவளைக் கேட்டேன்.

''அப்படியென்ருல் என்ன?''

''இது தெரியாதா? யாராவது ஒருத்தி செய்யக் கூடாததைச் செய்தால் வேறு ஒருத்தி அதை ஆசிரியையிடம் சொல்வாளா? இம்மாதிரி எப்போதாவது நடைபெறுவது உண்டா?''

''எப்போதாவது சில சமயம் அப்படியும் நடைபெறுவது உண்டுதான். பூச்செடிகளில் ஒன்றை மாஷா முறித்துவிட்டாள். லூசிதான் இதைச் செய் தாளென நினைத்து எங்கள் ஆசிரியை அவளைத் தண்டிக்கப் போனார். செடியை மாஷா முறித்ததை நான் நேரில் பார்த்திருந்தேன், ஆகவே நான் இதை ஆசிரியையிடம் சொன்னேன்.''

''அது எப்படி நீ சொல்லலாம்? இது கோள் சொல்வதுதானே?''

''இல்லை, உண்மையில் நடந்ததையே நான் சொன்னேன். நான் அதைச் சொல்லியிராவிடில், குற்றமற்றவளான லூசி அல்லவா தண்டிக்கப் பட்டிருப் பாள்?''

''எப்படியும் அது கோள் சொல்வதாகத்தானே இருக்கிறது. நாங்கள் ஒரு போதும் இம்மாதிரி செய்யமாட்டோம்.''

''அப்படியென்றால் உன் வகுப்புப் பையன்கள் குற்றம் ஒருவனுடையதாக இருக்க பழியை இன்னொருவன் மீதா சுமத்துவார்கள்?''

''அப்படி ஒன்றும் செய்யமாட்டார்கள்.''

''பூச்செடியை நீ முறித்திட உன் ஆசிரியை வேறு ஒருவன் முறித்ததாக நினைத்தால் நீ என்ன செய்வாய்?''

''எங்கள் வகுப்பில் பூச்செடிகள் இல்லை, கள்ளிச் செடிகள்தான் இருக் கின்றன.''

''எந்தச் செடியாய் இருந்தால் என்ன? செடியை நீ முறித்திருக்க, கோஸ்த்யாதான் முறித்ததாக ஆசிரியை நினைக்கும் போது, யாரும் ஒன்றும் சொல்லாமல் இருந்தால், பழியைக் கோஸ்த்யா மீது சுமத்துகிறீர்கள் என்று தானே அர்த்தம்?''

''கோஸ்த்யா ஊமையல்லவே, தான் முறிக்கவில்லையென்று அவன் சொல்லிவிட்டுப் போகிறான்.''

''அவன் சொல்வதை ஆசிரியை நம்பாமல் இருக்கலாம்.''

''உண்மையைக் கண்டுபிடிப்பது ஆசிரியையின் வேலை. முறித்தது அவ னல்ல, ஆகவே அவன் முறித்ததாக யாராலும் நிரூபிக்க முடியாது.''

''நாங்கள் இம்மாதிரி நடந்து கொள்ள மாட்டோம். செய்யாத குற்றத் துக்காக யாரும் கண்டிக்கப்படுவதை நாங்கள் விரும்ப மாட்டோம். குற்றம் செய்தவள் குற்றம் தனதென்பதைச் சொல்ல வேண்டும். அவள் மௌனமாய் இருந்தால், உண்மையை அறிந்தவள் உண்மையைச் சொல்லவே வேண்டும்.''

''அப்படியானால் உன் வகுப்பில் எல்லாரும் கோள் சொல்வோராவர் என்றுதானே அர்த்தம்.''

''அப்படி ஒன்றும் இல்லை. மாஷா வாயை மூடிக் கொண்டு இருந்தது நேர் மையற்ற செயலாகும். தனது குற்றத்தை லூசியின் குற்றமாக ஆசிரியை தவ றாக நினைத்தது பற்றி அவள் உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டு பேசாமல்

இருக்கையில், நானும் வாயை மூடிக் கொண்டு இருந்தேனுயின் நானும் நேர்மை யில்லாதவள் என்றுதான் அதற்கு அர்த்தம்.''

''நீ சொல்வது வேருெரு விவகாரம். நான் கேட்க விரும்பியது அதுவல்ல. பெற்ருேருக்குத் தெரியாமல் எந்த சிறுமியாவது பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போடுவது உண்டா என்றே நான் கேட்க விரும்பினேன்.''

''எவளும் அப்படிச் செய்யவில்லை.''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நீங்கள் எல்லாரும் நல்ல பிள்ளை கள்.''

''ஆமாம், எங்கள் வகுப்பில் எல்லாரும் நல்லவர்கள். உன் வகுப்பில் இப்படிச் செய்பவர்கள் இருக்கிருர்களா?''

''இல்லை, இது வரை அப்படி யாரும் இருக்கவில்லை.''

''பிறகு ஏன் நீ கேட்கிருய்?''

''குறிப்பாக எதையும் மனதிற் கொண்டு கேட்கவில்லை, சும்மாதான் கேட்டேன்.''

பிறகு நான் அவளிடமிருந்து போய்ச் சேர்ந்தேன். ஆனுல் கோஸ்த்யா வைப் பற்றிய கவலை என்னை விட்டு அகலவில்லை. அம்மாவிடம் இதைப் பற்றி பேச நான் பெரிதும் விரும்பினேன். ஆனுல் அம்மா நேரே ஆசிரியையிடம் போய்ச் சொல்லி விடுவார், யாவும் கெட்டுவிடும் என்று எனக்கு பயமாய் இருந்தது.

எதைப் பற்றியோ நான் கவலைப் படுகிறேன் என்று அம்மாவுக்குத் தெரிந் தது. அவ்வப்போது அம்மா என்னைப் பார்த்த பார்வையிலிருந்தே எனக்கு அது விளங்கியது. அம்மாவிடம் சொல்வதற்கு என்னிடம் முக்கிய விஷயம் ஏதாவது இருந்தால், உடனே அவர் நான் ஏதோ சொல்ல நினைக்கிறேன் என்று ஊகித்துக் கொண்டு விடுவார். ஆனுல் அதைப் பற்றி என்னிடம் எதுவும் கேட்க மாட்டார் அவர். நானுகவே சொல்ல வேண்டுமென்று காத்திருப் பார். நான் ஏதேனும் தவறு செய்திருந்தால், அதை நான் ஒத்துக் கொண்டு நானுகவே அதைப் பற்றிச் சொல்ல முன்வருவதுதான் நல்லது, என்னைக் கட்டாயப்படுத்தி என்னிடமிருந்து உண்மையைத் தெரிந்து கொள்ள முயலு வது சரியல்ல என்று அவர் நினைத்தார். என் மனதில் இருப்பதை எப்படி என் அம்மாவால் ஊகிக்க முடிகிறது என்று நான் ஆச்சரியப்படுவது வழக்கம். என் முகம் அப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும், அகத்தில் இருப்பது அப்படியே என் முகத்திலும் தெரிந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

உட்கார்ந்திருந்த நான் இடையிடையே அம்மாவைப் பார்த்துக் கொண் டேன். நடந்ததை அம்மாவிடம் சொல்வதா, இல்லையா என்று நான் ஆலோ சித்துக் கொண்டிருந்தேன். நானுகவே பேச்சை ஆரம்பிக்கட்டுமென்று இடை யில் எப்போதாவது ஒரு தரம் என்னை உற்று நோக்கினுர் அவர். நெடுநேரம்

நாங்கள் இவ்வாறு ஆலோசித்தபடி அமர்ந்திருந்தோம். படிப்பது போல் நான் பாசாங்கு செய்தேன், என் சட்டையில் கிழிசலைத் தைப்பதாக அவர் பாசாங்கு செய்தார். கோஸ்த்யாவைப் பற்றிய கவலை மட்டும் இல்லாதிருந்தால் நான் இந்த வேடிக்கையை ரசித்திருப்பேன்.

முடிவில் அம்மா பொறுமையிழந்து போய் என்னிடம் கேட்டார்:

''என்ன கவலை என்பதை நீ எனக்குச் சொல்லப் போவதில்லையா?''

''ஏன் நான் கவலையாகவா இருக்கிறேன்?'' என்று ஏதும் அறியாதவனைப் போல் திருப்பிக் கேட்டேன்.

''உன் மனதில் இருப்பதைத்தான் சொல்லேன்.''

''முக்கியமாய் ஏதும் இல்லையே'' என்றேன். அவசரப்படாமல் ஆலோசித்துச் சிறிது சிறிதாகவே சொல்ல வேண்டுமென்று நான் இவ்வாறு சொன்னேன். உண்மையில் யாவற்றையும் அடுத்த விநாடியே அம்மாவிடம் சொல்லிவிட வேண்டுமென்றுதான் துடித்துக் கொண்டிருந்தேன். பேச்சை அம்மாவே ஆரம்பித்தது குறித்து உள்ளுக்குள் எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. ஒரு கேள்வியும் கேட்காதவரிடம் நாமாகவே சென்று மனதில் இருப்பதைச் சொல்வதைக் காட்டிலும், கேள்வி கேட்டு ஊக்குவிப்பவரிடம் சொல்வது எளிதாகிவிடுகிறது அல்லவா?

''உன் மனதில் ஏதோ உன்னை வருத்துவது எனக்குத் தெரிகிறது. கடந்த மூன்று நாட்களாய் நீ ஒரு மாதிரியாக இருந்து வருகிறாய், நான் இதைக் கவனிக்கவில்லை என்று நினைக்காதே. பள்ளிக்கூடத்தில் ஏதாவது நடந்ததா?''

''இல்லை. பெரிதாய் ஒன்றும் இல்லை.''

''மோசமான மதிப்பெண் பெற்றாயா?''

''அதெல்லாம் இல்லை.''

''வேறு ஏதாவது சங்கடத்தில் சிக்கிக் கொண்டாயா?''

''எனக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை.''

''வேறு யாருக்காவதா?''

''கோஸ்த்யாவுக்கு.''

''என்ன நேர்ந்தது?''

''பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை அவன்.''

''ஏன் அப்படி?''

''படிக்க விரும்பவில்லை.'' சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டோமோ என்று எனக்கு உள்ளுக்குள் பகீரென்றது. அம்மா நேரே பள்ளிக்கூடத்திற்குச் சென்று எங்கள் ஆசிரியரிடம் சொன்னாராயின் என்னாவது என்று அஞ்சினேன்.

''ஏன்? மோசமான மதிப்பெண்கள் பெற்று வருகிறானா? வீட்டுப் பாடங்களைச் செய்யாமல் இருக்கிறானா?''

முக்கிய விவரங்களை இன்னும் நான் சொல்லிவிடவில்லை என்பதை உணர்ந்ததும் எனக்குத் தெம்பு பிறந்தது. ''இலக்கணத்தில் மோசமான மதிப்பெண் பெற்றிருக்கிறான். இலக்கணம் படிக்க அவனுக்கு விருப்பம் இல்லை. சென்ற ஆண்டிலேயே அவன் பின்தங்க ஆரம்பித்துவிட்டான்.''

''இலக்கணத்தில் மோசமான மதிப்பெண் வாங்கியவனை மேல்வகுப்புக்கு அனுப்பியிருக்க மாட்டார்களே.''

''அது எனக்குத் தெரியாது. வேறொரு பள்ளியிலிருந்து மாற்றிக் கொண்டு இவ்வாண்டில் இங்கே வந்து சேர்ந்தான்.''

''உங்கள் ஆசிரியை அவனுக்கு உதவி செய்யவில்லையா? பின்தங்கியவனுக்கு உதவினால்தானே அவன் முன்னேறி வர முடியும்?''

''எங்கள் ஆசிரியையை அவன் ஏமாற்றி வருகிறான். வீட்டுப் பாடங்களை வேறு யாராவது ஒரு பையனிடமிருந்து காப்பியடித்து எழுதிக் காட்டி விடுகிறான். 'டிக்டேஷனோ' 'கட்டுரை வரைதலோ' நடைபெறும் நாட்களில் பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போடுகிறான்.''

''நீ அவனுக்கு உதவி செய்வதில்லையா? அவனைப் பற்றி இப்படிக் கவலைப்படுகிறாய், நீதான் அவனுக்கு உதவ வேண்டும்.''

''படிக்க விருப்பம் இல்லாதவனுக்கு நான் எப்படி உதவி செய்ய முடியும்?''

''அவனுடன் பேசி படிப்பதன் அவசியத்தை நீ அவனுக்கு உணர்த்த வேண்டும். இந்த ஓராண்டில் நீ முயற்சி எடுத்துப் படிப்பில் முன்னேற்றமடையவில்லையா? அதைப் போல் அவனும் முன்னேறுவதற்கு நீ அவனுக்கு உதவ வேண்டும். இம்மாதிரியான ஒரு நேரத்தில் நல்ல நண்பன் ஒருவன் அவனுக்கு மிகப் பெரிய ஆதரவாக அமைந்து, அவன் வாழ்க்கையையே நல்லபடி மாற்றமடையும்படிச் செய்ய முடியுமே.''

''நான் அவனுக்கு நல்ல நண்பனாக இருக்கவில்லை என்றா நினைக்கிறாய்?''

''இல்லையே. அவனைப் பற்றி நீ கவலைப்படுகிறாய், அவனுக்கு நீ நல்ல நண்பன் என்று நினைத்துதான் உன்னால் அவனுக்கு உதவ முடியுமென்று சொல்கிறேன்.''

இன்னமும் அம்மாவிடம் முழு உண்மையையும் சொல்லாமல் இருக்கிறோமே என்று எனக்கு வெட்கமாய் இருந்தது. கோட்டையும் தொப்பியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டேன், கோஸ்த்யாவிடம் பேசுவதற்காகச் சென்றேன்.

கோஸ்த்யாவும் நானும் இந்த நெருக்கடியான நேரத்தில் என்றையும் விட நெருங்கிய நண்பர்களாகியிருந்தோம். இதை நினைக்கையில் எனக்கு வியப்பாய் இருந்தது. இப்போது நான் அவனுக்கும், அவன் எனக்கும் உயிருக்கு உயிரான நண்பர்களாய் இருந்து வந்தோம். எங்கள் வகுப்பைச் சேர்ந்த

ஏனையோரைப் பார்க்காமல் விலகி இருந்தது கோஸ்த்யாவுக்கு வருத்த மாகவே இருந்தது. ஆனால் தற்போது நான்தான் அவனுக்குரிய ஒரே நண் பனும் மிகச் சிறந்த நண்பனும் ஆவேனென அவன் கூறி வந்தான்.

நான் போய்ச் சேர்ந்தபோது கோஸ்த்யாவும் அவன் அம்மாவும் அத்தை ஸீனாவும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். பெரிய நீல மூடாக்கிடப்பட்ட மின்விளக்கு ஒன்று தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்தது. இந்த விளக்கு மங்கலான தண்ணொளியை அவ்வறையினுள் பரப்பியது. அடிவானத்தில் சூரி யன் மறைந்து இன்னும் இருட்டு ஆரம்பமாகாத கோடையின் அந்தி நேர வெளிச்சத்தைப் போன்றதாய் இருந்தது அது. என்னைக் கண்டதும் மகிழ்ச்சிய டைந்த அவர்கள் என்னையும் தேநீர் அருந்தும்படி அழைத்தனர். பன் ரொட் டியைத் தின்று கொண்டு நாங்கள் தேநீர் அருந்தினோம். பள்ளியில் என் படிப்பைப் பற்றிக் கோஸ்த்யாவின் அம்மாவும் அத்தையும் விசாரித்தனர். பிறகு என் அம்மாவையும் அப்பாவையும் பற்றிக் கேட்டனர். கோஸ்த்யா எங்களது இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டு மௌனமாய் உட்கார்ந் திருந்தான். பன்னில் ஒரு பாதியை அவன் தனது தேநீர்க் கிளாசுக்குள் போட்டு அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். வினாடிக்கு வினாடி அது ஊதிப் பருத்துச் சென்று இறுதியில் கிளாசின் முழுப் பரும னுக்கும் உப்பிவிட்டது. ஆனால் கோஸ்த்யாவின் சிந்தனை வேறு எங்கோ என்றது.

''கோஸ்த்யா உன் நினைவு இங்கில்லையே, எதைப் பற்றி ஆலோசிக் கிறாய்?'' என்று அவன் அம்மா கேட்டார்.

''அப்பாவைப் பற்றி நினைத்துக் கொண்டேன். அவரைப் பற்றி ஏதா வது சொல்லேன்.''

''சொல்ல வேண்டியவற்றையெல்லாம் எத்தனையோ தரம் நான் சொல்லி யிருக்கிறேனே.''

''இன்னொரு தரம் சொல்லேன்.''

''அப்பாவைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்லிக் கேட்க விரும்புகிறான். உண்மையில் அப்பாவைப் பற்றி அவனுக்கு நினைவிருக்க முடி யாது'' என்றார் ஸீனா அத்தை.

''எனக்கு நிறைய நினைவிருக்கிறது.''

''அதெப்படி நினைவிருக்கும்? நீ பிறந்து மூன்று வாரங்களுக்கு எல்லாம் யுத்தம் ஆரம்பமாகி உன் அப்பா போர்முனைக்குச் சென்று விட்டாரே'' என் றார் அத்தை ஸீனா.

''எனக்கு நினைவிருக்கிறது. அவர் என் படுக்கைக்குப் பக்கத்தில் வந்து நின்றதும், என்னைத் தூக்கி வைத்துக் கொண்டு முத்தமிட்டதும் எனக்கு நினை வில் இருக்கின்றன.''

''அதைப் பற்றி அம்மா சொல்லக் கேட்டிருக்கிருய், உனக்கு அது நினைவில் இருக்க முடியாது'' என்ருர் அவன் அத்தை. ''அப்போது மூன்று வாரங்கள்கூட ஆகாத கைக்குழந்தை நீ.''

''ஆனுல் போர்முனையிலிருந்து அவர் வீட்டுக்கு வந்து சென்ற போது எனக்கு ஒரு வயது.''

''அவருடைய படைப்பிரிவு இந்த வழியாகச் சென்றது. அப்போது அவர் இங்கு சிறிது நேரம் வந்துவிட்டுச் சென்ருர்.''

''ஆமாம், நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அவர் என்னைத் தூக்கி வைத்துக் கொண்டு முத்தமிட்டார். அவரது பட்டாளத்து மேல்கோட்டு சொரசொரப்பாய் இருந்தது. பிறகு புறப்பட்டுச் சென்று விட்டார்.''

''ஒரு வயதுக் குழந்தையாக இருந்த போது நடைபெற்றவை உனக்கு நினைவில் இருக்காது'' என்று விடாப்பிடியாக ஸீனு அத்தை திரும்பவும் கூறிஞர்.

''எனக்கு நினைவில் இருக்கிறதே! இருக்கிறதா, இல்லையா என்று நீ சொல்லு, அம்மா!''

''ஆமாம். சொற்ப விவரங்களை நினைத்துப் பார்க்க முடிகிறதெனில் அவை நினைவை விட்டு மறையாமல் நிலைத்திருக்கிறது என்றுதான் அர்த்தம்'' என்ருர் அவன் அம்மா. ''அப்பாவை நாம் பார்த்தது அதுதான் கடைசித் தரம். அதன் பிறகு போரில் அவர் உயிரிழந்து விட்டார்'' என்று குரல் மெலிந்து தழுதழுக்கக் கூறிஞர் அவர்.

அன்று மாலைப் பொழுது முழுதுமே கோஸ்த்யா தன்னை மறந்த நிலையில் இருந்தான். எதைப் பற்றியும் நான் அவனுடன் பேச முடியவில்லை, சீக்கிரமாகவே நான் விடைபெற்றுக் கொண்டு திரும்பிவிட்டேன்.

இரவு படுக்கையில் படுத்திருந்த போது கோஸ்த்யாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். படிப்பில் முன்பு நான் பின்தங்கியே இருந்தேன், என் அப்பா எனக்கு உதவிஞர், எளிதில் நான் முன்னேற முடிந்தது. ஆனுல் கோஸ்த்யாவுக்கு அப்பா இல்லை. யுத்தத்திலே அப்பாவை இழக்க நேர்வது எவ்வளவு பெரிய கொடுமை என்று நினைத்துப் பார்த்தேன். எப்படியாவது நான் கோஸ்த்யாவுக்கு உதவியாக வேண்டுமென என்னுள் கூறிக் கொண்டேன். நாள்தோறும் இலக்கணப் பாடத்தில் அவனுக்கு உதவி செய்து விரைவில் அவனை எங்கள் நிலையை வந்தடையச் செய்வதெனத் தீர்மானம் செய்தேன். ஆனுல் அவன் பள்ளிக்குத் திரும்பி வராத வரை ஒன்றும் செய்ய முடியாது. அவனுடன் பேசிப் பயனில்லை என்பதையும் நான் உணர முடிந்தது. அவனுக்குத் துணிவில்லை, அம்மாவிடம் உண்மையைச் சொல்வதற்கு அவன் தயங்கிஞன்.

ஆகவே நான் அவனிடம் உறுதியாக இருக்க வேண்டுமென இறுதியில் திட முடிவுக்கு வந்தேன். மறுதினம் பள்ளிக்கூடம் விட்டதும் அவனிடம்

சென்று முடிவாகச் சொல்லிவிடுவதெனத் தீர்மானித்தேன். நடந்ததை அம்மாவிடம் சொல்லிவிட்டுப் பள்ளிக்கூடத்துக்கு அவன் திரும்பாவிட்டால், எங்கள் ஆசிரியையிடம் நான் உண்மையைச் சொல்லியே ஆக வேண்டும். ஏனெனில் சும்மாயிருந்தால் முடிவில் துன்பப்படப் போவது அவனேதான். அவன் நலத்தை முன்னிட்டே நான் இதைச் செய்கிறேன் என்று அவன் புரிந்து கொள்ளாமல் என் மேல் கோபப்பட்டால், கோபப்படட்டும்.

விரைவில் நிலைமை தெளிவானதும், நான் செய்தது சரிதான் என்பதை அவன் புரிந்து கொள்வான். மீண்டும் நாங்கள் இருவரும் நண்பர்களாகி விடுவோம். திடுமென எனக்கு நிம்மதி உண்டாயிற்று. முழு உண்மையையும் என் அம்மாவிடம் சொல்லாமல் இருந்ததை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டேன். மறுதினமே யாவற்றையும் அம்மாவிடம் சொல்வதென்று தீர்மானித்தேன்.

ஆனால் நான் நினைத்த மாதிரி நிகழ்ச்சிகள் நடந்தேறவில்லை. கோஸ்த்யாவிடம் முடிவாகப் பேசி விடுவதென்று தீர்மானித்திருந்தேன். ஆனால் அவன் காய்ச்சலாய்ப் படுத்திருப்பதாக வகுப்பில் நான் சொல்லியிருந்ததால் எங்கள் வகுப்பினர் பலரும் அன்று பிற்பகல் அவனைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டார்கள். அவனை எச்சரிக்கை செய்வதற்காக எல்லாருக்கும் முன்பு நான் புறப்பட்டு அவன் வீட்டுக்கு ஓட்டமாய் ஓடினேன். கதவைத் திறந்ததும் அவன் என்னிடம் ஆர்வமுடன் சொன்னான்:

''நானாகவே தலைகீழே நிற்கக் கற்றுக் கொண்டு விட்டேன் தெரியுமா? கைகளை ஊன்றிக் கால்களை உயர்த்திச் சுவரில் வைத்துக் கொண்டுச் சாயாமல் நிற்பேன்!''

''அதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. உடனே போய் உன் படுக்கையில் படுத்துக் கொள்'' என்று நான் கத்தினேன்.

''எதற்காக?''

''நீ உடல் நலம் இல்லாதவன் அல்லவா, அதனால்தான்.''

''யார்? நானா?''

''பள்ளிக்கூடத்தில் என்னை அப்படித்தானே சொல்லச் சொன்னாய்?''

''ஆமாம்.''

''நம் வகுப்பினர் சிலர் உன்னைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள்!''

''என்ன?'' என்று கூறி அப்படியே உடைகளோடும் பூட்சுகளோடும் படுக்கையில் படுத்து அவசரமாகப் போர்வையால் போர்த்திக் கொண்டான்.

''அவர்களிடம் நான் என்ன சொல்வது?'' என்று கேட்டான்.

''உடம்பு சுகமில்லே என்று சொல்லு. வேறென்ன சொல்ல முடியும்?''

சில கணங்களுக்குப் பிறகு கதவு மணி அடித்தது. வந்த பையன்கள் மேல் கோட்டுகளேக் கழற்றி வைத்து விட்டு கோஸ்த்யாவின் அறைக்குள் நுழைந் தார்கள். கோஸ்த்யா போர்வையைத் தன் முகவாய் வரை இழுத்து விட்டுக் கொண்டு எச்சரிக்கையுடன் அவர்கள் பக்கம் தலேயைத் திருப்பினுன்.''

''கோஸ்த்யா, வணக்கம்'' என்றனர், வந்தவர்கள்.

''வணக்கம்'' என்று முனகுவது போல் கோஸ்த்யா பதிலளித்தான். அவன் குரல் ஜீவனற்றதாய் ஒலித்தது.

''எப்படி இருக்கிருய்? உன்னேப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந் திருக்கிறேம்.''

''நன்றி, உட்காருங்கள்.''

''உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது?''

''இன்னும் நல்லபடி ஆகவில்லே.''

''நாள் முழுதும் நீ படுக்கையிலேதான் படுத்திருக்க வேண்டுமா?''

''ஆமாம்.''

''அட பாவமே! உனக்கு வேதனேயாக அல்லவா இருக்கும்?''

''ஆமாம்.''

''பொழுதுக்கும் தனியாகவா இருக்கிருய்?''

''ஆமாம்.''

''இனி நாங்கள் அடிக்கடி வந்து உன்னேப் பார்ப்போம். இரண்டு மூன்று நாட்களில் உடம்பு சரியாகி நீ பள்ளிக்கூடம் வந்துவிடுவாய் என்று இதுவரை வராமல் இருந்தோம்.''

''பரவாயில்லே, வீத்யாதான் நாள்தோறும் இங்கு வந்து என்னுடன் இருந்துவிட்டுப் போகிருனே.''

''நாங்களும் நாள்தோறும் வருகிறேம்.''

''சரி, வாங்க.''

வர வேண்டாமென்று எப்படிச் சொல்வான் அவன்?

''உடம்புக்கு என்ன உனக்கு? வலிக்கிறதா?''

''ஆமாம். கைகால்களே வலிக்கிறது.''

''கால்களிலுமா வலி?''

''ஆமாம், தலேயையும் வலிக்கிறது.''

''எந்நேரமுமா வலிக்கிறது?''

''இல்லே, விட்டுவிட்டு வலிக்கிறது.''

''எனக்குத் தெரியும். ஒரு பையனுக்கு இதே போலத்தான் வலித்தது. அவனுக்கு வாதக் காய்ச்சல், உனக்கும் அம்மாதிரியான காய்ச்சலாகத்தான் இருக்கும்.''

''இருக்கலாம்.''

''டாக்டர் என்ன சொன்னார்?''

''நாக்கை நீட்டச் சொன்னார்; 'ஆ' என்று வாயைத் திறக்கச் சொன்னார்.''

''என்ன நோய் என்று சொல்ல வில்லையா?''

''சொன்னாரே. ஏதோ பேர் சொன்னார். ஏதோ அழற்சி என்றார்.''

''அப்படியென்றால் என்னவாம்?''

''எனக்குத் தெரியாது.''

''உனக்கு அவர் என்ன கொடுத்தார்?''

''மருந்து.''

''எப்படிப்பட்ட மருந்து?''

''புட்டியில் தந்தார்.''

''கசப்பாகவா இருக்கிறது?''

''தாங்க முடியாத கசப்பு!'' என்றான். பார்க்கச் சகிக்காதபடி அவன் முகம் கோணிச் சென்றது.

''நான் காய்ச்சலாகப் படுத்தபோதுகூட அம்மாதிரி மருந்துதான் கொடுத்தார்கள். நான் அதைச் சாப்பிடவேயில்லை'' என்றான் தீமா.

''என்றாலும் சாப்பிட முடியவில்லை.''

''நீ இதைச் சாப்பிடாமல் இருப்பது நல்லதல்ல. சீக்கிரம் உடம்பு சரியாக வேண்டும் அல்லவா?''

''ஆமாம், ஆமாம்!''

''அதைச் சாப்பிட்டதும் ஒரு தேயிலைக் கரண்டி அளவு சர்க்கரை தின்றால் கசப்பு மறைந்துவிடும்'' என்று வான்யா ஆலோசனை கூறினான்.

''சரி, அப்படியே செய்கிறேன்.''

''வீட்டுப் பாடங்களைப் பற்றி நீ கவலைப்படாதே. உடம்பு கொஞ்சம் சரியானதும் நாங்கள் வந்து உதவி செய்கிறோம். சில நாட்களுக்குள் நீ எங்கள் நிலையை வந்தடைந்து விடலாம்.''

''ஆமாம், நிச்சயம் முன்னேறி வந்துவிடுவேன்.''

அப்போது அவனது பூட்சுக் காலில் ஒரு பகுதி போர்வைக்கு வெளியே தெரியக் கண்டேன். யார் கண்ணிலும் இது பட்டுவிடுமோ என்று நான் அஞ்சினேன். எல்லாரும் பேச்சு மும்முரத்தில் இருந்ததால், நல்ல வேளையாய் யாரும் அதைக் கவனிக்கவில்லை. நான் மெல்ல அந்தக் கால் பக்கம் சென்று அதன் மேல் போர்வையை இழுத்து மூடினேன்.

''தற்போதைய நிலையில் அவன் அதிகம் பேசாமல் இருப்பதுதான் நல்லது. நீங்கள் விடைபெற்றுக் கொண்டு புறப்படுங்கள்'' என்றேன் நான்.

சீக்கிரமாய் அவன் முழு நலமடைய வேண்டுமென வாழ்த்திவிட்டு அவர்கள் புறப்பட்டனர். திரும்பவும் மறுநாள் வருவதாகக் கூறிச் சென்றனர்.

அறையிலிருந்து அவர்கள் சென்ற மறுகணமே கோஸ்த்யா தன் படுக்கையிலிருந்து துள்ளியெழுந்து அறையைச் சுற்றிக் குதித்தோடினுன்.

''பார்த்தாயா! யாவும் நல்லபடியாகவே முடிவுற்றுவிட்டது! யாருக்கும் எந்தச் சந்தேகமும் எழவில்லை!'' என்று அவன் ஆனந்தப்பட்டுக் கொண்டான்.

''எதற்காக இப்படி நீ ஆனந்தப்பட்டுக் கொள்கிருயோ, தெரியவில்லை எனக்கு. உன்னிடம் பேசி முடிவெடுக்க வேண்டிய ஒன்று இருக்கிறது.''

''என்ன அது?''

''நீ பள்ளிக்கூடத்திற்குத் திரும்பி வந்தாக வேண்டும்.''

''நீ சொல்லாமலே எனக்குத் தெரிந்ததுதானே அது. ஆனால் எப்படி நான் திரும்பி வருவது? அது முடியாத காரியமென்று தெரியவில்லையா உனக்கு?''

''முடியாத காரியம் ஒன்றுமில்லை! பள்ளிக்கூடத்திற்கு நீ வர வேண்டுமென்று உன்னிடம் இப்போது கடைசி தரமாகச் சொல்கிறேன். நாளைக்கு நீ வந்து சேராவிட்டால், உடம்புக்கு உனக்கு ஒன்றுமில்லை என்பதை நான் ஆசிரியையிடம் சொல்லப் போகிறேன்.''

''ஏன் இந்தத் திடீர் முடிவு?''

''ஏனென்றால் நீ தொடர்ந்து படித்தாக வேண்டும். இந்த அசட்டு நாடகத்தை நிறுத்திவிட்டு வகுப்புக்கு வர வேண்டும். எப்படியும் உன்னால் சர்க்கஸில் சேர முடியப் போவதில்லை.''

''ஏன் முடியாதாம்? இதோ பார்! தலைகீழே நின்று காட்டுகிறேன்.'' அவன் நேரே சுவரருகே சென்று கைகளை ஊன்றித் தலைகீழே நின்றான்.

அதே கணத்தில் அறைக் கதவைத் திறந்து கொண்டு வான்யா உள்ளே நுழைந்தான்.

''எனது கையுறைகளை இங்கே விட்டுச் சென்றுவிட்டேன்'' என்றான் அவன்.

''ஓய், நீ என்ன செய்கிருய்?''

கோஸ்த்யா அவசரமாக எழுந்து நேர் நிலையில் நின்றான். என்ன சொல்வதென்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தான்.

''நீ ஒன்றும் உடல் நலமில்லாதவனாகத் தெரியவில்லையே!''

''எனக்குக் காய்ச்சல்தான், நான் பொய் சொல்லவில்லை.'' கோஸ்த்யாவுக்கு முகம் செக்கச் சிவந்துவிட்டது. முனகியபடி நொண்டிக் கொண்டு படுக்கையை நோக்கி நடந்தான்.

''போதும் இந்த பாசாங்கு! சற்று முன்பு கைகால்களை வலிப்பதாகச் சொன்னாய். திரும்பி வந்து பார்த்தால் நீ தலைகீழே நின்று வித்தை செய்கிருயே!''

''கைகால்கள் வலிக்கவே செய்கின்றன. மெய்தான்.''

''புளுகாதே நீ! எப்படி உன்னால் இவ்வளவு சீக்கிரமாய் உடுத்திக் கொள்ள முடிந்தது? அப்படியே உடுப்புடன் படுக்கையில் படுத்துக் கொண்டு பாசாங்கு செய்திருக்கிருய்!''

''சரி, உண்மையைச் சொல்கிறேன். ஆனல் யாரிடமும் இதைச் சொல்வதில்லை என்று நீ வாக்குறுதி அளிக்க வேண்டும்.''

''நிச்சயமாய் எல்லார்க்கும் நான் சொல்லத்தான் செய்வேன்.''

''அப்படியானல் உண்மையை நான் உன்னிடம் சொல்லமாட்டேன்.''

முன் அறைக்குள் யாரோ வரும் சப்தம் கேட்டது. பிறகு அறைக் கதவு மீண்டும் திறக்கப்பட்டது. தீமா உள்ளே எட்டிப் பார்த்தான்.

''வான்யா, என்ன செய்கிருய் நீ? எவ்வளவு நேரம்தான் உனக்காக நாங்கள் காத்திருப்பது?''

''வா, உள்ளே'' என்று வான்யா அவனைக் கூப்பிட்டான். ''இவனுக்கு எந்தக் குறையும் இல்லை. நன்ருகத்தான் இருக்கிருன்!''

''மெய்தானு? நன்ருகத்தான் இருக்கிருனு?''

''நன்ருயிருக்கிருனு? யார் அவன்?'' என்று கதவுக்குப் பின்னுலிருந்து ஒரு குரல் கேட்டது. உடனே ஏனையோரும் அறைக்குள் வந்தார்கள்.

''கோஸ்த்யா தான். வேறு யார்?''

''அது எப்படி?''

''கையுறையை எடுத்துச் செல்வதற்காகத் திரும்பி வந்து பார்க்கிறேன், பையன் தலைகீழே நின்று வித்தை செய்து கொண்டிருக்கிருன்.''

''நீ படுத்திருந்தது எங்களை ஏமாற்றுவதற்காகத்தானு?''

''இல்லை, இல்லை! வேடிக்கை செய்தேன்'' என்று கோஸ்த்யா குழம்பிப் போய் முனகினன்.

''வேடிக்கையா இது? நல்லாயிருக்கிறதே!''

''வகுப்பில் நாங்கள் உன்னைப் பற்றிக் கவலைப்படுகிருேம். நேரில் வந்து பார்த்து விசாரித்துச் செல்ல வேண்டுமென்று புறப்பட்டு வந்தோம். நீ வேடிக்கை செய்வதாகச் சொல்கிருயே!''

''உங்களை நான் ஏமாற்ற வேண்டுமென்று செய்தது அல்ல. தவறுதலாக இப்படி நேர்ந்து விட்டது.''

''உடல் நலமில்லை என்று பொய் சொல்லிப் பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போடுகிருயெனச் சொல்லு.''

''நடந்ததைச் சொல்லுகிறேன், கேளுங்கள். உங்களை நான் ஏமாற்ற நினைக்கவில்லை. நான் சர்க்கஸ் கூத்தனுவதெனை முடிவு செய்திருக்கிறேன், அவ்வளவுதான்.''

இதைக் கேட்டதும் பையன்கள் வியப்புற்றுவிட்டனர்.

''நான் சர்க்கஸில் சேரப் போகிறேன்'' என்ருன் கோஸ்த்யா.

''உனக்குப் பித்தா பிடித்துவிட்டது?''

''இல்லை, நிதான புத்தியோடுதான் சொல்கிறேன்.''

''யாரும் உன்னைச் சர்க்கஸில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.''

''அவர்களுக்கும் ஆட்கள் வேண்டுமல்லவா?''

''நீ ஏன் பள்ளிக்கூடத்துக்கு வராமல் மட்டம் போடுகிறாய்?''

''படிப்பில் எனக்கு நாட்டம் இல்லை. பள்ளியில் கற்க வேண்டியவற்றை ஏற்கெனவே நான் கற்றுக் கொண்டு விட்டேன்.''

''எதையும் நீ கற்றுக் கொண்டு விடவில்லை.''

''எப்படியும் நான் சர்க்கஸ் கூத்தனுக்கு வேண்டிய கல்வியை ஏற்கெனவே கற்றுக் கொண்டு விட்டேன்.''

''சர்க்கஸ் கூத்தர்கள் எல்லாரும் கல்வி அறிவில்லாத ஆட்கள் என்றா நினைக்கிறாய் நீ?''

''இல்லை, அவர்களுக்குத் தேவையான பள்ளிக்கூடக் கல்வியைப் பெற்றுக் கொண்டு விட்டேனெனச் சொல்கிறேன்.''

''எனக்குத் தெரிந்தவரை, முதலில் நீ பள்ளிக்கூடப் படிப்பை முடித்தாக வேண்டும்; பிறகு சர்க்கஸ் பள்ளியில் சேர்ந்து தனிப் பயிற்சி பெற்றாக வேண்டும்; அதற்குப் பிற்பாடுதான் நீ சர்க்கஸில் சேர முடியும். சர்க்கஸ் கலைஞர்கள் எல்லாரும் சர்க்கஸ் பள்ளியில் படித்தவர்கள். வேண்டுமானால் நீ ஓல்கா நிக்கலாயிவ்னாவிடம் கேட்டுப் பார்.''

''அவர் என்ன சொல்வாரென எனக்குத் தெரியும்.''

''வீண்பேச்சு பேச வேண்டாம். பிரச்சினையை வாக்கெடுப்புக்கு விட்டுப் பார்ப்போம். கோஸ்த்யா நாளைக்கே பள்ளிக்கூடத்துக்குத் திரும்பி வர வேண்டுமென்று நான் சொல்கிறேன்.''

''ஆமாம். நாளைக்கு அவன் வராவிட்டால் உண்மையை நாங்கள் ஓல்கா நிக்கலாயிவ்னாவிடம் சொல்வோம்.''

''நீங்கள் எல்லாரும் கோள்சொல்லிகள்!'' என்று ஆத்திரமாய்க் கூவினான் கோஸ்த்யா.

''உன்னை எச்சரிக்கை செய்துவிட்டு அதன் பிறகுதான் நாங்கள் ஆசிரியையிடம் சொல்லப் போகிறோம். ஆகவே யாரும் இதைக் கோள் சொல்லுதலாகக் கூற முடியாது.''

''நாளைக்கு நீ மட்டம் போட்டால், நிச்சயம் நீ வருத்தப்பட வேண்டியிருக்கும்.''

முன்னறையில் புதிதாகக் காலடி ஓசை கேட்டது. பிறகு அறைக் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறப்பதற்குப் பதில் கோஸ்த்யா ஓடிச் சென்று படுக்கையில் படுத்துப் போர்வையை முகவாய் வரை இழுத்து மூடிக் கொண்டான். நான் கதவைத் திறந்தேன். வந்தது எங்கள் ஆசிரியை ஓல்கா நிக்கலாயிவ்னா.

''பாதி வகுப்பு இங்கே இருக்கிறதே'' என்றார் அறைக்குள் வந்த எங்கள் ஆசிரியை. ''உடல் நலமில்லாத நண்பனைப் பார்த்துச் செல்ல நீங்கள் எல்லாரும் வந்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.''

யாரும் வாய் திறக்கவில்லை. அவரிடம் என்ன சொல்வதென்று யாருக்கும் விளங்கவில்லை.

கோஸ்த்யா மிரண்டு போய் அவரை உற்றுப் பார்த்தான். அதே நேரத்தில் போர்வையை முகவாய்க்கு மேலும் இழுத்துச் சென்றான், முகத்தையே மூடிக் கொண்டுவிட விரும்புகிறான் என்று நாங்கள் நினைத்தோம்.

ஓல்கா நிக்கலாயிவ்னா அவன் படுக்கை அருகே சென்றார்.

''கோஸ்த்யா, உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது? வலிக்கிறதா?'' என்று விசாரித்தார்.

''அவனுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை, முழு நலத்துடன்தான் இருக்கிறான்'' என்று யூரா பதிலளித்தான்.

''என்ன?''

''அவன் நன்றாகவேதான் இருக்கிறான்!''

இனியும் பாசாங்கு செய்து பயனில்லை என்பது தெரிந்ததும், போர்வையை விலக்கிவிட்டு கோஸ்த்யா எழுந்து கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு பரிதாபமாகத் தரையை உற்று நோக்கினான்.

ஓல்கா நிக்கலாயிவ்னா எங்கள் பக்கம் திரும்பி ஒவ்வொருவராகப் பார்த்துச் சென்றார். அவர் பார்வை என்மீது வந்து நின்றது.

''கோஸ்த்யாவுக்குக் காய்ச்சலென்று என்னிடம் நீ ஏன் சொன்னாய்?'' என்று என்னைக் கேட்டார்.

அவரை நிமிர்ந்து பார்க்க முடியாதவனாய் நான் வெட்கித் தலை குனிந்தபடி நின்றிருந்தேன்.

''உன் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். நீ என்னிடம் சொன்னது உண்மை அல்ல என்றுதானே அர்த்தம்?''

''அவன் என்னை அப்படிச் சொல்லச் சொன்னான், அதனால்தான் நான் சொன்னேன்.''

''என்னை ஏமாற்றும்படியா கோஸ்த்யா உன்னிடம் சொன்னான்?''

''ஆமாம்'' என்று முணுமுணுக்கும் குரலில் நான் பதிலளித்தேன்.

''நீயும் அதேபோல் செய்தாய், அப்படித்தானே?''

''ஆமாம்.''

''இது உனக்குப் பெருமை தரும் செயல் என்றா நினைக்கிறாய்?''

''அவன்தான் என்னை அப்படிச் சொல்லச் சொன்னான்!''

''என்னை ஏமாற்றியதன் மூலம் நீ அவனுக்கு உதவியதாகவா நினைக்கிறாய்?''

''இல்லை.''

''பிறகு ஏன் என்னிடம் நீ அப்படிச் சொன்னாய்?''

''ஏனென்றால்... ஏனென்றால் நண்பன் ஒருவனைக் காட்டிக் கொடுப்பது சரியல்ல.''

''காட்டிக் கொடுப்பதா? நண்பன் ஒருவனைப் பகைவனிடம் காட்டிக் கொடுக்கக் கூடாதுதான். ஆனால் உங்களுக்கு நான் பகையா, என்ன?''

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் நான் தரையைப் பார்த்தபடி நின்றிருந்தேன்.

''என் வகுப்பில் எல்லாரும் என்னைத் தமது பகையாகக் கருதுவார்களென இதுகாறும் நான் நினைக்கவே இல்லை'' என்றார் எங்கள் ஆசிரியை.

''ஒல்கா நிக்கலாயிவ்னா, எங்களில் யாரும் அந்த மாதிரிக் கருதவில்லை!'' என்றான் வான்யா.

''அப்படியானால், ஏன் யாரும் என்னிடம் உண்மையைச் சொல்லவில்லை?''

''இன்றுதான் நாங்கள் இவனைப் பார்த்துச் செல்வதற்காக இங்கு வந்தோம், வந்த பிறகுதான் எங்களுக்கு உண்மை தெரிந்தது.''

''சரி, இந்த விவாதத்தைப் பிற்பாடு நாம் தொடர்ந்து நடத்திச் செல்லலாம். கோஸ்த்யா, நீ ஏன் பள்ளிக்கூடத்துக்கு வராமல் இருந்தாய்? அதைச் சொல்லு நீ.''

''பயந்து கொண்டு வராமல் இருந்தேன்'' என்று அவன் முணுமுணுக்கும் குரலில் முனகினான்.

''எதைப் பற்றி நீ பயந்தாய்?''

''அம்மாவிடமிருந்து குறிப்பு எழுதி வாங்கி வரும்படி நீங்கள் சொல்வீர்களெனப் பயந்தேன்.''

''என்ன குறிப்பு?''

''டிக்டேஷன் வகுப்பு இருந்த நாளன்று நான் பள்ளிக்கூடத்துக்கு வராமல் இருந்தது பற்றிய குறிப்பு.''

''நீ ஏன் அன்று வராமல் இருந்தாய்?''

''எனக்குப் பயம்.''

''என்ன பயம்?''

''மோசமான மதிப்பெண் கிடைக்குமே என்ற பயம்.''

''டிக்டேஷன் வகுப்பு இருந்த நாளன்று நீ பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை; பிறகு அது பற்றி அம்மாவிடமிருந்து குறிப்பு எழுதி வாங்கவில்லையென்று வராமலே தங்கிவிட்டாய் என்று சொல்கிறாய்?''

''ஆமாம்'' என்றான் கோஸ்த்யா.

''பள்ளிக்கூடத்துக்கு வராமல் வேறு என்ன செய்யலாமென நினைத்தாய்?''

''எதுவும் செய்ய நினைக்கவில்லையே.''

''வேறு திட்டம் ஏதாவது இருந்திருக்க வேண்டுமே?''

''வேறு என்ன செய்ய முடியும்?''

''சர்க்கஸில் சேர்ந்து விடுவதெனத் திட்டமிட்டிருந்தான்'' என்றான் யூரா.

''எட்டாண்டுப் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள்தான் சர்க்கஸ் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்'' என்றார் ஓல்கா நிக்கலாயிவ்னு. ''எட்டாண்டுப் பள்ளிப் படிப்புக்குப் பிற்பாடு நீ சர்க்கஸ் பள்ளியில் சேர்ந்து மேலும் ஐந்து ஆண்டுகள் படித்தாக வேண்டும். எடுத்தயெடுப்பில் சர்க்கஸ் கலைஞனாகிவிடலாம் என்று நினைத்தாய்?''

''இல்லை.''

''பள்ளிக்கூடத்திலிருந்து விலகிக் கொள்வதென அதெப்படி அவ்வளவு அவசரமாய் முடிவு செய்தாய்?''

கோஸ்த்யா பதில் சொல்லவில்லை.

''இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?''

''எனக்குத் தெரியவில்லை.''

''இது பற்றி நீ சிந்திக்க வேண்டாமா?''

சற்று நேரம் கோஸ்த்யா மௌனமாய் இருந்தபின் தயங்கியபடி ஓல்கா நிக்கலாயிவ்னாவைப் பார்த்துவிட்டு, ''நான் திரும்பவும் பள்ளிக்கூடம் போக விரும்புகிறேன்'' என்றான்.

''நீ கூறும் இந்தப் பதில் உனது அறிவுடைமைக்குச் சான்றாகும். நான் இதை வரவேற்கின்றேன், ஆனால் ஒரேயொரு நிபந்தனை: படிப்பில் முன்னேற்றம் காண்பேனென நீ வாக்களிக்க வேண்டும்.''

''நிச்சயமாய் முன்னேற்றம் காண்பேன்.''

''நாளைக்குக் காலையில் நீ வகுப்புக்கு வந்துவிட வேண்டும். பள்ளிக்கூட முதல்வரிடம் நான் பேசுவேன், தொடர்ந்து படிப்பதற்கு உனக்கு அனுமதியளிக்க வேண்டுமென அவரிடம் சொல்வேன்.''

''இனி ஒழுங்காய் நான் பள்ளிக்கூடத்துக்கு வருகிறேன்.''

ஓல்கா நிக்கலாயிவ்னு எங்களை வீட்டுக்குப் போகச் சொன்னார். ஆனால் அவர் எங்களுடன் சேர்ந்து புறப்படப் போவதில்லை என்பது தெரிந்ததும் கோஸ்த்யா அவரிடம் கேட்டான்:

''என் அம்மாவிடம் நீங்கள் இதைச் சொல்வீர்களா?''

''சொல்கிறேன்.''

''நிச்சயம் நான் முயற்சி எடுத்துப் படித்து முன்னேறுவேன். உண்மை இது. அம்மாவிடம் ஒன்றும் சொல்லாதீர்கள்!''

''அப்படியானால் அம்மாவை நீ தொடர்ந்து ஏமாற்ற வேண்டுமென்று விரும்புகிறாய்? இதில் உனக்கு நான் உடந்தையாக இருக்க வேண்டுமென்று சொல்கிறாய்?''

''அம்மாவை இனி ஒருநாளும் ஏமாற்றமாட்டேன். அம்மாதிரியான ஒரு விருப்பம் எனக்கு இல்லவே இல்லை.''

''நாம் இருவருமாகச் சேர்ந்து தம்மை ஏமாற்றினோம் என்பது தெரிய

வரும்போது அம்மாவுக்கு எப்படி இருக்கும்? அப்போது அம்மாவுக்கு இன்னும் அதிகமாய் மனம் புண்படுமா, இல்லையா?''

''ஆமாம்.''

''ஆகவே உண்மையை மறைக்காமல் அம்மாவிடம் நீ சொல்லத்தான் வேண்டும். நீ எனக்கு வாக்களித்திருக்கிறாய், இனி நீ நல்ல மாணவனாக நடந்து கொள்வாயென நான் நம்புகிறேன். ஆதலால் உன்னை மன்னிக்கும்படி நான் உன் அம்மாவைக் கேட்டுக் கொள்வேன்.''

''நிச்சயம் நான் நல்ல மாணவனாகிவிடுவேன் என்று வாக்களிக்கிறேன்.''

''நல்லது. நீ உன் புத்தகங்களை எடுத்து வா, நாம் இருவருமாய் உட்கார்ந்து கொஞ்சம் வேலை செய்வோம்.''

ஏனைய பையன்களுடன் சேர்ந்து நானும் வெளியே நடையைக் கட்டினேன். அதற்குப் பிற்பாடு அங்கே என்ன நடைபெற்றதென்று எனக்குத் தெரியாது.